இறக்கை: 14 இறகு: 7

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

ஜூலை 2025 | விலை ₹ 50



## தமிழர் சமூக வாழ்வில் நெல்

■ ஆ.சிவசுப்பிரமணியன்

## இந்திய மெய்யியல் மரபில் வள்ளலாருக்கான இடம்

■ இரா.முரளி

## அதிகார நலன்களால் கட்டுப்படுத்தப்படும் ஐக்கிய நாடுகள் அவை

■ ரூபன் சிவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கே.எம்.லீலா நினைவு நாள்

19-3-1961

6-7-2017

எங்கள் குடும்ப ஒளிவிளக்கு

திருமதி **கே.எம்.லீலா** அவர்கள்

(காக்கைச் சிறகினிலே ஆசிரியர் முத்தையா இணையர்)

எட்டாம் ஆண்டு (6.7.2025) நினைவு நாள்.

எங்களோடு வறுமையில் வாழ்ந்தவர்.

தன்னிறைவுப் பெற்று நல்வாழ்க்கை வாழும்போது அவர் இல்லை.

நீங்காத நினைவுகளுடன்,

**வி.முத்தையா**

**எம்.அலெக்ஸாண்டர் அபிலாஷ்**

**நா. பொன்மாலதி**

**அ.அவிரா (பெயர்த்தி)**

**இரா.ஹரிஸ் ஆனந்த்**

**எம்.மோனிஷா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை: 14
இறகு: 7

திருவள்ளுவராண்டு 2055

ஆனி - ஆடி
ஜூலை 2025

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

ஆசிரியர் குழு
முகிலன்
இரா.எட்வின்

தொடக்க கால நெறியாளர்கள்
காலஞ்சென்ற
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

உலகளாவியத் தொடர்பாளர்:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail.com

முகப்பு ஓவியம்:
தமிழ்ப்பித்தன்

உள் ஓவியங்கள்:
லெசி

தொடர்பு முகவரி:
காக்கை, 22, MJB தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை- 600 005.
செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல்:
**kaakkaicirakinile@gmail.com**

இணைய முகவரி: kaakkai.in
www.facebook.com/kaakkai.cirakinile


## அறநெறியும் பயன்பாடும்

அரசியலில் மதம் கலந்திடாதபோது ஆட்சி நிர்வாகமானது ஜனநாயகத்திற்கும், மதச்சார்பின்மைக்கும் வித்திடுகிறது. அதேசமயம் அரசியலில் மதம் கலந்திடும்போது ஆட்சி நிர்வாகமானது மதச்சார்புக்கும், எதேச்சதிகாரத்திற்கும் வழிகோலிவிடுகிறது. ஜனநாயகக் காலத்திற்குப்பிறகான சந்தைமயக்காலமானது ஆட்சிநிர்வாகம், கார்ப்பரேட், வலதுசாரி அடையாள அரசியல் ஆகியன, கூட்டிணைந்து இதற்குமுன்பு உறுதிசெய்யப்பட்டிருந்த ஜனநாயகத்திற்கும், மதச்சார்பின்மைக்கும் எதிராகச் செயல்படுவதைப் பார்க்கமுடிகிறது. பலவகை மதங்கள், இனங்கள், மொழிகள் கொண்ட இந்தியாவில், வலதுசாரி அடையாள அரசியலானது, ஒருபக்கம் பிறமதங்களை அடக்கி ஒடுக்கவும் செய்கிறது. இன்னொருபக்கம் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள அரசியல் - மதம் சார்ந்து, கோயில்-கல்வி-ஊடகங்களின் துணைகொண்டு அறநெறி - பயன்பாடுமற்ற, ஏற்றதாழ்வுகள் நிறைந்த, வலதுசாரி மதக்கருத்தியல்களை பல்வேறுவகையில் சூழ்ச்சித்திறனுடன் கட்டமைக்கின்றது.

பாசிசமிக்க வலதுசாரி அடையாள அரசியல் கருத்தியல் கொண்டவர்களின் கடந்த 11 ஆண்டுகால ஆட்சியினைத் திரும்பிப் பார்க்கும்போது, கோயில்-மதத்தைச்சுற்றியே அரசியல் பின்னப்பட்டிருப்பது புரியும். அரசியலில் சனாதனமிக்க கருத்தியல்களைக் கலந்து, அதனைப் பக்திமயத்துடன் மக்களிடம் கொண்டுசென்று இத்தேசத்து குடிமக்களை பிளவுபடுத்துகின்றனர். கல்வியின் வழியாகவும் இப்படியாக சனாதனக் கருத்தியல்களைப் பாடத்திட்டத்தினுள் கலந்து, பிஞ்சு மனங்களில் நஞ்சை விதைக்கின்றனர். ஊடகங்கள் யாவும் மேற்கூறியவற்றினை தொய்வின்றி மக்களிடம் கொண்டு சென்று இயல்பாக்குவதாக இருக்கின்றன.

ஆரியத்திற்கும் தமிழுக்கும் இடையிலான கருத்தியல் யுத்தம் என்பது மணிமேகலைக் காப்பியக்காலத்திற்கு முன்பிருந்தே தொடங்கிவிட்டது. அக்காலத்தில், தமிழர்கள் பௌத்த, சமண வழிநின்று அறநெறி கொண்டவர்களாகவும், ஆரியர்கள் பக்தி நெறி கொண்டவர்களாகவும் இருந்திருக்கின்றனர். அதன்பிறகான சைவ, வைணவ கருத்தியல்களடங்கிய பக்திமயக்காலமானது அரசாட்சியின் துணையுடன் பௌத்த, சமணத்தை வீழ்த்தி, தன்னை நிலைநிறுத்திக்கொண்டது. பௌத்தர்களும் சமணர்களும் தனது அறநெறிக்கத்தியல்களை இறுக்கமாகப்பற்றி நின்றதன் காரணமாக தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டதுபோன்று, தற்காலத்திலும் சிறுபான்மை முஸ்லிம்கள் அடக்கவும் ஒடுக்கவும் செய்து அரசியல்- பொருளாதாரம்- சமூகப் பொதுவெளியிலிருந்து ஒதுக்கிவைக்கப்படுகிற நிலையைக் கண்கூடாக பார்க்கமுடிகிறது.

வரப்போகிற தமிழகச்சட்டமன்றத்தேர்தலையொட்டி, வலதுசாரிகள் ஒன்றிய ஆட்சியின் துணையுடன் சமத்துவம், சகோதரத்துவத்தினை வளர்த்தெடுக்கும் 'திராவிட மாதிரி' ஆட்சியினை அகற்றும் இலக்குடன் பக்திமயக்காலத்து யுக்திகளையெல்லாம் கையிலெடுத்திருக்கின்றனர். முதற்படியாக, மதுரையில், திருப்பரங்குன்றம் கோயிலை முன்வைத்து இந்து X முஸ்லிம் இடையே பகையை மூட்ட முயன்றனர். இதனையடுத்து 'முருக பக்தர்கள் மாநாட்டினை' நடத்துகின்றனர். இம்மாநாடு அனைவரையும் இந்துக்கள் எனக்கூறிக்கொள்கிறது. அப்படியெனில், இந்துக்களாகக் கருதப்படும் தலித்மக்கள் இன்னும் பல கோயிலுக்குள் நுழைய முடியவில்லை; அனைத்து சாதியினரும் அர்ச்சகராக முடியவில்லை; பல கோயிகளில் தமிழில்கூட அர்ச்சனை செய்யமுடியவில்லை. சுடுகாடும் கூட. இதுகுறித்தெல்லாம் மாநாட்டுக்காரர்களிடம் பதிலிருக்காது. இச்சூழலில், மொழியையும், தமிழனத்தையும் ஆரியக்கருத்தியலுக்கு அடிமையாக்கத் துடிக்கும்; தமிழ்மண்ணின் பன்முகத்தன்மையை சிதைக்கத்துடிக்கும்; அறநெறியும் பயன்பாடுமற்ற சனாதனக் கருத்தியலை வன்முறை மூலம் தமிழ் மண்ணில் பரவலாக்கத் துடிக்கும் நாசகார போலி முருக பக்தர்களை அம்பலப்படுத்துவது அவசியம். •




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காக்கைச் சிறகினிலே**

ஒவ்வொரு மாதமும்
1 ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ்
அஞ்சல் செய்யப்படுகிறது.
அடுத்து வருகிற 5ஆம் தேதிக்குள் இதழ்
கிடைக்கப் பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

தனிஇதழ் விலை ரூ. 50.00
ஆண்டு சந்தா ரூ. 500.00
இரண்டாண்டு சந்தா ரூ. 750.00
ஐந்தாண்டு சந்தா ரூ. 2000.00

வெளிநாடு

ஆண்டு சந்தா $ 50.00

வங்கி விவரம்

A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
IFSC: CNRB0000914

Google Pay மூலம் செலுத்த:
செல்பேசி எண்: 98414 57503

வெளிநாட்டு வாசகர்கள் சந்தா செலுத்த:
A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
SWIFT CODE : CNRBINBBBFD

விளம்பரக் கட்டணம்

பின் அட்டை வண்ணம் ரூ.15000
உள் அட்டை வண்ணம் ரூ.10000
உள்பக்கம் கருப்பு – வெள்ளை ரூ.5000

**காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், எழுத்தாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.**


## சிறகுக்குள்ளே...


தமிழர் சமூக வாழ்வில் நெல்
● **ஆ.சிவசுப்பிரமணியன்** ........ 05

அதிகார நலன்களால் கட்டுப்படுத்தப்படும் ஐக்கிய நாடுகள் அவை
● **ரூபன் சிவராஜா** ........ 10

பா.ம.க.. பிரச்சினை என்ன?
● **தி. சிகாமணி** ........ 17

பல்கலைக்கழக மானியக்குழுவும் புதிய கல்விக்கொள்கையும்
● **நிகழ் அய்க்கண்** ........ 21

கீழடி ஒன்றிய அரசின் பண்பாட்டு பயங்கரவாதம்
● **இரா.மோகன்ராஜன்** ........ 25

ஜிடிபி-யில் நாலு, தனி மனித வருமானத்தில் 130. இதுவா உண்மையான வளர்ச்சி?
● **மாதவன்** ........ 31

இந்திய மெய்யியல் மரபில் வள்ளலாருக்கான இடம்
● **இரா.முரளி** ........ 34

தோழமை என்றொரு சொல்
● **ஜெயதேவன்** ........ 40

முஜிகாவும் மோடியும்
● **வல்லபாய்** ........ 42

மரபணு மாற்றப்பட்ட நெல்– அரசியலும் அறிவியலும்
● **மு.வெற்றிச்செல்வன்** ........ 45

லக்ஸம்பர்க் நினைவு மையம்
● **ஆயிஷா இரா நடராசன்** ........ 48

அகஸ்தியர் எனும் புரளி
● **அப்பணசாமி** ........ 52

வள்ளுவரைத் தேடி ஒரு பயணம்
● **ஜி. ஜான் சாமுவேல்** ........ 60

65/66
● **இரா.எட்வின்** ........ 65

பொங்கல் கரும்பும் பொங்கிய கண்ணீரும்
● **கி.இரா.சங்கரன்** ........ 67

அவள் பிரிவு
● **கோச்சடை** ........ 74

விக்ரம் சுகுமாரன்: மதயானைக் கலைஞன்
● **செல்லப்பா** ........ 77

மதச்சார்பற்ற வரலாற்றுக்கதையாடல்களும், வகுப்புவாத சவால்களும்
● **பி.பி. சைதாலி, மு.சாகுல் ஹமீது** ........ 80





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ஆ.சிவசுப்பிரமணியன்

# தமிழர் சமூக வாழ்வில் நெல்



**நெ**ல் என்னும் தானியம் தமிழர்களின் உணவுப் பொருளாக மட்டுமின்றி அவர்களது சமூக - பண்பாட்டு - பொருளாதார வாழ்க்கையிலும் புறக்கணிக்க முடியாத இடத்தைப் பல நூற்றாண்டுக் காலமாகப் பெற்றுள்ளது. தமிழர்களுக்கும் நெல்லுக்கும் இடையிலான உறவு மிகவும் தொன்மையான ஒன்றாகும்.

பெருங்கற்காலக் காலத்திலேயே நெல்லின் பயன்பாடு தமிழர்களிடம் அறிமுகமாகியிருந்துள்ளது. ஆங்கில காலனிய ஆட்சிக் காலத்தில் ஆதிச்சநல்லூரில் நிகழ்ந்த தொல்லியல் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளில் நெல்மணி, நெல் உமி, அரிசித் தவிடு என்பன காணப்படுகின்றன (சிற்றம்பலம்199:170,199). அண்மைக் காலத்தில் தூத்துக்குடி மாவட்டம் சிவகளை என்னும் ஊரின் பறம்புப் பகுதியில் நிகழ்ந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழி ஒன்றில் உமி நீக்கிய நெல்மணிகள் கிடைத்தன. இவற்றை அமெரிக்க நாட்டின் மியாமி நகரிலுள்ள உலகப் புகழ்வாய்ந்த பெட்டா சோதனைச் சாலைக்குத் (Beta Analytical Labortory) தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை காலக் கணிப்புக்காக 18 ஆகஸ்டு 2021 அன்று அனுப்பிவைத்தது. அதை ஆய்வு செய்த அந்நிறுவனம் அந்நெல்மணிகளின் காலம் கி.மு. ஆயிரத்து நூற்று ஐம்பத்தைந்து (கி.மு.1155) எனக் கண்டறிந்து 27 ஆகஸ்ட் 2021 அன்று அறிக்கையனுப்பியது (சிவானந்தம் இ.ரா, மற்றும் மூவர் 2022:16). இவ்விரு செய்திகளும் தமிழர் வரலாற்றில் நெல்லின் தொன்மைக்குச் சான்று பகர்கின்றன.

சங்க இலக்கியங்களிலும், சிற்றிலக்கியங்களிலும் நெல் குறித்தும் நெல் வேளாண்மை குறித்தும் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. முக்கூடற்பள்ளு இருபது வகையான நெல் வகைகளைக் குறிப்பிட, நெல்விடு தூது என்னும் சிற்றிலக்கியம் நாற்பத்தியைந்து வகை நெல் வித்துக்களைப் பட்டியலிட்டுள்ளது. பல்வேறு பள்ளு நூல்களிலும் நெல் வகை கூறுதல் இடம்பெற்றுள்ளது. தமிழர்களின் பொருள்சார் பண்பாடு தொடர்பான வரலாற்றில் நெல் புறக்கணிக்க இயலாத இடத்தைப் பெற்றிருந்தது. உணவுப் பொருள் என்பதுடன் மட்டும் அதன் பயன்பாடு குறுகிப் போய்விடவில்லை. தமிழர்களின் பண்பாட்டு வாழ்விலும், பொருளாதார வாழ்விலும் அது மதிப்புறு நிலையைப் பெற்றிருந்தது. இங்கு மதிப்பு என்று குறிப்பிடுவது விழுமியம் (value) என்று சமூகவியலில் பயன்படுத்தும் சொல்லுக்கு இணையான சொல்லாக அன்று என்பதைக் குறிப்பிட வேண்டும். பொருளாதாரம் சார்ந்த ஒரு கலைச்சொல்லாகவே இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகிறது.

### இருவகைப் பொருள்கள்

மனிதர்கள் தம் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு வகையான பொருள்களைப் பயன்படுத்துகிறார்கள். உணவுப்பொருள், நுகர்பொருள், நறுமணப் பொருள், ஆடம்பரப் பொருள், மருந்துப் பொருள், பூசைப் பொருள் என்று பொருள் என்ற சொல்லுக்கு முன்னால் இடும் அடைமொழிகள் ஒரு குறிப்பிட்ட பொருளின் பயன்பாட்டை உணர்த்துகின்றன. பயன்பாட்டைப் பொறுத்து ஒரு பொருளின் மதிப்பும் அமைகிறது என்பது பொதுவான நம்பிக்கை. ஆனால், கார்ல் மாரக்ஸ் ஒரு பொருளின் மதிப்புக்கு அடிப்படைக் காரணமாக அமைவது மனிதனது உழைப்பாற்றல் அதில் இணைவதுதான் என்கிறார். மனிதனது உழைப்பு இணையும் போதுதான் ஒரு பொருள் மதிப்படைகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கு சேசுவின் உவமைக்கதை ஒன்றைக் குறிப்பிடலாம். மத்தேயுவின் நற்செய்தியேட்டில் (அத்தியாயம் 25:14-30) இடம் பெற்றுள்ள இக்கதையில் எஜமானன் ஒருவர் வெளியூர் செல்லும்போது, தம் பணியாளர்கள் மூவரை அழைத்து ஒருவரிடம் ஐந்து தலாந்துகளும் (நாணயம்) மற்ற இருவரில் ஒருவருக்கு இரண்டு தலாந்துகளும், மற்றவருக்கு ஒரு தலாந்தும் கொடுத்துவிட்டுச் சென்றார். அவர் திரும்பிவந்தபோது, ஐந்து தலாந்துகள் பெற்ற பணியாளன், அதை வாணிபத்தில் முதலீடு செய்து இரட்டிப்பாக்கியதாகக் கூறிப் பத்து தலாந்துகளை அவரிடம் தருகிறான். இரண்டு தலாந்துகள் பெற்ற பணியாளும் அதை இரட்டிப்பாக்கி அவரிடம் தருகிறான். ஒரு தலாந்து பெற்றவன் அதை மண்ணில் புதைத்து வைத்திருந்ததாகக் கூறி ஒரு தலாந்தைத் திருப்பித் தருகிறான். கோபமுற்ற எஜமானன் அதை வட்டிக்காவது விட்டிருக்கலாமே என்று சினந்ததுடன் முதல் இருவருக்கும் அவர்கள் பெற்ற தலாந்துகளுடன் அவர்கள் ஈட்டிய தலாந்துகளையும் திரும்பக் கொடுத்ததுடன் தான் பெற்ற ஒரு தலாந்தை மண்ணில் புதைத்து வைத்தவனிடமிருந்து அதைப் பறித்து ஐந்தைப் பத்தாக்கியவனிடம் தந்ததுடன், மூன்றாவது பணியாளைத் தண்டிக்கவும் செய்கிறான். இக்கதை குறித்து கிறித்தவ இறையியலாளர்களின் விளக்கங்கள் ஒருபுறமிருக்க ஒரு தலாந்துப் பெற்றவனிடம்ஏன் அதுபெருக்கமடையவில்லை என்று வினா எழுப்பினால் அதில் மனித உழைப்பு இணையாதபடி புதைத்து வைத்தமையால் அது மதிப்படையவில்லை என்பது புரியும்.

இவ்வாறு உழைப்பின் வாயிலாக ஒரு பொருள் அடையும் மதிப்பை மார்க்ஸ் (1) பயன் மதிப்பு ( *Use Value*), (2) பரிவர்த்தனை மதிப்பு (*Exchange Value*) என இரண்டாகப் பகுத்துக் கூறுவார். மார்க்ஸ் குறிப்பிடும் இவ்விரு மதிப்புகளையும் நெல் என்னும் தானியம் பெற்றிருந்தது.

### பயன் மதிப்பு

'ஒரு பொருளின் பயன்பாடு அதனைப் பயன் அமைப்பு ஆக்குகிறது' என்று மார்க்ஸ் தமது மூலதனம் நூலில் குறிப்பிட்டுள்ளார். நெல்லின் பயன்மதிப்புக் குறித்த பழமையான சான்றாகத் தொடக்கத்தில் குறிப்பிட்ட முதுமக்கள் தாழிகளில் இடம்பெற்றிருந்த நெல்மணிகள் அமைகின்றன. ஆவி என்ற கண்ணுக்குப் புலப்படாத பொருள் ஒன்றை உலகின் பல்வேறு தொல்சமயங்கள் கொண்டிருந்தன. இதை ஆவியம் (*Animism*) என்ற சொல்லால் மானுடவியலர் குறிப்பர். மனிதன் இறந்த பின்னரும் ஆவி வாழும் என்பதால் அதன் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தொல் குடிகள் நம்பினார்கள். இதன் வெளிப்பாடாகவே எகிப்திய பிரமிடுகளில் அடக்கம் செய்யப்பட்ட உயர்குடியினரின் தேவைக்காகக் குதிரைகளையும் அடிமைகளையும் உயிருடன் புதைத்தனர். இதன் தமிழ்நாட்டு வடிவமாக நெல் அமைந்துள்ளது. இது நம்பிக்கை சார்ந்த பயன்பாடாகும். செழிப்பின் அடையாளமாக நெல் கருதப்பட்டதால் 'நெல் பல பொலிக பொன் பெரிது சிறக்க' என்று வாழ்த்தியுள்ளனர் (ஐங்குறுநூறு,1). திருமணச்சடங்கில் மலருடன் நெல் கலந்த நீரை மணமக்கள் தலையில் ஊற்றியுள்ளனர் (அகநானூறு, 86:15). இல்லடுகள், தோப்பிக்கள் என்ற பெயரிலான கள்ளினைத் தயாரிக்க நெல்லைப் பயன்படுத்தியுள்ளனர். நெல் தூவி கடவுளை வணங்கியுள்ளனர். 'நெல்லும் மலருந் தூஉய்க்கை தொழுது' என்று நெடுநல்வாடையும், 'நெல் உகுத்துப் பரவுங் கடவுள்' என்று புறநானூறும் குறிப்பிடுகின்றன. இவையெல்லாம் பண்டைத் தமிழர்களிடம் இடம்பெற்றிருந்த நெல்லின் பயன்மதிப்புக் குறித்த செய்திகளாகும். இதன் எச்சமாகவே மங்கல, அமங்கலச் சடங்குகளில் நிறைநாழி வைத்தல் என்ற பெயரில் நாழி என்ற மரபுவழி முகத்தலளவுக் கருவியில் நெல் வைத்தல் இடம்பெறுகிறது.

### பரிவர்த்தனை மதிப்பு

அடிப்படையில் பயன்மதிப்பைப் போன்றே பரிவர்த்தனை மதிப்பிலும் ஒரு பொருள் மனிதர்களின் பயன்பாட்டுக்கு உரியதுதான். ஆனால், உழைப்பு செலுத்தப்பட்ட இப்பொருளானது பொருள் என்ற அடையாளத்தை இழந்து சரக்கு என்ற அடையாளத்தைப் பெறுகிறது. இது குறித்து எஸ்.வி.ராஜதுரை (2023:475) பின்வரும் விளக்கம் தருவார்: 'பரிவர்த்தனை மதிப்பு (*Exchange-value*) அல்லது சரக்கு (*commodity*) என்பதுங்கூடப் பயன்படுத்தப்படத்தான் போகிறது. ஆனால்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மற்ற சரக்குகளோடு பரிவர்த்தனை செய்யப்படுவதற்காகவே உற்பத்தி செய்யப்படுகிறது; அதாவது விற்கவும் வாங்கவுமே உற்பத்தி செய்யப்படுகிறது. சரக்கு என்பது, முதலாவதாக, ஒரு மானுடத் தேவையை நிறைவுசெய்யும் ஒரு பொருள்; இரண்டாவதாக, மற்றொரு பொருளுக்குப் பரிவரத்தனை செய்யப்படக்கூடிய பொருளும் ஆகும்.' நம் தமிழ்மரபில் பண்டமாற்று என்றது இதைத்தான். சங்ககாலத்தில் நாணயமுறை நடைமுறையில் இருந்துள்ளமைக்கு இலக்கியச் சான்றுகளுடன் தொல்லியல் சான்றுகளும் உள்ளன. இருப்பினும், பொருள்கள் பரிவர்த்தனையும் இடம்பெற்றிருந்துள்ளது. உடலுழைப்புக்கான ஊதியத்துக்கு ஈடாகப் பொருள் பரிவர்த்தனையும் போர்ச் செயலுக்காக நிலக் கொடையும் நிகழ்ந்துள்ளன.

### உழைப்புடன் பரிவர்த்தனை

கோடியர் என்ற கலைஞர்கள் தம் கலைத்திறனை வெளிப்படுத்தி அதற்குக் கூலியாகப் பார்வையாளர்கள் வழங்கும் சிறிதளவு உணவைப் பெற்று உயிர் வாழும் அவலத்தை 'நல்குநர் ஒழித்த கூலிச் சில்பதம், ஒடிவை இன்றி ஓம்பாது உண்டு' என்று அகநானூறு (301-4-5) குறிப்பிடுகிறது. திருவிளையாடல் புராணத்தில் இடம் பெறும் பிட்டுக்கு மண் சுமந்த படலத்தில் 'கூலி கொடுத்து என்வேலை கொள்வார் உண்டோ' என்று கூவியவறே சிவன் வருகிறார். 'நான் விற்கும் பிட்டையே உனக்குக் கூலியாகத் தருவேன்' என்று கூறி வந்தி என்ற மூதாட்டி அவரை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார். இங்கு உடலுழைப்பும் பிட்டும் பரிவர்த்தனை செய்துகொள்ளப்பட்டுள்ளன. நெற்கூலி பெறுவதற்காக மண்சுவர் வைக்கும் வேலையைக் கம்பர் மேற்கொண்டார் என்ற வாய்மொழிக் கதைக் கருவை உள்ளடக்கி 'நெற் கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே' என்று ஒரு சொலவடை உண்டு. பரிவர்த்தனை என்பது பொருள்களுக்கிடையே மட்டுமின்றி, மனித உழைப்புக்கும் பொருளுக்கும் இடையேயும் நடைபெறும் தன்மைத்தது என்பதை இவற்றால் அறியலாம்.

நெல் வேளாண்மையில் வேளாண் தொழிலாளர்களுக்கான கூலி நெல் வடிவிலேயே வழங்கப்பட்டது. வழக்கமான அளவைவிடக்

கவிதை | ப்ரதிபா ஜெயச்சந்திரன்

# நடைபாதைக் கவிதைகள்

கொத்துக் கொத்தாய்ப் பறவைகள்
மாலையில் மேற்கு நோக்கிப்
பறந்துகொண்டிருக்கின்றன
அவை எங்கே செல்கின்றன என்று
ஒரு நாளும் யோசித்ததில்லை
பறவைகளுக்குக் கூடுகளுண்டு

நசுங்கிக் கூழாகிக் கிடக்கின்றன நத்தைகள்
நடைபாதையில்
அந்த ஈரத்தில் புலப்படும்
வாழ்வின் மீதான நம்பிக்கைகள்
அதன் மெதுவான நகர்வுகளில்



புலர் காலை தரும் வெளிச்சம்
நேற்றைய மிச்சத்தைக் கசியவிடுகிறது
நாளையும் எடுத்துச் செல்லும்
இன்றைய கரிய இரவினூடாக

நேற்றுப் போலத்தான் இன்றும் புலர்ந்தது
நாளையும் புலரும் இன்றுபோல
மனிதனுக்கு நம்பிக்கையளிக்கும்
நிமிஷத்துளிகள்
இன்னும் மனிதனுடன் பயணிக்கின்றன.

உறங்குவது போலுஞ் சிறுவாழ்வு
காலையில் கண்விழிக்கும் கைகால் அசைக்கும்
நிமிடங்கள் நகர்கின்றன சிந்தையின் போக்கில்
இறைவனுக்கு நன்றி சொல்கிறேன்
அன்றன்றுள்ள அப்பமாய் வாழ்க்கை

ஆண்டுகளாய் மாதங்களாய்
நாட்களாய் நிமிடங்களாய்
காலத்தைக் கட்டம் கட்டி வைக்கிறேன்
அது எனக்கொரு பெரிய கட்டங்கட்டி
வைத்திருப்பது தெரியாமல்

அப்பா அப்பப்பா அப்பப்பப்பா
இப்படியே நூல்பிடித்து
ஆபிரகாமிடம் போய் நிற்கிறேன்
மேலிருந்து கீழாக நோக்குகையில்
அந்த நூலின் வலைப்பின்னல்
கீழே ஒவ்வொரு மனிதனிடமும் நீள்கிறது
அடுத்தவீட்டுக் காரனுடன்
ஆறு மாதமாய் வாய்க்கால் தகராறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதலாக அரை லிட்டர் நெல் கூலியாகக் கேட்டதாலேயே 1968இல் தஞ்சை மாவட்டம் கீழவெண்மணிக் கிராமத்தில் 42 விவசாயத் தொழிலாளர்கள் உயிருடன் கொளுத்தப்பட்ட கொடூரம் நிகழ்ந்தது.

### பொருளுடனான பரிவர்த்தனை

பொருநராற்றுப்படையில் (214-217) நெய்தல் நில மக்களுடனும், மருத நில மக்களுடனும், குறிஞ்சி நிலத்தார் நிகழ்த்தும் பொருள்களின் பரிவர்த்தனை நிகழ்வு பின்வருமாறு இடம் பெற்றுள்ளது: குறிஞ்சி நிலத்தின் வேடுவர்கள் தாம் காட்டில் சேகரித்த தேன், கிழங்கு என்ற பொருள்களை நெய்தல் நில மீனவர்களிடம் கொடுத்துவிட்டு, அதற்கு மாற்றாக மீனையும், கள்ளையும் பெற்றுக்கொள்கிறார்கள். மருதநில உழவர்கள் இனிமையான கரும்பையும், நெல்லிலிருந்து உருவாக்கிய அவலையும் குறிஞ்சி நிலமக்களிடம் கொடுத்துவிட்டு அதற்கு மாற்றாக மான் இறைச்சியையும் மதுவையும் பெற்றுக்கொள்கிறார்கள். இங்கு மூன்று மாறுபட்ட பொருளாதாரச் செயல்பாடு கொண்டவர்களிடையே நிகழும் பரிவர்த்தனைப் பொருள்கள் எவை என்பது மட்டும் தெரியவருகிறது. அவை ஒவ்வொன்றுக்கும் இடையிலான பரிவர்த்தனை மதிப்புக் குறித்து எதுவும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், உப்பும் நெல்லும் சமமதிப்பில் பரிவர்த்தனை செய்துகொள்ளப்பட்டதை அகநனூற்றுச் செய்யுள்கள் இரண்டின் வழி அறிந்துகொள்ள முடிகிறது. உப்பு விற்பதைத் தொழிலாகக் கொண்ட உமணர் சமூகப் பெண்கள் இருவர் உப்பு விற்கும் காட்சியை இச்செய்யுள்கள் பின்வருமாறு அறிமுகம் செய்கின்றன: 'நெல்லின் நேரே* வெண்கல் உப்பு கொள்ளீரோ' ( அகநானூறு140:7), 'நெல்லும் உப்பும் நேரே* ஊரிர் கொள்ளீரோ (அகநானூறு390:8) (*நேரே: ஒத்த, சமன் - அகராதிப் பொருள்). உப்பு போன்று நெல்லுக்கு இணையான மதிப்புப் பெறாமல் கூடுதல் மதிப்புப் பெற்ற பொருளாக மீன் இருந்துள்ளதை 'சின்மீன், சொரிந்து பல் நெல் பெறூஉம்' என்று ஐங்குறுநூறு (49:2) குறிப்பிடுகிறது. மற்றொரு பக்கம் வரால் மீனும் நெல்லும் ஒரே சீரான மதிப்பில் இருந்துள்ளதாகவும் ஐங்குறுநூறு (48:2-3) குறிப்பிடுகிறது. வரால் மீன் கொண்டுவந்த வட்டிலில் அதற்கு மாற்றாக வெண்ணெல் நிரப்பப்பட்டதாக இச்செய்யுள் குறிப்பிடுகிறது. மீனின் வகைமை அடிப்படையில் இது நிகழ்ந்திருக்கலாம். உப்பும் நெல்லும் சம மதிப்புக் கொண்டதாக பதினான்காம் நூற்றாண்டிலும் இருந்துள்ளன. பிரான்மலைக் கல்வெட்டுச் செய்திவழி (தெ.இ.க.8, க.எண்:442) இதை அறியமுடிகிறது. இக்கல்வெட்டில் உப்பு, நெல், இரண்டுக்குமான வரி குறித்த செய்தி பின்வருமாறு இடம்பெற்றுள்ளது: உப்புப் பொதி* (* பெரியமூட்டை) ஒன்றுக்குக் காசு ஒன்றும் உப்புப் பாக்கத்துக்குக்* (*சிறிய மூட்டை) காசு அரையும் உப்புத் தலைச்சுமை ஒன்றுக்குக் காசு அரையும் உப்பு வண்டி ஒன்றுக்குக் காசு பத்தும் நெற்பொதி ஒன்றுக்குக் காசு ஒன்றும் நெற் பாக்கம் ஒன்றுக்குக் காசு அரையும் நெல் வண்டி ஒன்றுக்குக் காசு பத்தும் (தலைச்சுமையாக நெல் கொண்டு போவதில்லை போலும்) உப்பு, நெல் இரண்டின் மீதும் ஒரே சீரான வரிவிதிப்பு இருந்ததன் அடிப்படையில் இவை இரண்டும் சமமதிப்புடையதாக இருந்திருக்கும் என்று கருத இடமுள்ளது.

### வரியும் சரக்குப் பரிவர்த்தனையும்

பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத் தமிழகத்தில் கோயில், பள்ளி, மடம் என சமய நிறுவனங்கள் வலுவாக நிலைபெற்றிருந்தன. மன்னர், மன்னர் குடும்பத்தினர், உயர் அரசு அதிகாரிகள், வணிகர்கள் என்போரின் பொருளாதார ஆதரவு இந்நிறுவனங்களுக்குக் கிட்டின. இது பொன், அணிகலன்கள், பணம், நிலம், கால்நடைகள் என்பனவற்றின் வடிவில் கொடைப் பொருளாக வழங்கப்பட்டது. சாகுபடி செய்யப்படாத நிலங்கள் திருத்தப்பட்டு விளைநிலங்களாக்கப்பட்டதுடன், புதிய வாய்க்கால்கள், கிளை ஆறுகள், ஏரிகள் என்பன வெட்டப்பட்டு, நீர் மேலாண்மை வளர்ச்சியுற்றது. இதனால் அரசின் நிலவரி வருவாய் உயர்ந்தது. இதில் நெல்லும் ஒரு பரிவர்த்தனைப் பொருளாக இடம்பெற்றது. நெல்லாயம், நெல்லிறை, நெல்வரி என்ற பெயரில்நெல்வடிவில்வரிசெலுத்தப்பட்டுள்ளது. நெற்கூலி, கண்காணியார் நெல் என்ற சொல்லாட்சிகளும் காணப்படுகின்றன. வரியாகச் செலுத்தும் நெல் கலம் என்ற முகத்தலளவையால் அளக்கப்பட்டது. ஒரு வேலி பரப்பளவுள்ள நிலத்திற்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றேறக்குறைய 95 கலத்திலிருந்து 100 கலம் வரை வரி வாங்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே பணவடிவில் வரிவாங்கப்பட்டுள்ளது (பொன் வடிவில் செலுத்தினால் கழஞ்சு என்ற நிறுத்தலளவை பயன்படுத்தப்பட்டது). பிற்கால சோழர் ஆட்சியில் கிராமப்புற அரசு ஊழியரகளுக்கு 'எச்சோறு' என்ற பெயரில் அரிசிச் சோறு வழங்கப்பட்டுள்ளது. பாண்டியர் ஆட்சியில் வீரபாண்டியன் (13 ஆம் நூற்றாண்டு) ஒரு மா பரப்பளவு கொண்ட நிலத்துக்கு நான்கு கலம் நெல்லும் கால் காசும், ஒரு வேலி நிலத்துக்கு எண்பது கலம் நெல்லும் ஐந்து காசும் வரியாக இருந்துள்ளது (இராமன் கே.வி. 180).

### திருமடைப்பள்ளியும் நெல் பரிவர்த்தனையும்

கோவில்களில் படையல் பொருள்கள் சமைக்கவும், தலயாத்திரை செல்லும் வழிப்போக்கர்கள், கோயில் பணியாளர்கள், பிராமணர்கள், வழிபடுவோர் ஆகியோருக்கு உணவு வழங்கவும் திருமடைப்பள்ளி என்ற பெயரில் சமையலறை ஒன்று கோயிலின் தென்கிழக்குத்திசையில் அமைக்கப்பட்டிருக்கும். பெரிய கோயில்களில் பணியாளர்கள் பலருடன் கோயிலின் ஒரு துணை அமைப்பாகவே இது இயங்கும். இதன் செலவுக்காக விடப்படும் நிலம் திருமடைப்பள்ளிப்புறம் என்படும். திருமடைப்பள்ளியின் செலவுகளை எதிர்கொள்வதில் நெல் பரிவர்த்தனைப் பொருளாக விளங்கியுள்ளது. இது தொடர்பான பல கல்வெட்டுக்களில் ஒரு கல்வெட்டை மட்டும் எடுத்துக்காட்டாகப் பாரக்கலாம். இக்கல்வெட்டு தஞ்சாவூர் மாவட்டம் செந்தலை ஊரின் சுந்தரேஸ்வரர் கோவிலில் உள்ளது. இதன் காலம் கோப்பரகேஸ்வரவர்மனின் எட்டாவது ஆட்சியாண்டுக் காலமாகும் (தெ.இ.க. 19:210). புன்றகை என்ற ஊரில் உள்ள தேவதான நிலத்தில் இருந்து ஆண்டுதோறும் வரும் முப்பது கலம் நெல்லின் துணையால் மேற்கொள்ள வேண்டியவற்றை இக்கல்வெட்டு பின்வருமாறு பட்டியல் இடுகிறது: 1) பயற்றுப் போனகப் படையலுக்கான அரிசி, 2) இதற்கான நெல்லை அரிசியாக்க நெல் குற்றும் பெண்ணுக்கான கூலி, 3) துவரம் பருப்பு, 4) பயறு, 5) நெய், 6) சர்க்கரை, 7) பொறிகறி, 8) விறகு, 9) விளக்கெரிக்க எண்ணெய்.

மேற்கண்ட ஒன்பது செலவுகளும் நெல்லின் பரிவர்த்தனை மதிப்பின் துணையுடனேயே நிகழவேண்டும் என்பதை இக்கல்வெட்டு குறிப்பிடுவதுடன் ஒவ்வொன்றுக்குமான நெல்லின் அளவையும் துல்லியமாகக் குறிப்பிட்டுள்ளது. பணத்தின் பங்களிப்புக்கு இணையாகவே நெல்லின் பங்களிப்பும் இருந்துள்ளதை இச்செய்தி உறுதிப்படுத்துகிறது.

### நெல்லும் வட்டியும்

பொன்னை அசலாகப் பெற்றுக்கொண்டு அதற்கு வட்டியாக நெல் கொடுக்கும் பழக்கமும் இருந்துள்ளது. தஞ்சை மாவட்டம் திருச்சொற்றுத்துறையில் உள்ள கல்வெட்டு ஒன்றில் 145 கழஞ்சு பொன்னுக்கு வட்டியாக நெல் வழங்கப்பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது (தெ.இ.க.13: 22). வட்டியாகப் பெற்ற நெல்லைக் கொண்டு பழவரிசி, துவரம் பருப்பு, பால், சர்க்கரை, வாழைப்பழம், நெய், பாக்கு, உப்பு ஆகியன வாங்கப்பட்டுப் படையல் படைக்கப்பட்டுள்ளது.

### சில எச்சங்கள்

பெருங்கற்காலம் தொடங்கி தமிழர்களின் உணவுப் பொருளாக மட்டுமின்றி அவர்களின் பண்பாட்டு வாழ்விலும் நெல்லின் பங்களிப்பு இன்றும் தொடர்கிறது. குறிப்பாக, நெல் வேளாண்மையிலும் வாழ்க்கை வட்டச் சடங்குகளிலும் வழிபாட்டிலும் இவை இடம்பெற்றுள்ளன. இவை வட்டாரத் தன்மை கொண்டவை. நிலம், நீர், காற்று என்பனவற்றுடன் சாதி சார்ந்து வேறுபாடான இயல்புகளைக் கொண்டிருந்தாலும் தமிழரின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்று என்னும் தகுதி நெல்லுக்கு உண்டு.


**துணை நூல்கள்**

- இராமன் கே.வி. (1977) பாண்டியர் வரலாறு
- காரல் மார்க்ஸ் (1998) மூலதனம் முதல் பாகம் (தமிழாக்கம்: தியாகு)
- சிவானந்தம் (2022) பொருநை ஆற்றங்கரை நாகரிகம்
- சிற்றம்பலம் சி.க. (1999) பண்டைத் தமிழகம்
- நொபுரு கரோஷிமா (1995) வரலாற்றுப் போக்கில் தென்னிந்தியச் சமூகம்
- ராஜதுரை எஸ்.வி. (2023) மார்க்ஸியக் கலைச் சொற்கள்
- தென் இந்தியக் கல்வெட்டுக்கள். தொகுதி 8, தொகுதி: 13, தொகுதி19.



கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார நலன்களால் கட்டுப்படுத்தப்படும் ஐக்கிய நாடுகள் அவை-

## ஜனநாயகம், மனித உரிமை, பேண்தகு வளர்ச்சியில் ஐ.நா வகிபாகம்!

ஐ.நா எதிர்கொள்ளும் சவால்கள், அதிகாரக் குறைபாடுகளைத் தாண்டி சர்வதேச சமாதானம், ஜனநாயகம், பாதுகாப்புச் சார்ந்த தளங்களில் இவை இன்றியமையாத வகிபாகத்தினைக் கொண்டுள்ளமையை மறுக்கமுடியாது.

ஐ.நா அவையின் ஒரு அங்கமாக அதன் பாதுகாப்பு அவை (UN security council) உருவாக்கப்பட்டது. அதில் பெரிய நாடுகளுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் கொடுக்கப்பட்டது. சர்வதேச, பிராந்திய, பொருளாதார, இராணுவ பலம்மிக்க உறுப்புநாடுகளுக்கு ஏனைய உறுப்பு நாடுகளைவிடக் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டது. அவை பாதுகாப்பு அவையில் நிரந்தர இடங்களைப் பெற்றன. அத்தோடு வீட்டோ அதிகாரத்தையும் பெற்றன. தமக்கு உடன்பாடில்லாத முன்மொழிவுகள், தீர்மானங்களைத் தடுக்கும் வகையிலேயே வீட்டோ அதிகாரம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. பாதுகாப்பு அவையின் வாக்கெடுப்புமுறை அடிப்படையில் செயற்திறன் அற்றது.

### ஐ.நாவும் துணை அமைப்புகளும்

ஐ.நா. உருவாக்கப்பட்ட பின்னர் பல ஐ. நா. இணை, துணை அமைப்புகளும் உருவாக்கப்பட்டன. அந்த வரிசையில் முதலாவதாக 1946 இல் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (International Labour Organization - ILO) நிறுவப்பட்டது. அதே ஆண்டில் ஐ.நா. சிறுவர் நிதியம் (United Nations Children's Fund - UNICEF) உருவாக்கப்பட்டது. இது இரண்டாம் உலகப்போரின் அழிவுகளின் விளைவாக ஆசியா, மற்றும்; ஐரோப்பாவில் குழந்தைகளுக்கு அவசர உதவி வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கம் பெற்றது. தொடர்ந்து பல சிறப்புத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. 1948 இல் கொண்டுவரப்பட்ட உலக மனித உரிமைகள் பிரகடனம் (Universal Declaration of Human Rights) முக்கியமானது. அடிப்படை மனித உரிமைகள் ஐ.நா. சாசனத்தின் ஒரு பகுதியாக இருந்தாலும், தனியான மனித உரிமைகள் பிரகடனம், மனித உரிமைளை மேம்படுத்துவதற்கான உந்துதற் கருவியாக அமைந்தது.

ஐ.நா அவையின் தோற்றத்திலிருந்து காலத்திற்குக் காலம் அதன் வகிபாகம் எவ்வாறு அமைந்;தது, அதன் குறைகளுக்கு மத்தியில் சர்வதேச அமைப்பாக அதன் தேவை, வகிபாகம் குறித்து இந்தக் கட்டுரை விரிவாக நோக்குகின்றது.

உண்மையில் ஐ.நா சர்வதேச நீதிமன்றம் உலகளாவிய ஒரேயொரு உயர் மட்ட அலகு. ஆனால் அது அந்த நோக்கில் அது பயன்படுத்தப்படுவது வெகு அரிது. அதற்கு மாறாக ஐநா பாதுகாப்பு அவை சட்டரீதியான கவனப்படுத்தலைவிட அரசியல் நலன்களின் அடிப்படையிலேயே - முரண்பாட்டு சூழல்களை கையாள்வதில் தீர்மானங்களும் முடிவுகளும் எடுக்கப்படுகின்றன. அரசியல் நலன்கள் எனும் போது அது வல்லரசுகளின் நலன்களை குறிக்கின்றது.

### தன்னிச்சையான ஆக்கிரமிப்புகள்

போர்த்தடுப்புச் சார்ந்த ஐநா சாசனத்தின் விதிகள் இறுக்கமானவையாக இருப்பினும் பெரும் எண்ணிக்கையிலான போர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வெடிப்பதை தடுக்க ஐ.நா அமைப்பு தவறிவிட்டது. இரண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக யுத்தத்திற்கு பின்னர், அதாவது 1950களில் தொடங்கி பிற்பட்ட காலங்கள் வரை அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் ஒரு தலைப்பட்சமாக பல போர்களைத் தொடங்கின. 1956 இல் ஹங்கேரி மீது, - 1968இல் செக்கோஸ்லோவாகிய மீது, - 1971இல் ஆப்கானிஸ்தான் மீது எனச் சோவியத்தின் ஆக்கிரமிப்புகளைக் குறிப்பிடலாம். 1961 இல் கியூபா மீது, - 1980இல் நிக்ரகுவா, - 1983இல் கிரேனாடா, - 1989இல் பனமா போன்றவை அமெரிக்க ஆக்கிரமிப்புகளின் பட்டியலிற் சில.

ஐநா சாசனத்தையும் சர்வதேச விதிகளையும் மீறிய தன்னிச்சையான ஆக்கிரமிப்பு அணுகுமுறை செப்டெம்பர் 11இற்குப் பின் மேலும் வலுவடைந்தது. 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற லேபல் சர்வதேச சட்டத்திற்குப் புறம்பான போர்ப் பிரகடனப்படுத்தல்களுக்கான திறவுகோலாக அமைந்தது.

ஐநா பாதுகாப்பு அவையின் ஒப்புதல்கள் இல்லாமல் அமெரிக்கா தலைமையிலான மேற்கு 2001இல் ஆப்கானிஸ்தான் மீதும், 2003இல் அமெரிக்க பிரித்தானிய கூட்டுப் படைகள் ஈராக்கின் மீதும் போர் தொடுத்தன. இவை 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தன்னிச்சையான போர்களின் ஒரு மீள்வருகையைச் (*Come back*) சர்வதேச அரங்கில் தொடக்கி வைத்தன.

### போர் எதிர்ப்பு, சமாதானம், சமநிலை

ஐநா அவையானது சர்வதேச ரீதியில் போர் எதிர்ப்பு, சமாதானம் மற்றும் சமநிலையை உருவாக்குவதற்குரிய கருவியாக நிறுவப்பட்டது. ஆனால் நடைமுறையில் அது எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்று பார்த்தோமானால் வல்லரசுகள் தமது நலன்களுக்கு சாதகமான போர்களை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது. அல்லது ஆக்கிரமிப்பு, இன அழிப்புப் போர்களைக் கண்டுகொள்ளாமலும் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆக்கிரமிப்புத் தரப்புகளுக்கு ஆதரவான நிலைப்பாடுகளை நிலைநிறுத்தவும் ஐ.நா பாதுகாப்பு அவை பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு சமகாலத்தில் பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பினைக் குறிப்பிடலாம். 2009இல் ஈழத்தில் முள்ளிவாய்க்கால் பேரழிவையும் பௌத்த சிங்கள பேரினவாத அரசின் இன அழிப்பினையும் சர்வதேசமும் பார்த்துக் கொண்டிருந்தது, ஆயுத உதவிகளை வழங்கி சிறிலங்காவுக்கு முண்டு கொடுத்தது என்பதும் வரலாற்று உண்மை.

போருக்கு எதிரான அல்லது மனித உரிமை மீறல்களுக்கு எதிரான ஐநாவின் நிலைப்பாடுகளை முடக்குவதற்கும் வல்லரசுகளின் அதிகாரம் பயன்படுத்தப்பட்டது. ஐநா பாதுகாப்பு அவையில் நிரந்தர உறுப்புநாடுகளாகவுள்ள உள்ள வல்லரசுகளின் வீட்டோ அதிகாரம் மாறி மாறி இத்தகு நிலைபாடுகளுக்கும் ஐநாவின் தீர்மானங்களை முடக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது ஐ.நா நிறுவப்பட்ட காலப்பகுதியில் இருந்து இன்றைக்கு 80 ஆண்டுகளாக தொடர்கின்ற கதைதான்.

### ஐ.நாவைப் புறக்கணிக்கும் அமெரிக்கா

அண்மையில் ஒரு ஆவணம் கசிந்துள்ளது. ஐ.நா, நேட்டோ உட்பட்ட சர்வதேச நிறுவனங்களுக்கான நிதியுதவிகளை அமெரிக்கா நிறுத்தவுள்ளதான ஆலோசனையை உள்ளடக்கிய குறிப்பு அது எனப்படுகின்றது. வோசிங்னர் போஸ்ட் பத்திரிகை அந்த ஆவணத்தினை மேற்கோள் காட்டிச் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் வரவு-செலவுத் திட்ட இணைப்பாளர் டக்ளஸ் பிட்கின் (*Douglas Pitkin*) கையெழுத்திட்டுள்ள அந்த ஆவணத்தில் வெளியுறவு அமைச்சகத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் அரைவாசிக்கும் மேலான வெட்டு மேற்கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நாவிற்கான மொத்த நிதியுதவியில், அதாவது அதன் உறுப்பு நாடுகளிடமிருந்து கிடைக்கப்பெறும் மொத்த நிதியில் 20 வீதத்தினை அமெரிக்காவே வழங்கிவந்தது. அதுபோல் நேட்டோவிற்கான நிதியில் 16 வீதத்தினை அமெரிக்கா வழங்கிவந்தது. ஒரு வகையில் ட்ரம்பின் திட்டங்களால், குறிப்பாக ஐ.நா, நேட்டோ, சர்வதேச நிறுவனங்களிற்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிவெட்டு சர்வதேசக்கூட்டுச் செயற்பாடுகளைப் பலவீனப்படுத்துவதோடு, சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதற்கான வெளியையும் வாய்ப்பையும் உருவாக்குகின்றது என்ற கருத்து ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றது.

சர்வதேச சமாதான, முரண்பாட்டுக் கொள்கைகளுக்கான அனைத்து நிதியுதவிகளையும் நிறுத்துகின்றது. சர்வதேச மனிதாபிமானச் செயற்பாடுகள், உலகளாவிய நலவாழ்வு, மருத்துவத் திட்டங்களுக்கான உதவிகளைக் குறைக்கின்றது. அமெரிக்காவின் சர்வதேச நலத்திட்டங்களுக்கான USaid அமைப்பு, 83 வீதமான உடன்படிக்கைகளை விலக்கிக்கொண்டுள்ளது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அமெரிக்கத் தூதரகங்களையும் ட்ரம்ப் நிர்வாகம் மூடவுள்ளது. Fulbright (Fellowships/Scholarships) கல்வித்திட்ட உதவிக்கொடுப்பனவுகள் முழுமையாக நிறுத்தப்படவுள்ளன. Fulbright என்பது ஒரு கல்வி உதவிக்கொடுப்பனவுத் திட்டம். அமெரிக்கா மற்றும் பிற நாடுகளுக்கிடையே பரஸ்பர புரிதலை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட கல்வித்திட்டமாகும். அமெரிக்கா மற்றும் பிற நாடுகளுக்கிடையே பரஸ்பர புரிதலை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும். மேற்குறிப்பிடப்பட்ட நிதிவெட்டுகள் பல தளங்களிற் பாரதூரமான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக்கூடியன.

### உலகப் போரினைத் தடுப்பதில் தோல்வி

ஐக்கிய நாடுகள் அவையின் முன்னோடி அமைப்பு 'தேசங்களின் சங்கம்' (League of Nations). இது முதலாம் உலகப் போர் முடிந்த பிற்பாடு, 1919இல் உருவாக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரினைத் தடுப்பதில் இது தோல்வியடைந்தது.

ஐ.நா பாதுகாப்பு அவையின் இரண்டு அணிகளும் (அமெரிக்கா - ரஷ்யா) ஒவ்வொரு விவகாரத்திலும் வாக்களித்து, பாதுகாப்பு அவையின் தீர்மானங்களை வலுவற்றதாக ஆக்கிவந்துள்ளன, முடக்கியுள்ளன. சில சந்தர்ப்பங்களில் போர்நிறுத்தத்தினை ஏற்படுத்தும் கருவியாகவும் பாதுகாப்பு அவை தொழிற்பட்டிருக்கின்றது. அத்தகு நடவடிக்கைகளிற்கூட பாதுகாப்பு அவையின் அதிகாரமும் செயற்திறனும் வரையறுக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, சைப்ரஸில் உள்ள ஐ.நா. சமாதானத்தை பேணும் படைகள் (UNFICYP) மற்றும் லெபனானில் உள்ள UNIFIL படைகள்.

கிழக்கு - மேற்கு இடையிலான முரண்பாட்டின் (East-West conflict) முடிவு அல்லது தணிவு சர்வதேசச் சட்டங்கள் மற்றும் ஐ.நாவின் வகிபாகம் சார்ந்து எவ்வித மறுமலர்ச்சியையோ மாற்றத்தையோ ஏற்படுத்தவில்லை. 1991இல் இடம்பெற்ற வளைகுடாப் போரில், சட்டரீதியான பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க ஈராக் குவைத் மீது தாக்குதல் தொடுத்தது. அத்தோடு பாதுகாப்பு அவையின் அங்கீகாரத்தோடு நடாத்தப்பட்டாலும் புதிய உலக ஒழுங்குக்கு அது வழிவகுக்கவில்லை. 1999இல் நேட்டோ யூகோஸ்லாவியா மீது தாக்குதலில் இறங்கியது. பாதுகாப்பு அவையின் அங்கீகாரம் இல்லாமல் வல்லரசுகள் போரில் இறங்கும் என்பதை அந்நிகழ்வு நிரூபித்தது.

அதிகாரப் பயன்பாட்டில் ஐ.நா. சாசனத்தின் தோல்வியை நுணுக்கமாக நோக்கவேண்டியுள்ளது. ஒரு சர்வதேச நிறுவனமாக அதன் பன்முகத்தன்மையும் செயல்வலுவும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பினும் அதன் தேவையும் அது குறித்த உரையாடலும் வலுவாகவே உள்ளன.

### ஐ.நா உருவாக்கத்தின் பின்னான போர்கள்

ஐ.நா உருவாக்கத்தின் பின் உலகில் இடம்பெற்றுவரும் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையும் சர்வதேச சட்டத்தை மேற்கோள் காட்டி போரை நடாத்தும் தரப்புகளால் நியாயப்படுத்தப்பட்டிருக்கின்றன - நியாயப்படுத்தப்படுகின்றன. பனிப்போரின் பின்னரான பெரும்பாலான இராணுவத் தலையீடுகள் அல்லது ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா போன்ற நாடுகள் மீதான 'பின்-செப்ரெம்பர் 11' ஆக்கிரமிப்புகள், சட்டபூர்வமான பாதுகாப்பு என்ற அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டிருக்கின்றன. யுகோஸ்லாவியா (1999), ஈராக் (2003) போர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பாதுகாப்பு அவையின் 'மறைமுக' அனுமதி மேற்கோள் காட்டப்படுகின்றது. இவற்றில் ஈராக் போரின் விளைவு, உலக மக்களினதும் பெரும்பாலான அரசுகளினதும் எதிர்ப்பைப் கருத்தியல் ரீதியாக நிறுவியது எனலாம்.

நாடுகளின் தலைவர்கள் போர் தொடர்பாக இரண்டு நாக்குகளிற் பேசுவது வழக்கம். தேசிய மட்டத்தில் நாட்டுமக்களை அணுகும்போது, 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்றவாறான அரசியல் நோக்கம் அல்லது (மனிதாபிமானத் தலையீடு) தார்மீகக் காரணங்களை முன்வைப்பர். அதேவேளை சர்வதேச சமூகத்தை நோக்கிக் கருத்துரைக்கையில் சட்டரீதியான வாதங்களை முன்வைப்பர்.

ஐ.நா அமைப்பின் உருவாக்கத்திலிருந்து இன்றுவரையான அதன் செயற்பாடுகள், கவனக்குவிப்புகள் குறித்த ஒரு வரலாற்றுப் பார்வை இங்கு அவசியமாகுகின்றது. ஐ.நா உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து கிட்டத்தட்ட ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கு ஒருமுறை அதன் கவனக்குவிப்பு புதிய புதிய விகாரங்கள் மீது திரும்பியுள்ளது.

### 1950: பனிப்போரின் போது ஐ.நா

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகில் சமாதானம் நிறுவப்படும் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. உலகம் தொடர்ந்தும் மோதல்கள், முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டது. குறிப்பாக 1950ல் தொடங்கிய கொரியப் போரில், அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் ஒவ்வொரு தரப்பினை ஆதரித்தன. போர்களைத் தடுப்பதற்கான நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட ஐ.நா சவால்களை எதிர்கொண்டது. கொரியப் போர் ஐ.நா ஆணையுடன் இடம்பெற்ற முதலாவது இராணுவ நடவடிக்கையாகும். ஐ.நா படைகள் அமெரிக்க கட்டுப்பாட்டில் இருந்தன. இருந்தபோதும் அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியம் ஆகிய வல்லரசுகளுக்கிடையேயான பதற்றங்களைத் தணிப்பதற்கான அரங்காக ஐ.நா செயற்பட்டது. 1991-இல் சோவியத் ஒன்றியத்தின் உடைவுவரை ஐ.நா அத்தகையதொரு வகிபாகத்தினைக் கொண்டிருந்தது.

### 1960: அணுவாயுத அச்சுறுத்தலும் புதிய உறுப்புநாடுகளும்

1960-களில் அணுவாயுத அச்சுறுத்தல் அதிகரித்தது. இதனால் ஐக்கிய நாடுகள் அவையின் கவனக்குவிப்பிற்குரிய செயற்திட்டங்களில் ஆயுதக் குறைப்பு ஒரு முக்கியமான அம்சமாக மாறியது. குறிப்பாக பனிப்போரின் போது நிலவிய அணுவாயுத அச்சுறுத்தல் இதற்கான முதன்மைக் காரணி. 1968இல் ஐ.நாவினால் அணுவாயுதப் பரவற் தடுப்பு உடன்படிக்கை (*Nuclear Non-Proliferation Treaty*) நிறைவேற்றப்பட்டது. அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியம் ஆகிய இரு நாடுகளின் வல்லரசுப் போட்டி சர்வதேச அரசியலையும், ஐ.நா.வின் செயற்பாடுகளையும் வெகுவாகப் பாதித்தது. இரு நாடுகளும் உலக நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக காலனிய-எதிர்ப்புவாதச் சொல்லாட்சியைக் கையிலெடுத்தன. 1955 – 1970 காலப்பகுதியில், ஐ.நா 66 புதிய உறுப்பு நாடுகளால் விரிவடைந்தது. இதன் விளைவாக ஐ.நா.வின் கவனம் உலகளாவிய கிழக்கு - மேற்கிற்கு இடையிலான மோதலிலிருந்து, வடக்கு மற்றும் தெற்குக்கு இடையே (செல்வச்செழிப்பு எதிர் வறுமை) நிலவிய வேறுபாட்டின் மீது கவனத்தைத் திருப்பியது. புதிய உறுப்பு நாடுகளின் அழுத்தம் காரணமாக பாதுகாப்பு அவை 11 நாடுகளிலிருந்து 15 நாடுகளாக விரிவாக்கப்பட்டது.

### 1970: சர்வதேச அரசியல் நிகழ்ச்சிநிரலில் மனித உரிமைகள்

1970களில் மனித உரிமைகள் விவகாரம் சர்வதேச அரசியலின் மையப்பொருளாக மாறியது. 1976 இல் மனித உரிமைகள் உடன்படிக்கை சர்வதேச சட்ட நியதிக்குரியதாக நிர்ப்பந்திக்கப்பட்டது. இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் பல சர்வாதிகார ஆட்சிபீடங்கள் முடிவுக்கு வந்தன. இது ஆட்சிபீடங்கள் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கு நிர்ப்பந்தித்ததோடு, மோசமான மனித உரிமை மீறல்கள் அம்பலப்பட வழிகோலியது. வியட்நாமில் அமெரிக்கா நடாத்திய போரின் (1955-1975) மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனித உரிமைகள் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுவதற்குரிய உந்துதலை வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தியல் மற்றும் சட்ட ரீதியாக மனித உரிமை விவகாரங்கள் சர்வதேச அரசியலில் பெரும் முக்கியத்துவம் பெற்றன. சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற அரசு-சாரா பெரிய மனித உரிமை அமைப்புகள் 70களில் தீவிரமாக இயங்கத்தொடங்கின. மனித உரிமை மீறல்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. மனித உரிமை இயக்கங்கள் சர்வதேச மயப்பட்டன. மனித உரிமை இயக்கங்கள் அரசுகளின் மனித உரிமை மீறல்களை விமர்சிப்பதற்குரிய ஆதாரங்களாக ஐநா தீர்மானங்களை பயன்படுத்தின.

### 1980: பேண்தகு வளர்ச்சியும் சூழலியல் சிக்கல்களும்

1980களில் ஐ.நாவின் கவனக்குவிப்பு பேண்தகு வளர்ச்சி மற்றும் சூழலியல் (*Sustainability and environmental issues*) சார்ந்தாக அமைந்தது. 1972 இல் ஸ்தொக்ஹோம் சூழலியல் மாநாட்டினை (*Stockholm Environmental Conference*) அடுத்து இந்த ஈடுபாடு அதிகரித்தது. 1980 இல், இயற்கை பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை சமநிலைப்படுத்தும் உலகளாவிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு மூலோபாயம் முன்மொழியப்பட்டது. அத்துடன் 'பேண்தகு வளர்ச்சி' எனும் கருத்தியலும் அறிமுகமானது. 1982ல் இயற்கைப் பாதுகாப்பு உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டதோடு,; 1983இல் சூழலியல் மற்றும் மேம்பாட்டுக்கான உலக ஆணையம் (*World Commission on Environment and Development - WCED*) உருவாக்கப்பட்டது. 1984 இல் அந்த அமைப்பு ஒரு சுயாதீன ஐ.நா. அமைப்பாக மாறியது. 1987இல் "பேண்தகு வளர்ச்சி" என்ற கருத்தியலை சர்வதேச நிகழ்ச்சிநிரலுக்குக் கொண்டுவந்து அறிக்கையை வெளியிட்டது. எதிர்கால தலைமுறைகள் வாழ்வதற்கு உகந்த பூமியை உறுதிப்படுத்துவதனூடாகச் சமகாலத் தேவைகளை நிவர்த்தி செய்வது தொடர்பான ஐ.நா.வின் 17 பேண்தகு வளர்ச்சி இலக்குகள் இந்த அறிக்கையிலிருந்து உருவாக்கப்பட்டன,

### 1990: பனிப்போரின் முடிவும் சமாதான முன்னெடுப்புகளும்

பனிப்போரின் முடிவு ஒரு புதிய உலக ஒழுங்குசார் சமநிலையை உருவாக்கியது. அந்தப் புதிய உலக அரங்கில் அமெரிக்கா தனிப்பெரும் வல்லரசாக, உலக முதன்மைச் சக்தியாக மாறியது. இந்த யுகத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டுடன் பல்வேறு சமாதானப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன, ஐ.நா. படையின் ஆளணி எண்ணிக்கையில் அதிகரித்தது. அதேவேளை ருவாண்டாவிலும் போஸ்னியாவிலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப்படுகொலை நடவடிக்கைகளைத் தடுக்கும் திராணியை ஐ.நா கொண்டிருக்கவில்லை என்பதுவும் வரலாறு. ஐ.நா நடவடிக்கைகள் மீது நம்பிக்கையீனம் அதிகரித்தமைக்கான காரணிகளில் இந்த இன அழிப்புகளைத் தடுக்கமுடியாமை முக்கிய காரணியாக அமைந்தது.

### 2000: வறுமை ஒழிப்பும் பாதுகாப்பு உரிமை-பொறுப்பும்

2000-களில் பொது மக்கள் மீதான அத்துமீறல்களை கையாளுவதற்கான கவனக்குவிப்பினை ஐ.நா கொண்டிருந்தது. பாதுகாத்துக் கொள்வதற்கான பொறுப்பு (*Responsibility to Protect - R2P*) என்ற கருத்தியலும் கொள்கையும் முதன்மைப் பேசுபொருளானது. அத்தோடு வறுமை ஒழிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கியமையும், ஐ.நா மனித உரிமைகள் அவை (*UN Human Rights Council -UNHRC*) நிறுவப்பட்டதையும் (*15.03.2006*) குறிப்பிடலாம்.

### 2010 - 2020: பேண்தகு இலக்குகளும் ஆட்சிபீட மாற்றங்களும்

2010 முதல் 2020 வரை முக்கிய இடம்வகித்த ஐ.நா நடவடிக்கைகள் அரபு வசந்தம், உள்நாட்டுப் போர்கள் மற்றும் சிரியாவிலிருந்து அதிகரித்த அகதிகள் வருகை ஆகியவற்றின் விளைவுகளால் தீர்மானிக்கப்பட்டவையாகும். ரஷ்யா மற்றும் அமெரிக்காவின் படைவலுச் சமநிலை ஐ.நா பாதுகாப்பு அவையின் தீர்மானங்களிற் செல்வாக்குச் செலுத்தின. குறிப்பாக உக்ரைன் விவகாரங்கள் சார்ந்த தீர்மானங்களைச் சொல்லலாம். 2015 இல் வறுமை ஒழிப்பு மற்றும் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ள ஐ.நா பல்வேறு பேண்தகு இலக்குகளைக் கொண்ட திட்டங்களை அறிமுகப்படுத்தியது. தொடர்ந்து கோவிட்-19 பெருந்தொற்றின் விளைவுகள் கவனக்குவிப்பிற்கு வந்தன. அதில் உலக சுகாதார அமைப்பின் ஆய்வுகளும் மதிப்பீடுகளும் முதன்மைப் பங்கு வகித்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிறுவன ரீதியான குறைகள்

ஐ.நா.வின் நிறுவன ரீதியான குறைகள், அதன் தோல்வியை ஓரளவிற்கு விளக்குகின்றன. ஐ.நா. சாசனத்தின் 47வது அலகு சுட்டுவதற்கு அமைய இராணுவ விவகாரங்களைக் கையாள்வதற்கான தலைமைக்குழு உருவாக்கப்படவில்லை. இந்தக்குழு, நிரந்தர உறுப்புநாடுகளின் தலைமைகளை உள்ளடக்கியதாக, பாதுகாப்பு அவையின் கட்டுப்பாட்டில் அனைத்து ஆயுதப்படைகளையும் மூலோபாய ரீதியில் செயற்படுத்துவதற்கான பொறுப்புடையதாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக பெரிய நாடுகள் தமது இராணுவ அதிகாரங்களை கட்டுப்படுத்த வாய்ப்பளிக்கின்ற பொறிமுறைகளே உருவாக்கப்பட்டுள்ளன. 1950-களிலிருந்தும், கொரியாவில் நடந்த தலையீட்டின் பின்னர், ஒவ்வொரு சர்வதேச விவகாரத்திலும் ஐ.நா. படைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் அவை சட்டபூர்வமாக ஐ.நா.வின் கீழ் இருந்தாலும், நாடுகளின் தேசியப் படையணிகளிலிருந்து உள்ளடக்கப்பட்டன. 1994இல் ருவாண்டாவில் இனப்படுகொலை இடம்பெற்றுக்கொண்டிருந்த போது அதனைத் தடுக்காமல் பெல்ஜியத்தின் ஐ.நா. படைகள் வெளியேறியமை ஐ.நா இராணுவத் தலையீட்டின் பேரழிவு விளைவுக்கு எடுத்துக்காட்டானது.

பாதுகாப்பு அவையின் இன்னுமோர் தவறான நடவடிக்கை, அதன் இராணுவ அதிகாரத்தை நாடுகளின் தேசியப் படைகளுக்கு (ஈராக், போஸ்னியா-ஹெர்செகோவினா, சோமாலியா, ருவாண்டா, ஹைட்டி, அல்பேனியா, ஐவொரி கோஸ்ட்) ஒப்படைத்தமையாகும். அத்தகைய சூழ்நிலைகளில் அவை ஐரோப்பிய அல்லது ஆப்பிரிக்க ஒன்றியம் போன்ற பிராந்திய அமைப்புகளின் கீழ் செயற்படுகின்றன. மேலும் இத்தகைய சூழல்களில் இராணுவ நடவடிக்கைகள் பாதுகாப்பு அவையின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதில்லை என்பதாகும்.

இராணுவ நடவடிக்கைகளின் சட்டபூர்வத்தை மதிப்பீடு செய்யக்கூடிய அதிகாரம் கொண்ட ஒரே ஐ.நா அமைப்பு சர்வதேச நீதிமன்றமாகும். இதன் உருவாக்கத்திலிருந்து இந்த அமைப்பு மிகவும் அரிதாகவே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. 2002-2003 இல் ஈராக் மீதான ஒரு சாத்தியமான படையெடுப்புக் குறித்த விவாதம் முழுமையாக இடம்பெற்றபோதுகூட, ஹேக் இலுள்ள சர்வதேச நீதிமன்றம் (*International court of justice - Hague*) அவ்விவகாரத்தைக் கையாள வேண்டும் என்று எந்த நாடுகளும் வலியுறுத்தவில்லை. பாதுகாப்பு அவையின் தீர்மானங்கள், சட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுள்ளனவா என்ற மதிப்பீட்டினை சர்வதேச நீதிமன்றம் மேற்கொள்ள முடியும். ஆனால் அவ்வாறுகூட ஏதும் நிகழவில்லை. பாதுகாப்பு அவை, ஒன்றின் அரசியற் காரணங்களின் அடிப்படையில் செயல்படுகிறது, அல்லது செயற்படுவதிற் தவறுகின்றது. மேலும், குற்றம் சாட்டப்படும் நாடுகள் குற்றச்சாட்டினை ஏற்கவேண்டும் என்பது, நீதிமன்றத்தின் அதிகாரத்தினை மிகவும் கோட்பாட்டுத் தன்மையானதாக ஆக்கிச் செயற்திறனைக் குறுக்குகின்றது.

### பெரும் போர்களுக்கு முகம்கொடுக்கும் சமகால உலகு

இன்றைய நாட்களிற்கூட உலகு பெரும் போர்களுக்கு முகம்கொடுக்கின்றது. பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் இன அழிப்புப் போர், ரஸ்ய-உக்ரைன் போர், சூடானின் உள்நாட்டுப் போர் ஆகியன உக்கிரமான சமகாலப் போர்களாகவும் பாரிய உயிரிழப்புகளை ஏற்படுத்துவனவாகவும் உள்ளன. இப்போர்களில் ஒன்றையேனும் நிறுத்துவதற்குரிய செயல்வலு அற்ற நிலையிலேயே ஐ.நா உள்ளது. அமெரிக்காவும் ரஷ்யாவும் மாறிமாறித் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐநாவின் செயல்வெளியை முடக்கி வருகின்றன.

பாதுகாப்பு அவையின்; நிரந்தர உறுப்புநாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றுக்கிடையிலான நலன்சார், அதிகாரம்சார் பிளவுகள் அதன் நம்பகத்தன்மையையும் இயங்குதிறனையும் வெகுவாகக் குறைந்துவிட்டது. பாதுகாப்பு அவையின் இந்நிலை புதியதுமல்ல. உலகின் பெரிய வல்லரசுகளுடன் தொடர்புபட்ட போர் மோதல்களை நிறுத்துவதற்கு ஐ.நாவின் வரலாற்றில் ஒருபோதும் முடிந்திருக்கவில்லை என்கிறார் சர்வதேச நெருக்கடிக் குழுவைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த ரிச்சர்ட் கவான் (*Richard Gowan i International Crisis Group*).

ஐ.நாவின் தோல்விகளைத் தாண்டி அதன் வெற்றிக் கதைகளில் பல மறைமுகமானவை என்கிறார் அமெரிக்காவிலுள்ள ஜேல் பல்கலைக்கழகத்தின் (*Yale University*) சர்வதேச சட்டத்துறைப் பேராசிரியர் ஊனா ஹாதவே (*Oona Hathaway*). வெடிக்காமற் தடுக்கப்பட்ட பல போர்களின் பின்னால் ஐ.நாவின் கைகள் உள்ளமை பொதுவெளியில் பரவலாக அறியப்படாமல் உள்ளது என்று அவர் வாதிடுகின்றார். ஐ.நா தீர்மானங்கள் சட்டரீதியான வலுவற்றவை என்றாலும் அதன் பொதுச்சபை சக்திவாய்ந்தது. குறிப்பாக ஒரு நாட்டின் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறவைப்பதற்குரிய நீதிமன்ற நடவடிக்கையை எடுக்கமுடியும்.

### வல்லரசுகளாற் கட்டுப்படுத்தப்படும் அமைப்பு

ஒரு வலுவானதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான கருத்தியல் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட மற்றும் செயல்படுத்தக்கூடிய தனித்துவமான அரசியல் அமைப்பு இல்லாத வரை, சர்வதேசச் சட்டம் என்பது வல்லரசுகளாற் கட்டுப்படுத்தப்படும் அமைப்பாகவே இயங்கும். இன்றைய உலகளாவிய புவிசார் அரசியற் சூழலில், கூர்மையான மோதல்களும் ஆழமான பிளவுகள் மற்றும் பல்வேறு அரசியல் முகாம்களுக்கு மத்தியில் ஐ.நா போன்ற அமைப்பின் இருப்பும் இயங்குதலும் முக்கியமானது. குறிப்பாக அதன் மனிதாபிமான ரீதியான வகிபாகம் மிகவும் முக்கியமானது என்பதை மறுக்கமுடியாது.

நவீன உலகளாவிய பிரச்சினைகளை எதிர்கொள்ள ஐ.நா.வை மேலும் திறமையான தாகவும் பிரதிநிதித்துவமானதாகவும் மாற்றுவதற்கான சீர்திருத்தங்களின் அவசியம் ஆய்வாளர்களாற் சுட்டிக்காட்டப்படுகின்றது. 1945இலிருந்து உலகப்போர் என்று வரையறுக்கக்கூடிய போர்களைத் தடுப்பதில் ஐ.நா.வின் பங்கு இருந்திருக்கின்றது. ஆனால் வலுவடைந்துவரும் சர்வதேச அதிகாரப் போட்டி மற்றும் உலகமயமாக்கல் அதிகரித்துள்ள உலகிற்குப் பொருத்தமாகத் தன்னைத் தகவமைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஐ.நாவிற்கு ஏற்பட்டுள்ளது.

சவால்கள், நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் மனிதாபிமான உதவி, அபிவிருத்தி மற்றும் சூழலியல்சார் துறைகளில் ஐ.நா. தனது பணியை விரிவுபடுத்தியுள்ளது என்பது யதார்த்தம். ஐ.நா பாதுகாப்பு அவையில் நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டுள்ள நாடுகள் அதன் செயற்திறனுக்கும் இயங்குதளத்திற்கும் சுயாதீனத்திற்கும் முட்டுக்கட்டையாக உள்ளன.

உலகளாவிய நெருக்கடிகளை உகந்த முறைகளிற் கையாள்வதற்கு ஏதுவாக அரசாங்கங்களை மட்டுமின்றி வெவ்வேறு சிவில் சமூகங்கள் உட்பட்ட துறைசார் தரப்புகளை உள்ளடக்க வேண்டும் என்ற கருத்தும் விமர்சகர்களால் முன்வைக்கப்படுகின்றது. இன்று ஐ.நாவில் 193 நாடுகள் உறுப்புரிமை வகிக்கின்றன. மேலதிகமாக இரண்டு அவதானிப்பு நாடுகள் (பலஸ்தீனம், வத்திக்கன்) உள்ளன. உலக உணவுத் திட்டம், ஐ.நா கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பு (*The United Nations Educational, Scientific and Cultural Organization - UNESCO*), உலக சுகாதார அமைப்பு (*WHO*) ஆகியவை ஐ.நாவின் இலக்குகளை அடைவதற்கான உகந்த விளைபயனுள்ள அமைப்புகளாகும். ஐ.நா எதிர்கொள்ளும் சவால்கள், அதிகாரக் குறைபாடுகளைத் தாண்டி சர்வதேச சமாதானம், ஜனநாயகம், பாதுகாப்புச் சார்ந்த தளங்களில் இவை இன்றியமையாத வகிபாகத்தினைக் கொண்டுள்ளமையை மறுக்கமுடியாது.

**உசாத்துணை:**


The institutional weaknesses of the UN | Le monde diplomatique | Olivier Corten | Sep. 2005

The History of the UN | https://folkogforsvar.no | Malini Breivega | Sep. 2021

Increasing criticism of the UN in a time when new wars are breaking out | https://www.abcnyheter.no/ | 26.09.2024

Leaked memo: USA plans to cut all funding to NATO and the UN https://www.finansavisen.no/14.04.2025

Is the UN Becoming Irrelevant? | https://www.project-syndicate.org | Mark Malloch-Brown, Jody Williams, Faith Mabera, Kal Raustiala, Roland Rich, and 2Joel Ng | 10.06.2024


கட்டுரையாளர்: எழுத்தாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | தி. சிகாமணி

# பா.ம.க.. பிரச்சினை என்ன?

படித்தவன் சூதும் வாதும் செய்தால் போவான்.. போவான்.. ஐயோ என்று போவான்..

மகாகவி பாரதியின் இந்த விருப்ப வரிகள் யார் வாழ்விலும் நடந்தேறாது. அதனால் குறிப்பாக ராமதாஸ்கள் அதுபற்றி பொருட்படுத்தத் தேவையில்லை..

பாமகவை நிறுவிய ராமதாஸ் எம்.பி.பி.எஸ் படித்து 1967 ஆம் ஆண்டிலேயே டாக்டர் ஆனவர். அவரது மகன் அன்புமணி எம்.பி.பி. எஸ் படித்ததோடு லண்டன் ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ் வரை சென்று பொருளாதாரம் படித்தவர். ஏழை வன்னிய மக்கள் இவர்களை காக்கும் தெய்வங்களாக கருதுகிறார்கள். ராமதாஸ் வார்த்தையில் சொல்லுவதென்றால் தொண்டர்கள் அவரை சாமி போல் பார்க்கிறார்கள். திமுக, அதிமுக, பாஜக என பல கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்து எல்லா வகை பேர அரசியல் நடத்தி பாட்டாளிச் சொந்தங்களுக்கு துரோகங்கள் செய்தாலும் இவர்கள் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்கள் இன்னமும் கணிசமாக இருக்கிறார்கள். பாவப்பட்ட வன்னியர்களின் வாழ்க்கை நிலையை ஒப்பிடும்போது பல்லாயிரம் மடங்கு முன்னேற்றத்தை ராமதாஸ்கள் அடைந்து விட்டனர். இருந்தாலும் குடும்ப அரசியல் ஒரு கட்டத்தில் பெட்டி பங்கீடு, பாகப்பிரிவினை சண்டைக்கு வழி வகுக்க தானே செய்யும்?

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று வாழ்ந்து வந்த ஜூனியர் அன்புமணி ராமதாஸ் இப்போது தந்தை சொல் பேச்சு கேட்க மறுக்கிறார். அதனால் என் பேச்சைக் கேட்காதவர்கள் கட்சியில் இருக்கத் தேவையில்லை என்கிறார் சீனியர் ராமதாஸ். ராமதாசின் மகள் வழி பேரன் முகுந்தனுக்கு இளைஞர் அணித் தலைவர் பதவி வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார் அன்புமணி. நான் உருவாக்கிய கட்சியில் எல்லாம் நானே என்று சொல்லும் ராமதாஸ் அன்புமணியின் தலைவர் பதவியையும் எடுத்துக்கொண்டார். முதலில் 2026 தேர்தல் வரை தலைவராக இருப்பேன் என்று சொன்னார். பின்னர் அதையும் மாற்றி இறுதி மூச்சு வரை நான் தான் தலைவர் என்கிறார். இந்த விவகாரம் குறித்து தினந்தோறும் ஊடகங்களில் செய்திகள், விவாதங்கள் போட்டி போட்டு நடக்கின்றன.

## 1

இந்தச் சண்டையில் கொள்கை ரீதியான மோதல் இருப்பது போல் சிலர் மயங்கக் கூடும். ஏதோ அன்புமணி பாஜகவிடம் சரணடைவது போலவும் ராமதாஸ் அதிமுகவே மேல் என்று சொல்வது போலவும் "நீயா நானா" பாணியில் செட்-டப் மோதல்கள் நடக்கின்றன. இந்த அபத்த நாடகத்தில் கண்ணீர் வேண்டுமென்றால் கண்ணீர் உண்டு. உணர்ச்சி கொந்தளிப்புகள் உண்டு. நவரசங்களுக்கும் பஞ்சமில்லை. 2024 மக்களவைத் தேர்தலுக்கு முன்பு பாஜகவுடன் கூட்டணி தேவை என்று அன்புமணியும் சௌமியாவும் ராமதாசின் காலில் விழுந்து கதறி அழுதார்களாம். பாஜக கூட்டணி இல்லை என்றால் எனக்கு நீங்கள் தான் கொள்ளி வைக்க வேண்டியதிருக்கும் என்று அன்புமணி 'பிளாக்மெயில்' செய்தாராம். "தாயிருக்கும் காரணத்தால் கோயிலுக்கு போனதில்லை" நூறு சாமிகள் இருந்தாலும் அம்மா உனைப் போல் ஆகிடுமா போன்ற உருக்கமான வரிகளை மறந்து விட்டு தன் தாயை நோக்கி அன்புமணி தண்ணீர் பாட்டிலை வீசினாராம். நல்லவேளை அவரது இலக்கு தப்பி விட்டது. சண்டைக் காட்சிக்கு சற்று குறைவாக அன்புமணி தன் கையில் இருந்த மைக்கை மேஜை மேல் தூக்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளின் டாக்டராக இருந்து பின்னர் 28 வன்னிய அமைப்புகளை ஒரு குடையின் கீழ் வன்னியர் சங்கமாக ஒருங்கிணைத்தவர் ராமதாஸ். ஏ.கே. நடராஜன் வன்னிய அடிகளார் ஆகியோருடன் இணைந்து பணியாற்றினார். வட மாவட்டங்களில் அவர் கிராமம் கிராமமாக பயணம் செய்தார். ராமதாஸ் ஒரு பேட்டியில் 96,000(!?) கிராமங்களுக்குச் சென்றதாகச் சொல்லி இருக்கிறார். வன்னியர்களுக்கு இருபது சதவீத இட ஒதுக்கீடு கோரி 1987–செப்டம்பர் 17 முதல் ஒரு வாரம் நடத்தப்பட்ட போராட்டம் குறிப்பிடத்தக்கது. சாலையோரங்களில் பெரிய பெரிய மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு போக்குவரத்து நிறுத்தப்பட்டது. வன்முறை, கலவரத்தை ஒடுக்க போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 21 பேர் பலியானார்கள்.

போட்டுள்ளார். மேடையில் அமர்ந்திருந்த ராமதாஸ் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. கொதிப்படைந்து விட்டார். அன்புமணி மீது தனக்கு எவ்வளவு அன்பு என்பதை நிரூபிக்க "தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தையின் அன்பின் முன்னே.." என்று சென்டிமென்ட்டை கிளப்பவும் செய்கிறார் ராமதாஸ். ஆனால் அன்புமணியோ போட்டி கூட்டங்களை நடத்தி வருகிறார். நான்தான் கட்சியின் மாநில தலைவர் என்கிறார். இவர் கூட்டும் கூட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்க்க முன்னாள் தலைவர் கோ.க. மணி எம்எல்ஏ அருள் போன்றோர் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகிறார்கள். எப்படியும் பின்னாளில் கட்சி அன்புமணி கைக்கு தான் வரும் என்று நம்பும்.. பதவிகளை விரும்பும் பல நிர்வாகிகள் அன்புமணியின் பக்கம் இருக்கிறார்கள்.

### சமாதான குருமூர்த்தி?

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறது என்பது பலருக்குத் தெரியாது. ஆனால் ராமதாசுக்கும் அன்புமணிக்கும் சமரசம் செய்து வைக்க வேண்டும் என சீறிப்பாய்ந்து வந்தார் ஆடிட்டர் குருமூர்த்தி. இவருக்கும் உங்களுக்கும் என்ன என ராமதாசிடம் கேட்டால் குருமூர்த்தியை தன் நண்பர் என்கிறார்.

## 2

கதை எப்படி போகிறது பாருங்கள்.. சமூக நீதிக் காவலர் ராமதாசின் நண்பர் சனாதான குருமூர்த்தியாம். ஓ ஈஸ்வரா..சாதி வெறியும் மதவெறியும் தனித்து இருக்குமோ?. கை கோர்ப்பதே இயல்பு.

### அமித்ஷா அனுப்பிய சமாதானத் தூதுவராகச் செல்லவில்லை..

நலம் விசாரிக்கவே சென்றேன் என்கிறார் குருமூர்த்தி. அன்றாட அரசியலில் இருந்து ராமதாஸ் ஒதுங்க வேண்டும் என்று குருமூர்த்தி கேட்டுள்ளார். அதற்கு ராமதாஸ் ஒப்புக்கொள்ளவில்லை. உ.பி.ம.பி மாநிலங்களில் மருத்துவக் கல்லூரிகளுக்கு சலுகை காட்டியது தொடர்பான சிபிஐ வழக்கில் சிக்கியுள்ள அன்புமணியைத்தான் அமித்ஷாக்கள் இப்போதைக்கு மிரட்ட முடியும். "கழுகு தூக்கும் குஞ்சுக்காக துடித்தெழும் கோழி" என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஏழைகளின் டாக்டராக இருந்து பின்னர் 28 வன்னிய அமைப்புகளை ஒரு குடையின் கீழ் வன்னியர் சங்கமாக ஒருங்கிணைத்தவர் ராமதாஸ். ஏ.கே. நடராஜன் வன்னிய அடிகளார் ஆகியோருடன் இணைந்து பணியாற்றினார். வட மாவட்டங்களில் அவர் கிராமம் கிராமமாக பயணம் செய்தார். ராமதாஸ் ஒரு பேட்டியில் 96,000(!?) கிராமங்களுக்குச் சென்றதாகச் சொல்லி இருக்கிறார். வன்னியர்களுக்கு இருபது சதவீத இட ஒதுக்கீடு கோரி 1987-செப்டம்பர் 17 முதல் ஒரு வாரம் நடத்தப்பட்ட போராட்டம் குறிப்பிடத்தக்கது. சாலையோரங்களில் பெரிய பெரிய மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு போக்குவரத்து நிறுத்தப்பட்டது. வன்முறை, கலவரத்தை ஒடுக்க போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 21 பேர் பலியானார்கள். இந்தப் போராட்டம் நடந்த போது முதல்வர் எம்ஜிஆர் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்தார். நாடு திரும்பிய பின்பு நவம்பர் மாதத்தில் வன்னியர் சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தினார். அடுத்த மாதத்திலேயே எம்ஜிஆர் உயிரிழந்தார்.

1989-ல் ஜூலை 16 ம் தேதி பாட்டாளி மக்கள் கட்சி துவக்கப்பட்டது. வன்னிய சமூகத்தைச் சேர்ந்த பேராசிரியர் தீரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் என்றால் பொதுச் செயலாளர் தலித் சமூகத்தை சேர்ந்த தலித் எழில்மலை நியமிக்கப்பட்டார். அம்பேத்கர், பெரியார், மார்க்ஸ் ஆகிய மூன்று மாபெரும் தலைவர்கள் கட்சியின் சித்தாந்த வழிகாட்டிகளாக அறிவிக்கப்பட்டனர்.



**3**

தமிழ்நாட்டின் பல அறிவு ஜீவிகள் பாட்டாளி மக்கள் கட்சி உருவாக்கத்துக்கு உதவினர். சிலரோ அந்த நிகழ்வை அண்ணாந்து பார்த்து அதிசயத்தனர்.

கும்பகோணம் அருகே குடிதாங்கி கிராமத்து வன்னியர் வசிக்கும் பகுதியில் தலித் ஒருவரின் சடலம் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதையறிந்து ராமதாஸ் அங்கு நேரில் சென்று அந்த உடலைச் சுமந்து சென்று சாதி நல்லிணக்கத்தை வலியுறுத்தினார் இந்த முயற்சிக்காக அவரைத் தமிழ் குடி தாங்கி என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பட்டம் சூட்டினார். ஒரு காலகட்டத்தில் வன்னியர்-தலித் இடையே நடந்த சண்டைகள் வெகுவாக மட்டுப்பட்டன. ஆனால் அது நீடிக்கவில்லை. வன்னியர் ஓட்டுகளை முழுவதுமாக அள்ள வேண்டுமென்றால் வன்னிய சாதி வாக்குகள் ஒருமுகப்பட வேண்டும் என்ற நோக்கில் தன்னுடைய அரசியல் திசை வழியை மாற்றிவிட்டார். நாடகக் காதல் செய்கிறார்கள் என்று சொல்லி தலித்துகளுக்கு எதிராக இடைநிலைச் சாதிகளின் கூட்டமைப்பை உருவாக்கினார். தமிழ்நாடு முழுவதும் கூட்டம் நடத்தி தலித்துகளுக்கு எதிரான வன்மத்தை வளர்த்தார். அதற்கு முன்போ அம்பேத்கருக்கு சிலைகளை நிறுவினார். மரம் வெட்டி என்ற பழிச் சொல்லுக்கு மாற்றாக பசுமைத் தாயகம் உருவாக்கினார் .வணிக நிறுவனங்களுக்கு தமிழில் பெயர் சூட்ட போராடினார். சமஸ்கிருத கலப்பில்லாத வகையில் பத்திரிகை, தொலைக்காட்சி ஆகியவற்றை நடத்தினர். புகை, மதுவுக்கு எதிரான இயக்கம் என பங்களிப்புகளை செய்தார். ஆனால் அவையெல்லாம் இப்போது மதிப்பிழந்து விட்டன.

தமிழ்நாட்டுக்கான தலைவர் என்பதை மறந்து வன்னிய சாதித் தலைவர் என்ற நிலைக்கு தரம் தாழ்ந்தார்.

ஜனநாயகம் சமத்துவம் சமூக நீதி மனித நேயம் என்று சொல்லி கட்சியை துவக்கியவர் சாதி வெறியராக மாறினார். ஒரு சாதி மக்களின் முன்னேற்றத்திற்காக குரல் கொடுப்பது என்பது சாதி வெறி அல்ல. ஆனால் தன் சொந்த முன்னேற்றத்திற்காக அன்புமணி என்ற தன் மகனுக்கு அதிகாரம் பெற்றுத் தருவதற்காக தலித் சாதியினரை எதிரிகளாக பாவிக்கச் செய்தது பஞ்சமா பாதகம்.

**4**

தலித்துகளுக்கு எதிரான ஆணவக் கொலைகளை மென்மையாகக் கூட கண்டிக்க ராமதாஸ் முன்வரவில்லை.

**ஜனநாயகம் சமத்துவம் சமூக நீதி மனித நேயம் என்று சொல்லி கட்சியை துவக்கியவர் சாதி வெறியராக மாறினார். ஒரு சாதி மக்களின் முன்னேற்றத்திற்காக குரல் கொடுப்பது என்பது சாதி வெறி அல்ல. ஆனால் தன் சொந்த முன்னேற்றத்திற்காக அன்புமணி என்ற தன் மகனுக்கு அதிகாரம் பெற்றுத் தருவதற்காக தலித் சாதியினரை எதிரிகளாக பாவிக்கச் செய்தது பஞ்சமா பாதகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் திருமணத்திற்கு எதிர்ப்பாக தர்மபுரி நாயக்கன் கொட்டாய் கிராமத்தில் தலித் குடிசைகள் நாசமாக்கப்பட்டது சாதி வெறியின் உச்சம்.

எத்தனையோ சாதியினர் தங்கள் மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக பல கல்லூரிகளை.. பள்ளிகளை துவக்கி நடத்துகிறார்கள்.. அது போன்று ராமதாஸ் முயற்சிகள் எடுக்கவில்லை. இட ஒதுக்கீடு மட்டுமே வன்னியர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி விடாது அவர்களுக்கான பொருளாதார கோரிக்கைகளில் அக்கறை காட்டியதில்லை. அரசியல் உணர்வையும் ஊட்டவில்லை.

### அதிகாரத்திற்காக ஆன்மாவை..

தமிழ்நாட்டில் இரண்டு கோடி வன்னியர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இவர்கள் அனைவருமே ராமதாசை ஆதரிப்பதாகக் கூற முடியாது ஆனால் ராமதாஸ் என்ன சொல்கிறார்? நாங்கள் பெரும்பான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கு ஆளும் வாய்ப்பு தரப்பட வேண்டும் என்று பேசுகிறார். மிகச் சிறுபான்மை சாதியை சேர்ந்தவரின் ஒருவரின் ஆட்சி நடக்கிறது. நான் அந்த முதலமைச்சரிடம் போய் கையேந்த வேண்டுமா என்றெல்லாம் சாதி ஆணவப் பேச்சு பேசுகிறார் ராமதாஸ். மகனுக்கு மகுடம் சூட்டும் கனவு கலைவதால் விரக்தியின் விளிம்பில் நிற்கிறார். வன்னியர்களுக்கு மத்திய அரசுப் பணிகளில் 2% இட ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்டவர் ராமதாஸ். பாஜகவுடன் கூட்டணியில் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தினாரா? இப்போது கூட சாதிவாரி கணக்கெடுப்பு தமிழ்நாடு அரசுதான் தான் நடத்த வேண்டும் என்று சொல்லி ஒன்றிய அரசை அதற்காக நிர்பந்தம் செய்யாமல் விட்டுவிட்டார்.

கட்சியை துவக்கும் போது நானோ எனது குடும்ப உறுப்பினர்களோ கட்சியில் எந்த பதவிக்கும் வரமாட்டோம். சட்டமன்றம் நாடாளுமன்றத்திற்கு என் கால் செருப்பு கூட செல்லாது. எவ்வளவு பணம் கொடுத்தாலும் விலை போக மாட்டோம். இதையெல்லாம் மீறினால் என்னை சவுக்கால் அடியுங்கள் என்றார். ஆனால் 1998 ல் பாஜக கூட்டணியில் இணை அமைச்சராக பதவியேற்றவர்களை ராமதாஸ் சுதந்திரமாக செயல்பட விடவில்லை.

## 5

இணை அமைச்சர்களின் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்களே முடிவுகளை எடுத்தனர். கமிஷன் பெற்றனர் என்ற புகார் அப்போதே வந்தது. ஜனநாயகத்தில் மக்கள் வாக்கு கிடைத்தால்தான் முதலமைச்சராக வர முடியும் ஆனால் ராமதாஸ் தன் மகன் அன்புமணிக்கு என்ன திறமை இல்லை. ஆட்சி செய்ய வாய்ப்பு தாருங்கள் என்று கேட்கிறார். மாற்றம்.. முன்னேற்றம்.. அன்புமணி என்ற கோஷத்தை முன் வைக்கிறார். நமது இந்த டாக்டர் வேறு ஒரு டாக்டரை நினைவுபடுத்துகிறார். கிறிஸ்டோபர் மார்லோ எழுதிய டாக்டர் ஃபாஸ்டஸ் நாடகம் இன்றும் பொருத்தப்பாடுடையது. டாக்டர் ஃபாஸ்டஸ் அதிகாரம் பெறுவதற்காக தன் ஆன்மாவை அடகு வைக்கிறார். அந்த அவல நாயகன் போல் ராமதாஸ் அதிகாரத்திற்காக உன்னதமான லட்சியங்களை எல்லாம் கைவிட்டு நிற்கிறார். எந்த மகனின் அதிகாரத்திற்காக சாதி நல்லிணக்கம், இந்துத்துவ எதிர்ப்பு போன்றவற்றை கைவிட்டாரோ அந்த மகன் இப்போது அவருக்கு சவால் விடுகிறார். அடுத்து வரும் தேர்தலுக்கு கூட்டணி கட்சியுடன் நடத்தப்படும் பேரத்தை அன்புமணி நடத்தத் தேவையில்லை. தானே நடத்த வேண்டும் என்பதுதான் ராமதாஸின் விருப்பம். முன்பு தலைவராக இருந்து அன்புமணி செய்த (2024) பேரத்தில் பங்கீடு பிரச்னை இருந்திருக்குமோ என்ற சந்தேகம் வலுவாக உள்ளது. பொதுவாக குடும்ப அரசியல் கட்சிகளின் அரண்மனை ரகசியங்கள் வெளிவருவதில்லை. ஆனால் இந்த ஒரு கட்சி பற்றிய ரகசியங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பேரம் நடத்தும் பெரிய கட்சிகளை மன்னித்து விட்டு சிறு கட்சிகளை விமர்சிப்பது முறையல்ல.

அரசியல் வியாபாரத்தில் அறம் ஒரு பொருட்டல்ல. எந்த அளவுக்கு அம்பலப்படுவது என்பதுதான் பிரச்னை.

---

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக மானியக்குழுவும் புதிய கல்விக்கொள்கையும்

**உ**லகஅளவில் பிற நாடுகளைவிட அமெரிக்காவே இராணுவத்தளவாட உற்பத்தி; நிதி மூலதனம்; தகவல் தொடர்பு ஆகியவை சார்ந்து முதலிடத்தில் இருந்துவருகிறது. இராணுவச்செலவீனங்களிலும் ஆண்டுக்கு 997 பில்லியன் டாலர் அளவுக்குச் செலவுசெய்து தன்னை ஒரு பலம் வாய்ந்த நாடாகவும் காட்டிக்கொள்கிறது. இன்றைக்கு உக்ரைன்-ரஷ்யா; இஸ்ரேல்- ஹமாஸ் இஸ்ரேல்-ஈரான் இடையே போர் நீடித்து வருவது; வளர்ந்துவரும் நாடுகள் கடனில் மூழ்கித் தத்தளிப்பது, பசிப்பிணியால் வாடுவதற்குப் பின்னே அமெரிக்காவின் ஒத்துழைப்பும், பங்களிப்பும் கணிசமாக இருப்பதை யாவரும் மறுக்கமுடியாது.

2025க்குப் பிறகு வலதுசாரிக் கொள்கைகளில் தீவிரப் பற்றுடைய டொனால்டு ட்ரம்ப் அமெரிக்காவின் அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப்பிறகு, ஒருபக்கம் அதீத தேசியவாதம்; இனவாதம்; வெள்ளையின ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. கார்ப்பரேட்டுகளுக்கும் - அரசுக்கும் இடையேயான உறவு மேலும் வலுப்பட்டுள்ளது. கனடா, கிரின்லாந்து ஆகிய நாடுகளை அமெரிக்காவுடன் இணைத்துக்கொள்ள முயல்கிறது.உக்ரைன் நாட்டுக்குக்கொடுத்த கடனுதவிக்காக அந்நாட்டு வளங்களை அபகரிக்க ஒப்பந்தம் செய்துள்ளது.உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கவும், வர்த்தகப்பற்றாக் குறையைக்குறைக்கவும், அரசுக்கு வருவாய் ஈட்டுவதனையும் நோக்கமாகக்கொண்டு வர்த்தக வரிகளை விதித்து வளர்ந்துவரும் நாடுகளின் சுமையைக்கூட்டியுள்ளது. இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே மூண்ட போரினைக்கூட "வர்த்தகத்தினை" காரணம்காட்டி நிறுத்தியதாக கூறிக்கொள்கிறது. இன்னொருபக்கம், சட்டபூர்வமற்ற குடியேறிகளை மனித உரிமை விதிமுறைகளையெல்லாம் மீறி, அந்தந்த நாடுகளுக்கு திருப்பியனுப்புகிறது.

இவையெல்லாம் தாண்டி, தனது நாட்டுப் பல்கலைக்கழகங்களில், பாலஸ்தீனியர்களுக்கு ஆதாரவான குரல்களை நசுக்குகிறது. இத்தகைய நடவடிக்கையானது, அப்பல்கலைக்கழகங்களின் சுயாட்சியில் தலையிடுவது மட்டுமல்லாமல், அவற்றுக்கு வழங்கவேண்டிய நிதியை முடக்கவும்செய்கிறது.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் சித்தாந்தப் போதனை மற்றும் யூத எதிர்ப்புப்போராட்டத்தின் எதிரொலியாகக் கிட்டத்தட்ட 60 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களைத் தற்போது கண்காணிப்புக்கு உட்படுத்தி, தனது கூட்டாட்சி விசாரணையைத் ( FEDERAL INVESTIGATION) தொடங்கியிருக்கிறது. அதனடிப்படையில் அயல்நாட்டு மாணவர்களுக்கான விசாக்கள், கூட்டாட்சி நிதி (FEDERAL FUND) ஆகியவற்றினையும் நிறுத்திவைத்துள்ளது. இதன்விளைவாக ஹார்வர்ட் (HARVARD) பல்கலைக்கழகம் மாணவர்களுக்கான விசா தடையை எதிர்கொண்டுள்ளது. இதனோடுகூட, கொலம்பியா பல்கலைக்கழகமும் தனது அங்கீகாரத்தை இழக்கும் ஆபத்தில் உள்ளது. அமெரிக்க அரசின் இத்தகைய நடவடிக்கைகளானது பல்கலைக்கழகங்களுக்கு ஏற்கெனவே உறுதிசெய்யப்பட்டிருந்த கல்வி சுதந்திரம் மற்றும் நிதிவழங்கலை. முற்றிலும் பறிப்பதாகவே இருக்கிறது. ஒருகாலத்தில் பிரதிபலிப்பு, கருத்துவேறுபாடு மற்றும் குடிமை ஈடுபாட்டுக்கான புகலிடமாக இருந்த அப்பல்கலைக்கழகங்கள் தற்போது சித்தாந்தக் கட்டுப்பாட்டின் போர்க்களமாக மாற்றப்படுவதைக் காணமுடிகிறது.

தற்போதைய வணிகமய சூழலில், அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் கார்ப்பரேட்டுகளின் நலனை முன்னிருத்தி, கற்பித்தல் என்பதைப் பயிற்சி, இணக்கம், மற்றும் பிரச்சாரமாக மாற்றிவிட்டிருக்கிறது. இன்னும்கூட, மாணவர்களின் கல்விக்கடனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்துசெய்ய மறுப்பதிலிருந்து,பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்கள் பலருக்குக் கல்வியின் மூலம் அதிகாரமளிப்பதில் வெளிப்படையாக இல்லை என்பதைக் கண்டுணரலாம். இன்னும் சொல்லப்போனால், பல்கலைக்கழக வளாகங்களில் மாணவர்கள் மீதான அடக்குமுறை, போதனை, கண்காணிப்பு யாவுமே பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களின் நலனுக்குப்பாதகமானதாகவே அமைந்துள்ளது.

அமெரிக்காவின் கல்விப் பாடத்திட்டமானது மதத்தினை விலக்கியே வைத்திருக்கிறது. ஆனால், இந்தியாவை எடுத்துக்கொண்டால், கல்விப்பாடத்திட்டமும், மதத்தின் கோட்பாடுகளும் கலந்து பிரிக்கமுடியாத அங்கமாக ஆகியுள்ளது. இதற்குப்புதிய கல்விக்கொள்கை-2020, பல்கலைக்கழக மானியக்குழுவின் நடவடிக்கைகளுமே சாட்சி. இவையிரண்டும் சேர்ந்து வலதுசாரி அடையாள அரசியலின் இரு கண்களாக ஆகி, மாணவர்களிடையே வலதுசாரிக் கருத்தியலைக் கட்டமைத்து அதனைப் பரவலாக்கும் பிரச்சார பீரங்கிகளாக இருக்கின்றன. புதியகல்விக்கொள்கைக் கோட்பாடு சார்ந்தது அக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டுதான் பல்கலைக்கழக மானியக்குழுவும் இயங்குவதாக இருக்கிறது. பல்கலைக்கழக மானியக்குழுவும் தன் பங்குக்கு, தனது துணை அமைப்புகளின் உதவியுடன் (NAAC, ABC, NTA, AICTE NIRF), நாடுமுழுக்க உள்ள பல்கலைக்கழகங்களைக் கட்டுப்படுத்தவும், நிதிக்கட்டுப்பாடுகளைத் திணிக்கவும், பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறையில் மாற்றம் செய்து மாணவர்களை ஒரே குடையின் கீழ் ஒழுங்குபடுத்தவும் முயலுகின்றன. இப்படிச்செய்வதன் மூலம் ஏற்கெனவே பல்கலைக்கழகங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சுயாட்சி என்பது பறிபோய்விடுகிறது. இத்துடன் புதியகல்விக்கொள்கை - 2020 ஆனது பள்ளிக்கல்வி, பாடத்திட்டம் முதல் கற்பித்தல் முறை வரையில் வகுப்புவாதமயமாக்கிடவும் செய்கிறது.

பல்கலைக்கழக மானியக்குழுவும், புதியகல்விக்கொள்கையும் சேர்ந்து, பலவகை மதங்கள், இனம், மொழிகள்கொண்ட இந்தியத் தேசத்தில், அவைகள் பற்றிய அக்கறையின்றி, மையமாக்கல் - வணிகமயமாக்கல் - வகுப்புவாதமயமாக்கலுக்குத் துணை நிற்பதாக இருப்பதைக் காணமுடிகிறது. பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் புதிய கல்விக்கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிகளைப் பார்க்கும்போது, இவ்விரண்டுக்கும் கல்வியில் தரம் கற்பித்தல்முறை ஆகியவைபற்றிய எந்தக் கவலையுமின்றி வலதுசாரிகளின் கருத்தியல்களுக்கேற்ற கல்வியமைப்பினை வடிவமைத்துக் கொண்டுசெல்வதுதான் நோக்கமாக இருக்கின்றது.

இதில், "மையமாக்கல் எனும்போது, கல்வியானது பொதுப்பட்டியலிலும் அதேசமயம் மாநிலப்பட்டியலிலும் இருக்கிறது. அவ்வாறு இருப்பினும் ஒரேநாடு-ஒரே கல்வி எனக்கூறிக்கொண்டு, ஒருபக்கம் பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் புதியகல்விக்கொள்கை வழியாக மாநில அரசுகளின் அதிகாரங்களையும், உரிமைகளையும் பறிக்கும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. இன்னொரு பக்கம் கட்டாயப்படுத்தி மொழித்திணிப்பிலும் ஈடுபட்டுவருகிறது. தமிழகத்தை எடுத்துக்கொண்டால்,பி.எம் ஸ்ரீ திட்டத்தில் சேரவில்லை என்பதற்காக, எஸ். எஸ்.ஏ (SSA) நிதி கிடையாது என ஒன்றிய அரசு கூறுகிறது. அதுமட்டுமின்றி, கல்வி உரிமைச்சட்டத்தின்கீழ் தமிழகத்துக்குத் தரவேண்டிய நிதியையும் நிறுத்திவைத்துள்ளது. நாடாளுமன்ற நிலைக்குழுவும்கூட, நிறுத்திவைக்கப்பட்டிருக்கிற எஸ்.எஸ்.ஏ நிதியை விடுவிக்கச்சொல்லியும் இன்னும் விடுவித்த பாடில்லை. தமிழகஅரசு இதுசம்பந்தமாக, உச்ச நீதி மன்றத்தில் முறையீடு செய்துள்ளது. இது ஒருபுறமிருக்க,, பல்கலைக்கழக மானியக்குழுவும் தன் பங்குக்கு, மாநில அரசிற்கென வரையறுக்கப்பட்டிருந்தஉரிமைகளையும் கையிலெடுத்துக்கொண்டு, பல்கலைக்கழகத் துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுப்பதில்தேவையற்ற விதிமுறைகளைப் புகுத்தி மாநில அரசுகளின்அதிகாரத்தில் தலையிடுவதாக உள்ளது..

கல்வி வணிகமயமாக்கல் குறித்து கூறும்போது, கடந்த 11 ஆண்டுகளில், நாடு முழுக்க அரசுப்பள்ளிகள் மூடப்படுவதும், தனியார் பள்ளிகள் திறக்கப்படுவதுமாக இருப்பதைப்புள்ளிவிபரங்கள் மூலம் அறிய முடிகிறது. மாணவர்கள் கற்பவர்களல்லாமல், நுகருபவராக மாற்றப்பட்டுவிட்ட காலமிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு முன்பான ஜனநாயகக்காலத்தில் கல்வி என்பது கேள்விகள் கேட்கவும்; மக்கள் ஒருவருக்கொருவர் உறவாடவும்; சுயத்தை அறிந்துகொள்ளவும் வழிகோலியது. தற்போதைய வணிகமயக் கல்வி முறையானது மாணவர்களைத்தனிமைப்படுத்துதல், பிளவுபடுத்துவது, மற்றும் வெறுப்பினை விதைப்பதாக இருக்கிறது.

வகுப்புவாதமயமாக்கல் எனும்போது, நீண்டகாலமாக அதீத தேசியவாதம், சிறுபான்மையினர்களை எதிரிகளாகக் கட்டமைப்பது, மனுஸ்மிருதியை அரசியல் அமைப்புக்கு மாற்றாகக் கருதுவது ஆகியவற்றினை முன்நிறுத்தி இயங்கிவரும் வலதுசாரிகள் தங்களது ஆட்சி அதிகாரத்தினைப் பயன்படுத்தி, பாசிசக் கருத்தியலினைப் பாடத்திட்டத்தின் வாயிலாக மாணவர்களிடம் திணிக்கின்றனர். மேலும், தனது கருத்தியலுக்கு ஒவ்வாத பிற மதக்கருத்தியல்களைப் பாடத்திட்டத்திலிருந்து நீக்குகின்றனர். அரசியலமைப்பின் முகப்புரைகூட மறைக்கப்படுகிறது. காந்திஜியின் மறைவு மற்றும் மொகலாயர்கள் குறித்த பாடங்களும் நீக்கப்படுகின்றன. பல்கலைக்கழக மானியக்குழுவும், வலதுசாரிக் கருத்தியல் பின்புலம் கொண்ட விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், துணைவேந்தர்களைப் பல்கலைக்கழகங்களில் நியமித்துக்கொள்கிறது. இப்படியான திணிப்பினைப் புதிய கல்விக்கொள்கை வாயிலாகவும், பல்கலைக்கழக மானியக்குழுவாயிலாகவும் மேற்கொள்ளப் படும்போது, மாணவர்களிடையே மத அளவில் பிளவுவாத எண்ணங்கள் உருவாகி, தேச ஒற்றுமை மற்றும் இறையாண்மையை கேள்விக்குள்ளாக்கிவிடக்கூடும்

2020-21 கணக்கீட்டின்படி, இந்தியாவில் 1,168 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை தனியாருக்கு உரிமையுடையவை. ஒன்றிய அரசும் தன்பங்குக்குக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டினை ஒவ்வொரு நிதியாண்டும் குறைத்தே வந்திருக்கிறது இதன்மூலம் தனியார் செழித்து வளர வழிவகுத்துள்ளது. உயர்கல்வியில் தனியார்மயம் அதிகரிக்க அதிகரிக்க கல்வியில் சுதந்திரம் என்பது பறிபோய்விடுகிறது. ஒருகாலத்தில், அறிவு வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் வழிவகுத்துத்தந்த பல்கலைக்கழகங்கள் அதிலிருந்து விலகி, இன்றைய சந்தைமயக்காலத்தில் வணிகம், லாபம், முதலீடுகளை ஈர்ப்பது, தனது வியாபாரக்குறிப் படிமத்தினை (BRAND IMAGE) வளர்த்தெடுப்பதாக மாறியுள்ளது. உயர்கல்வியானது இப்படியாகச் சந்தைக்குகந்ததாக மாறிவிட்டதனால், அறிவானது விற்பனைக்குரிய பண்டமாக மாறிவிட்டது.

உயர்கல்வியில் மாணவர்களிடையே விமர்சனப்பார்வையினை அடக்கி வைக்கும் போது, சமூகத்துக்கு ஒரு சிறந்த குடிமகனை உருவாக்கத்தவறிவிடுவது மட்டுமின்றி, அவர்களிடையே கேள்விக்குட்படுத்தும் மனப்பாங்கினை வளர்த்தெடுக்க மறுப்பதாகவும் இருக்கிறது. விமர்சனப்பார்வையானது ஜனநாயகத்துடன் தொடர்புடையதாகும். மாணவர்களிடையே எழுகின்ற ஜனநாயகத்தின் குரல்களை முறியடிக்க வலதுசாரிகள் போதனை முறையை சாதுர்யமாக கல்விப்பாடத் திட்டத்தினூடாக இட்டு நிரப்பியுள்ளனர். இவர்கள் தங்களது கருத்தியலைப்பரப்புவதற்குக் கோயில் - கல்வி - ஊடகம் இவை மூன்றினையுமே சிறந்த சாதனமாகக் கருதுகின்றனர். வலதுசாரிகள் யாவருமே, பொதுவாக, மாற்றத்தை விரும்பாதவர்களாகவும், சமூக முன்னேற்றத்தைத்தடுப்பவர்களாகவும், கல்வியின் சுதந்திரத்தில் தலையீடு செய்பவர்களாகவும் இருக்கின்றனர். இதற்கு முன்பான காலத்தில் பல்கலைக்கழக மானியக்குழுவானது கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டி, மாநிலங்களுடன் ஒத்துழைப்பினை நல்கி வந்தது. அதுவே இன்றைய காலத்தில் தன்னிச்சையாக அதிகாரத்தைஎடுத்துக்கொண்டுமாநிலங்களுக்கு ஆணையிடுவது, பணியமர்த்துவது, நிர்வாகத்தில் தலையீடு செய்வதாக மாறியுள்ளது. தற்போதைய பல்கலைக்கழக மானியக்குழுவின் விதிமுறைகளும் அடிபணிதலையே முன்மொழிகிறது. இதற்குமுன்பு, மானியக்குழுவின் தலைவர்களாகத் தேர்ந்த கல்வியாளர்களே இருந்துவந்தனர். தற்போது, அரசின் உயர்மட்ட அதிகாரிகளால் நிர்வாகம் செய்யப்படுவதாய் மாறியிருக்கிறது.

கார்ப்பரேட் நிறுவனங்கள் பலவும் தனது லாபத்தினைக் குறிக்கோளாகக்கொண்டு தேர்ந்த வித்தைக்காரர்களையே பணியமர்த்திக் கொள்கின்றன. மாறாக, கேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பவர்களையல்ல.புதியகல்விக்கொள்கையும் கார்ப்பரேட்டுகளின்மீது அக்கறைகொண்டு, இளைஞர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு உகந்த தகவல் தொடர்பு, படைப்பாற்றல், சிக்கலைத்தீர்க்கும் பண்புகளைக் கல்வியின் மூலம் வளர்த்தெடுப்பதாக இருக்கிறது.

புதிய கல்விக்கொள்கையானது இலகுத்தன்மைக்கு(*Flexibility*) உறுதி பூண்டிருக்கின்றது. ஆனால், சிறுகூறுகளாகப் பிரித்து (*Fragmentation*)வழங்குவதாக உள்ளது. மேலும், மாணவர்களுக்கு அதிகாரமளித்தல்(*Empowerment*) பற்றி உபதேசிக்கிறது. ஆனால், அடிபணிதலை(*Submission*) ஏற்றுக்கொள்ள வற்புறுத்துகிறது. புதிய கல்விக்கொள்கையானது மாணவர்களை ஒத்துப்போவது (*to Conform*) - நுகர்வு (*to Consume*) - இணங்கு (*to Comply*) இதற்கேற்றவாறு பழக்கப்படுத்துவதாக இருக்கிறது.இக்கல்விக்கொள்கையானது பன்முகச்சிந்தனையை (*Diversity of Thought*) திசை திருப்பலாகக் (*Distraction*) கருதுகிறது. கருத்துவேறுபாடு (*Dissent*) கொண்டோரை இடையூறு செய்பவராகக் (*Distruption*) கருதுகிறது. இக்கல்விக்கொள்கையானது தகுதி சார்ந்ததற்கு (*Meritocratic*) முக்கியத்துவம் அளிக்கிறது. இதன்மூலம் சமூகத்தில் ஏற்கெனவே நிலவிவரும் சமூக அநீதிகளைக் களையாமல், சந்தை நலனுக்கு உகந்தவாறு உருவாக்கப்பட்டிருப்பதனால் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உறுதிபாட்டு நடவடிக்கை(*Affirrmative action*) மூலம் நீதி கிடைக்க வழியில்லாமல் செய்துவிடுகிறது.

இதற்கு முன்பான காலத்திலிருந்து இட ஒதுக்கீடு என்பது சமூக நீதிக்கானது எனக்கருதப்பட்டு வருகிறது. அதுவே புதியகல்விக்கொள்கை காலத்தில் இயக்குதிறனை (*Efficiency*) அல்லது வேலையைச்செய்து முடிக்கும் திறனைப்புகுத்தி சமூக நீதியைப் புறந்தள்ளுவதாக இருக்கிறது. இதனால் சமூகத்திலுள்ள பெரும் பான்மையானவர்கள் பாதிக்கப்படுபவர்களாக ஆகியுள்ளனர். இக்கல்விக்கொள்கையானது, ஒவ்வொரு மாணவனையும் ஒரு குடிமகனாக ஆக்க முற்படவில்லை. மாறாக, ஒரு வளமாகக் (*Resource*) கருதுகிறது.மேலும், ஆசிரியர்களைச் சிந்திப்பவர்களாக அல்லாமல், கற்றல் விளைவுகளை எளிதாக்குபவராக ஆக்கியுள்ளது.

இக்கல்விக்கொள்கையானது, பன்முகத்தன்மை, கவனச்சிதறல், கருத்து வேறுபாடுகளை இடையூறாக மாற்றுகிறது. இக்கல்விக் கொள்கையின் நோக்கமானது, இந்தியாவிலுள்ள அனைவரும் ஒரே மாதிரியாக சிந்திக்கவும், ஓட்டளிக்கவும், ஒரே மாதிரியாகக் கற்கவுமான ஏற்பாடாகும்.

இறுதியாக, உலகமெங்கிலும் உள்ள பாசிஸ்டுகள் கடந்த காலத்தின் நச்சு, இனவெறி மற்றும் அதீததேசியவாதம் குறித்த பாடங்களைத் தற்போது முனைப்புடன் பரப்புவதால், கல்வியை வரலாற்று உணர்வு மற்றும் தார்மீக சாட்சியத்தின் ஒரு வடிவமாக மீட்டெடுப்பது அவசியம். இன்றைய கல்விமுறை பொதுவாக போதனை - மிரட்டி பணியச்செய்வது - சகிப்பின்மைக்கு வித்துடுவதாக இருப்பதால், நீதிக்கான போராட்டத்துக்குக் கல்வி மற்றும் பொதுவெளியை மீட்டெடுப்பது அவசியம்.

*2025* இல் இந்தியாவில் பட்டதாரி இளைஞர்களிடையே வேலைவாய்ப்பின்மை விகிதமானது *42.6* சதவீதமிருக்கிறது. இதனை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்போது, இன்றைய கல்விமுறையானது இளைஞர்களுக்கு அதிகாரமளித்தலுக்கு பதிலாக, அதிகாரமிழத்தலுக்கு வழிவகை செய்வதாக இருக்கிறதைப் புரிந்துகொள்ளலாம். பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் புதிய கல்விக்கொள்கையின் வழியாக கற்பிக்கப்படும் கல்வியானது ஒருபக்கம் சந்தையின் தேவைக்கேற்பவும், மறுபக்கம் வலதுசாரி அடையாள அரசியலின் கருத்தியலைப் பரவலாக்குவதுமாக இருப்பதை சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தில் அக்கறை கொண்டோர் கண்டுணர்வது அவசியம்.


இக்கட்டுரை எழுத உதவியவை நன்றி!

After the NEP Verdict, Education Is No Longer the Union Govt's Weapon : The Wire Dated 20.05.2025 -By Anil-kumar and payyapilly Vijayan

The Economic Times Dated 05.06.2025

The 3 C's that haunt Indian education today -by Sonia Gandhi – The Hindu Dated 31.03.2025

The educational landscape, its disconcerting shift–Shelley Walla -The Hindu Dated 13.05.2025



கட்டுரையாளர்: எழுத்தாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழடி ஒன்றிய அரசின் பண்பாட்டு பயங்கரவாதம்



எதிர்காலத்தில் மோதல்கள்
பொருளாதாரத்தினாலோ கருத்தியலாலோ அன்றி,
பண்பாட்டு காரணிகளால் தூண்டப்படும்!
-ழாக் டிலார்ஸ்

புராணத்தை வரலாறு என்கிறார்கள். வரலாற்றை புராணம் என்கிறார்கள். இதுதான் ஒன்றிய அரசு கீழடி அகழாய்வின் இரண்டாம் கட்ட ஆய்வறிக்கையைத் தற்போது திருத்தி வெளியிடக் கோருவதற்கு பண்பாட்டு அரசியலே காரணங்களாகும். மகாபாரதம் இருந்தது, ராமாயணம் இருந்தது. சரஸ்வதி நதி ஓடியது. இவை எல்லாம் புராணத்தில் இருக்கிறது. ஆனால் இவை நிலத்தில் இருந்ததற்கான மெய்யான தடயங்கள் இல்லை. தடங்கள் இல்லை என்றால் அவையனைத்தும் அழகான கற்பனை மட்டுமே. அரசியல் மட்டுமே. அறிவியல் சான்றாதாரங்கள் இல்லாதவற்றை மெய்யுலகு ஏற்பதில்லை. கருத்து முதல்வாதத்தை, பொருள் முதல்வாதமாக மாற்றும் வரலாற்று சந்தர்ப்பவாதப் பண்பாட்டு அரசியலை, பயங்கரவாதத்தை நவீன ஆய்வுகளோ, அறிவியலோ ஏற்பதில்லை. ஒன்றிய அரசு கீழடியில் அத்தகைய பண்பாட்டு பயங்கரவாதத்தையே நிகழ்த்திக் கொண்டுள்ளது.

ஆரியம் இல்லை திராவிடம் இல்லை ஆனால் அதற்கான எதிர் எதிர்வினைகள் மட்டும் உண்டென்றால் அதனை எப்படிப் புரிந்து கொள்வது. வராற்றை தனக்கேற்றவாறு திருத்தி எழுத முடியும். எழுதலாம் ஆனால் வரலாற்று தடயங்களை அப்படி திருத்த முடியுமா? திருத்த வேண்டும் என்பதே ஒன்றிய அரசின் ஆரிய பார்ப்பன-பனியா எதிர்பார்ப்பாக, அரசியலாக இருக்கிறது. கீழடி அகழாய்வு தொடர்பாக இரண்டு கட்டங்களாக ஆய்வு செய்த அமர்நாத் ராமகிருஷ்ணனின் அறிக்கையை அவ்வாறு திருத்த கோருகிறது. திருத்தங்கள் கோரி அனுப்பியிருக்கிறது ஒன்றிய அரசின் தொல்லியல் துறை (ஏ.எஸ்.ஐ).

இந்திய தொல்லியல் துறையிடம் அமர்நாத் ராமகிருஷ்ணன் கடந்த 2023 ஆண்டு சனவரியில் அந்த அறிக்கையை சமர்ப்பித்திருந்தார். அதில்தான் திருத்தங்கள் தேவை என்று திருப்பி அனுப்பிக் கொண்டுள்ளது. திருத்தங்கள் தேவை என்றால் என்ன திருத்தங்கள், எழுத்துப் பிழையா, வரலாற்றுப் பிழையா, காலப் பிழையா இல்லை அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் பிழையா என்று இதுநாள் வரையிலும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் அறிக்கை மட்டும் திருப்பிவிடப்பட்டுள்ளது. எதைத் திருத்தக் கோருகிறது ஒன்றிய தொல்லியல் துறை? இன்றைக்கு ஆளும் பார்ப்பன-பனியா ஆரிய அரசு எதிர்பார்க்கும் திருத்தங்களையா? அப்படித்தான் அதன் நோக்கமும் செயல்பாடும் இருக்கிறது.

ராமாயணம், மகாபாரதம், சரஸ்வதி நதி, சேதுபாலம் வாசுகி பாம்பு போன்று அது புராணம் இல்லை. கீழடி ஒரு காலத்தில் வாழ்ந்த நகர நாகரிகத்தின் முழுமையான எச்சம். அந்த நகரநாகரிகம் செம்மாந்த வாழ்வு வாழ்ந்திருக்கிறது. அதன் மொழி தமிழியாக தமிழ்-பிராமியாக அது சிந்து வெளி எழுத்து முறையானக் கீறல் வடிவிற்கும் சற்றே பின்னதாக வரலாற்றை எழுதியிருக்கிறது. பொது மக்கள் வரையிலும் மொழி அறிவு பெற்றிருந்திருக்கின்றனர். இரும்பு காலத்தின் தொடக்கம் அவர்களது வளர்ச்சி இருந்திருக்கிறது. இரும்பின் பயன் உழவும், உருக்காலையுமாக வேதி மாற்றத்தையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட மாற்றத்தையும் கொண்டுவந்திருக்கிறது. நகர நாகரிகத்தைக் கொண்டு வந்திருக்கிறது. உலகுடன் அவர்களது தொடர்பு நாணயங்களாக, அணிகலன்களாக, சுடுமண் பாத்திரங்களாக இன்னும், அறிவியலாக, அரசியலாக, பொருளியலாக அறவியலாக, வாழ்வியலாக கீழடி மண்ணில் உறைந்திருக்கின்றன. உறங்கியிருக்கின்றன. இன்றைக்கு அவை மேலடிக்கு வந்து உறக்கம் கலைத்திருக்கின்றன. கூடவே சிலரின் உறக்கத்தையும் கலைத்திருக்கின்றன.

கீழடி மனிதர்களின் நினைவில் கற்கால எச்சங்கள் இருந்திருக்கின்றன. கற்கால கருவிகளை அவர்கள் இப்போது கீழடியை அருங்காட்சியகமாக வைத்திருப்பதுபோல அதன் எச்ச பொருட்களை அவர்கள் சேமித்து வைத்திருக்கின்றனர். கற்காலம் இறுதியும், செம்புக்காலத்தை தொடர்ந்தும், இரும்பின் தொடக்கமும் கீழடியில் ஒருங்கிணைகின்றன. ஒரு நாகரிகம் கீழடியில் கி.மு 6ஆம் நூற்றாண்டில் செழித்திருந்திருக்கிறது. முதிர்ச்சி அடைந்திருக்கிறது. இங்கு கவனிக்க வேண்டியது கி.மு. ஆறாம் நூற்றாண்டில் அது தொடங்கவில்லை. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் அப்படியிருந்திருக்கிறது. எழுத்தறிவும், வாழ்வறிவும் முழுமை அடைந்திருந்திருக்கின்றது. அப்படி என்றால் அந்த நாகரிகத்தின் தொடக்கம் இன்னும் மேலே செல்லக்கூடும். நகர நாகரிகம் என்பதற்கு சில முக்கியமான தடயங்கள், வாழ்வியல் இலக்கணங்கள் வேண்டும் இல்லை என்றால் அவற்றை நகரநாகரிகம் என்று சொல்ல முடியாது. இது தொல்லியல் வரையறுப்பு.

சிந்து வெளி நாகரீகத்திற்குப் பிறகாக இந்தியத் துணைக் கண்டத்தில் குறிப்பாக தமிழ்நாட்டு தொல்லியல் கண்டுபிடிப்புகளில் இதுவரையில் நகர நாகரிகத்தின் முதன்மையானதாகக் கருதப்படும் சுட்ட செங்கற்களால் ஆன வீடுகளின் எச்சங்கள் கிடைத்திருக்கவில்லை. எச்சங்கள் என்றால் அவை முழுமையாகவே கிடைத்திருக்கின்றன கீழடியில் அவை சிதிலமின்றி கிடைத்திருக்கின்றன. ஒரு நகர நாகரிகம் இருந்ததற்கான செங்கற்களால் ஆன கட்டடங்கள் கிடைத்திருக்கின்றன. கூறை ஓடுகள், அவற்றில் மழைநீர் வழிந்தோட விரலால் அழுந்தப் பதிக்கப்பெற்ற வாரிகள், ஓடுகளை கூறை மரங்களுடன் பிணைக்க துளைகள் இடப்பட்டிருக்கின்றன. அவற்றை தாங்குவதற்கு பக்கவாட்டுக் குழிகள் இருந்திருக்கின்றன. அதற்கானக் குழிகள் இப்போதும் இருக்கின்றன. மேலும் நகர நாகரிக வாழ்வின் அடையாளங்களான உறை கிணறுகள், குழய் வடிவிலான வடிவாய்க் கால்கள், இரும்பு உருக்காலைகள், வெளி உலகத்துடனான வணிக, கலை கலாசாரத் தொடர்புகள் குறித்த தடயங்கள் உறுதிபடுத்துவதாக இருக்கின்றன. உறை கிணறுகளைப் பொருத்தவரை கிராமப்புற பண்பாட்டில் காணப்படாதவை. நகர மக்களுக்கே உரித்தானவை. எல்லாம் அருகே கிடைக்க வேண்டும் என்ற நெருக்கடியும் தேவையும் நகரநாகரித்தை உருவாக்குவதால் உறை கிணறுகள் முக்கியமாகின்றன. போலவே உழுதொழிலும், தொழிற் புரட்சியும் கடல் கடந்த வணிகமும் ஐந்திணைகளுக்கும் அரசுரு வாக்கத்தின் தொடக்க நிலையாக கீழடி இருந்திருக்கிறது.

"நான் மட்டும் இந்தவேலையை செய்யவில்லை. என்னுடைய குழுவினர் இரண்டு ஆண்டுகளாக இந்த பணியைச் செய்தோம். தமிழ்நாட்டில் நகரநாகரிகம் இருந்தது என்பதை உறுதிபடுத்தினோம். மெய்பித்தோம். அதனாலேயே எதிர்ப்புகளைச் சந்தித்தோம். அவர்களால் அதை செரித்துக் கொள்ள இயலவில்லை. ஏனென்றால், இதுநாள் வரை கூறிவந்த கருத்துக்கள் மாறுபடுகின்றன!". *(அமர்நாத்ராமகிருஷ்ணன் -தமிழரின் வேர் கீழடி-பக்-47)*

"கீழடியின் உண்மைகளை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க ஒன்றிய தொல்லியல்துறை முன்வராது. தமிழ்நாட்டின் தொன்மைக்கும், கீழடியின் உண்மைக்கும் யார் எதிரிகள் என்பதை ஒன்றிய தொல்லியல்துறையின் ஒவ்வொரு செயலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. புராணங்களை வரலாறாக மாற்ற பணியாற்றிய பாஜக அரசு அதே வேகத்தோடு நமது வரலாற்றை மறைக்கவும் பணியாற்றி வருகிறது". என்கிறார் சு.வெங்கடேசன் எம்.பி.

"வரலாறும் அது கூறும் மெய்மையும் அவர்களது மலிவான அரசியலுக்காக காத்திருக்காது!" என்று சுட்டிக்காட்டுகிறார் அமைச்சர் தங்கம் தென்னரசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்களது கதைக்கு ஒத்துவரவில்லை என்ற ஒரே காரணத்தினால் கீழடி மற்றும் தமிழ் தொன்மத்தை பாஜக-ஆர்.எஸ்.எஸ். ஏற்க மறுக்கிறது. நூற்றாண்டுகள் போராடி நமது வரலாற்றை வெளிக் கொண்டு வந்துள்ளோம். அந்த வரலாற்றை அழிக்க முயற்சிக்கிறது பாஜக. உலகமும் காலமும் இதனை உற்றுநோக்கி வருகிறது!". என்று முதல்வரும் தன் பங்கிற்கு மோடி அரசை கண்டித்துக் கொண்டுள்ளார்.

நாங்கள் எந்த அறிக்கையையும் வெளியிடத் தயங்கவில்லை. கீழடி அகழாராய்ச்சியில் அறிவியல் பூர்வமான கூடுதல் தரவுகள் கிடைக்குமளவுக்கு ஆய்வுகளைத் தொடர விரும்புகிறோம். அதை அரசியலாக்காமல் ஒன்றிய அரசுக்கு ஆதரவளிக்க கேட்டுக் கொள்கிறோம். அதற்கு ஏன் ஆதரவளிக்க தயங்குகிறார்கள் பிரிவினை வழியாக அல்லாமல் நேர்மையான அறிவின் வழி தமிழ்நாட்டின் பாரம்பரியத்தின் பெருமைபடுத்த வேண்டும் என்று ஒன்றியக் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திரசிங்செகாவத் கூறுகிறார். ஆனால் சரஸ்வதி நதி மற்றும் வாசுகி பாம்பு, ராமர்பாலம், ராமஜென்மபூமி போன்ற கட்டுக்கதைகளை அறிவியல் ஆதாரமற்ற செய்திகளை வெறும் புராண நம்பிக்கை அடிப்படையை மட்டும் வைத்துக் கொண்டு ஒதுக்கப்படும் நிதி, ஆய்வுகள் பற்றி மட்டும் அவருக்கு கேள்விகள் எதுவும் இருப்பதில்லை.

ஒன்றிய அரசு கீழடி ஆய்வு முடிவு அறிக்கையை வெளியிடுவதில் அப்படி என்ன தயக்கம்? கீழடியின் வரலாற்றுப் பெருமை என்பது ஒன்றிய அரசுக்கும், இந்தியாவிற்கும் ஒட்டுமொத்த பெருமை அல்லது சிறப்பு என்பதை ஏன் உணர மறுக்கிறது. ஏனென்றால் தேசிய இனங்கள், பழங்குடிகள், இவற்றிற்கான தனித்தன்மையை, வரலாற்றை, பண்பாட்டை மறுப்பதன் வழியே அல்லது திருத்துவதன், அழிப்பதன் வழியேதான் தனது நெடுநாள் பாசிசக் கனவான இந்து ராஷ்டிராவை அமைக்க முடியும். வேதகால நாகரிகமே இந்திய நாகரிகம் என்றும் அதன் அடிப்படையில் இந்து ராஷ்டிரத்தைக் கட்டியெழுப்பும் பாஜக பரிவாரங்களுக்கு கீழடி போன்ற தனித்துவமான பண்பாட்டு, அரசியல், நிலவியல் தடயங்கள், ஆதாரங்கள் என்பன பெரும் அதிர்ச்சியையும், கலக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

கீழடிக்கு ஓடிவந்த ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் லெட்சுமண ரேகையும், மாரிசமானின் காலடித்தடங்களும், ராமனின் வில்லும், அர்ச்சுனனின் அம்பும், பிள்ளையார் சிலைகளும் கிடைக்காது கண்டு விரக்தியடைந்தார். கீழடிக்கான நிதியை நிறுத்தி வைத்தார். அமர்நாத் ராமகிருஷ்ணனை ஓரிசாவுக்கு நாடு கடத்தினார். பின்னர் அவரைத் தமிழ்நாட்டரசு மீட்டு வந்தது தனிக்கதை.

வேத காலமே இந்திய நாகரிகம் என்று அறிவியல் ஆதாரமற்ற புராண புரட்டுக்களை முன்வைக்கும் பார்ப்பன-பனியா இந்துத்துவா அரசியலானது அறிவியல் வழிப்பட்ட கீழடி ஆய்வு ஆதாரங்களை வெளியிட தயங்குவதன் அரசியலை இப்படிதான் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. 1924 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் சர் ஜான்மார்சல் போன்றவர்கள் சிந்துவெளி நாகரிகத்தை வெளியே தோண்டி எடுத்துக் கொடுத்தார்கள். அதன் எச்சங்கள் இன்றைக்கு கீழடி அகழாய்வு பொருட்களுடன் பெரிதும் ஒத்துபோகின்றன. திராவிடக் கட்டடக்கலை, பண்பாட்டு வாழ்வியலோடு சிந்து சமவெளி நாகரிகம்



**'காக்கைச் சிறகினிலே' மாத இதழுக்கு படைப்புகளை அனுப்பும் எழுத்தாளர்களின் கவனத்துக்கு:**

கட்டுரை மற்றும் சிறுகதை 1200 வார்த்தைகளுக்கு மிகாமலும் நூல் அறிமுகம், நூல் மதிப்புரை 600 வார்த்தைகளுக்கு மிகாமலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.

பக்கங்களின் அளவு கருதி பல படைப்புகளை உடனுக்குடன் அந்தந்த இதழில் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.

-ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் தொடர்ச்சியைக் கொண்டிருக்கிறது. ஆரியப்பண்பாடு, ஆரிய அரசியல் வெறும் கற்பனையாகத் தோற்றுவிக்கும் புராண ஆதாரங்களை மறுப்பதாக கீழடி ஆய்வுகள் இருக்கின்றன. ஆரியப் பண்பாடும், நாகரிகமும் உலகுக்கு வழிக்காட்டியவை என்றும், ஆரிய பண்பாடே உயர்ந்தது என்றும் அது காலத்தால் முற்பட்டது என்றும் ஆரியத்தை முன்வைத்து பேசிய யாதொருவரும் அறிவியல் ஆதாரத்தை முன்வைத்து இதுவரைப் பேசியதாக இருக்கவில்லை. இருக்கவும் முடியாது.

மதுரை சங்க இலக்கியக் காலத்தின் பண்பாடும், வரலாறும், நிலவியலும், அரசியலுமான காலத்தின் மண் படிந்த நிலம். குறிப்பாக வைகை நதி வரலாற்றிற்கு முற்பட்டு ஓடிக்கொண்டிருக்கிறது. அது அறிவியல், அறவியல் தடயங்களையும் மக்களின் நாவில் கட்டுக் கதைகளாகவும், நாட்டுபுற பாடல்களாகவும் சங்க இலக்கியங்களின் எழுத்தோவியங்களாகவும் தழுவிப் பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 250கி.மி. பரவி பாயும் வைகை நதியின் இருகரையும் ஓர் தொல்லியல் மேடே. கால வரலாற்றின் தொல்லியல் தடமே. தடயமே. எனவேதான் அந்த இடத்தை தெரிவு செய்து அமர்நாத்ராமகிருஷ்ணன் தலைமையிலான எட்டுபேர் கொண்ட குழு 2013-2014 ஆம் ஆண்டு முழுமையாக ஆய்வுசெய்தது. 2015, 2016 ஆம் ஆண்டு வரை அது தொடர்ந்தது. இரண்டு ஆண்டுகள் அந்த ஆய்வுகள் நடத்தப்பெற்றன. வாழ்விடப் பகுதிகளை ஆய்வு செய்வதன் வழியேதான் நகர நாகரிகத்தை அடையாளம் காணமுடியும். பழங்கால மக்களின் வாழ்வியலைக் கண்டறிய முடியும். அதுவரையிலான ஆய்வுகள் ஊருக்கு வெளியே இடுகாடுகளை ஆய்வு செய்வதாகவே முடிந்தது. அவற்றில் மக்களின் வாழ்வியலை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. எனவே அமர்நாத் குழுவினர் நகரநாகரித்தையே தேடினர். தமிழ்நாட்டில் இலக்கியங்கள் இருக்கின்றன. ஆனால் அவை தொல்லியல் ஆதாரங்களாகிவிட முடியாது. எனவே நகரநாகரிகம் தமிழ்நாட்டில் கிடையாது. எனவே அவற்றை தொல்லியல் ஆதாரங்களாக ஏற்க முடியாது. அவை புராணத்திற்கு நிகரானவை என்று புராணங்களை, கட்டுக்கதைகளை ஏற்கும், அந்த கதைகளுக்கான, கதையாடல்களுக்கான நிலத்தை, வாழ்வியலை, பண்பாட்டை, புராணத்தை தேடி செயற்கையாக உருவாக்கும் ஒன்றிய அரசு, அதற்காக ஏராளமான நிதியை தொடர்ந்து ஒதுக்கிவரும் ஒன்றிய அரசு, தமிழ் நிலத்தின் சங்க இலக்கியங்களை செம் பண்பாட்டு ஆதாரங்களை ஏற்கமறுத்திருப்பது வேடிக்கைதான். இவற்றை வைத்துக் கொண்டு எதையும் நிரூபிக்க முடியாத நீங்கள் அரை பழங்குடிகள்(ரேசியல் குருப்) உங்கள் மன்னர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் என அரை பழங்குடி தலைமைகள். அரை பழங்குடிகளான உங்களிடம் எந்த ஆதாரமும் கிடையாது என்றார்கள். கீழடி வழியாக அதை நாங்கள் அப்படி இல்லை எங்களுக்கென்று ஒரு அறிவியல் வழி பட்ட ஆதாரங்கள் இருக்கின்றன என்பதை ராமகிருஷ்ணன் தலைமையிலான குழு கீழடியை மேலடிக்கு கொண்டு வந்து உறுதிபடுத்தியது. கரிம ஆய்வுகள் கீழடியின் காலத்தை கி.மு.200லிருந்து கி.மு.6 வரை கீழே இழுத்துச் செல்ல செல்ல ஒரு மக்கள் குழுவின் வரலாறு மேலே மேலே வந்து கொண்டிருக்கிறது.

இரும்பு காலம் தமிழகத்தை குமரி முனையிலிருந்து இமய மலைக்கு கொண்டு செல்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் இரும்பு நாகரித்தின் தொடக்கம் கீழடியில் இருக்கிறது. உறுதி படுத்தப்பட்டிருக்கிறது. வைகை நதி காலத்தில் தனது போக்கை மாற்றிக் கொண்டிருக்கிறது. அதன் நீர் தடங்கள், தடயங்கள் கீழடியில் கிடைத்திருக்கின்றன. முந்தய வைகையின் வண்டலில் இரும்பு காலத்தை சேர்ந்த மக்கள் குடியேறிக் கொண்டுள்ளனர். அந்த நகரம் கி.மு.6 தொடங்கி கி.பி.10 ஆம் நூற்றாண்டுவரை பல காலக்கட்டங்களில் தொடர்ச்சியாக மக்கள் அங்கு வாழ்திருக்கின்றனர்.

கீழடி தடயங்கள் தொடர்பாக கிட்டதட்ட ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஒளிபடங்களை வைத்திருப்பதாக அமர்நாத் ராமகிருஷ்ணன் தெரிவிக்கிறார். இவை முதலிரண்டு அகழாய்வு காலத்திலானது. அரியவகை மணிகளால் ஆன ஆபரணங்கள், முத்து ஆபாரணங்கள். இந்த முத்தாபரணம் கீழடியில் கிடைத்திருப்பது முக்கியமானது என்கிறார் அவர். இரும்பினாலும், செம்பினாலும் செய்யப்பட்ட ஆயுதங்கள், கண்மை தீட்டும் தோல் போன்றவை, சங்கு வளையல்கள், கொம்பினால் செய்யப்பட்ட எழுத்தாணிகள். யானை தந்தத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட தலைவாரும் சீப்பு. தந்தத்தால் ஆன சீப்பு என்பது கீழடி மக்களின் செல்வ செழிப்பை, பொருளாதார உயர்வினைக் காட்டுவதாகவும் குறிப்பிடுகிறார். போலவே தந்தத்தால் செய்யப்பட்ட தாயக்கட்டைகள் அவர்களது பொழுது போக்கின் பகுதியாக இருந்திருப்பதைக் காட்டுகிறது என்கிறார். மகாபாரதத்தில் 'உருட்டப்பட்ட' பகடைக்கு இன்னும் அறிவியல், புவியியல் புறவியல் என்று எந்த ஆதாரங்களும் கிடைத்தப்பாடில்லை. அவை அரசியல் உருட்டாகவும், புரட்டாகவுமே இருக்கும் நிலையில் கீழடியில் அவை வாழ்வியல் தடயங்களாக இருக்கின்றன. பண்பாட்டின் பகுதியாக இருந்திருக்கின்றன. இங்கு சதுரங்கக் காய்கள் கிடைத்திருக்கின்றன. வடக்கில், மகாபாரதத்தை உருவாக்கிய சதுரங்கப் பலகைகள் கூட இன்னும் கிடைத்தப்பாடில்லை.

கீழடி தொல்லியல் மேடானது 14 ஆம் நூற்றாண்டுவரை தொடர்ச்சியாக அப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வருவதற்கான தொல்லியல் எச்சங்கள், முழுமையாகவோ பகுதியாகவோ கிடைத்து வருகின்றன. வைகை நதியின் முகத்துவாரமான அழகன் குளம் வரையிலுமாக நீண்டு கிடக்கும் கீழடியின் உலகுடனான தொடர்பு கடலுக்கு அப்பாலும் விரிந்து பரந்து செல்வதாக இருக்கிறது. பெரும்பாலும் வடக்கில், கங்கை சமவெளியை போல வைகை, தமிரபரணி, காவிரி போன்ற வளமான வண்டல் ஆற்றின் முகத்துவாரப் பகுதிகளில் மக்கள குடியேறுவது இயல்பானதே. யூப்ரடிஸ், டைகரிஸ், நைல் போன்ற பகுதி ஆற்றங்கரை நாகரிகங்கள் வண்டலிலிருந்தே உருவாவதை அறிகிறோம். அவ்வாறுதான் கீழடி உருவாகியிருக்கிறது. உலகுடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

கீழடியைப் பொருத்தவரை நகரநாகரிகம் என்று சொல்லும் போது அன்றாடத்திற்கான தேவை கருதி உறைகிணறு, உருக்காலை, உழு கருவிகளுக்கான பட்டறைகள், நூல் நூற்கும் தக்ளிகள், சாயப்பட்டறைக்கான தொழிற்கூடங்கள் ஆகியன நிறுவப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் கீழடி மக்கள் நகர நாகரிகத்திற்கேயுரியவாறு வெளியிலிருந்து ஏராளமான பொருட்களை தருவித்து பயன் படுத்தியிருக்கிறார்கள். அதற்கான பொருளியல் வளம் அவர்களிடம் இருந்திருக்கிறது.

ஒன்றிய அரசு தொல்லியல் துறையானது தனது ஆய்வில் சுணக்கம் காட்டியபோது அல்லது விலகி நின்றபோது தமிழக அரசின் தொல்லியல் துறை மற்றும் அதன் பல்கலைக்கழகங்கள் இணைந்து ஆய்வுகளை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றன. பத்தாம் கட்ட ஆய்வுகள் வரை நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில்தாம் தற்போது அமர்நாத்தின் இரண்டாம் கட்ட ஆய்வின் நிறைவறிக்கையில் திருத்தம் கோருகிறது ஒன்றிய அரசின் தொல்லியல் துறை. இந்த உள்நோக்கம் தெளிவானது. முடிவுகளை அது ஏற்கவில்லை. என்பதே அது.

கீழடி ஆய்வுகளின் முடிவுகளில் திருத்தம் கோரவில்லை. என்று இந்திய தொல்லியல் துறை தற்போது கூறுகிறது. சில விளக்கம் மட்டுமே கேட்கப்பட்டுள்ளது என்கிறது அது. ஆனால் அது கி.மு.500லிருந்து கி.மு300 க்கு குறைக்கக் கோருகிறது. அறிவியல் முடிவை குறைக்கக் கோருகிறது. புராணத்தைப் போல திருத்தக் கோருகிறது. ஏற்கனவே இந்த



**கவிஞர் ஜெயதேவன் மறைவுக்கு அஞ்சலி**

தோழர் ஜெயதேவன் காக்கைச் சிறகினிலே இதழ் தொங்கிய (2011) ஆண்டு முதல் நெருக்கமான தொடர்பில் இருந்தார். இதழ் தொடர்ந்து வரவேண்டும் எனும் காரணத்திற்காக அவரது பகுதியில் இருக்கும் 10 நூலகங்கள் மற்றும் பள்ளிக்கூடங்களுக்கு இவரது சொந்தப் பணத்தில் மூன்றாண்டு சந்தா செலுத்தி இதழின் வளர்ச்சிக்கு உதவியவர். இவர் கடைசியாக காக்கை இதழுக்கு "தோழமை என்றொரு சொல்" எனும் கட்டுரையை எழுதியுள்ளார்.. கடந்த 10.06.2025 அன்று மறைந்த தோழருக்கு காக்கை இதழ் தனது 'அஞ்சலி'யைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

– ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையின் தாமதம் குறித்து நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டு உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். இந்த நிலையில்தான் மே-27 ஆம் திகதி உறுதி மொழிக் கூட்டம் நடைபெற்றது. அதை தவிர்ப்பதற்காகவே கீழடி ஆய்வறிக்கையில் திருத்தம் தேவை என்று தொல்லியல் துறை அமர்நாத்தின் அறிக்கையை அவருக்கு திருப்பி அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

ஒன்றிய அரசு, 2014 -16 ஆம் ஆண்டின் கீழடி ஆய்வுகளிலேயே திருத்தம் செய்யக் கோருகிறது. இந்திய தொல்லியல்துறை இயக்குநர் ஹேமாசாகர், கீழடியின் மெய்தன்மையை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்கவே அமர்நாத் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். அந்த ஆய்வுகளின் படி, கீழடியின் வரலாற்றுக் காலம் கி.மு. 800 முதல் கி.மு.500 என அறிவியல் முறைப்படி ஆய்வுகள் உறுதி செய்யப்பட்டு அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. எனவே அதில் திருத்தத்திற்கு இடமில்லை. மேலும் அதில் கால வரிசைகள் துல்லியமாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. என அமர்நாத் பதிலளித்துக் கொண்டுள்ளார். திருத்தம் குறித்து சிந்துவெளி ஆய்வாளரும், மேனாள் இந்திய ஆட்சிப் பணியாளருமான ஆர். பாலகிருஷ்ணனும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தொடர் அகழ்வுகள் இந்தியத் துணைக் கண்டத்தில் இரும்பு பயன்பாட்டின் தொடக்கம் கீழடிதான் என்பதை 2017 ஆண்டுக்குப் பிறகான ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. வரலாற்று கற்பனைகளை, புராண புரட்டுக்களை தலைகீழாக மாற்றும் கீழடி அகழ்வுகள் ஒன்றிய ஆட்சியாளர்களை பதட்டத்திற்கு உள்ளாக்குவதையும், அறிக்கையை இரண்டாண்டுகளாக கிடப்பில் போட்டுள்ளதையும், 8 ஆண்டுகளாக எப்படியாவது தோண்டிய மண்ணை அள்ளிப் போட்டு கீழடியை ஒரேடியாக மூடிவிடலாமா என்றே அது வரலாற்று ஆபாசத்துடன், வரலாற்று பயங்கரவாதத்துடனும் அணுகுகிறது.

"கீழடியின் வரலாற்றுப் பெருமை இந்தியத்துணைக் கண்டத்திற்கு பொதுவானது. தமிழி என்ற தமிழ்-பிராமி எழுத்து வடிவமானது தமிழுக்கு முன்னோடியாக அமைந்தாலும் அவை தென்னிந்தி மொழிக் குடும்பங்களுக்கும் வளம் சேர்க்கக் கூடியதே கீழடியை மொழி எல்லைகளுக்கு, நிலவியல் எல்லைகளுக்கு அப்பாலான பொது வாழ்வியல் கூறுகளுடன் அவற்றை அணுகுவது முக்கியமானதாகும். அந்த வகையில் நவீன மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, புதுவை, ஆந்திரா, தெலுங்கானா, இணைந்ததே பண்டைய தமிழகம் என்று அணுகுமுறை வேண்டும்" என்கிறார் தொல்லியல் அறிஞர் பி.ஜெ. செரியன்.

"இயற்கையுடன் இணைந்த வாழ்வு, சாதி அமைப்பு இன்மை, குறைந்த அதிகாரங்கள் பயன்பாடு ஆகியவற்றைக் கொண்ட ஒரு பண்பாட்டையே கீழடி அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். கீழடி கண்டுபிடிப்புகள் நமக்கு உணர்த்த விரும்புவது என்னவென்றால் மதச்சார்பின்மை, உள் இணைக்கப்பட்ட சம நிலைப்படுத்தப்பட்ட சமூக உறவுகள். ஆகியன இற்கையோடு இணைந்த ஒரு சமுதாயத்திற்கு அந்நியமாக இருக்க முடியாது என்பதுதான்". என்றும் கூறுகிறார் பி.ஜெ.செரியன்(கீழடி வைகை நதிக்கரையில் சங்ககால நகரநாகரிகம்(பக்-7)

சங்ககால எட்டு இலக்கியங்களின் நகல் வாழ்வை அசல் வாழ்வாக தொல்லியல் அடையாளங்களாக மீட்டு உறுதிபடுத்தப்பட்டிருக்கிறது கீழடி ஆய்வு. "சங்க இலக்கியம் என்பது பண்டைய தமிழர்கள் வாழ்வியல் அனுபவம். கற்பனைக்கதைகள் அல்ல.இதை கீழடி உறுதிபடுத்தியுள்ளது. நிரூபித்துள்ளது என்கிறார். ஆர். பாலகிருஷ்ணன்(டைம்ஸ் ஆஃப் இந்தியா) முக்கியமாக மத அடிப்படையிலான அடையாளங்கள், வழிப்பாட்டு சின்னங்கள், முத்திரைகள் போன்றவை கீழடியில் எந்த அகழ்விலும் இன்றுவரை கிடைத்திருக்கவில்லை. வரலாற்றைத் திருத்தி எழுதுபவர்கள், கல்வெட்டை மாற்றி செதுக்குபவர்கள் பிளவு அரசியல் செய்தே பழகியவர்களுக்கு அழிக்கவியலாத கீழடியின் கடந்தகால சமநீதி, சகவாழ்வு முறையில் திருத்தம் கோருவதை புரிந்து கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | மாதவன்

# ஜிடிபி-யில் நாலு, தனி மனித வருமானத்தில் 130.
# இதுவா உண்மையான வளர்ச்சி?

உலகின் நான்காம் பொருளாதார நாடாகத் திகழும் ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு இந்தியா அந்த இடத்துக்கு முன்னேறிவிட்டது என்பதுதான் இப்போதைய பேசு பொருளாக உள்ளது. இதை நிதி ஆயோக் அமைப்பின் தலைமைச் செயல் அலுவலர் (சிஇஓ) பி.வி. ஆர். சுப்ரமணியன் தெரிவித்துள்ளார். ஆனால், இதை நிதி ஆயோக் அமைப்பின் உறுப்பினரான அர்விந்த் விர்மானி மறுத்துள்ளார். ஓர் அமைப்பின் தலைமைச் செயல் அலுவலருக்கும், அதன் உறுப்பினருக்கும் இடையிலான தகவல் பரிவர்த்தனை அல்லது புரிதலில் எந்த அளவுக்கு இடைவெளி உள்ளது என்பது இதிலிருந்தே வெளிப்படையாகத் தெரிகிறது.

ஒவ்வொரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து சர்வதேச செலாவணி நிதியம் (ஐஎம்எப்) மதிப்பீட்டு அறிக்கையை ஆண்டுதோறும் வெளியிடும். அதன்படி 2025-26 ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) ஜப்பானை மிஞ்சிவிடும் எனக் கணித்துள்ளது. ஆக, இந்த நிதி ஆண்டில் இன்னமும் மூன்று காலாண்டுகள் உள்ள நிலையில் அதற்குள்ளாகவே நாம் நான்காம் இடத்துக்கு முன்னேறிவிட்டதாக நிதி ஆயோக் தலைவர் தம்பட்டம் அடித்திருப்பதைப் பொருளாதார வல்லுநர்கள் பலரும் கடுமையாக விமர்சித்துள்ளனர். இது ஒருபுறம் இருக்க, அதன் உறுப்பினாரன அரவிந்த் விர்மானி இதை உணர்ந்தே நிதானமாகக் கருத்தை வெளியிட்டிருக்கிறார் என்பதும் தெளிவாகியுள்ளது.

ஐஎம்எப் மதிப்பீட்டின்படி இந்தியா இந்த ஆண்டு இறுதியில், அதாவது நமக்கு நிதிஆண்டு என்பது ஏப்ரல் முதல் மார்ச் வரையாகும். ஆனால், ஜப்பானுக்கு நிதிஆண்டு என்பது ஜனவரி முதல் டிசம்பர் வரையாகும். அதனடிப்படையில் இந்த ஆண்டு இறுதியில் ஜப்பானைவிட இந்தியாவின் ஜிடிபி 4.178 டிரில்லியன் டாலராக உயரும். அதாவது ஜப்பானைவிட 0.001 டிரில்லியன் அதிகமாக இருக்கும் என்பதுதான் அது. இப்போது இந்தியாவின் ஜிடிபி 3.76 டிரில்லியன் என்ற அளவில்தான் உள்ளது.

அரசியல்வாதிகள் மேடைகளில் மக்களின் கவனத்தை ஈர்க்க இதுபோன்று பல புள்ளிவிவரங்களை அள்ளிவீசிச் செல்வது இங்கு வாடிக்கை. ஆனால், முதல் முறையாக உயர்நிலை அலுவலரே இந்த ஆண்டு இறுதியில் எட்டப்படும் என்ற ஐஎம்எஃப்பின் கணிப்பை, அதாவது மதிப்பீட்டை இப்போதே எட்டிவிட்டதுபோல அறிவிப்பு வெளியிட்டிருப்பது பேசு பொருளாகி, விவாதத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும், அடுத்த 9 மாதங்களில் ஐஎம்எஃப் நிர்ணயித்துள்ள மதிப்பீட்டு இலக்கை எட்டுவதில் பல சிரமங்கள் உள்ளன. டாலருக்கு நிகரான ரூபாயின் மாற்று மதிப்பு, சர்வதேச அளவிலான போர்ச் சூழல் உள்ளிட்ட காரணிகளால் இலக்கை எட்டுவது மிகப் பெரும் சவாலாகவே இருக்கும் என யதார்த்தத்தை உணர்ந்த பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். அனைத்துக்கும் மேலாக ரிசர்வ் வங்கியே இந்த நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6 சதவீதத்துக்கும் குறைவாக இருக்கும் என மதிப்பீடு செய்துள்ளதை இத்தருணத்தில் புறந்தள்ளிவிட முடியாது.

நாட்டின் வளர்ச்சி, அதன் பலன் அனைத்து மக்களையும் சென்றடைந்துள்ளதா என்று பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக இந்தியா வளர்ந்துவருகிறது என்று பெருமைப்பட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதைவிட அதன் பலன் அடித்தட்டு மக்களைச் சென்றடைந்துள்ளதா என்று பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். அதல்லாமல், வெறுமனே புள்ளிவிவரக் கணக்கு, ஜிடிபி வளர்ச்சியை மட்டுமே பேசிக்கொண்டிருப்பதில் என்ன பயன் இருக்க முடியும்?

பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டும். அதன் பலன் அனைத்துத் தரப்பினரையும் சென்றடைய வேண்டும் என்பதே கடந்த பல ஆண்டுகளாகச் செயல்பாட்டில் இருந்துவந்தது. ஆனால், இப்போது பொருளாதாரம் வளர்ந்துவந்துள்ளது என்பதை மட்டுமே கட்டமைக்கின்றனர். அதன் பலன் அனைவரையும் சென்றுசேர்ந்துள்ளதா என்பதற்கு நிதி ஆயோக்கில் உள்ள எந்த அலுவலரிடமும் உரிய பதில் இல்லை.

இந்த வளர்ச்சியானது போதுமான வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதா? பணவீக்கம் கட்டுக்குள் உள்ளதா? அனைவருக்கும் போதுமான குறைந்தபட்ச கூலி உள்ளிட்டவை கிடைக்கிறதா? கல்வி, சுகாதாரம், பெண்கள் நலன், அடிப்படை வசதிகள் உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை மையமாக வைத்துத்தான் வளர்ச்சியானது இருக்க வேண்டும். அதேபோல ஊதிய பகிர்வு முறையாக உள்ளதா, அதில் எந்த அளவுக்கு ஏற்றத்தாழ்வு நிலவுகிறது என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

வளர்ச்சி என்பதைவிட ஜிடிபி-யின் அளவைப் பெரிதாக்கிக் காட்டுவதிலேயே ஒன்றிய அரசு முனைப்பு காட்டுவது தெளிவாகத் தெரிகிறது. வளர்ச்சியின் பலன் யாரைச் சென்றடைந்துள்ளது என்பதை சுப்ரமணி விவரிக்கவே இல்லை.

குறிப்பாக, தனி மனித வருமானம் என்ற ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். ஒட்டுமொத்த ஜிடிபி தொகையுடன் மக்கள்தொகை எண்ணிக்கையை வகுப்பதன் மூலம் கிடைப்பது 2,888 டாலர். இது இங்குள்ள ஒருவரின் தனி நபர் வருமானமாக உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

இந்தியா எட்டியுள்ள வளர்ச்சியை மக்கள்தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இந்தியாவின் மக்கள்தொகை 146 கோடி. ஜப்பான் மக்கள்தொகை எண்ணிக்கை 12 கோடி. அதாவது இந்திய மாநிலங்களில் ஒன்றான மகாராஷ்டிர மக்கள்தொகைக்கு நிகரானதாகும். மகாராஷ்டிர மாநில அளவுதான் அதன் நிலப்பரப்பும் உள்ளது. அனைத்துக்கும் மேலாக அணுகுண்டு வீச்சின் பாதிப்பை நன்கு உணர்ந்த நாடு ஜப்பான்தான். இரண்டாம் உலகப் போரில் சிதிலமடைந்து இன்று உலக நாடுகளுக்கு இணையாக ஜப்பான் வளர்ந்துள்ளதை யாருமே குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

இந்தியாவின் மக்கள்தொகையான 146 கோடியுடன் ஒப்பிடுகையில் ஜப்பானின் மொத்த மக்கள் தொகையான 12.3 கோடியானது 10 சதவீத அளவுக்குக்கூடக் கிடையாது என்பதுதான் யதார்த்த நிலை. அதாவது 146 கோடி மக்களின் உற்பத்திக்கு இணையாக 12.3 கோடி மக்கள் உற்பத்திசெய்கின்றனர் என்பதுதான் உண்மை நிலை. அப்படியிருக்க ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா முன்னேறியுள்ளதை எப்படிப் பெருமையோடு கூறிக்கொள்ள முடியும்?

தனி மனித வருமானத்தில் ஜப்பான் 24 ஆம் இடத்தில் உள்ளது. ஆனால், இந்தியா ஆப்பிரிக்க நாடுகளுக்கு இணையாக 130 ஆம் இடத்தில் உள்ளது. நிலை இப்படியிருக்கும்போது இதை எப்படி வளர்ச்சி என்றோ, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்றோ எப்படிப் பெருமைப்பட்டுக்கொள்ள முடியும்?

இந்தியாவில் உள்ள 90 சதவீத மக்களின் தனி மனித வருமானம் மாதத்துக்கு ரூ. 25,000 (288 டாலர்) ஆகத்தான் உள்ளது. இந்தியாவில் மேல்தட்டில் உள்ள ஒரு சதவீதம் பேரின் வருமானம் நாட்டின் ஒட்டுமொத்த ஜிடிபியில் கால் பங்கு அதாவது 25 சதவீத அளவுக்கு உள்ளது.

இந்தியாவின் மொத்த ஜிடிபி கணக்குப்படி தனி நபர் வருமானம் 2,888 டாலர். ஆனால், இதில் பத்தில் ஒரு பகுதியைத்தான் இங்குள்ள 90 சதவீத மக்கள் பெறுகின்றனர். எஞ்சிய தொகை கோடீஸ்வரர்கள் எனப்படும் 162 அதானி, அம்பானி போன்ற பெரும் செல்வர்களுக்குத்தான் செல்கிறது.

இங்கு வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களின் கணக்கெடுப்பை அரசு நிறுத்திவிட்டது. மாதம் ரூ. 5 ஆயிரம் வருமானம் ஈட்டும் ஒருவரின் வாழ்க்கைத் தரம் எப்படி சுபிட்சமாக இருக்க முடியும்? கிராமத்தில் உள்ளவர்கள் மற்றும் முறைசாரா தொழில் புரிவோர் பலரது வருமானம் இந்த அளவுக்குத்தான் உள்ளது.

இந்தியாவில் உள்ள சொத்துகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் ஒரு சதவீத மக்களிடம் ஒட்டுமொத்த சொத்தில் 40 சதவீதம் உள்ளது. ஜப்பானை பின்னுக்குத் தள்ளிவிட்டு இந்தியா முன்னேறிவிட்டதாகக் கூறுபவர்கள், ஜப்பானில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கு இணையாக இங்குள்ள இந்தியர்களின் வாழ்க்கைத்தரம் உள்ளதா. அங்கே பொதுப் போக்குவரத்து வசதி, புல்லட் ரயில் போன்ற அதீத வசதிகள் சாமானியர்களுக்கும் சாத்தியமாகியுள்ளன. சுகாதார வசதி, மருத்துவ வசதி அங்கு அனைவருக்கும் கிடைக்கும். இந்தியாவில் இத்தகைய நிலைமையா உள்ளது?

ஜிடிபி கணக்கிடும் முறையை வெளியிடுவது வழக்கம். ஆனால், அண்மைக் காலமாக இதை வெளியிடுவது இல்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் (ஆர்டிஐ) இது குறித்து விவரம் கேட்டாலும் தருவதில்லை. அந்த அளவுக்கு ரகசியம் காக்கப்படும்போதுதான், கணக்கிடும் முறை பற்றிய சந்தேகம் வலுவாக எழுகிறது. பத்திரிகையாளர் பிரமித் பட்டாச்சார்யா இது குறித்துத் தொடர்ந்து கேள்வி எழுப்பினாலும் அதற்கும் பதில் கிடைக்கவில்லை.

அரசின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மை மிகவும் அவசியம். சுய அதிகாரம் பெற்ற தன்னாட்சி அமைப்பாகச் செயல்படும் நிதி ஆயோக் வெளியிடும் புள்ளிவிவரங்கள் மற்றும்அவற்றைக்கணக்கிடமேற்கொள்ளப்படும் முறைகள் குறித்த விவரங்களை வெளியிட்டால்தான் வெளிப்படைத்தன்மை இருக்கும். இதற்கு நிதி ஆயோக் உரிய பதிலை அளிக்க வேண்டியது கட்டாயமாகும்.

ஜிடிபி விவரங்கள் நாட்டின் பொருளாதாரத்தை அளவிடுவதற்கு வேண்டுமானால் உதவலாம். அது எந்த அளவுக்குநாட்டு மக்களுக்குப் பகிரப்பட்டுள்ளது என்பதையும் கணக்கிட வேண்டும். ஒரு நாடு எப்படி வளர்ச்சியடைந்த நாடாகக் கருதப்படுகிறது. அங்கு வாழும் மக்கள் எத்தகைய வாழ்க்கைத் தரத்துடன் வாழ்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

நாட்டு மக்கள்தொகை என்பது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேயில்லை. வாழ்க்கைத் தரத்தில் ஜப்பான் மக்களுக்கு இணையாக இங்குள்ள மக்கள் வாழ்கிறார்களா என்பதையும் பார்க்க வேண்டும். பணக்காரர்கள் மற்றும் ஏழை மக்களிடையிலான ஏற்றத்தாழ்வு எந்த அளவுக்கு உள்ளது என்பதையும் கணக்கிட வேண்டும்.

2000 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 46,800 கோடி டாலராக இருந்தது. 2025-இல் இது 4,18,700 கோடி டாலராக வளரும் என ஐஎம்எஃப் மதிப்பிட்டுள்ளது. இந்தியாவில் தனி நபர் வருமானம் ஜப்பானியரின் தனி நபர் வருமானத்தை விட 12 மடங்கு குறைவாக உள்ளது. இன்னொரு ஒப்பீட்டை பார்த்தோமானால் இந்தியாவின் ஜிடிபி-யில் நான்கில் ஒரு பங்குதான் போலந்து நாட்டினுடையது. ஆனால், அந்நாட்டின் தனி நபர் வருமானம் இந்தியரின் வருமானத்தைவிட 9 மடங்கு அதிகமாக உள்ளது.

இதேபோல ஜப்பானியர்களின் வாழ்நாள் 84 ஆண்டுகளாகவும், போலந்து நாட்டில் உள்ளவர்களுக்கு 78.5 ஆண்டுகளாகவும் உள்ளது. இந்தியர்களின் வாழ்நாள் 72 ஆண்டுகளாக உள்ளது.

ஜிடிபி அளவில் நாம் வளர்ந்துவிட்டோம். ஆனால், அனைவருக்குமான வளர்ச்சியில் மற்ற நாடுகளுடன் ஒப்பீட்டு அளவில்,அருகில் கூட இல்லை என்பதை ஆட்சியாளர்கள் எப்போது உணரப் போகிறார்கள்?

வளர்ச்சியில் நாம் போக வேண்டிய தூரம் இன்னும் அதிகம். அதற்கான இலக்குகளை, வரையறைகளை நிர்ணயித்து அதைச் செயல்படுத்துவதுதான் அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சியாக இருக்கும்.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.முரளி

# இந்திய மெய்யியல் மரபில் வள்ளலாருக்கான இடம்



வள்ளலார் இராமலிங்கரை இந்திய மெய்யியல் பரப்பில் எங்கு, எப்படி இடம் பெறச் செய்வது என்பது மெய்யியல் வரலாற்றிற்கு ஆற்றும் முக்கிய பணி ஆகும். தமிழகத்தில் திருமூலர் தொடங்கி பல ஆன்மிக ஞானிகளும் இந்த வரலாற்றில் இடம்பெற வேண்டியவர்கள்தான். இவர்களை மெய்யியல் கோட்பாட்டாளர்களாகக் காணுவதில் இந்திய மெய்யியல் அறிஞர்களுக்கு தயக்கம் உள்ளதைக் காணலாம். இவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அறிவுத் தடங்களைப் புறம் தள்ளிவிட்டு, உளப் போக்குகளின் எல்லைகளைக் கடந்து பொருள் சாரா, புலன் அறிவுகள் சாரா, கால நேர எல்லைகளுக்குட்படாத சுய அனுபவங்களையே ஆதாராமாக முன்வைக்கின்றனர். இந்த அனுபவங்களின் பேரறிவாக பிறர் ஏற்பதற்குத் தேவை நம்பிக்கை என்ற ஒன்றே! அறிவு சார் விளக்கங்கள் கொண்ட பரப்புகளில் இந்த ஆன்மிகஞானவிளக்கங்கள் நிராகரிக்கப்பட்டோ, அல்லது ஓரம் கட்டப்பட்டோ வருகின்றன. இதில் மற்றொரு கவனிக்கப்படவேண்டிய அம்சம் என்னவெனில், பல ஞானவான்களின் முன்வைப்புகள் மற்றும் வழிகாட்டுதல்கள் மதம் அல்லது சமயக் கட்டுமானங்களுக்குள் உட்படுவதில்லை. இவை மரபு சார்ந்த சமயங்களை விலக்குவதாகவேக் காணமுடியும். அப்படி இருந்தும் இவர்களின் ஞானப் பயணங்கள் மெய்யியல் கோட்பாடுகளாகக் வகைப் படுத்தப்படுவதில்லை. இதில் முக்கியப் பிரச்சினையாகக் காணவேண்டியது என்னவெனில் இதுவரை தத்துவவியலாளர்கள் பயன்படுத்திய தத்துவ முறைமைகளுக்குள் வள்ளலார் போன்றோரின் கோட்பாடுகளைக் கொண்டுவர முடியவில்லை என்பதே ஆகும். தமிழ்நாட்டுத் தத்துவவியல் அறிஞர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அகில இந்திய அளவிலே பிற மொழி ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழர் மெய்யியல் கோட்பாடுகளை கல்வி மற்றும் ஆய்வுத் தளங்களில் விவாதிக்கவில்லை என்றும் கருதுகின்றேன். மேற்கத்திய மெய்யியல் போக்கு என்பது தருக்க ரீதியான முறைமைகளில்தான் தன் உயிர்ப்பைக் கொண்டுள்ளது. கீழை நாட்டு ஞானிகளின் அனுபவங்கள் இந்த முறைமைகளைத் தவிர்த்து விடுவதாக உள்ளன. தனி நபர் ஆன்மிக அனுபவங்களை இந்த மேற்கத்திய கட்டமைப்பு முறைமைகள் ஏற்பதில்லை. உளவியலாளர்களும் இவை எல்லாம் மூளையின் ஒரு வகை அதீத செயல்பாடாகவே கருதுகின்றனர். ஆனால் இந்த ஆன்மிக அனுபவப் பதிவுகளை முறைப் படுத்தி, தொகுத்துப் பார்த்தால், அவற்றுக்குள் தேச எல்லைகள் கடந்த ஒரு பொதுமைப் பண்பு இருப்பதைக் காண இயலும். இந்தப் பொதுமைப் பண்புகளில், ஒரு முக்கியப் பண்பு நிலை என்பது மனிதர்கள் ஒளி உடலாக மாறுவது உட்பட இறை ஆற்றலை அறிவது என்பதும் ஆகும்.

இவ்வகை ஆன்மிக அனுபவங்களை ஏற்றுக் கொள்வதற்கு ஆதாரமாக ஏற்புடைய பிரமாணங்கள் தேவைப்படுவதில்லை. நேரடி அனுபவம் என்பது மட்டுமே இங்கு பிரமாணமாகின்றது. நேரடி அனுபவம் என்றாலும் அதைப் பெறக் கூடிய வழிமுறைகளையும், பயிற்சி முறைகளையும் நாம் காணமுடிகின்றது. தமிழர் மெய்யியல் பரப்பில் திருமூலர் இவற்றுக்கு மூலவராக இருந்து வழிமுறைகளையும், அனுபவ நிலைகளையும் விளக்கியுள்ளார். குறிப்பாக மூச்சுக் கட்டுப்பாட்டை அவர் ஒரு வழிமுறையாக முன்வைக்கின்றார். எனவே இந்த வகை மெய்யியலை இடது கையினால் புறம் தள்ளுவது சரியல்ல. இதில் போலிகள் நிறையவே உள்ளன என்றாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளத்தக்கவையை அடையாளம் கண்டு அங்கீகரிப்பதுதான் சரியானது. இந்த வகையில் சித்தர் மரபும் முக்கிய பங்கு வகிக்கின்றது. விட்கென்ஸ்டைன் இம்மாதிரி ஆன்மிக அனுபவ விளக்கங்களுக்குப் பயன்படுத்தப் படும் மொழி என்பது அந்தத் தளத்திலே மட்டும் பொருள் தருவன ஆகும். எனவே அவற்றின் ஏற்புடைமை என்பது அந்தந்த தளத்திற்குள்ளான பிரச்சினையாகும் என்கின்றார். அப்படியாயின் இந்த மெய்யியல் வகையை நிராகரிப்பது என்பது சரியானதல்ல. மேற்கத்திய மெய்யியல் அறிஞரான ஷோஃபன்ஹோரும் கூட நம் புலன் அறிவு சார்ந்த உலகத்திற்கு இணையாக இன்னொரு உலகம் உள்ளது. ஒரு கதவைத் தள்ளி திறந்து போவது போல அதனுள் நுழைய முடியும் என்று விளக்குகின்றார். கண்டவர் விண்டிலர் எனும் மொழி பொதுவாகப் பேசப் படப்பட்டாலும், தமிழ் பரப்பிலே கண்டவர்கள் தங்கள் படைப்புகளால் அவற்றை விளக்கவே முற்பட்டுள்ளனர் என்பதே வரலாறு.

தமிழர் ஞானப் பரப்பில் ஆதிகாலம் தொட்டு பல ஞானிகள் பற்றி பேசப்பட்டாலும், வள்ளலார் இராமலிங்கரின் பங்களிப்பு சிறப்புத்தன்மை வாய்ந்தது. அவர் கருத்தியலையும், செயல்பாட்டையும் (*theory & practice*) இணைப்பது என்பதை மிகவும் திட்டமிட்டே செய்தார் என்பது ஒரு சிறப்பு அம்சமாக இருப்பினும், ஆன்மிகம் என்பது சக உயிர்களின்மீது செலுத்தும் எதிர்பார்ப்பில்லா கருணையே என்று வலியுறுத்துவது அவரைப் பிறரிலிருந்து வேறுபடுத்துகின்றது.

வள்ளலார் தனிநபர் ஆன்மிக அனுபவத்தை சமூக தளத்திற்கு விரிக்கின்றார். வேதம் சார்ந்த சனாதனத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, சம தர்மம் என்பதை சன்மார்க்கமாக்குகின்றார். அவர் குறிப்பிடும் கருணை எனும் சொல் பரிதாபப்படுவது என்பது அல்ல, அது உயர்நிலை அன்பைக் குறிப்பதாகும். பிற உயிர்களை சக ஜீவியாக, சமமாகக் காணுவது பற்றிதான் விளக்குகின்றார். மனிதர்கள் துன்பம் தீர்க்கும் முதன்மையான வழியாக தான் கண்ட ஆன்மிகப் பதையை அவர் பிரகடனப் படுத்துகின்றார்.

துறவு என்பது அவரவர் தனிப்பட்ட வாழ்வு பற்றியதே. ஆனால் அதன் பலனை சமூக நலனுக்கு அர்ப்பணிப்பதே துறவியின் சமூக பொறுப்பாக அவர் காண்கின்றார். அவர் சாதியத்தை அக்காலக் கட்டத்தில் முழுமையாக எதிர்த்தது என்பது இன்றும் சவாலுக்குரிய செயலாகும்.இந்த எதிர்ப்பு நிலைக்கு அவரின் அடிப்படை, ஆன்மிக அனுபவம் மூலம் சக மனிதர்கள் எல்லோரும் சமமானவர்களே, ஒரே ஜோதியின் பல உருவங்களே என்றுணர்ந்ததே காரணம். இதை மார்க்சியம் கொண்டோ, அல்லது பெரியாரியம் கொண்டோ விளக்குவது அவருக்கு நியாயம் செய்யாது. இதை சைவம் மற்று வேறு வகை சிவனிய மரபினால் உண்டானது என்றும் அடையாளப் படுத்த இயலாது.

அக உலக அனுபவத்தை விளக்கவே இயலாது என்று சொல்லப்பட்டுவந்த ஞானத்தை, மக்களின் விடுதலைக்கான அறிவாக அவர் கட்டமைத்தது இந்திய மெய்யியல் பரப்பில் நிகழ்த்தப்படாத சாதனையே! இருமைத் தன்மையற்ற அத்வைத நிலைப்பட்டிலிருந்து புறப்பட்டு,சைவசித்தாந்த மரபின் சிவனியக் கோட்பாட்டையும் உணர்ந்து, பின் சித்தர்களின் வெட்டவெளியைத் தொட்டுப்பார்த்து, அதையும் கடந்து அதற்கும் மேலாக சன்மார்க்க நெறி ஒன்றை, மக்களுக்கானதாக அவர் உருவாக்கிய நிலையில்தான் இந்திய மெய்யியல் மரபில் இவர் கொண்டாடப்படவேண்டியவராக ஆகின்றார்.இங்குதான் வள்ளலார் தனித்தன்மை பெறுகின்றார். இவருடைய சமரசம் என்பது சுத்த சன்மார்க்கம் மூலம் உருவாக்கப்படுவது என்பதே இவருடைய நிலைப்பாடு. இது வேதாந்தம், யோகம், நாதந்தம் போன்றவற்றின் குறைபாடுகள் நீங்கிய நிறைவான ஒரு கூட்டு எனவும் கருதலாம். அதே சமயம் இது அவை அல்ல.

திருமூலரும், மாணிக்கவாசகரும்..இன்னும் பிறரும் கூறிய சன்மார்க்கம் தான் வள்ளலாரால் முழுமையடையப் பெற்ற சமரச சுத்த சன்மார்க்கமானது. "சுத்த" எனும் சொல்லின் பயன்பாடு தமிழரின் ஆன்மிக வெளியில் மிக முக்கிய அர்த்தத்தைக் கொள்கின்றது. விந்து, பரவிந்து இரண்டையும் மறுக்க சுத்த விந்து வந்தது போலவும், சிவம்- பரமசிவம் இரண்டையும் மறுக்க சுத்த சிவம் வந்தது போலவும், சன்மார்க்கம், சிவ சன்மார்க்கம் இரண்டையும் மறுப்பதே சுத்த சன்மார்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விளக்கம் தரப்படுகின்றது. சமயம் சார்ந்த சன்மார்க்கங்களை விலக்கி சுத்த சன்மார்க்கம் பிறப்பெடுத்தது. இந்தப் புரிதலின் அடிப்படையில்தான் வள்ளலார் விளக்கங்களைத் தருகின்றார்.

இந்திய மெய்யியல் பரப்பில் நாத்திக வகையாகப் பிரிக்கப்பட்ட பிரிவில்தான் வள்ளலாரை நாம் வகைப் படுத்த இயலும். இந்தப் பிரிவில் பௌத்தமும், சமணமும், சாருவாகமும் அடையாளப் படுத்தப்படுகின்றன. இவை மூன்றும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டவை என்றாலும்,வேத மறுப்பு என்ற ஒற்றைக் காரணத்தால் நாத்திகப் பள்ளிகளாக அடையாளம் காணப் பெற்றன. அந்த வகையில் வள்ளலாரின் விளக்கங்களும் நாத்திக மரபையே சாருகின்றன. வள்ளலாரின் உயிர், உடல், அண்டங்கள் குறித்த விளக்கங்கள் ஒரு புறம் இருப்பினும், வேதங்களை அவர் மறுப்பது என்பதினால் இவர் நாத்திகப் பள்ளியில் இடம் பெறலாம்.அப்படி அதில் அவருடைய மெய்யியலை அடையாளப்படுத்துவதில் சிக்கல் இருக்குமானால் மூன்றவாதாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்படுவது அவசியம். அதில் வள்ளலாரைப் போன்ற பலர் இடம் பெறும் வாய்ப்புகள் உள்ளன.

வள்ளலார், வேதம், ஆகமம், புராணம் இதிகாசம் முதலிய கலைகள் எதனினும் இலட்சியம் வைக்க வேண்டாம் என்கின்றார். அவை பிண்டத்தின் இலட்சணத்தைத்தான், அண்டத்தில் காட்டுகின்றன. மனிதர்களைப் போலவே கடவுளையும் படைத்துள்ளன. என்கின்றார். தெய்வங்களுக்கு மனிதர்களைப் போல கைகள், கால்கள் வைத்து உருவாக்கினார்கள். அதைச் சுற்றியே கதைகளை உருவாக்கிவிட்டனர். சாத்திர-சடங்குகளையும் உருவாக்கிவிட்டனர் என்று தன்னுடைய கடுமையான விமரிசனத்தை முன்வைக்கின்றார். இப்படி சொல்லுவதால் அவரை சாருவாகராக அடையாளம் கண்டுவிட முடியாது. இவர் கருத்தியலை பொருள் முதல்வாதமாக மாற்றிவிடவும் இயலாது.

வள்ளலார் வெளிப்படையாக ஆன்மா பற்றி பேசினார். அதைத் தான் ஒரு ஜீவ ஒளியாகக் காணுவதாக தன் நேரடி அனுபவத்தைக் கொண்டு கூறினார். மேலும் சமயவாதிகள், வேதாந்திகள், சித்தாந்திகள் என அனைவரும் உண்மையறியாது உளறுகின்றனர் என்கின்றார். வள்ளலார் கூற்று உண்மை என்றால், பல நூறு ஆண்டுகளாக வேதாந்த, சித்தாந்த மற்றும் சமய வழிகாட்டுதல்களை பின்பற்றி வாழ்ந்தவர்கள், முரண்பட்டு சண்டையிட்டவர்கள், இட்டுக் கொண்டிருப்பவர்கள் என எல்லோரும் வாழ்ந்த வாழ்வு, வாழும் வாழ்வு அர்த்தமற்று, அபத்தமானதாகிவிடும். இது மெய்யியல் வரலற்றில் நிகழும் அவலமும், சோகமும் ஆகும்.

விண்ணப்பங்கள் எனும் தலைப்பிலே எழுதும்போது, அருட்பெருஞ்சோதியைக் கடவுளாகப் பாவித்து, சன்மார்க்கத்தின் தடைகளாக இருக்கும் சமயங்கள், சடங்குகள், மார்க்கங்கள், வர்ணாசிரம கோட்பாடுகள், போன்றவை மனதில் பற்றா வண்ணம் அருள் புரிய வேண்டும் என்கின்றார். இவையனைத்தும் மனிதர்கள் இறைவனின் அருளைப் பெறுவதற்கு உதவுபவன அல்ல என்பது இவரின் விளக்கம், ஜாதிகள், ஆச்சாரங்கள் போன்றவற்றை இவர் சாடுகின்றார்.

**சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே**
**சாத்திரச் சந்தடிகளிலே கோத்திர சண்டையிலே....**
**ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்**
**அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகல்லவே!**
**நால்வருணம்,ஆச்சிரம ஆசாரம் – முதலாம்**
**நவின்ற கலை சரிதம் எல்லாம் பிள்ளை**
**விளையாட்டே1**

என்ற பாடலில் அனைத்துச் சமய நெறிகளையும் புறக்கணிக்கின்றார் வள்ளலார். அவர் ஒரு கட்டம் வரை சைவ சமயத்திலே ஈடுபாடு காட்டியது உண்மை. அதற்குச் சாட்சியாக அவர் எழுதிய திருவருட்பாக்களே இருக்கின்றன என்று அவரே கூறியிருக்கின்றார். தனக்கு ஏன் அவ்வாறு சைவ சமய ஈடுபாடு அந்தச் சமயத்தில் இருந்ததற்குக் காரணம் தனக்கு அச்சமயத்தில் சொற்ப அறிவே இருந்ததாகவும் கூறுகின்றார். இவருக்கு மேலும் தெளிவு கிட்டியதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தால், அவரின் இடைவிடாத ஆன்மிகத் தேடல்தான் என்பது தெரியும். இந்தத் தேடல் பொய்யை நிராகரிக்கும் அறிவுத் தாகம் கொண்ட தேடலாகத்தான் இருக்க முடியும். இதுதான் அவரின் அறிவுக் கோட்பாட்டின் அஸ்திவாரம். இறையருள் இவரை அவ்வபோது தொட்டுச் சென்றதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகின்றார். பின்னர் ஒரு கட்டத்தில்தான் அது முழுமையாக இவருக்குக் கிட்டியதையும் தெரிவிக்கின்றார். இந்த வெளிபாட்டை மெய்யியல் கோட்பாடாகக் கொள்ள முடியுமா என்ற கேள்வி இங்கே எழுப்பப்படலாம். அதற்குப் பதில் ஆம் என்பதே!

மெய்யியல் என்றால் அதற்கு அறிவுக் கோட்பாடு(*epistemology*), அறக்கோட்பாடு (*ethics*), மற்றும் பெளதிகம் கடந்த அறிவு நிலை எனப்படும் புலன் கடந்த அறிவியல் (*meta-physics*) போன்ற மூன்றும் அடிப்படையாகும். இந்த வகை அளவுகோல்களை வள்ளலாரின் பங்களிப்பிற்குப் பயன்படுத்த முடியுமா என்பதே கேள்வி. வள்ளலார் தன் பாடல்களின் மூலம் ஆங்காங்கே இவற்றுக்குரிய கருத்துகளைப் பதிவிட்டுள்ளார். அவற்றை உருவி எடுத்து கோர்வையாக வகைப்படுத்தினால் நல்லதொரு கட்டுமானம் உள்ள கோட்பாடு உருவாகும்.

### வள்ளாரின் அறிவுக் கோட்பாடு

வள்ளலாரின் அறிவுக் கோட்பாடு என்பது சங்கரரின், 'நேத்தி-நேத்தி வாதம்' போன்றது. இது உண்மையல்ல! இது உண்மையல்ல!! என ஒவ்வொன்றாக சங்கரர் அறிவுக் கூறுகளை நிராகரிப்பார். அதைப் போன்றே வள்ளலாரும் மதம், சமயம்,சாதி, உருவ வழிபாடு எல்லாவற்றையும் நிராகரிக்கின்றார். சங்கரர் அறிவுத்தளத்தில் நிராகரிக்கின்றார். வள்ளலார் சமூகத்தளத்திலும் நிராகரிக்கின்றார். வள்ளலார் நிராகரிப்பின் இறுதிநிலைதான் பூர்ண அறிவு என்ற பேரறிவு பெறும் நிலையாகத் தெரிகின்றது. பூர்ண அறிவிற்கான பாதை, முதலில் கற்றவை மற்றும் பெற்றவையிலிருந்து விடுதலை அடைவது என்பதே. இது மரபு சார்ந்த பல முன் வைப்புக்களை நிராகரிப்பது என்பது ஆகும். எவை சுத்த அறிவிற்குரியவை அல்ல என்பதை ஆய்ந்தறிந்துதான் நிராகரிக்கச் சொல்லுகின்றார். எனவே சுத்த அறிவைப் பெறுவதற்கான பிரமாணமாக இந்த நிராகரிப்பு அல்லது மறுப்பைக் கொள்ளலாம். இது ஒரு வகை விமர்சனப் பாதையே! மெய்யியல் சார்பு அறிவுக் கோட்பாடு என்பதைத் தாண்டி அவர் அறிவியல் சார்ந்த விளக்கங்களையும் கொடுத்துள்ளார். இவரின் விளக்கங்கள் எந்த அறிவு முறைமை மீது கட்டமைக்கப்பட்டது என்பது மெய்யியல் சார்ந்த முக்கியமான வினாவாகும்.

தமிழ் மெய்யியல் பரப்பில் காண்டல் எனும் மெய்பொருள் காணும் பிரமாணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதை அகக் காண்டல், புறக் காண்டல் என நாம் பிரித்தும் பார்க்கலாம். இராமலிங்கரின் ஆன்மிக அனுபவங்கள் இந்த வகை அகக் காண்டலை சாத்தியப்படுத்தியிருக்கின்றது. அவர் உள்ளொளிப் பயணத்தின் விளைவாக அவர் கண்டெடுத்த அறிவியல் உண்மைகள் பாடல்களில் தரப்பட்டுள்ளன. அவை இக்கால அறிவியல் விளக்கங்களுடன் ஒத்துப் போகின்றன என்பதையும் காணலாம். அறிவியலில் ஒரு முறைமை பொதுவானதாக இருப்பதும், திரும்பச் செய்து பார்க்கக்கூடிய வகையில் இருப்பதும் அவசியம். ஆனால் ஒருவர் வேறு ஒரு அறிவு முறையின் மூலம் இயற்கையின் உண்மைகளை அறிந்து சரியாகச் சொன்னால் அதை எப்படி நிராகரிப்பது என்பதே இங்குள்ள கேள்வி. மேலும் வள்ளலார் தான் உண்மையைக் கண்ட முறை என்பது தனக்கு மட்டுமானது அல்ல, அது அனைவருக்குமானது. முயற்சித்தால் கிட்டும் என சொல்லுகின்றார். இது ஒரு பக்கம் ஒரு புலன் கடந்த அறிவியலாகவும், மறு பக்கம் அறிவுக் கோட்பாடகவும் தெரிகின்றது.

### புலன் கடந்த அறிவியலும் மானுடர் விடுதலையும்

வள்ளலாரின் புலன் கடந்த அறிவியல் (*meta-physics*) என்பது கிட்டத்தட்ட அத்வைதக் கோட்பாட்டின் சாயலிலே உள்ளது. மேற்கத்திய அறிஞர் ஹெகலின் எல்லா உயிர்களும் பிரபஞ்சப் பேரான்மா (*Universal Spirit*) எனும் ஒரே பேராற்றலின் விளைவுதான் என்ற நிலைப்பாட்டையும் ஒத்துள்ளது. சங்கரர் பிரம்மத்தின் ஒரு பகுதியாக தனி மனிதரையும் விளக்குவது அவரின் சொந்த ஆன்மிக அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமல்ல. வேத சாரமான பிரம்ம சூத்திரத்தின் அடிப்படையிலும்தான். பிரம்ம சூத்திரத்தை அவர் ஆதாரமாக வைத்து விளக்கும்போது, அங்கீகாரச் சிரமமின்றி இந்திய மெய்யியல் தளத்தில் அது ஏற்கப்படுகின்றது. சைவ சித்தாந்த மரபின் விளக்கங்களும் வள்ளலாருக்கு நெருக்கமாகவே உள்ளது. ஆனால் வள்ளலார் இவற்றிலிருந்து வேறு படுவதையும் கவனிக்க வேண்டியுள்ளது.

வள்ளலாரின் ஆன்ம நேய விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் ஒரே அருட்பெரும் ஜோதியின் பல கிரணங்களாகவே அனைத்து உயிர்களும் உள்ளன என்பதையே அடிப்படையாகக் கொண்டு, அடிப்படையில் ஒற்றைப் பேருண்மைதான் உள்ளது என்பதை விவரிக்கின்றது. ஆனால் அது இதுகாறும் மரபினால் போற்றப்பட்டு வந்த ஆதாரங்களை நிராகரித்துவிட்டு தனித்தன்மையோடு நிற்கின்றது. அது மரபு சார் வேதாந்தத்தை அல்லது சித்தாந்தத்தை மறுப்பது என்பதற்கான நோக்கம் அவை மனிதருக்குள் ஏற்றத்தாழ்வுகளை மெய்யியல் கோட்பாட்டில் முன் மொழியாவிட்டாலும், சமூகத்தளத்தில் முன்னிறுத்துவதுதான். மேலும் அவை பல மூட நம்பிக்கைகளையும், சடங்குளையும் ஆதரிப்பதும் ஒரு காரணமாகும். ஆனால் அடிப்படை விளக்கத்தில் ஓரளவு ஒட்டிச் செல்லும் வள்ளலார் ஒரு கட்டத்தில் பெரும் பாய்ச்சலை மேற்கொள்ளுகின்றார். உருவமற்ற பிரம்மத்தை அல்லது பிரபஞ்ச ஆற்றலை பெரும் ஜோதியாகக் காணுகின்றார். அவர் கண்ட பெரும் ஜோதியை பேருண்மையாக முன் வைக்கின்றார். ஜோதி எனும்போது அதை பொருட்சக்தியாக மட்டும் விளக்கவில்லை. அந்த ஒளி ரூபத்தில் மகா கருணை இயைந்துள்ளதை அனுபவிக்கின்றார்.. எனவேதான் ஜோதி அருட்பெரும் ஜோதியானது. ஒரு பொருள் சார் ஆற்றல் இங்கே உளம் சார் பேரன்புடன் இணைகின்றது. இதுதான் வள்ளலார் கோட்பாட்டின் புலன் கடந்த அறிவியல் எனப்படும் அனுபூதிக் கொள்கை. இதுதான் மையமும் கூட. இது எரிக்கின்ற நெருப்பு அல்ல. எங்கும் வியாபித்து இயங்கும் ஆன்ம ஜோதியாகும். இதன் முழுமையைக் கண்டதாகவும், உணர்ந்ததாகவும் வள்ளலார் சொல்லுகின்றார். அதன் தன்மை வெப்பம் அல்ல. கருணை. இங்கு பொருளையும், அருளையும் இணைக்கின்றார். இது ஒரு கருதுகோள்தான் (*hypothesis*) என்று வாதிட்டாலும் கூட, இதன் மூலம் ஒரு மெய்யியல் கோட்பாட்டிற்கான வலுவான தன்மையை இது பெறுகின்றது. மரபு ரீதியாக முன்வைக்கப்படும் கர்ம வினைக் கோட்பாட்டையும் அறியாமை என்ற பொருளிலேதான் வள்ளலார் விளக்குவதும் ஒரு முக்கிய அம்சமாகும்.

மெய்யியல் மரபில், ஒரு கோட்பாட்டை நிறுவ, பிற கோட்பாடுகளை மறுக்க வேண்டும். வள்ளலாரும் அதைச் செய்கின்றார். வள்ளலாரின் மெய்யியல் கோட்பாட்டில் பிற கோட்பாடுகளை மறுப்பது என்பது சங்கரரைப் போல தருக்க ரீதியான அடிப்படையில் அல்ல. மாறாக சமூக நீதியின் அடிப்படையிலே என்பதே முக்கியமானது. இந்திய மெய்யியலின் அறிவுக் கோட்பாடு பெரும்பாலும் எது சரியான அறிவு? என்ற ஒரு கேள்வியின் மூலம் உண்மையை விளக்க முற்படும். இந்திய மெய்யியல் மரபில் நியாயம், வைசேடிகம், சாங்கியம், மீமாம்சம், வேதாந்தம், சைவ சித்தாந்தம் போன்ற பள்ளிகளெல்லாம் அசைக்கமுடியாத தருக்கம் சார்ந்த கட்டுமானங்களினால்தான் நிலைபெற்றுள்ளன. மற்றொரு பக்கம் சித்தர்கள் இவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டு, நேரடியாக ஞானக்களம் புகுந்துவிட்டனர். ஆனால் இவற்றையெல்லாம் கடந்த ஒரு நிலைக்கு மெய்யியலை நகர்த்துகின்றார் வள்ளலார். இறை பேராற்றலை உணர்ந்த ஞானிகளில் மௌனிகளாக அருளாசி மட்டும் வழங்கி ஆஸ்ரம வாழ்க்கையை மேற்கொண்டு போனவர்கள்தான் அதிகம், ஆனால் வள்ளலார் தன்னுடைய இறை ஞானம் என்பது தனக்குரியது மட்டுமல்ல, அது அனைவருக்கும் பொதுவானது. அனைவருக்கும் கிடைக்கக் கூடியது என்று கருதினார். அதன் விளைவாகத் தான் கண்டுவிட்ட விடுதலைப் பாதையை தெறிப்புகளாகத் தூவாமல், முறைப் படுத்தி வழங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் செயல்பட்டிருக்கின்றார். இவருடைய ஞான வழிக்கான பாதை அன்புப் பாதை! பெரும் கருணை எனும் பாதை! வாடிய பயிரைக் காணும் போதெல்லாம் வாடும் பாதை! அது பாதை என்று சுருக்குவதை விட அதை மானுட இருப்புத் தன்மையாக இருக்க வள்ளலார் வலியுறுத்துகின்றார். அருட்பெரும் ஜோதியை அறியத் தேவை அறிவு அல்ல. அன்பே! என்று கூறுவதாகவும் புரிந்து கொள்ளலாம்.

இந்தப் பாதையின் எல்லை என்பது உடலையே கரைத்துவிடும் நிலையற்ற நிலை என்கின்றார். மனித உடல் ஒளி உடலாக மாறும் என்றார். இந்த உடல் ஒளி உடலாக மாறும் விளக்கங்களை வஜ்ராயான பௌத்த ஸ்தாபகர் பத்மசம்பவா கொடுத்திருக்கின்றார். இதை வானவில் உடல் என்று அழைக்கின்றனர். இதற்கான சாட்சியங்களையும் வஜ்ராயன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தர்கள் தருகின்றனர். இது ஒரு வேளை அறிவியலின் அறியப்படாத பக்கமோ என்று கூட சந்தேகப் பட வேண்டியுள்ளது. வள்ளலார் ஒளி உடல் பற்றி பேசினாலும், அவருக்கு அது முக்கியமானதல்ல. ஞானப் பாதைதான் முக்கியமானது. இது தனிநபர் மேற்கொள்ளும் தியானம், யோகம் போன்ற முறைகளைவிட, சாதி-மத பேதம், பசி அற்ற சமூகத்தை உருவாக்கும் ஜீவ காருண்ய செயல்பாடுகளே ஆகும். அவர் காலத்தில் உணவுப் பஞ்சம் இருந்த போது வெறுமனே வருத்தப்பட்டு மட்டும் இருக்காமல், அணையா அடுப்பு கொண்டு இல்லாதவர்களுக்கு உணவிட்டார். அறத்தையும், ஆன்மிகத்தையும் வலுவாக இணைக்கும் சங்கிலியாக அவர் சமூக நீதியையும் அதற்கான செயல் பாட்டையும் முன்வைக்கின்றார். வள்ளலாரின் மெய்யியல் என்பது உச்ச நிலை அறமே கடவுள் என்பதாகும். அது உயர் நிலை அன்பு வடிவம். அதுவாக மனிதர் மாறுவது இயலும். அது விருப்பு வெறுப்பற்ற அன்பு செலுத்தும் நிலை. சக உயிர்களை சமமாக பாவித்து, கொல்லமை, ஊண் உண்ணாமையையைக் கடை பிடிக்கும் நிலை. சுத்தமான அகிம்சை. அதுவே சுத்த சன்மார்க்கம். மற்றபடி உடல் மாற்றம். ஒளியுடல், சாவாநிலை போன்றவையெல்லாம் இரண்டாம் பட்சம்தான். அருட் பெரும் ஜோதியைக் கண்டதால் ஒருவர் அன்பு கொண்ட ஜோதியாக மாறுவதில்லை. அன்பின் வடிவாக நம்மை நாம் செழுமை படுத்திக் கொண்டால்தான் அதன் எல்லையாக அருட்பெரும்ஜோதி தரிசனம் அமையும். இது ஏதோ ஒரு தனியான உயர்நிலை அல்ல. அருள் இல்லார்க்கு அருட்ஜோதி தெரியாது. இங்கு இவர் சங்கராரிடமிருந்து வேறுபடுகின்றார். உலகத்தினை மாயையாகக் கழட்டிவிட்டு உயர்நிலையை எட்டிப்பிடிப்பதில்லை ஞானம் என்பது. மாறாக அண்டம் முழுவதும் வியாபிக்கும், சக ஜீவிகளின் துன்பங்களைத் தீர்க்க உதவும் ஒரு ஆன்மிக நிலை. அகம் பிரமாஸ்மி என்று பிரம்மனுடன் கலந்து அடையாளமிழந்து ஓய்வு எடுக்கும் நிலை அல்ல. மனிதரின் உடல் ஜடத் தன்மையில் மாறுதல் கொண்டாலும், கருணை எனும் பண்பு மாறாமல் சக ஜீவ ராசிகளிடம் அன்பு செலுத்தி, அவை உய்விக்க வழி காட்டும் ஒரு நிலைதான் இவருக்கு முக்தியாகும்.

வள்ளலார் அருட்பெரும்ஜோதியில் கலந்த பிறகும் மானுடம் பற்றி அக்கறை கொள்ளும் நிலை பற்றி கூறுகின்றார். இந்த ஆன்மிக அனுபவங்கள் நிகழ்ந்த மற்றும் நிகழ்ந்து கொண்டிருக்கும் சிலரிடம் பேசும் போது நமக்கு என்ன தெரிகின்றது என்றால், இராமலிங்கருக்கு கிட்டியது போல இவர்களுக்குப் பிரபஞ்ச அமைப்பு, இயக்கம், அல்லது ஒளியுடல் மாற்றம், அதற்கான வழிமுறைகள் அல்லது சமூக அவலங்கள் குறித்த அக்கறை மற்றும் புரிதல்கள் போன்ற எவையும் சாத்தியப்பட்டதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு வகை ஒளி வெள்ளத்தில் மிதக்கும் அனுபவத்தையும், விளக்க முடியாத உடல் கடந்த அனுபவங்களையும் பெற்றதாகவே அவர்கள் விளக்குகின்றனர். ஆனால் வள்ளலார் மிகத் தெளிவாக உயிரின் தன்மை குறித்தும்,இறப்பு குறித்தும் விளக்கும் அதே வேளையில், பிரபஞ்ச அமைப்பு பற்றியும், இயக்கம் பற்றியும் விளக்குகின்றார். பிரபஞ்ச இயக்கத்திற்கும், மானுட வாழ்விற்கான உறவு பற்றியும் தெளிவு படுத்துகின்றார். மரணமில்லாப் பெருவாழ்வின் சாத்தியப்பாட்டையும் விளக்குகின்றார். மானுட விடுதலைக்கான கருணை கொண்ட செயல்பாடுகளை ஒளி அனுபவத்திற்கான பாதையாகச் சுட்டுகின்றார். தனக்குக் கிட்டிய ஞான அனுபவத்துடன் அவர் பகுத்தறிவையும் இணைத்து சிந்தித்ததால்தான் அவருக்கு இது சாத்தியப்பட்டிருக்கும்.

வள்ளலாரின் ஆன்மிக விளக்கங்களைத் தவிர்த்துவிட்டு சமூகம் சார்ந்த பரிந்துரைகளை மட்டும் எடுத்துப் பேசுவதும். அவருடைய புலன்கடந்த அனுபவ நிலை பற்றி விளக்கி ஒளியுடல் அடைவது பற்றி மட்டுமே பேசுவதும் வள்ளலாருக்கு நியாயம் செய்வதாகாது. இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது. அவர் மெய்யியலை கருத்தியலாக மட்டுமின்றி செயலாக செயல்படுத்தியதாலும்தான் இந்திய மெய்யியல் பரப்பில் வள்ளலார் மிகவும் தனித்தன்மை வாய்ந்தவர் என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

கட்டுரையாளர்: பேராசிரியர்

கட்டுரை | ஜெயதேவன்

# தோழமை என்றொரு சொல்



**19** ஆம் நூற்றாண்டில் 'தோழர்' என்னும் வார்த்தை ஒரு அரசியல் சொல்லாடலாக உருப்பெற்றாலும் அதற்குமுன்பே நமது பழந்தமிழ் இலக்கியத்திலும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. பாரி இறந்த பின்னர், கபிலர் பாரியின் பெண்களை தன்னுடைய பெண்களாக ஏற்று, அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க எண்ணி குறுநில மன்னனான இருங்கோவேளை அணுகுகின்றார். அவனிடம் தான் யார் என்பதும் இவர்கள் யார் என்பதையும் சொல்லும் இடத்தில் முதன்முதலாக "தோழன் "என்று சொல் இடம் பெறுகிறது. அநேகம் இலக்கிய வரலாற்றுப் புலத்தில் தோழன் என்ற சொல் முதல் முதல் பயன்படுத்திய இடம் சங்க இலக்கியமாகத்தான் இருக்கும்.

**வேண்மார்களிடம்**
**"இவர் யார் என்குவை ஆயின், இவரே**
**ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்**
**முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசை**
**படுமணி யானைப் பறம்பின் கோமான்**
**நெடுமாப் பாரி மகளிர், யானே....**
**தந்தை தோழன், இவர் என் மகளிர்,**

"இவர்கள் யார் என்று என்னிடம் நீ கேட்பாய் ஆயின், இவர்களே தன்னுடைய ஊர்கள் எல்லாவற்றையும் இரவலர்க்குக் கொடுத்து, தன்னுடைய தேரை முல்லைக் கொடிக்குக் கொடுத்த, தொலையாத நல்ல புகழையுடைய ஒலிக்கும் மணிகளையுடைய யானைகளையுடைய பறம்பு மலையின் மன்னனான மிகப் பெரிய பாரியின் மகளிர். நான் இவர்களுடைய தந்தையின் நண்பன், இவர்கள் என்னுடைய மகளிர், நான் ஓர் அந்தணன், புலவனான நான் இவர்களைக் கொண்டு வந்துள்ளேன்".

முதன் முதலில் இந்த சங்க இலக்கியத்தில் தான் தோழன் என்ற சொல் உருவானது. அடுத்து தோழன் என்ற சொல்லை பயன்படுத்தியது பெரும்காப்பியம் கம்பராமாயணம். கம்பராமாயணத்தில் வரக்கூடிய ஒரு காட்சியில் இராமன் சொல்வதாக வரும் பாடலில் தோழன் என்ற சொல் கச்சிதமாக பயன்படுத்தி உள்ளார் கம்பர். பாடல் இடம் பெற்ற காண்டம் சுந்தர காண்டம். படலம் காட்சி படலம். தவக்கோலம் பூண்டிருந்த சீதை, ராமனைப் பற்றி நினைக்கின்ற பொழுது இராமனுக்கும் குகனுக்கும் உள்ள நட்பை சுட்டிக்காட்டும் இடத்தில் "தோழர்" என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறார் கம்பர். தனிமையில் இருக்கும் சீதை ராமனின் ஒவ்வொரு செயலையும் நினைத்து நினைத்து நெஞ்சுருகும் போது குகனுக்கும் ராமனுக்கும் உள்ள நட்பை சுட்டிக் காட்டும் விதமாக தோழன் என்ற சொல்லைப் பயன்படுத்தி உள்ளார்.

"எப்போதும் ஒரே மாதிரியாயிருப்பது போல, ஒத்தநிலையில் ஒரேமாதிரியாய் இருந்த அமைதியான-சாந்தமான இராமனது நிலையை எண்ணிப் பார்த்தாள். சிவனது வில்லை இராமன் முறித்த ஆற்றலை எண்ணி வியந்தாள். தந்தைக்கு இறுதிக் கடன் செய்தது-

பரதன் தவக்கோலம் கொண்டது ஆகியவற்றை நினைத்தாள். இராமன், வேடன் குகனிடம், என் தம்பி நின் தம்பி; நீ என் தோழன்; இவள் (சீதை) உன் கொழுந்தி என்றெல்லாம் கூறிய அன்புரை அவள் உள்ளத்தை வாட்டியது.

**"ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய**
**ஏழை வேடனுக்கு, எம்பி நின்தம்பி, நீ**
**தோழன், மங்கை கொழுந்தி எனச் சொன்ன**
**வாழி நண்பினை உன்னி மயங்குவாள்."**

உலகளவில் பிரெஞ்சுப் புரட்சியின் விளைபொருள் இந்த வார்த்தை. பிரெஞ்சுப் புரட்சியை நடத்தியவர்கள் தங்களுக்குள் 'சிட்டுவாயோன்' என்று அழைத்துக்கொண்டனர். 'சிட்டுவாயோன்' என்றால் 'குடிமகன்' என்று பொருள். பின்னாளில் ரஷ்யப் புரட்சி வீரர்கள் 'காம்ரேட்' என்று அழைக்கத்தொடங்கினர். இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இருப்பவர்கள் 'காம்ரேட்' என்று தங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துக்கொண்டாலும் அதற்கு இணையான அழகான, தனித்துவமிக்கத் தமிழ்ச்சொல்லாக உருவானது 'தோழர்'. 'தோழர்' என்ற வார்த்தையைத் தமிழில் முதன்முதலில் பயன்படுத்தியவர் திரு. வி.க. என்கிறது ஒரு வரலாற்றுக் குறிப்பு.

சோவியத் யூனியன் செல்வதற்கு முன்பே பெரியாருக்குப் பொதுவுடைமைக் கொள்கைகளில் ஆர்வம் இருந்தாலும் 1931ல் ரஷ்யா சென்றுவந்தபிறகு கம்யூனிசத்தைப் பரப்புவதில் தீவிரம் காட்டினார்.

"இயக்கத் தோழர்களும் இயக்க அபிமான தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்ளுவதிலும், பெயருக்கு முன்னால் பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும் ஒரே மாதிரியாக "தோழர்" என்கின்ற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகா, ஸ்ரீ, கனம், திருவாளர், திரு, தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீஜத் என்பது போன்ற வார்த்தைகள் சேர்த்து பேசவோ எழுதவோ கூடாது என்று வணக்கமாய் வேண்டிக் கொள்ளுகிறேன்." (இது 13.11.1932ல் பெரியார் குடியரசில் எழுதியது.)

காந்தியை எல்லோரும் 'மகாத்மா' என்றழைக்கப்பட்டபோது 'தோழர் காந்தியார்' என்றெழுதினார் பெரியார். 'பெரியார் என்று என்னை அழைக்கவேண்டாம்; தோழர் என்றே அழையுங்கள்' என்று அவர் சொன்னாலும் 'பெரியார்' என்ற பெயரே நிரந்தரம் ஆனது. அண்ணா, திராவிடர் கழகத்தில் இருந்த காலம் முழுவதும், தி.மு.க. தொடங்கிய ஆரம்பகாலங்களிலும் 'தோழர்' என்று தன் உரைகளில் குறிப்பிட்டுப் பேசியிருப்பதைப் பழைய 'குடியரசு', 'திராவிட நாடு' இதழ்களில் படித்தால் தெரிந்துகொள்ளலாம்.

இப்படித் திராவிட இயக்கங்கள் 'தோழரை'க் கைவிட்டாலும் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் 'தோழரை'க் கைவிடவில்லை. எந்த கம்யூனிஸ்ட் இயக்கங்களாக இருந்தாலும் அவர் வட்டச் செயலாளராக இருந்தாலும், தேசியளவிலானத் தலைவராக இருந்தாலும், பொலிட்பீரோ உறுப்பினராக இருந்தாலும், தொழிற்சங்கத்தின் சாதாரண உறுப்பினராக இருந்தாலும் அவர் 'தோழர்'தான்.

தலைமை வழிபாடு என்பதற்குச் சம்மட்டி அடிக்கும் சொல் 'தோழர்'. என்னை(கட்டுரையாளரை) நோக்கி நண்பர் இரா எட்வின் போன்ற இடதுசாரி நண்பர்கள் "தோழர்" என்று அழைப்பார்கள் ஆனால் நான் அவர்களை நோக்கி ஒரு பொழுதும் தோழர் என்று அழைத்தது இல்லை.நண்பர் என்று அழைப்பதே வழக்கம்.. தோழர் என்று அழைக்கப்படுவதற்கு நிறையத் தகுதி வேண்டும் என்று கருதுபவன் நான். எனவே தோழரென்று அழைக்கவும் அழைக்கப்படவும் கூச்சப்படுகிறேன்

ஈழ இயக்கங்கள் இடையே மார்க்சியக் கொள்கைகளை கொண்டிருந்த இயக்கங்களும் அவ்வாறே தமது சக உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் தோழர் என்று அழைத்துக்கொண்டனர். குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் ஈரோஸ் போன்ற இயக்க உறுப்பினர்கள் அவ்வாறு அழைத்துக்கொண்டனர்.

சரி இன்னொன்றை பார்ப்போம். சங்ககாலத்தில் இலக்கிய வழக்கில் தோழன் என்ற சொல் இருந்ததா என்றால் இல்லை. சங்க காலத்தில் தோழி என்ற பாத்திரம் தலைவி என்ற பாத்திரத்திற்கு இணையான பாத்திரமாக விளங்குகிறது. அதேநேரம் தலைவன் என் தோழனுக்கு தோழன் என்று அடைமொழியை சங்க காலம் வழங்கவில்லை..அதற்கு பதிலாக "பாங்கன்", என்ற சொல்லால் தலைவனின் நண்பன் குறிக்கப்படுகிறான். பாங்கர் என்பது பன்மை. பாங்கன் என்பவன் தலைவனின் பாங்கறிந்து ஒழுகுபவன். எப்போதும் தலைவனுடன் இருப்பவன். தலைவனுக்கு உறுதுணையாக இருத்தல் மட்டுமல்லாது தலைவனோடு மாறுபட்டு இடித்துரைக்கும் உரிமையும் உள்ளவன் என்று புலவர்கள் பகர்கின்றனர். ஆக, காதலி மனைவி போன்ற உறவுகளுக்கு இணையானது தோழர் என்ற உறவும் என்பதை புரிந்து கொள்ளலாம்.

இடதுசாரிகள் தோழர் என்று சொல்லும் அதே நேரம் திராவிட இயக்கங்கள் உடன்பிறப்புக்கள் என்ற பதத்தைப் பயன்படுத்துகின்றன.

"என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே" என்று கலைஞர் சொல்லும் போது கைதட்டல் வானைப் பிளக்கும் எம்ஜி.ஆர்" ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே" என்று சொன்ன போதும் அவ்வாறே நிகழ்ந்தது. ஆக,, தோழன் என்ற சொல் அரசியல் களத்தில் மட்டுமல்ல இலக்கிய புலத்திலும் நெருங்கிய நட்பின் உணர்வை காட்டக்கூடிய ஒன்றாக விளங்குவது அறிய முடிகிறது.

●

*கட்டுரையாளர்: காலஞ்சென்ற எழுத்தாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஜிகாவும் மோடியும்

நரேந்திர மோடியின் பல வெளிநாட்டுப் பயணங்கள் பிரம்மாண்ட விளம்பர வெளிச்சங்களாய் ஜொலிக்கின்றன. அவை பல்வேறுதரப்பினரால் பல்வேறு விதமாய் அறியப்படுகின்றன. அவருடைய ரசிகர் கூட்டத்துக்கும் ஆதரவாளர்களுக்கும் அவை புதிய இந்தியாவின் ஒரு பொலிவுறும் எழுச்சியாய்த் தெரிகிற போது, அவருடைய விமர்சகர்களுக்கும் அவரை அசட்டை செய்பவர்களுக்கும் இந்தப் பயணங்களெல்லாம் விரயமும் ஆடம்பரமுமாகவும், தேசத்தின் ஒரு தோல்வியுற்ற வெளிநாட்டுக் கொள்கையின் அடையாளமுமாகவே அறியப்படுகின்றன.

பதவியேற்ற நாலரை வருடங்களில் நாட்டின் பிரதமராக நரேந்திர மோடி 83 நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்; ஆனால், இந்தப் பட்டியலில் தென் அமெரிக்காவின் சிறிய நாடான உருகுவே இடம்பெறவில்லை. தன் முதல் வருடப் பயணங்களில் மோடி உருகுவேக்குப் போயிருந்தாரானால், - தென் அமெரிக்காவின் "காந்திய அதிபர்" என்று பலராலும் போற்றப்பட்ட - அதன் முன்னாள் அதிபர் ஜோஸ் 'பெப்' -முஜிகாவைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

காந்திய நெறிகளைக் கடைப்பிடிக்கும் தென் அமெரிக்க அதிபருக்கும், அதை அசட்டை செய்து அலட்சியப்படுத்தும் ஒரு ஸ்தாபனத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட இந்தியப் பிரதமருக்கும் இடையிலான ஒரு சுவாரஸ்யமான நிகழ்வாய் அந்தச் சந்திப்பு நடந்திருக்கும். இன்னும் சரியாகச் சொல்வதென்றால் எதிரும் புதிருமான, இரு வேறு துருவங்களான இரண்டு அரசுத் தலைமைகளின் சந்திப்பாகத்தான் அது அரங்கேறியிருக்கும்.

புதுதில்லியின் 12 ஏக்கர் பரப்பில் புல்வெளிகளுக்கிடையில் மிளிரும் மாளிகையில், விலையுயர்ந்த ஆடைகள் பளபளக்க, தன் அன்றாடத்தை அவ்வப்பொழுது வீடியோக்களில் காட்சிப்படுத்தும் இந்தியப் பிரதமர் எங்கே? முற்றிலுமாய் அதிகாரத்தின் அனைத்து ஆடம்பரங்களையும் அருவருத்து ஒதுக்கித் தள்ளிய 'பெப்' முஜிகா எங்கே? அவர் உருகுவேயின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அதிபர் மாளிகைக்குக் குடியேற மறுத்துவிட்டார்; மாறாக, மான்டிவிடியோவின் புறநகர்ப் பகுதியிலிருக்கும் தன் ஒற்றையறை வீட்டில் மனைவி மற்றும் செல்லப் பிராணியுடன் வசிப்பதையே வற்புறுத்தினார். அதுபோன்றே அதிபருக்குரிய அதிகார வாகன அணிவகுப்புகளையெல்லாம் மறுத்து, தனது முப்பது வருடப் பழமையான சிறிய ஃபோல்க்ஸ்வேகன் பீட்டில் காரிலேயே அதிபர் அலுவலகத்துக்குப் பயணித்தார்.



ஜோஸ் 'பெப்' முஜிகா

நரேந்திர மோடி தன்னை ஒரு சந்நியாசி என்று கூறிக்கொள்கிறார்; ஆனால், ஜோஸ் முஜிகாவோ அப்படி வாழ்ந்துகாட்டுகிறார்.

தன்னுடைய அதிபருக்கான மாதச் சம்பளத்தில் 90 சதவீதத்தை ஏழைகளுக்குக் கொடுக்கிறார். அவருடைய இருப்பின் மொத்த மதிப்பே இந்திய ரூபாயில் வெறும் ஒன்றேகால் லட்சம் மாத்திரமே என்பதால் அவர் உலகின் மிகஏழையான அதிபர் என அழைக்கப்படுகிறார். என்றாலும், முஜிகா தன்னை ஏழையென்று ஏற்றுக்கொள்வதில்லை. "அதிக அதிகமாய் ஆசைப்படுபவர்கள்தாம் ஏழைகள்; ஏனெனில் அவர்கள் ஒரு போதும் திருப்தி அடைவதில்லை. ஒரு படோபடமான வாழ்க்கைக்காகவும் இன்னமும் இன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தன்னுடைய அதிபருக்கான மாதச் சம்பளத்தில் 90 சதவீதத்தை ஏழைகளுக்குக் கொடுக்கிறார். அவருடைய இருப்பின் மொத்த மதிப்பே இந்திய ரூபாயில் வெறும் ஒன்றேகால் லட்சம் மாத்திரமே என்பதால் அவர் உலகின் மிக ஏழையான அதிபர் என அழைக்கப்படுகிறார். என்றாலும், முஜிகா தன்னை ஏழையென்று ஏற்றுக்கொள்வதில்லை. "அதிக அதிகமாய் ஆசைப்படுபவர்கள்தாம் ஏழைகள்; ஏனெனில் அவர்கள் ஒரு போதும் திருப்தி அடைவதில்லை. ஒரு படோபடமான வாழ்க்கைக்காகவும் இன்னமும் இன்னமும் வேண்டுமென்பதற்காகவும் கடினமாய் உழைப்பவர்கள்தாம் ஏழைகள்" என்பதுதான் முஜிகாவின் ஏழ்மைக்கான விளக்கம் மற்றும் இலக்கணம்.**

வேண்டுமென்பதற்காகவும் கடினமாய் உழைப்பவர்கள்தாம் ஏழைகள்" என்பதுதான் முஜிகாவின் ஏழ்மைக்கான விளக்கம் மற்றும் இலக்கணம்.

இப்படிச் சொல்வதனால் அவர் ஏழ்மையைக் கொண்டாடுபவர் அல்ல. "நான் ஏழ்மையை உயர்த்திப்பிடிக்கவில்லை. எளிமையை அனுசரிக்கிறவன்; ஒருவரின் தேவைக்கு அதிகமான உடைமைகள் அவரிடம் இல்லாதிருந்தால் அவற்றைத் தக்கவைத்துக்கொள்வதற்காக வாழ்நாள் முழுதும் அடிமைகளைப் போல உழைத்து மாய வேண்டிய அவசியமில்லாமல் உண்மையான அவருக்கான அவருடைய நேரம் மிச்சமாகும்."

"மொத்த உற்பத்திக் குறியீடு" - ஜிடிபி - மாத்திரமே வளர்ச்சியின் அளவுகோலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற நாள்களில் வாழ்கிறோம்.(இந்த ஜிடிபியை குறிப்பிட்டுத்தான், மன்மோகன் நாள்களைக் காட்டிலும் மோடியின் நாள்களில்தான் அது கூடியிருப்பதாக உறுதி செய்வதற்காகவே சில புதிய உத்திகளையெல்லாம் இந்திய அரசு முயல்வதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.) வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் குறித்த முஜிகாவின் அடையாளங்களே முற்றிலும் மாறுபட்டவை.

"முற்றிலும் நுகர்வு சார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்பியிருப்பதனால் பொருளாதார வளர்ச்சி கட்டாயமாகிறது. சமூகத்தில் பொருளாதார வளர்ச்சி இல்லையென்றல் அது மிகப் பெரிய தோல்வியாகக் கணிக்கப்படுகிறது. பழையவற்றைக் களைந்து, அதீதமான புதிய புதிய மலையளவிலான தேவைகளை உருவாக்கியிருக்கிறோம். அவற்றில் பல, பல சமயங்களில் நம் வாழ்வின் விரயமாக உருவெடுக்கின்றன. புதிதாக ஒன்றை வாங்கும்போது நாம் அதற்குச் செலவிடுவது நம் பணமன்று; அந்தப் பணத்தைச் சம்பாதிக்க நாம் எடுத்துக்கொண்ட நமது கடின உழைப்பின் நேரத்தை, காலத்தைச் செலவிடுகிறோம். நமது நடப்பு நாகரிக யுகத்தில் விழுமியங்கள் என்பவை மிகப் பெரிய நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கின்றன. முதலாளித்துவத்தின் இந்தப் படி நிலை நன்மையை அன்றி, முறைகேடுகளையும் ஊழலையுமே வளர்த்தெடுத்திருக்கிறது. நுகர்வுதான் சந்தோஷமும் மகிழ்வுமென்று குழப்பிக்கொள்ள முடியாது. நம் கனவுகள், நெறிகள் மற்றும் தத்துவங்களிலிருந்து பொருளாதாரத்தைப் பிரித்தெடுப்பது சரியன்று. வளங்களை மக்களிடையே நாம் உருவாக்க வேண்டுமேயல்லாமல் வெறும் பணமாக மாத்திரம் பெருக்கக் கூடாது. எல்லாமும் உற்பத்திப் பொருள்களல்ல; எல்லாவற்றையும் விற்கவும் வாங்கிவிடவும் முடியாது."

முஜிகாவின் மேற்கண்ட அனுமானங்களை, வார்த்தைகளைப் பயனற்ற லட்சிய வெற்றுக் கூச்சல்களாக ஒதுக்கிவிட முடியாது; லத்தீன் அமெரிக்காவில் இன்று உருகுவே அதிகத் தனி நபர் வருமானத்துடன், ஏற்றத்தாழ்வுகள் குறைந்த, அதீத ஏழ்மையற்ற ஒரு சமத்துவ சமூகமாக வளர்ந்திருப்பது நிதர்சனமான உண்மை. "எளிமையும், வலிமையுமான சுதந்திரமான, சுகிப்பை நேசிக்கும் நாடு" என்று எக்கனாமிஸ்ட் இதழ், 2013 இன் நாடாக உருகுவேயைத் தேர்ந்தெடுத்தது.

தன் வாழ்வை ஒரு விவசாயியாகத் தொடங்கிய முஜிகா 'துபமாரோஸ்' எனும் ஒரு அரசியல் புரட்சி இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். அதற்கான விலையாக, பதினாலு ஆண்டுகள் சிறை வாசமிருந்தார். அந்தச் சிறை நாள்கள், அதிலும் பத்தாண்டுகள் புத்தகங்கள் கூட மறுக்கப்பட்ட தனிமைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"முற்றிலும் நுகர்வு சார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்பியிருப்பதனால் பொருளாதார வளர்ச்சி கட்டாயமாகிறது. சமூகத்தில் பொருளாதார வளர்ச்சி இல்லையென்றல் அது மிகப் பெரிய தோல்வியாகக் கணிக்கப்படுகிறது. பழையவற்றைக் களைந்து, அதீதமான புதிய புதிய மலையளவிலான தேவைகளை உருவாக்கியிருக்கிறோம். அவற்றில் பல, பல சமயங்களில் நம் வாழ்வின் விரயமாக உருவெடுக்கின்றன.**

கொட்டடிதான் தன்னுடைய சிந்தனைகளையும், உலக தரிசனத்தையும், வாழ்வு நெறிகளையும் ஒரு தீர்மானகரமாய் மெருகேற்றின என்று அறைகூவுகிறார்.

2015இல் ஹ்யூமன் இதழுக்கு அளித்த நேர்காணலில் "அதிபருக்காய் ஒரு ஜெட் விமானத்துக்குப் பதிலாக விபத்துகளுக்குள்ளானவர்களை மீட்கும், சகல உயிர்காக்கும் உபகரணங்களும் அடங்கிய ஒரு விலையுயர்ந்த மீட்பு இலங்கூர்தியை (Helicopter) ஃப்ரான்ஸிடமிருந்து வாங்குவதென்று தீர்மானித்தோம். அதிபருக்கான ஜெட்டா அல்லது மீட்பு இலங்கூர்தியா? இதில் குழப்பத்துக்கோ, தேர்வுக்கோ, சமரசத்துக்கோ இடமேயில்லை. மிக எளிதான தேர்வு - அது தேவை மற்றும் எளிமையின் அடிப்படையிலானது" எனத் தன்னுடைய சமூக அரசியல் புரிதலின் சாரத்தைப் பறைசாற்றினார்.

"தேவையற்ற, பயனற்ற விஷயங்களில் நம் வளங்களை விரயம் செய்வதை நிறுத்த வேண்டும். பராமரிக்க ஆறேழு ஊழியர்கள் தேவைப்படும் ஆடம்பர பங்களாக்களால் என்ன நன்மை? அவையெல்லாம் தேவையற்றவை. இன்னமும் கூட நாம் எளிமையாக வாழ முடியும். எல்லோருக்கும் முக்கியமானவைக்காக மாத்திரம் நம் வளங்களைச் செலவளிக்க வேண்டும். ஜனநாயகத்தின் அந்த உண்மையான நோக்கத்தை, அர்த்தத்தை அரசியல்வாதிகள் மறந்துவிட்டனர்."

முஜிகாவின் வார்த்தைகள், வாழ்க்கை, கொள்கை, மற்றும் தத்துவங்களின் முன்பு, நம் பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்கள், சுய விளம்பரங்களுக்காக ஒரு பில்லியன் டாலர்கள், பயனற்ற ஆளுயரச் சிலைகளுக்காகச் செலவிட்ட ஆயிரமாயிரம் கோடி ருபாய்கள் எனும் தேச வளமையைச் சூறையாடும் இந்திய அரசின் படோபட ஆடம்பர விரயங்கள் கூனிக் குறுகி அம்பலப்படவில்லையா?

முஜிகாவும் மோடியும் சந்திக்க நேர்ந்திருந்தால் என்ன பேசியிருப்பார்களென்பது ஒரு சுவை மிகுந்த புதிராகவேயிருக்கும். காந்திய விழுமியங்களின் சாரத்தை உள்வாங்கி ஆட்சி நடத்தும் ஒரு அதிபரின் வார்த்தைகள், காந்தியை உதட்டளவில் மாத்திரம் சிலாகிக்கும் ஒருவரிடம் என்ன தாக்கத்தை உருவாக்கியிருக்க இயலும்? இதற்குக் கீழ்க்காணும் காந்தியின் தாரக மந்திர வார்த்தைகளே உரைகல்லாக அமையும்.

"எப்போதெல்லாம் சந்தேகம் எழுகின்றதோ உங்கள் சுயம் உங்களுடன் போராடும் சமயங்களிலோ கீழே சொல்லப்பட்டிருக்கிற பரிசோதனைக்கு உட்படுங்கள். நீங்கள் சந்திக்க நேர்ந்த ஏழ்மையும் நலிவடைந்ததுமான மனிதன், மனுஷியை நினைவுகூர்ந்து நீங்கள் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் அவனுக்கு அல்லது அவளுக்கு ஏதேனும் ஒரு வழியில் பயனளிக்குமா? ஏதாகிலும் பலனடைவார்களா? அவர்களுடைய வாழ்விலும், ஓட்டத்திலும் அவர்களை மீட்டெடுக்கும் கருவியாக உருவெடுக்குமா? வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் பசியிலும், ஆன்மிகப் பட்டினியிலும் உழலும் கோடானு கோடி மக்களுக்கு இது ஸ்வராஜ்யம் அளிக்குமா என்கிற கேள்விகளை எழுப்புங்கள். அப்போது உங்கள் சந்தேகங்களும் சுயமும் கரைந்து ஒழிந்துபோவதை உணர்வீர்கள்."

முஜிகா இந்தச் சத்திய சோதனையில் புடமிட்ட தங்கமாக மிளிர்ந்து வெளிப்படும்போது மோடி காணாமல் கரைந்து போய்விடுவார் என்பது தெளிவாகும்.

*Courtesy : The wire (12.01.2019)*
*Translated Article : **The Gandhian President Modi Never Visited - by Rohik Kumar***

கட்டுரையாளர்: எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபணு மாற்றப்பட்ட நெல்— அரசியலும் அறிவியலும்

மரபணுமாற்றப்பட்ட இரண்டு நெல் ரகங்கள் விரைவில் சந்தைக்கு வர இருப்பதாக கடந்த மே மாதம், 2025 ஒன்றிய வேளாண்மை துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் உருவாக்கியுள்ள இந்த நெல் ரகங்களுக்கு கமலா, பூசா என பெயரிடப்பட்டுள்ளது. இந்த நெல் ரகங்கள், காலநிலை மாற்ற பாதிப்புகளைத் தாக்குப்பிடித்து வளரும் எனவும், 20 முதல் 30 சதவீதம் வரை விளைச்சல் அதிகம் கொடுக்கும் எனவும், நீரின் தேவையைக் குறைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நெல் ரகங்கள் மரபணு மாற்று பொறியியல் (Genetic Engineering) தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதல்ல, மரபணு திருத்தம்(?!) செய்யப்பட்டது (Gene Edited) என்னும் வாதம் இந்தத் தொழில்நுட்பத்தை அதரிப்பவர்களால் முன்வைக்கப்படுகிறது. மேலும், பா.ஜ.க அரசும் மரபணு திருத்தம் தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்படும் விதைகள் உள்ளிட்ட பொருள்களுக்கு மரபணுமாற்று பொறியியலை முறைப்படுத்தும் சட்ட அமைப்பின் அனுமதியில் இருந்து விதிவிலக்கு அளித்துள்ளது. இந்த நிலையில் தான் மரபணுமாற்றப்பட்ட/ திருத்தம் செய்யப்பட்ட நெல்லுக்கு பின்வுள்ள அரசியலையும் அறிவியலையும் விவாதிக்க வேண்டியுள்ளது.

**உலகமயமாக்கலும் மரபணுமாற்றப்பட்ட உயிரினங்களும்**

உலகமயப் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் துவங்கி பின்புதான் இந்தியாவில் மரபணுமாற்றப்பட்ட விதைகளும் அறிமுகமாகின. உலக வர்த்தக நிறுவனத்தின் விதிகள்படி 2001ஆம் ஆண்டு இந்திய தாவர ரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்கள் உரிமைகள் சட்டத்தை (Protection for Plant Varieties and Farmers Rights Act) இயற்றியது. இச்சட்டப்படி தாவரங்கள், மரங்களுக்கு காப்புரிமை வழங்கும் முறை அறிமுகமாகியது.

மேலும், உலக வர்த்தகக் கழகத்தின் வணிகம் தொடர்பான அறிவுசார் சொத்துரிமைக்கான ஒப்பந்தத்தின் மூலம் மரபணுமாற்றப்பட்ட உயிரினங்களுக்கு காப்புரிமை வழங்க இந்தியா தள்ளப்பட்டது. குறிப்பாக இந்த ஒப்பந்தத்தின் 27.3.பி ஷரத்து நுண்ணுயிர்கள், உயிரி சாராத முறை (Non-biological process), நுண்ணுயிரி முறை (Micro-biological process) ஆகியவற்றுக்கு காப்புரிமை வழங்க வலியுறுத்துகிறது. இதற்கு ஏற்ப இந்தியா தனது காப்புரிமைச் சட்டத்தை மாற்றி அமைத்தது. இதன் அடிப்படையில் 2002ம் ஆண்டு இந்திய காப்புரிமைச் சட்டப் பிரிவு 3(j) மாற்றி அமைக்கப்பட்டு மரபணுமாற்றப்பட்ட விதைகள், தாவரங்கள், விலங்குகளுக்கு காப்புரிமை வழங்கும் விதிகள் அறிமுகமாகின. விதைகளுக்கு காப்புரிமை வழங்குவதன் மூலம் பெரு நிறுவனங்கள் விதைகள் மீது ஏகபோக உரிமை பெறுகின்றன. விதை மீதான ஏகபோக உரிமை என்பது விதை உற்பத்தி, மறுஉற்பத்தி, விற்பனை, சந்தை வினியோகம் ஆகியவற்றை உள்ளடக்கியது. சுருக்கமாக கூற வேண்டும் என்றால் காப்புரிமை பெறுவதன் மூலம் சமூக சொத்தாக இருக்கும் விதைகளை தனி சொத்தாக நிறுவனங்கள் உரிமை கொள்ள முடியும். இந்தியாவில் முதல்முறையாக அனுமதிக்கப்பட்ட மரபணுமாற்றப்பட்ட விதையான பி.டி. பருத்திற்கு 2002ஆம் ஆண்டு காப்புரிமை வழங்கப்பட்டது. 2010ஆம் ஆண்டு வரை 809 வகையான மரபணுமாற்றப்பட்ட பி.டி.பருத்தி வகைகளுக்கு இந்தியா காப்புரிமை வழங்கியுள்ளது. இன்று இந்தியாவில் விளையும் பருத்தியில் 90 சதவீதம் மரபணுமாற்றப்பட்ட பருத்தியே (navdanyainternational.org/the-seed-war). உள்நாட்டு பருத்தி விதைகள் முற்றிலும் அழியும் நிலையில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மரபணுமாற்று தொழில்நுட்ப சட்டங்கள்

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1989ஆம் ஆண்டு ஆபாயகரமான நுண்ணுயிர்கள் மற்றும் மரபணுமாற்றப்பட்ட உயிரினங்கள் உற்பத்தி, பயன்பாடு, இறக்குமதி, ஏற்றுமதி, சேமிப்பு சட்டவிதிகள் இயற்றப்பட்டது (*Rules for the Manufacture, Use, Import, Export and Storage of Hazardous Micro Organisms, Genetically Organisms or Cells*). இச்சட்ட விதிகளின் படி மரபணுமாற்றப்பட்ட விதைகள் உள்ளிட்ட எந்த பொருள்களாக இருந்தாலும் பலவேறு வித ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மரபணுமாற்று பொறியியல் மதிப்பீட்டு ஆணையத்தின் (*Genetic Engineering Appraisal Committee*) அனுமதியோடு தான் சந்தைக்கு வரமுடியும். மேலும், மரபணுமாற்றப்பட்ட உணவு பொருள்கள், உணவு பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடு சட்டத்தின் (*Food Safety and Standard Act*) கீழும் அனுமதி பெற வேண்டும். இப்படியான சட்டங்கள் இருந்த போதிலும், மரபணுமாற்று தொழில்நுட்பங்களை முறைப்படுத்த போதிய சட்டங்கள் இல்லை என உணர்ந்த உச்சநீதிமன்றம் மரபணுமாற்றப்பட்ட தாவரங்கள் தொடர்பான ஆய்வுகள், பயிரிடுதல், வணிகம், வியபாரம் போன்றவற்றை முறைப்படுத்த தேசியக் கொள்கை வகுக்க வேண்டும் என ஜூலை, 2024ல் உத்தரவிட்டது. ஒன்றிய அரசு தற்போதைய நிலை வரை இத்தகைய கொள்கையை உருவாக்கவில்லை.

### மரபணுமாற்றப்பட்ட / திருத்தப்பட்ட நெல்

மரபணுக்கள்தான் உயிரினங்களின் அடிப்படை. காரணம் உயிரினங்களின் தன்மை, குணம், செயல்பாடுகள் என அனைத்தையும் தீர்மானிப்பது மரபணுக்களே. 1980களில் மரபணுக்களை மாற்றி அமைத்து புதிய வகை உயிரினங்களை உருவாக்கும் தொழில்நுட்பம் அமெரிக்காவில் உருவானது. இத்தொழில்நுட்பத்தின் மூலம் வணிகத்திற்கு ஏற்ற வகையில் பயிர் வகைகள் உருவாக்கப்பட்டன. இதற்கான காப்புரிமையும் அப்போது வழங்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு கணினியில் உருவாக்கப்பட்ட மரபணு பட்டியலைப் பயன்படுத்தி சுயமாக இனப்பெருக்கம் செய்யத்தக்க 'உயிருள்ள செயற்கை செல்களை' (*Self-Replicating Synthetic Bacterial Cell*) அமெரிக்க ஆய்வு நிறுவனம் உருவாக்கியது. உயிரியல் தொழில்நுட்பத்தில் இந்த 'புரட்சியை' தொடர்ந்து 2020ஆம் ஆண்டு கிரிஸ்பர் (*CRISPR - Clustered Regularly Interspaced Short Palindromic Repeats*) தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்றது. மரபணுக் கத்தரிக்கோல் எனப்படும் அறியப்படும் கிரிஸ்பர் தொழில்நுட்பம் மூலம் மரபணுக்களை வெட்டவும், இணைக்கவும் முடியும். இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நெல் மரபணுக்களை வேண்டிய நிலையில் வெட்டவும், இணைக்கவும் முடியும். மரபணுமாற்று பொறியியல் போல பலவேறு உயிரினங்களின் மரபணுக்களை ஒன்றிணைக்கும் முறை கிரிஸ்பர் தொழில்நுட்பத்தில் செயல்படுத்தப்படுவதில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் மரபணுக்களை வெட்ட அல்லது இனைக்க கேஸ் 9 (*Cas 9*) என்னும் பாக்டீரியாவின் மரபணு கிரிஸ்பர் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படுகிறது.

கிரிஸ்பர் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தான் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் கமலா, பூசா ஆகிய நெல் ரகங்களை உருவாக்கியுள்ளது. கிரிஸ்பர் தொழில்நுட்பம் மூலம் மரபணுத் தொகுப்பில் துல்லியமாகவும், கட்டுப்படுத்தப்பட்ட வகையிலும், எதிர்நோக்கும் மாற்றங்களை கொண்டு வர முடியும் என கூறப்படுகிறது. மேலும், ஏப்ரல் 2022ஆம் ஆண்டு கிரிஸ்பர் போன்ற தொழில்நுட்பங்கள் மூலம் உருவாக்கப்படும் விதைகளுக்கு மரபணுமாற்று பொறியியல் மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி தேவை இல்லை என ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆணை வெளியிட்டுள்ளது. மேலும் 2022ஆம் ஆண்டு இத்தகைய தொழில்நுட்பங்களை முறைப்படுத்த மரபணு திருத்தப்பட்ட தாவரங்கள் பாதுகாப்பு மதிப்பீடு விதிகளை (*Guidelines for Safety Assessment of Genome Edited Plants*) அறிவித்தது.

மரபணுத் திருத்த தொழில்நுட்பம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற மரபணு மாற்றங்கள் இயற்கையில் தானாக ஏற்படும் சடுதி மாற்றங்களைப் (*Mutation*) போன்றதே என்று கூறப்படுகின்றது. ஆனால், இவை வேறுப்பட்டவை. இயற்கையில் நிகழும் மாற்றங்களை போன்றே இவை நிகழும் என்பதற்கு எவ்வித ஆய்வுகளும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மரபணு திருத்த தொழில்நுட்பம் எதிர்பாரத பலவிதமான பாதிப்புகளை உண்டாக்க கூடும். இதனை *"pleiotropic effects"* என்று வரையறை செய்கின்றனர்.

உண்மையில் மரபணு திருத்த தொழில்நுட்பம் என்பது மரபணுமாற்ற பொறியியல் போன்றதே. மரபணுமாற்ற பொறியியல் மூலம் சுற்றுச்சூழலுக்கும், மனிதர்களுக்கும் எத்தகைய பாதிப்புகள் உருவாகக்கூடுமோ, அதே அளவிலான பாதிப்புகள் இந்த தொழில்நுட்பம் மூலமும் உருவாகக்கூடும். ஆனால் மரபணுமாற்றப்பட்ட விதைகள்மீது செய்யப்பட வேண்டிய பல ஆய்வுகள் மரபணு திருத்த விதைகளுக்கு தேவை இல்லை எனக் கூறுகிறது மோடி அரசு. மரபணுமாற்றப்பட்ட உணவுகள் பலவித பாதிப்புகள் உண்டாக்ககூடும் என பல ஆய்வுகள் கூறுகின்றன. இதன் காரணமாகவே இந்தியாவில் மரபணு மாற்றப்பட்ட உணவு அனுமதிக்கப்படாமல் உள்ளது. உச்ச நீதிமன்றமும் மரபணுமாற்றப்பட்ட பொருள்களுக்கு சட்டக்கொள்கைகளை உருவாக்க உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில் தான் மரபணுமாற்றப்பட்ட நெல்லை மரபணு திருத்த நெல் என்னும் பெயரில் சந்தைக்கு அனுமதிக்க மோடி அரசு முயல்கிறது. இப்படி இந்த நெல் அனுமதிக்கப்பட்டால், சந்தைக்கு வரும் முதல் மரபணுமாற்றப்பட்ட உணவாக இது இருக்கும்.

கடந்த காலங்களில் மரபணுமாற்றப்பட்ட விதைகளை சந்தைக்கு கொண்டு வர நிறுவனங்களே முயன்றன. ஆனால் தற்போது மோடி அரசு நேரிடையாக மரபணுமாற்ற விதைகளை சந்தைக்கு கொண்டு வர முயல்கிறது. இதற்காகச் சட்டங்களை மாற்றுகிறது. தொழில்நுட்பம் மூலம் பொதுச் சொத்தாக உள்ள விதைகளை தனியார் சொத்தாக மாற்ற முயல்கிறது. முக்கியமாக உணவு இறையாண்மையை கேள்விக்குள்ளாகிறது.

மரபணுமாற்றப்பட்ட விதைகள் மட்டுமே சந்தையில் இடம்பெறும் நிலையில் உணவு உற்பத்தி என்பது நிறுவனங்களை சார்ந்தே இருக்கும் நிலை உருவாகும். இத்தகைய நிலையை உருவாக்கவே மோடி அரசு முயல்கிறது. •

---

*கட்டுரையாளர்: வழக்கறிஞர்*

கவிதை | ரகுநாத்

# தண்ணீர் பழ பொழுதுகள்

மழலைகளின் ஊதலில்
பொங்கி வழிகின்றன
விடுமுறை பலூன்கள்

செம்பருத்திப் பூவினை
ஏய்த்து ரோஜாவிற்குத்
தாவுகிறது வண்ணத்துப்பூச்சி
காம்பவுண்ட் சுவரில்
மஞ்சள் பூசுகிறது கொன்றை
படிகளில் பம்பரஞ்சுற்றி
விளையாடுகிறது அணில்
உதிர்ந்தாலும்
வண்ணவோவியம்
சுட்டுகிறது சுவர்
இவைகளுக்குப்
பின்னாலான
சிறுமிச் சிரிப்புகளென
கீற்றுகளாகி நிற்கின்றன
தண்ணீர் பழ பொழுதைச்
சிதறும் கோடை!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் சிறுகதை | ஆயிஷா இரா நடராசன்

# லக்ஸம்பர்க் நினைவு மையம்



ரோஸா லக்ஸம்பர்க் என்னும் பெயரை ஐந்து ஆண்டுகளுக்கு முன்புதான், அதாவது 2050 ஆம் ஆண்டுதான் ராகுலன் கேள்விப்பட்டான். இப்படிப்பட்ட ஒருவரோடு தன்னுடைய பாட்டிகளில் ஒருவர், ஒன்றாக வைத்து அறியப்பட்டிருக்கிறார். பூர்வீகம் என்கிற வரலாறு எல்லா மனிதர்களுக்கும் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது. வரலாற்றுச் சிந்தனையோடு பேசுவது குற்றங்களில் ஒன்றாக்கப்பட்டு விட்டது.புதிய உலக அமைப்பின், எதார்த்தத்தின் அடிப்படைகள் அனைவருக்கும் பழகிவிட்டன. ஆனால், அவனால் கடந்து வரமுடியவில்லை.

நாடுதோறும் ஊர்தோறும் இன்று தகவல் சுத்திகரிப்பு அலுவலர் என்கிற பணியிடம் மிகப் பிரபலமானது. ராகுலன் அவர்களில் ஒருவன். இத்தனை ஆழமாக மனிதர்கள் இதுவரையில் கண்காணிக்கப்பட்டது இல்லை. முழுவதும் கருவிகளின் சார்புடைய வாழ்க்கையைப் பிறப்பு முதலே அனுபவிக்கும் மனிதன். உலகப் பொருளாதாரத்தின் ஒற்றைச் சந்தை நுகர்வோர் ஆகி ஏனைய அடையாளங்களைத் துறக்க வேண்டிய நூற்றாண்டுகளைக் கடந்து தன்னுடைய பணி இடத்தின் எந்தக் கருவியை உதவியாளனாக இருந்து இயக்குகிறார் என்கிற இன்னொரு அடையாளம் தவிர வேற ஏதும் அற்றவனாக ஆகி 20 ஆண்டுகள் கடந்துவிட்டன.

சர்வதேச அமைதி ஆக்க நடுநிலை அரசு எத்தகைய சிறு சலசலப்பையும் செயற்கை நுண்ணறிவின் வழியாகக் கண்காணித்து உடனடியாகத் திருத்தம் செய்துவிடுகிறது. இங்கேதான் தகவல் சுத்திகரிப்பு அலுவலர் என்கிற இன்ஃபர்மேஷன் சானிட்டைசர் உத்தியோகம் நிலைபெற்றது. தற்போதைய புதிய சூழலைச் சிதைக்கின்ற எத்தகைய அடையாளமாக இருந்தாலும் அதை விசாரணைக்கு உட்படுத்தி தயவு தாட்சண்யமின்றி அழித்துவிடுகிற பணி இவர்களுடையது.

உலகம் முழுக்க இன்றைக்கு அடுத்த தலைமுறைக்கு நாம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருப்பது செயற்கை நுண்ணறிவு எழுதி உருவாக்கிய அறிவுத் தொடர் என்று அழைக்கப்படும் புதிய பாடங்களைத்தாம். உண்மை என்பது புதிய உண்மைதான். தர்மம் என்பது புதிய தர்மம் தான். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் விதைக்கப்பட்டிருக்கும் கருவிகள் செல்ஃபி ரிப்போர்ட்டிங் முறையில் சிந்தனை ஆக்கத்தை அரசுக்கும் தனிமனிதனுக்கும் இடையே இருந்து சமரசம் செய்து வைக்கும் வேலையைப் பொறுப்போடு செயல்படுத்துகின்றன. உங்களுக்கே தெரியாமல் உங்கள் எண்ணங்கள் மாற்றப்படுவதை இந்த நூற்றாண்டின் அதிசயம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பின் மண்டையில் வைத்துப் பொருத்தினார்கள் பிறகு மனித டி என் ஏவை மாற்றிவிட்டார்கள்.

ஆனால், தன் பூர்வீகம் என்கிற ஒன்றை எதேச்சையாக இடறிக் கொண்ட ராகுலன் இப்போது செய்வதறியாது தவிக்கிறான். அழித்தொழிக்கப்பட்ட காகித நூல்கள் பறிமுதல் ஸ்கேன் செய்து பாகுபாட்டை ஏற்படுத்தும் எத்தகைய தகவல்களையும் தடைசெய்தல் போன்றவற்றைச் செய்து கொண்டிருந்த கடமை வீரன், இந்த லக்ஸம்பர்க் சேவை மையத்திற்குள் நுழைந்து இருக்கவே கூடாது. கண்ணாடிக் கதவுகளுக்குப் பின்னே 'மறதி நோயாளிகள்' என்று பெயர்ப் பலகை தொங்கிய மூன்று அறைகள் இருந்தன. முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வல்லரசுகள் வீழும் மக்கள் தாங்களே கற்றுக்கொள்வார்கள் போராட்டங்களின் மூலம் அறிவின் ஒருமைப்பாடு உருவாகும். மக்கள் கருத்து எதிர்வினை இல்லாமல் சமூகவாதம் இல்லை. சர்வதேச அளவில் மூலாதாரங்களை இயற்கையிடமிருந்து கச்சாப் பொருளாகப் பெறுவதற்குப் பேரரசுகள் கார்ப்பரேட்களுக்கு உதவுகின்ற சர்வதேசக் கட்டுப்பாட்டு வாதமாக மாறும். மக்கள் என்ன சிந்திக்க வேண்டும் என்பதை அவர்கள் முடிவு செய்யும் இடம் வரும்பொழுது சீர்திருத்தங்கள் மட்டுமே போதாது மக்களின் உள்ளக் கிளர்ச்சி தேவை.**

கதவை நோக்கி அவன் நடந்துகொண்டிருந்த பொழுது காதில் ஓசைகள்..

'சொல்லு ரோமிலா எங்கே இருக்கிறாய்?' என்றான் ராகுலன்

'உள்ள வந்துவிட்டாயா' என்று மட்டும் அவள் கேட்டாள். ரோமிலா பழைய பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்தவள். ராகுலனுடன் பணியிடத்தைப் பகிர்ந்தவள். லக்ஸம்பர்க் சேவை மையத்தை அவனுக்காகக் கண்டுபிடித்துக் கொடுத்தவள். நெஞ்சுக்குள் வைக்கப்பட்டிருந்த செல்ஃபி ரிப்போர்ட்டிங் சேனல்களை மூலத்திற்குத் தெரியாமல் எப்படிச் சரிகட்டுவது என்று அவனுக்கு போதித்த மேதை.

'உள்ளே வந்துவிட்டேன் ரோமிலா. மேன்ஷன் முன்புறம் தற்போது அமைக்கப்பட்டு இருக்கும் எக்ஸ் ரே படிகமாக்கல் அமைப்பை நீதான் எர்த் செய்தாயா?' என்கிறான் ராகுலன்

'உனக்காகத்தான் ராகுல். அதை வேலைசெய்ய வைத்துவிட்டு நாம் உள்ளே வரக் கூடாது. நம்மால் அடுத்த படிநிலையைக் கூட எடுத்துவைக்க முடியாமல் அது நம்மைத் தடுத்துவிடும்' அவளது குரலில் தீர்மானமான முடிவு இருந்தது

டார்க் நெட்வொர்க்குகள் என்று அழைக்கப்படும் பழைய சுயநிலை உருவாக்க விக்கி மூலங்களை எப்போதோ அழித்தாகிவிட்டது. என்றாலும், அங்கே ஒன்றிரண்டு இருக்கக்கூடும் என்பதற்காக வரலாற்றுத் திருத்தம் என்று அழைக்கப்படுகிற வல்லுநர் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை எக்ஸ் ரே படிகமாக்கல் அமைப்புகள் பயன்படுத்துகின்றன

மேன்ஷன் என்று மட்டுமே தற்போது அழைக்கப்படும் அந்தக் கட்டடத்தில் ஒருகாலத்தில் ராகுலின் பாட்டி வகையறாக்கள் வாழ்ந்திருக்க வேண்டும். உணவு தயாரிக்கும் த்ரீ டி தொழில்நுட்பக் கட்டடமாக நவீன காலத்தில் அது மாற்றப்பட்டுவிட்டது. முதலில் ராகுலனைச் சிந்திக்கத் தூண்டியது அவன் பாட்டி வாழ்ந்த வீட்டின் பழைய கால புளூ பிரிண்ட். அதையும் அவனுக்குத் தருவித்து கொடுத்தவள் ரோமிலா தான்.' ஓ...வீடுகள் என்பவை இப்படித்தான் இருந்திருக்கின்றன' அவனால் ஆச்சரியத்தை அடக்க முடியவில்லை. அவனுடைய மூதாதையர்களுக்கு என்று சொந்தமாக ஒரு இருப்பிடம் இருந்திருக்கிறது..

'மறதி நோயாளிகள்' என்கிற ஒரு பெயர்ப் பலகை அங்கே எப்படி வந்தது முற்றிலும் பழைய வரலாறு சுத்திகரிக்கப்பட்டுவிட்டது என்றால் அது அங்கே இருப்பது நியாயமே இல்லை. எதுஎப்படியோ அவனால் புரிந்துகொள்ள முடிந்தது இது அவனுடைய மூதாதையர்களின் இடம். 3D உணவு தயாரிக்கும் அந்தக் கூடத்தின் பின்புறம் இருந்த கழிவுகளைக் கொட்டிவைக்கும் யாரும் அதிகம் போகாத ஒரு இடமாக அது அமைந்ததால் அவர்களுக்கு வசதியாகிப் போனது.

'ராகுலன்.. வந்துவிட்டாயா' ரோமிலா அவனை நோக்கி ஓடிவந்தாள். 'புதையல் ராகுலா. புதையல்' அவன் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள். ஸ்பரிசங்கள் ஏற்படும் பொழுது ஏராளமான உணர்வுகள் கொப்பளிக்கின்றன. தொடு உணர்ச்சி இல்லாமல் குழந்தைகளை ஆய்வகத்தில் பிரசவிக்கும் ஒரு யுகத்தில் உங்கள் காதல் மற்றும் காமத்திற்கான நேரத்தை, உங்களின் செயற்கை நுண்ணறிவுச் செயலி தீர்மானிக்கிறது. ஆனால், ராகுலனும் ரோமிலாவும் தங்கள் சொந்த செயற்கை நுண்ணறிவுச் செயலிகளைக் குழப்பி, எப்படித் தங்கள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்தார்கள் என்பது ஒரு தனிக்கதை. உண்மையில் அது இருவரும் இணைந்து நடத்திவரும் தொழில்நுட்ப ஆய்வு சோதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தங்கள் எண்ணங்களைத் தொடர்ச்சியாகத் தாங்களே கண்காணித்துக்கொள்ளும் அந்த அமைப்பை மனச்சுமை மற்றும் பாவ உணர்வின் மூலம் கட்டுப்படுத்தும் பழைய மதம் சார்ந்த கோட்பாடுகளால் உடைக்க முடியவில்லை..

ராகுலன் நரம்பியல் மிதவை அல்காரிதம் மற்றும் குற்ற உணர்வு ரிப்போர்ட்டிங் இரண்டையும் செயற்கை நுண்ணறிவை மிஞ்சிய நினைவு நேர ஒழுங்கு என்றழைக்கப்படும் ஆண்டரிமோடா ஐன்ஸ்டீன் முரண்பாடு என்கிற ஒன்றைப் பயன்படுத்தி தன்னுடைய நிகழ் காலத்தை இறந்தகாலம் போல அதனை நம்பவைத்திருக்கிறான். ஐன்ஸ்டீன் மற்றும் ரோஜர் பென்ரோஸ் இன்வோக் கோட்பாடு என்று அழைக்கப்படுகிற ஆண்டரிமோடா முரண்பாடு இல்லை என்றால் அவர்கள் லக்ஸம்பர்க் நினைவு மையத்தையே கண்டுபிடித்திருக்க முடியாது.

அரசாங்கத்தைப் பொருத்தவரையில் ஒரே அரசியல் அமைப்பாக்கம். ஆக்கப்பட்ட நேர உணர்வு வரலாறு என்கிற ஒன்று அவர்களைப் பொருத்தவரையில் இல்லை. செயற்கை நுண்ணறிவு அல்காரிதத்தால் தற்போதைக்கு ஐன்ஸ்டீன் பென்ரோஸ் முரண்பாட்டைப் புரிந்துகொள்ள முடியாது. அவர்களின் ஒவ்வொரு நடத்தையையும் அது இறந்தகாலம் என்று கணித்துக்கொண்டிருக்கிறது. ஐன்ஸ்டீன் பென் ரோஸ் ஆன்றிமோடா முரண் என்பது அதுதான். ஒரு இடத்தில் நிகழ்காலமாக இருப்பது வேறு ஒரு இடத்தில் இறந்த காலமாக இருக்கிறது. அதுவே மற்றொரு இடத்தில் எதிர்காலமாகவும் இருக்கலாம்.

'ராகுலன் இதைப் பார்த்தாயா?' அலறுகிறாள் ரோமிலா. அவர்கள் இப்பொழுது 'மறதி நோயாளிகள்' சுவரின் உட்புறம் நுழைந்திருந்தார்கள். இது அதிசயமாகத்தான் இருந்தது ஏதோ ஒரு வகையில் அவர்களை அந்தச் சுவர் உள்வாங்கி இருந்தது. 'கார்ல் மார்க்ஸ் மூலதனம், அரசு தனிச் சொத்து ஆகியவற்றின் தோற்றம் எங்கல்ஸ், பெண் ஏன் அடிமையானாள் பெரியார், பாகுபாட்டின் வேர்கள் அம்பேத்கர்' அரசாங்கத்தால் முழுவதும் பல சந்ததியினருக்கு மறுக்கப்பட்ட மூல புத்தகங்கள் அங்கே காகிதப் புத்தகங்களாகவே கொட்டிக் கிடந்தன..

'நேரத்தின் அரசியல் ரோமிலா' என்றான் ராகுலன்.

நினைவு காலத்தின் களஞ்சியத்தில் இருந்து அழிக்கப்பட்டவை வெறும் புரட்சியாளர் சிந்தனைகள் மட்டுமல்ல; ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் முதல் ஸ்டீஃபன் ஹாக்கிங், ஜெயந்த் நரர்லிகர் இப்படியான பெயர்களையும் அவர்கள் முதலில் கேள்விப்படுகிறார்கள். அப்போதுதான் ராகுலன் அதிர்ச்சி அடையும் அந்த ஆவணம் கிடைத்தது. பாட்டி தோழர் பானுமதி எனும் பெயரில் கிடைத்த ஒரு டைரி. ஒரு காலத்தில் மனிதர்கள் இப்படிப்பட்டவைகளை கையில் வைத்துக்கொண்டு தினந்தோறும் தங்கள் கருத்துகளை அதிலே பதிவுசெய்திருக்கிறார்கள். 102 வயது வரை வாழ்ந்த அந்த சிறைவாச இதயம் தன் கொள்ளுப் பேரனுக்கு ராகுலன் என்று ராகுல சாங்கிருத்தியாயன் எனும் மாபெரும் மனிதனின் பெயரைச் சூட்டுவதாகக் காலத்தின் பெட்டகத்தில் பதிந்துவைத்துள்ளது.

யார் அந்த ராகுல சாங்கிருத்தியாயன் என இருவரும் பரபரப்போடு தேடிய பொழுதுதான்,. அவர்கள் ரோமிலா தப்பார் எனும் அடுத்த அதிசயத்தில் இடறி விழுந்தார்கள். ஏதோ எண்ணங்கள் தங்கள் பெயர்கள் வரலாற்றின் பக்கங்களில் எப்படியெல்லாம் இடம்பெற்றன என்பதன் தேடல். ரோஸா லக்ஸம்பர்க் பற்றிய தோழர் பானுமதியின் நினைவுக் குறிப்புகளுக்குள் அவர்களை இட்டுச்சென்றது. ஜெர்மனியில் இருந்து ஒலித்த மார்க்சிய புரட்சிப் பெண் புலி.

அடக்கப்பட்ட எதிர்காலங்களின் களஞ்சியம் என்கிற புதிய பாதையை அப்போதுதான் ராகுலன் அடைந்திருந்தான். லக்ஸம்பர்க் மோட் என்கிற புதிய செய்ற்கை நுண்ணறிவு அடித் தளத்தை ராகுலனும் ரோமிலாவும் அடைவதற்கு மேலும் இரண்டாண்டுகள் ஆயின. மௌனமான விடுதலை என்பது விடுதலை அல்ல மனித குரல்கள் ஒலிக்கின்ற எதிர்காலம் உயிர்ப்புடன் இருக்க வேண்டும். எப்படி நடந்ததோ தெரியாது என்ன முடிவு செய்தார்களோ எத்தனை பகல் இரவுகளை அங்கேயே கழித்தார்களோ லக்ஸ் என்று மட்டும் சுருக்கப் பெயர் வைக்கப்பட்ட மனித விடுதலையின் புதிய செயற்கை நுண்ணறிவை செயலியை அவர்கள் பிறப்பித்து இருந்தார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லரசுகள் வீழும் மக்கள் தாங்களே கற்றுக்கொள்வார்கள் போராட்டங்களின் மூலம் அறிவின் ஒருமைப்பாடு உருவாகும். மக்கள் கருத்து எதிர்வினை இல்லாமல் சமூகவாதம் இல்லை. சர்வதேச அளவில் மூலாதாரங்களை இயற்கையிடமிருந்து கச்சாப் பொருளாகப் பெறுவதற்குப் பேரரசுகள் கார்ப்பரேட்களுக்கு உதவுகின்ற சர்வதேசக் கட்டுப்பாட்டு வாதமாக மாறும். மக்கள் என்ன சிந்திக்க வேண்டும் என்பதை அவர்கள் முடிவு செய்யும் இடம் வரும்பொழுது சீர்திருத்தங்கள் மட்டுமே போதாது மக்களின் உள்ளக் கிளர்ச்சி தேவை. ரோசா லக்சம்போர்க் குரல் அந்தப் புதிய உலகில் ஒலிக்கத் தொடங்கியது அப்போதுதான்.

உலக அரசாங்கங்களைக் கைப்பிடியில் வைத்திருக்கும் லாப வெறிகொண்ட கார்ப்பரேட் கலாச்சார மனித இயந்திரமயமாக்கல் கல்லூரிப் பயிற்சிப் பெட்டக மனவெளி ஒன்றுக்குள் ஒரு நாள் இருவரும் நுழைந்தார்கள். காலத்தைக் கடப்போம் வாருங்கள் என்று அறிவிக்கிறார்கள். அதிகாரத் தூண்கள் ஒவ்வொன்றாய் அசையத் தொடங்கிய அந்த நாளில் ஆண்ட்ரிமோடா முரண் புதிர் மூலம் ஐன்ஸ்டீன் வென்றிருந்தார். அந்த நிகழ் காலத்தை இறந்தகாலமாகப் பதிவுசெய்துகொண்டு அரச இயந்திரம் செயற்கை நுண்ணறிவின் வழியே சுரணையற்றுக் கிடந்தது.

சரித்திரத்தின் புரட்சி நூல்களை மனப்பாடமாக இருவரும் உலகிற்குப் பகிர தொடங்கிய, அதிகாரத்தின் இருண்ட குகைகளுக்குள் ஒளி பாய்ச்சுகின்ற அந்தத் தருணத்தில்,இளைஞர்களின் எண்ணங்களுக்குள் புகுந்துகொண்டு செயற்கை நுண்ணறிவின் இயற்கைக் குரலாக பாப்லோ நெரூதா ஆகி முழங்கினாள் ரோமிலா. எத்தனையோ நூற்றாண்டுகள் ஒடுக்கப்பட்ட குரல்

'நீங்கள் எத்தனை மலர்களை வேண்டுமானாலும் வெட்டி சாய்த்து எரித்துவிட முடியும். ஆனால் உங்களால் ஒருபோதும் ஒரு வசந்தம்... வருவதைத் தடுக்க முடியாது'.

•

கதாசிரியர்: எழுத்தாளர்

## மடல் திறப்பு

'தமிழியை மீட்ட தகைசால் ராஜன்' கட்டுரையில் ஒரே குறியிடல் குறித்து இரு வேறு வரிகள்.. இது அச்சுப் பிழையா அல்லது கவனக்குறைவா? எதுவாயினும் கட்டுரை சிறப்பு. திரு. கா. ராஜன் அவர்கள் நூலை நிறைவு செய்த முறை கட்டுரையாளருக்கு நிறைவாக இல்லாதபோதும் தகைசால் விருதை முன்மொழிகிறார். சிறப்பு. சென்ற இதழின் தொடர்ச்சியாக மூன்று கட்டுரைகள் இந்த இதழிலும் வந்துள்ளன. உழவுக் கம்பு போராட்டம், மற்றும் சோழர்களின் அடிமைப் பெண்கள் குறித்த கட்டுரைகள் சிறப்பு வாய்ந்தவை. சோழர் கால பெண்டாட்டிகள் குறித்த கட்டுரை சில தமிழ்த் தேசியர்களின் தொன்மைப் பெருமை மீது அடிவிழச் செய்கிறது. மேலும் *தொல்காப்பியர் வட சொற்கள் எனக் குறிப்பது பிராகிருதத்தையே தவிர சமஸ்கிருத்தை அன்று* எனும் முடிபு தமிழ்வெளி எங்கும் பரப்பப்பட வேண்டிய ஒன்று.

அப்பணசாமியின் அகஸ்தியர் குறித்த கட்டுரையும் பொருளும் அவ்வாறே பரப்பப்பட வேண்டிய ஒன்று. திருவள்ளுவரைத் தேடி ... நல்ல ஆய்வு. முடிவிற்காக காத்திருக்கிறேன். 'தனித்த பொழுதுகள்' சிறப்பான கவிதை. முனியாண்டி அவர்களின் கவிதையில் முதிர்கன்னி குறித்த சொல்லாடல் வக்கிர பாலியல் பார்வை சார்ந்தது. ஓசியில் தயார் என்றால் எல்லாப் பயல்களும் தயாராக இருப்பார்கள். ஒவ்வொரு இதழிலும் அட்டைப்படம் விரும்பி நுணுகிப் பார்க்கும் வண்ணம் சிறப்பாக உள்ளன.

**நித்திலவாணன், சென்னை.66.**

ஜப்பானை பின்னுக்குத் தள்ளி இந்தியா பொருளாதாரத்தில் நான்காம் இடத்திற்கு முன்னேறி இருப்பதாக சொல்லப்படுவதற்கு சாட்சியாக, இந்திய கிராமங்கள் இல்லை என்பதற்கு வாக்களிக்கும் மக்கள்தான் பொறுப்பு என்பதை நாசுக்காக சு(கு)ட்டிக் காட்டினார்,க.பழனித்துரை. சாலை, குடிநீர், கல்வி, மருத்துவ வசதி போன்ற அடிப்படை வாழ்வாதாரங்களுக்கே பரிதவிக்கும் 75 ஆண்டுகால சுதந்திர குடிமக்கள் இனியாவது பொறுப்பு மிக்கவராக செயல்பட கட்டுரை மூலம் தட்டி எழுப்பியிருக்கிறார். திட்டமிட்டு ஜாதி, மத, அரசியல், சினிமா, கிரிக்கெட் என மூளையை மழுங்க வைத்து கூறு போடப்பட்டு கிடக்கும் மக்கள் விழிப்புணர்வு பெற்று தங்கள் உரிமைகளை அதிகாரத்துடன் பெற்று முன்னேற வேண்டுமென உணர்த்தி, எந்த தேவ தூதனும் வந்து நம்மை சுபிட்சமடைய செய்ய மாட்டான். நமக்கு நாமேதான் விமோசனம் பெற வேண்டுமென திட்டவட்டமான தீர்ப்பளித்திருக்கிறார், க.பழனித்துரை.

**_ அண்ணா அன்பழகன், அந்தணப்பேட்டை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகஸ்தியர் எனும் புரளி

(சென்ற இதழ் தொடர்ச்சி)



**அகஸ்தியர் தென்பகுதிக்குச் சென்றது வெறும் தொன்மப் புனைவா அல்லது பெருங்கற்காலப் பெரும் துறவிகளோடு உண்மையிலேயே தொடர்பு கொண்டதா என்பதைத் தீவிரமான, முறைப்படுத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலமே தெளிவுபடுத்தமுடியும்.**

(வரலாறு, பண்பாடு, அறிவியல் : டி டி. கோசம்பி வாழ்வும் ஆய்வுகளும், பக்கம்164)

திராவிட - ஆரியப் பண்புகளைப் புரிந்து கொண்டாலே போதும்!

“இங்கு ஒரு இயல்பான கேள்வி எழுகிறது: பண்டைய காலங்களில் தொன்மங்கள் (அல்லது புராணங்கள்) உருவாக்கப்படும்போது அவை ஏன் எதிர்மறைச் செயல்முறைகளை உருவாக்குகிறன? இந்த சட்டமான கேள்விக்கு நியாயமான பதிலைத் தேடும்போது திராவிடர்கள், ஆரியர்கள் குறித்த இனப் பண்புகள் மீதும் பார்வை செலுத்த கட்டாயப்படுத்தப்படுகிறோம். இங்கு நான் ஆரியம் என்பதை சிந்தனையாளர்கள் (மூளைச் செயல்பாட்டாளர்கள்) நாடு என்றும் திராவிடம் என்பதை செயல்பாட்டாளர்கள் நாடு என்றும் வகைப்படுத்திக்கொள்வது பிழையல்ல என்றே நம்புகிறேன். இருந்தாலும் ஆரியர்கள் செயல்பாட்டில் ஈடுபட்டவர்கள் அல்ல என்றோ திராவிடர்கள் சிந்தனை முறையில் இயங்கியவர்கள் அல்ல என்றோ எடுத்துக்கொள்ள வேண்டாம். முதன்மைப் பண்புகளைப் பொறுத்து அவ்வாறு வகைமைப் படுத்துகிறேன். இவர்களின் தேசியப் பண்புகளை எடுத்துக்கொண்டால் ஒருவர் சிந்தனை முறையிலும் மற்றவர் செயல் முறையிலும் சிறந்து விளங்குகின்றனர். இன்னொரு விதமாகக் கூறினால் ஒருவர் ஊகங்களைப் பரப்புபவர்கள்; மற்றவர் செயல்விளைவுகளை உருவாக்குபவர்கள் எனலாம்.

“திராவிடர்களின் பண்டைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களின் பிற்கால வாழ்வியல், சாதனைகளை முழுமைப்படுத்தி நோக்கினால் திராவிடர்கள் தொடக்க காலத்தில் இருந்தே மிகச் சிறந்த நடைமுறைவாதிகள் அல்லது காரண காரியத்துடன் செயல்பட்டு பல துறைகளில் தம்மை நிலைப்படுத்திக் கொண்டவர்கள். எந்த வகையிலும் தூய்மை வாதத்துக்குப் பெரிதும் மதிப்பளித்தவர்கள் அல்ல. அவர்கள் கனவுலகவாசிகள் அல்ல; ஆகாயத்தில் கோட்டை கட்டுபவர்கள் அல்ல.

“திராவிடர்கள் சூழ்நிலையை அறிந்து நடைமுறைப்பண்புடன் செயல்பட்டதாலேயே வேளாண்மை, வணிகம், போர்க்கலை, அரசியல் ஆகிய துறைகளில் உச்சத்தை அடைந்தனர். இதனால் திராவிட நாகரிகம் என்பது மிகச்சிறந்த ஒன்றாக விளங்குகிறது. வடக்கைச் சேர்ந்த ஆரியர்கள் வேறு முறையில் அச்சடிக்கப்பட்டவர்கள். எப்போதும் அமைதியிழந்து தவிக்கும் ஆரியர்களின் வரலாறு முழுவதும் ஊகங்களைச் சார்ந்துள்ளது. ஊகங்களை உருவாக்கி கோட்பாட்டு மயமாக்கும் இந்த போக்கு உபநிடதங்கள் காலத்தில் பெரும் எழுச்சி பெற்றது. ரிக் வேத காலங்களில் கோட்பாட்டாக்கம் காணப்பட்டாலும் பெரும்பாலான சுலோகங்கள் தமது அன்றாட தேவைகளை நிறைவு செய்ய இயற்கையையும் சில தேவதைகளையும் இறைஞ்சும் சுலோகங்களாகவே காணப்படுகின்றன.

“வாழ்க்கை நலத்துக்காக இதுபோன்ற சுலோகங்களையும் சடங்குகளையும் தலைமுறை தலைமுறைகளாக மேற்கொண்டுவரும் ஆரியர்களிடம் செயல்பாடுகளை எதிர்பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"திராவிடர்கள் சூழ்நிலையை அறிந்து நடைமுறைப்பண்புடன் செயல்பட்டதாலேயே வேளாண்மை, வணிகம், போர்க்கலை, அரசியல் ஆகிய துறைகளில் உச்சத்தை அடைந்தனர். இதனால் திராவிட நாகரிகம் என்பது மிகச்சிறந்த ஒன்றாக விளங்குகிறது. வடக்கைச் சேர்ந்த ஆரியர்கள் வேறு முறையில் அச்சடிக்கப்பட்டவர்கள். எப்போதும் அமைதியிழந்து தவிக்கும் ஆரியர்களின் வரலாறு முழுவதும் ஊகங்களைச் சார்ந்துள்ளது.**

இயலாது. இவர்களைச் செயல்பாட்டாளர்கள் அல்லது உழைப்பாளிகள் என்றால் உழைப்பாளிகளை என்ன சொல்லி அழைப்பது" (பக். 18) என்கிறார் சிவராஜா.

"இந்த ஆரியம்தான் தெற்கே உள்ள புதிய தொல்குடிகளை அடிமைப்படுத்துவதற்கான ஊகங்களையும் கருத்தாக்கங்களையும் கட்டமைப்பதையே போதையாகக் கொண்டிருந்தது.

"ஆனால் தெற்கில் இருந்த நிலை வேறு. செயல் ஒன்றையே சிறந்த சொல் என்று வாழ்ந்துவந்த நேர்த்தியான நாகரிகம் கொண்ட (திராவிட) மக்களிடம் ஆரியம் நிறைய வளைந்து கொடுக்க வேண்டியிருந்தது. இங்கு அவர்களின் போர்த்தந்திரங்கள் வேலைக்காக வில்லை. அவர்களது புனிதப் புளுகுகளும் எடுபடவில்லை. ஆனால் திராவிடர்கள் ஊகங்களை உருவாக்குவதில் பலவீனமாக இருந்தனர். சிந்திப்பதைவிட செயலுக்கு அதிக முக்கியம் அளித்தனர். ஆனால் செயல்படுவதற்குத் தேவையான அளவு மட்டும் சிந்தித்தனர். இதைத்தான் சிந்தித்து செயல்படுதல் என்கிறோம், இல்லையா?

"இங்குதான் ஆரியர்கள் தங்கள் பிடியை இறுக்கினர். எவ்வளவுதான் செயல்வீரனாக இருந்தாலும் அறிவு மேதைமைக்குத் தலை வணங்கித்தானே ஆக வேண்டும்.

"ஆரிய - திராவிட உறவில் (ஊக) சிந்தனையால் உலகம் ஆளப்படுகிறது எனும் கூற்று உண்மையாகிப்போனது. மனித குலத்தின் இரு இன்றியமையாத ஆற்றல்கள் - செயலும் சிந்தனையும் - இரு மாறுபட்ட இனங்களின் குணங்களாக இருந்தன. பண்டைய திராவிட இலக்கியங்களில் புராணிக தொன்மங்கள் அதிகம் காணப்படாததற்கான காரணங்களும் இவைதான். நம் திராவிடத்தின் தொல் மரபில் புராண - மாந்திரீகங்களுக்கு இடம் இல்லை. புத்த, சமண, வைதிக மதங்களின் வருகைகள் தாம் புராணிகங்களைக் கொண்டு வந்தன. அதற்கு முன்பு வரை தமிழ் இலக்கியங்களில் புராணிக தொன்மங்களுக்கு இடமில்லை. வைதிகம், புத்தம், சமணம், சைவம், வைணவம், லிங்காயத் என மதங்கள் குட்டி போடப்போட புராணிகங்களும் பெருகின. வரலாறே புராணிகங்களின் வரலாறானது." - பக். 18 -21.

"தமிழர்களின் அறிவுச் செல்வம் என்பது பொருள் பயன்பாட்டுப் பண்பாட்டை உருவாக்கியது. ஆனால், தங்களுக்கான ஆன்மிக மலர்ச்சியை வடவர்களிடமிருந்தே பெற வேண்டியிருந்தது." - பக். 32.

தமது தலைமை, ஆட்சி நீடிப்பதற்கும், நீண்ட ஆயுளுக்கும், ஆரோக்கியத்துக்கும் நிரந்தரத்துக்கும், மக்களை மயக்குவதற்கும் இன்னும் பல பிரச்சனைகளுக்கும் இம்மையில் தீர்வு காணமுடியாமல் மறுமையையும் சடங்குகளையும் காட்டி நம்பச் செய்து, அதனை தமது அறிவாக மேன்மையாகக் காட்டினர் ஆரியர். இதில் மயங்கினர் தமிழர். இதன் ஆரியமயமாக்கலின் முகம் அகஸ்தியர் புராணிகம்.

சரி, ஆரியமயமாக்கலுக்காக அகஸ்தியர் புராணிகம் என்றால் ஆரியர் வருகை எப்போது? அகஸ்தியர் எப்போது வந்தார்? எனும் கேள்விகளுக்கு பதிலாகவும் சான்றுகளாகவும் கீழ்க்காணும் கூற்றுகளை சிவராஜா முன்வைக்கிறார்.

"சங்க இலக்கியத்தில் கீழ்க்காணும் இடங்களில் பார்ப்பனர் குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன:

இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த

நான்மறை முனிய ரேந்துகை யெதிரே - 6 காரிகிளார்

ஆவு மானியற் பார்ப்பன மாக்களும் - 9 நெட்டிமையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பார்த்தப்பிய கொடுமையோர்க்கும் - 34 ஆலட்டூர்க்கிளார்

......... நின் முன்னோரெல்லாம்

பார்ப்பார் நோவன செய்யலர் - 43 தாமப்பல்கண்ணனார்

வாழ்வு மரணம் குறித்த மனப் பிம்பங்களை உருவாக்கி ஆரூடங்களைக் கூறியதற்கான தொழில் முறையில் மதிக்கப்பட்டனர் என்பதைத் தவிர பண்டைத் தமிழகம்ஆரியமயமாகி இருந்ததாக இவற்றைக் கொள்ளமுடியாது" என்கிறார் சிவராஜா. (பக் 30 -31) இவை சடங்குகளாக்கப்பட்டது பின்னர்தான். அதாவது சிலப்பதிகாரம் காலத்துக்குப் பின்னர்தான்.

"சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களில் அகஸ்தியர் குறித்த நேடியான குறிப்புகள் காணப்படுகின்றன.

பின்னர் உருவான பக்தி இலக்கியங்கள், திருவிளையாடல் புராணம், காஞ்சிபுராணம் உள்ளிட்ட புராணங்களும் இக்காலகட்டங்களில் உருவான நச்சினிக்கார்க்கினியர் போன்ற உரையாசிரியர்களுமே அகஸ்திய கட்டுக்கதைகளை கட்டமைத்துள்ளனர். அதுவும் பல்லிளிக்கிறது" என்கிறார் சிவராஜா. - பக். 33-34

"வாழ்க்கையின் புதிர்கள் குறித்த அறிவுக்கு அப்பாற்பட்ட புராணிகங்களையும் நம்பிக்கையையும் சடங்குகளையும் வாழ்வியல் குறித்த தேடலாக சிந்தனை முறையாகக் கட்டமைத்ததன் மூலம் படிப்படியாக ஆரியர்கள் திராவிடர்களை ஆதிக்கம் செலுத்தினர்.

இராமாயணம் பொ. ஆ முதல் நூற்றாண்டு வரை மீண்டும் மீண்டும் திருத்தங்கள் பெற்று வந்துள்ளது. அதுவரை தமிழகம் குறித்த குறிப்புகள் காணப்படவில்லை. எனவே, ராமாயண கால ஆரியர்கள் பொ. ஆ முதல் நூற்றாண்டு வரை தமிழகம் குறித்து அறியவில்லை என்பது முடிந்த முடிபாகும் என்கிறார். தொடர்ந்து மூன்று நூற்றாண்டுகள் திராவிட மண்ணில் உருவான செவ்வியல் இலக்கியங்களிலும் அகஸ்தியர் குறித்த குறிப்புகள் காணப்படவில்லை. இக் காலக் கணிப்பு குறித்த பிற ஊகங்களையும் கணக்கில் எடுத்தால் 4, 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டுவரை அகஸ்தியர் எனும் கதாபாத்திரத்தை தமிழர்கள் அறிய மாட்டார்கள்.

லோகன் கூற்றுப்படி வேத பார்ப்பனர்கள் துளு கடற்கரை வழியாக பொ. ஆ 8 அம் நூற்றாண்டுக்குப்பிறகே மலபார் வந்தனர்." -பக் -29

எனவே அகஸ்தியர் எனும் புராணிகம் பொ. ஆ. 600 முதல் பொ. ஆ. 1400 க்குள் கட்டமைக்கப்பட்ட புனைபாவை என்பது திண்ணமாகிறது. - கட்டுரை ஆசிரியர்)

அகத்தியம் தொல்காப்பியத்துக்கு முதல் நூலா?

அகத்தியர் கூறப்படும் இலக்கணங்களையும் தொல்காப்பியத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே அதன் போலித்தன்மை புலப்படும்.

"தொல் காப்பியம் எழுத்து, சொல், பொருள் என வகைப்பிரிக்கிறது. அகஸ்தியம் எழுத்து, மொழி, கூற்று என வகைப்பிரிக்கிறது. அதன் வரையரை வருமாறு:

எழுத்து: எழுத்தெனப்படுதலால் எழுத்தெனப் பெயர் பெறும்.

மொழி: மொழிந்த வெழுத்தான் மொழிவதே மொழியாம்.

கூற்று: கூறு படுத்தலேம் கூற்றெனப் படும்.

பால் வேறுபாடுகள் குறித்து அகஸ்தியர் கூறுவது:

குறுலாண் பாலும் நெடில்பெண் பாலுமாம்

ஆயுதமும் மெய்யுமலியெனப்படுமே. " ப 40

தமிழ் முனி என்று பிரபல்யப் படுத்தப்பட்டு வரும் அகஸ்தியரின் லட்சணங்களை இதில் இருந்தே தெரிந்து கொள்ளலாம் என்கிறார் சிவராஜா. அல்லது எழுத்து, சொல், பொருள் ஆகியனவற்றுக்கு தொல்காப்பியம் கூறும் இலக்கணம் அறிந்து உணரலாம்.

"தமிழ் மண்ணுக்கு முற்றிலும் அன்னியரான அகஸ்தியர் தனது தாய்மொழியான சமசுகிருத்ததுக்குத்தான் தமிழ் இலக்கணத்திலும் நேர்மை செய்கிறார். ஆனால், இவை அனைத்தும் மொழியியல் அறிவியலுக்கு முற்றிலும் விரோதமானவை. இதற்கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“தமிழ் மண்ணுக்கு முற்றிலும் அன்னியரான அகஸ்தியர் தனது தாய்மொழியான சமசுகிருத்ததுக்குத்தான் தமிழ் இலக்கணத்திலும் நேர்மை செய்கிறார். ஆனால், இவை அனைத்தும் மொழியியல் அறிவியலுக்கு முற்றிலும் விரோதமானவை. இதற்கெல்லாம் ஆதாரங்கள் ராவ் சாகிப் பவானந்தம் பிள்ளை அவர்களின் பேரகாத்தியத் திரட்டு நூல்தான்.”**

ஆதாரங்கள் ராவ் சாகிப் பவானந்தம் பிள்ளை அவர்களின் பேரகாத்தியத் திரட்டு நூல்தான்." – பக். 41

“இவையெல்லாம் பாணினியில் வடமொழி இலக்கண நூலில்தான் முதன் முதலாகக் காணப்படுகின்றன என்பதைப் பார்க்கையில் அகஸ்தியரின் இந்த தமிழ் இலக்கணக் கூறுகள் பாணினியிடம் இருந்து பெறப்பட்டவை என்பது உறுதியாகிறது." – பக். 43.

இவையெல்லாம் தமிழ் மூலவரான தொல்காப்பியர் மீதான நம்பகத்தன்மையைச் சிதைக்கும் முயற்சிகள் என்கிறார் சிவராஜா. “முக்கியமாக அகஸ்தியர் புனித மரபில் கட்டமைக்கப்படுபவை அனைத்தும் தொல்காப்பியத்துக்குமாறான வைதிக அல்லது சடங்கியல் சார்பு கொண்டவை. தொல்காப்பியத்தை இப்படியெல்லாம் கீழ்மைப்படுத்த இயலாது. தொல்காப்பியத்தின் உச்சம் இன்னமும் அறியப்படாதது. முடிவாக, அகஸ்தியர் காலம் தமிழ் இலக்கியத்தில் சமணர்கள் காலத்துக்கு முந்தையது என்றுகூட சொல்ல முடியாது. அகஸ்தியர் கட்டுக்கதையை அம்பலப்படுத்த இன்னும் ஒரேயொரு உதாரணத்தை மட்டும் எடுத்துரைத்தால் போதும். அகஸ்தியர் தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் எனும் மூன்று பிரிவாக வகைப்படுத்துகிறார். இதன் அடிப்படைகள் தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. தொல்காப்பியர் தனது ஆசிரியரான அகஸ்தியரிடம் இருந்து கற்றுக்கொண்டார் என்றால் இதனை தனது இலக்கணத்தில் தவிர்த்திருக்க காரணம் இல்லை. அப்படியே அவர் புறக்கணித்துவிட்டார் என்றாலும் அவரது சக மாணவர்களும் அகஸ்தியரின் இதர மாணவர்கள் என்றுபட்டியலிடப்பட்டுள்ள புலவர்கள் எங்காவது பதிவு செய்திருப்பர். அப்படி எங்கும் காணப்படவில்லை. ”– பக். 44–45.

இனி அகத்தியர் ஆராய்ச்சி என்ற நூலில் கா. நமச்சிவாய முதலியார் அகஸ்தியர் புனைபாவையைச் சிதைக்கும் முறை காணலாம்:

“அகத்தியர் பொதிய மலையிலிருந்து சில பாண்டியரின் உதவியைப் பெற்று முதற் சங்கம் இடைச்சங்க மென்னும்இரண்டு சங்கங்களை நிறுவினார். முதற் சங்கத்திலிருந்த புலவர்கள் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் குன்றமெரிந்த முருகவேளும், முறைஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவர் 4440 யாண்டு சங்க மிருந்தார் என்பர். இதனுள் சிவபெருமானும் முருக்கடவுளும் குபேரனும் ஆகிய தெய்வங்கள் அங்கத்தினராக இருந்தனரென்பது பெறப்படும். முடிநாகராயர் என்பவர் ஒருவர் இருந்ததாகவும் தெரிகிறது. இவருடைய பாடல் புறநானூற்றில் காணப்படுகின்றது ராயர் என்னும் சொல் பிற்கால வழக்கிலுள்ளது. அது முதற் சங்கத்திலேயே பயின்று வந்ததென்பது பொருந்தாத தொன்றாம்.ஒரு கால் அது முடிநாகரையர் என இருத்தல் கூடுமோ என்று ஊகிக்கின்றேன். இவர் நாகவேந்தராக இருத்தல் கூடுமோ என்பதும் கருதத்தக்கது. இனி, இரண்டாஞ் சங்கமிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும்.. இருந்தையூர் கருங்கோழி மோசியும் வெள்ளூர்காப்பியனும் சிறு பாண்டரங்கனும் திரையன் மாறனும் துவரைக்கோமனும் கீரந்தையும் என இத்தொடக்கத்தார் அறுபத்தொன்பதின்மர் என்ப. இவர் மூவாயிரத்து எழு நூறுயாண்டு சங்கமிருந்தார் எனக் கூறப்படுகின்றது. இவர்களுள் மாந்தர் பலர். துவரைக் கோமான் என்பது துவாரகாபுரிக்குத் தலைவன் எனப் பொருள்பட்ட கிருஷ்ணமூர்த்தியை உணர்த்தும் போலும், இவ்வாறு தெய்வங்களை அங்கத்தினராகக் கொள்ளுதல் எவ்வளவு ஒற்றுமையுடைய தோ, அறிஞர்களே! ஆராய்மின். இரண்டு சங்கமும் இருந்த காலம் 8140 யாண்டுகளாகும் இவ்வளவு நெடுங்காலம் அகத்தியனார் ஒருவரே இருந்தனர் என்பது பொருந்துமோ? சங்கம் என்னும் சொல் ஒன்றே அக்காலத்துச் சங்கமிருந்ததில்லை என்பதை வலியுறுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருநாட்டிற்கு வேறு நாட்டார் வந்து அந்நாட்டின் மொழியைப் பயிலுங்காலத்துள் அவர் முதற்கண் செய்வது இலக்கண நூலாம், மொழியின் இயல்புகளை நன்கு உணர்வதற்கு இலக்கண நூலே ஆதாரமானது. இக்காலத்து ஐரோப்பியர் இந்நாட்டிற்கு வந்து தமிழ் பயிலுங் காலத்து முதற்கண் செய்தது இலக்கணமே. வீரமாமுனி யென்பார் தமிழில் தொன்னூல் என்னும் இலக்கண நூலைச் செய்தது இக்காரணம் பற்றியேயாம்.

"தொல்காப்பியனார் அகத்தியனாரோடு வந்தவராயின் அவர்முதற்சங்கத்தில் 4440 யாண்டு இருந்த பின்னர் இரண்டாஞ் சங்கத்தில் புலவராயிருக்க வேண்டுமன்றோ? அகத்தியனாரேயன்றி அவர் தம் மாணாக்கரும் அத்துணை நீண்ட காலம் வாழ்ந்தனர் என்பது வியப்பினும் வியப்பே! ஆரியராயினர் நீண்ட காலம் வாழ்ந்தனரென்று வற்புறுத்திக்கூறுவது நம் நாட்டின் வழக்கம் போலும்." பக் 21.

"அகத்தியனாரைப் பற்றிச் சங்க நூல்களிலும் காவியங்களிலும் வந்துள்ள செய்திகளை ஆராய்வோம். நமக்கு இப்பொழுது கிடைத்துள்ள தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு ஆகிய நூல்களில் ஓரிடத்தும் அகத்தியனாரைப்பற்றி ஒரு சிறிதும் காணப்படவில்லை. இத்தகைய அரிய முனிவரைப் பற்றி - தமிழ் மொழிக்கு முதற்கண் இலக்கணம் வகுத்த ஆசிரியரைப்பற்றி - தமிழ் நாட்டில் வந்து இரண்டு சங்கங்கள் நிறுவிய முனிவரைப் பற்றி, ஆயிரக்கணக்கான யாண்டுகள் வாழ்ந்த, வாழ்கின்ற பெரியாரைப்பற்றி, மிகப் பழமையாக வழங்கும் சங்க நூல்கள் ஏதுங் குறித்துக் கூறாதது என்னே! அகத்தியனார்க்குத் தலை மாணாக்கராக விளங்கிய தொல்காப்பியனார் யாண்டும் இவரைத் தம் ஆசிரியரெனக் குறியாதது யாது காரணம்? அவர் தம்மனைவியாராகிய லோபாமுத்திரையை அழைத்து வந்ததனாலேற்பட்ட குற்றத்தினால் ஒருவரை யொருவர் சபித்துக்கொண்டதன் பொருட்டு ஒருகால் குறிக்காது விட்டாரெனின், மற்றையோராவது எங்கேனும் அவர் தம் ஆசிரியரென்பதைக் குறித்தி ருக்கலாமே. அவ்வாறும் காணோமே. உரையாசிரியர்களுக்கு மட்டும் அகத்தியச் சூத்திரங்கள் கிடைத்து அவர்கள் குறித்தது எங்ஙனம் என ஒரு ஐயப்பாடு நிகழும்.

"இறையனார் களவியலில் குறித்தபடி மூன்று சங்கங்களுக்கும் குறித்த யாண்டு 9990 எனவே, ஏறக்குறைய பதினாயிரம் வருஷங்களாகும். 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த உரையாசிரியர்கள் காலத்தைக் கணக்கிட்டால் 11000 வருஷமாகும். இவ்வளவு நீண்ட காலத்துக்கு பிறகு உரையாசிரியர்களுக்கு மட்டும் கிடைத்த சூத்திரங்கள் சங்கத்தாருக்குக் கிடைக்காததென்ன? ஒரு கால் கடைச்சங்க காலத்துக்குப் பின்னர் எவரேனும் ஒருவர் எழுதி அதனை அகத்தியர் பேரால் வெளியிட்டனரோ வென சிலர் ஐயப்படுகின்றனர்.

"இவற்றுள் எல்லாம் தொல்காப்பியனார் முதலிய மாணாக்கர்கள் சொல்லாமல் விட்டதே பெருங்குறையாகக் காண்கின்றது. அன்றியும் அகத்தியனாரைப்பற்றியும் அவர் நிறுவிய சங்கங்களைப் பற்றியும் சங்கநூலில் ஓரிடத்தும் காணப்படாமை பெரிதும் வியக்கத்தக்கது, சங்கம் என்னும் சொல் அக்காலத்தில் வழக்கில் இருந்திராது. அல்லது அதனை யுணர்த்தும் வேறு தமிழ்ச் சொல் அக்காலத்தில் வழங்கியிருத்தல் கூடுமோ வெனின், 'கூடல்.' 'கழகம்' என்பன சங்கம் என்னும் சொல்லுக்கேற்ற தமிழ் மொழிகளாகக் கூறலாம். ஆயினும் அவை 'சங்கம் என்னும் பொருளில் பழந்தமிழ் நூல்களில் வரக்காணோம். கூடலென்னுஞ் சொல் மதுரைக்குப் பெயராக வந்திருக்கலாமோவென ஊகிக்க இடமுண்டு. கழகம்என்பது பொதுவாகக் கூட்டம் எனப் பொருள்பட்டுப் பின்னர் புலவர் கூடுமிடம் சூதாடுமிடம், முதலியவற்றையும் குறிக்கின்றது, இவ்வளவு பெரிய சங்கத்திற்குத் தனியாக ஒரு தமிழ்ச் சொல்லும் ஏற்படாதிருக்குமா? ஆனால், சகரக் கிளவி கடைச்சங்க காலத்தில் சில வந்திருப்பதனால், கடைச்சங்கம் மட்டும் அப் பெயரால் இயைத்திருப்பது ஒருவாறு பொருந்தும். சகரம் மொழிக்கு முதலில் வாராதென்பதும் பற்றியே, சபை, சமணர், சமயம் முதலிய வட சொற்களை, அவை, அமணர், அமயம் எனத்திருத்தி வழங்கிய தமிழ் மக்கள் சங்கமென்னுஞ் சொல்லை மட்டும் முதற் சங்க முதற்கொண்டு வழங்கி வருவாரோ, அப்படி வழங்குவதாயின், அதனை அங்கம் என்றன்றோ வழங்கியிருத்தல் வேண்டும்." Pg 20-22.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நமக்கு இப்பொழுது கிடைத்துள்ள தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க் கணக்கு ஆகிய நூல்களில் ஓரிடத்தும் அகத்தியனாரைப்பற்றி ஒரு சிறிதும் காணப்படவில்லை. இத்தகைய அரிய முனிவரைப் பற்றி – தமிழ் மொழிக்கு முதற்கண் இலக்கணம் வகுத்த ஆசிரியரைப்பற்றி – தமிழ்நாட்டில் வந்து இரண்டு சங்கங்கள் நிறுவிய முனிவரைப் பற்றி, ஆயிரக்கணக்கான யாண்டுகள் வாழ்ந்த, வாழ்கின்ற பெரியாரைப்பற்றி, மிகப் பழமையாக வழங்கும் சங்க நூல்கள் ஏதுங் குறித்துக் கூறாதது என்னே!**

(இறையனார் களவியல் எழுதிய நக்கீரர் காலம் பொ. ஆ. 7 ஆம் நூற்றாண்டு ஆகும். – கட்டுரை ஆசிரியர்.)

"பரிபாடலில் ஒரு செய்தி காண்கிறது. (எழுமின் மண்டலத்து பொதியின் முனி – கட்டுரை ஆசிரியர்) அது அக்த்திய நட்சத்திரம் பற்றியது. அகத்தியர் நட்சத்திரம் அகத்தியர் பெயரால் ஏற்பட்டது. அது நெடுநாளைய வழக்கைக் குறிப்பதாயினும் தமிழ் நூலில் அவர் வந்த அளவு கவனிக்கலாமே யல்லாது வேறு யாதும் கொள்ள முடியாது. சில செய்திகளில் சிறந்த மாந்தர் பெயரைச் சிறந்த பொருள்களுக்கு இட்டு அழைப்பது மாந்தர் கொள்கை. அது மலை, நதி, ஊர் முதலியவற்றுக்கும் பொருந்தும். அதுபோல அகத்தியனார் சிறந்தவராயிருத்தலும் அவர் பெயரை அந்த நட்சத்திரத்துக்கு இட்டிருக்கலாம். அதனால் அவர் தமிழுக்கு ஏதும் செய்தாரென்று நிச்சயிக்க முடியாது." (பக். 24)

"சிலம்பும் மேகலையும் கேசியும் அகத்தியர் பெயர் குறிப்பிடுவது அகத்தியர் தமிழ்ப் புலவர் என்பதால் அல்ல.

(சிலம்பு கூறும் சயந்தனும் அகஸ்தியனும் இந்திர சபை சார்ந்தவர்கள். மணிமேகலை, நீலகேசி கூறும் அகஸ்தியன் திலோத்தமை மகன். இக்கூற்றுகளைக் குறிக்கும் பகுதிகளையே மேற்படி நூலில் 23 -26 பக்கங்களில் நமச்சிவாயனார் எடுத்தாளுகிறார். – கட்டுரை ஆசிரியர்)

"பிற புராணங்களில் கூறப்படும் அகஸ்திய கதைகள் தமிழ்நாட்டில் விநாயகர் வழிபாடு தொடங்கப்பட்டதற்கு பிறகு உருவானவை ஆகும்." (பக். 26)

"அகஸ்தியர் ஆரிய மதக் கொள்கைகளை தமிழ்நாட்டில் பரப்புவதற்கும் , ஆரியர்களைத் தமிழ்நாட்டில் குடியேற்றுவதற்கும் செய்த முயற்சியே அவர் தென்னாடு சென்றதுக்குக் காரணம் என்கிறார் கங்குலி." பக். 27

இனி மயிலை சீனி வேங்கடசாமி தமது மறைந்து போன தமிழ்நூல்கள் குறித்த புத்தகத்தில் அகத்தியம் இலக்கண நூல் குறித்து எழுதியுள்ளதாவது.

அகத்தியர் என்பவர் செய்தது அகத்தியம் என்னும் இலக்கண நூல். அகத்தியர் என்னும் பெயருள்ளவர் பலர் இருந்திருக்கிறார்கள். சிவபெருமானிடத்தில் தமிழ் கற்றுத் தலைச்சங்கத்தில் புலவராகத் திகழ்ந்த அகத்தியர் ஒருவர் உளர். பௌத்தக் கடவுளாகிய அவலோகிதர் என்னும் போதிசத்துவரிடத்தில் தமிழ் கற்ற ஓர் அகத்தியர் உளர். இவர் பௌத்தர்களால் போற்றப்படுகிறவர். இராமாயணத்தில் கூறப்படுகிற அகத்தியர் ஒருவர் உளர். பாரதத்தில் கூறப்படுகிற கண்ணபிரான் காலத்தில் இருந்த ஓர் அகத்தியர் உளர். இந்த அகத்தியர், கண்ணபிரானிடம் சென்று அவர் அனுமதி பெற்று, துவாரகையிலிருந்து யதுகுலத்தைச் சேர்ந்த பதினெண்குடி வேளிரையும் அருவாளரையும் அழைத்துவந்து, அவர்களைத் தமிழ்நாட்டிலே குடியேற்றியவர் என்று நச்சினார்க்கினியர் கூறுகிறார். ....... இன்னும் ஜாவா, சுமத்திரா முதலிய தீவுகளுக்குச் சென்று, அங்கு சைவசமயத்தைப் போதித்த சிவகுரு என்னும் அகத்தியரும் ஒருவர் உளர். இவ்வாறு அகத்தியர் என்னும் பெயருள்ளவர் பலர் இருந்திருக்கிறார்கள். இவர்களில் எந்த அகத்தியர் அகத்தியம் என்னும் நூலை இயற்றினார் என்பது தெரியவில்லை. வெவ்வேறு காலத்திலிருந்த இந்த அகத்தியர்களில் சிலர் தத்தம் பெயரால் அகத்தியம் என்னும் சில நூல்களை இயற்றியிருத்தலும் கூடும். சிற்றகத்தியம், பேரகத்தியம் என்னும் நூல்கள் இருந்தன என்று கூறப்படுகின்றன. காக்கை பாடினியார் என்னும் பெயருள்ளவர் இருவர் தத்தம் பெயரால் இயற்றிய 'காக்கைபாடினியம்' பெருங்காக்கைப்பாடினியம், என்னும் நூல்களுக்குப் சிறுகாக்கைப்பாடினியம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்கள் வழங்கப்படுவதுபோல, வெவ்வேறு காலத்திலிருந்த அகத்தியர்கள் தத்தம் பெயரால் இயற்றிய அகத்தியம் என்னும் நூல்களுக்குச் சிற்றகத்தியம், பேரகத்தியம் என்று பெயர் வழங்கினார்கள் போலும்.

தலைச்சங்கத்தில் இருந்தவரும், தொல்காப்பியருக்கு ஆசிரியர் என்று கூறப்படுகிறவருமாகிய அகத்தியனார் செய்த அகத்தியம் என்னும் நூல் இடைச்சங்க காலத்திலேயே மறைந்துவிட்டது என்பர். அதாவது, தொல்காப்பியம் தோன்றிய பிறகு அகத்தியம் இறந்துவிட்டது என்பர். பிற்காலத்தில், அகத்தியர் பெயரால் அகத்தியம் என்னும் நூலைப் புனைந்தெழுதி வழங்கிவந்தார்கள் என்று கருதுவதற்கு இக்காலத்து வழங்கும் 'அகத்திய'ச் சூத்திரங்கள் இடந்தருகின்றன. உதாரணமாக இதைக் காட்டுவோம்: நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர். (பெயரியல், 16ஆம் சூத்திர உரை) கீழ்க்காணும் அகத்தியச் சூத்திரத்தை மேற்கோள் காட்டுகிறார்.

கன்னித் தென்கரைக் கட்பழந் தீவம் சிங்களங் கொல்லங் கூவிள மென்னும் எல்லையின் புறத்தவு மீழம் பல்லவம் கன்னடம் வடுகு கலிங்கந் தெலிங்கம் கொங்கணம் துளுவம் குடகம் குன்றம் என்பன குடபா லிருபுறச் சையத் துடனுறைபு பழகுந் தமிழ்திரி நிலங்களும் முடியுடை மூவரு மிடுநில வாட்சி அரசுமேம் பட்ட குறுநிலக் குடிகள் பதின்மரு முடனிருப் பிருவரும் படைத்த பன்னிரு திசையிற் சொன்னய முடையவும் என்றார் அகத்தியனார்."

இதே அகத்தியச் சூத்திரத்தைச் சில வேறுபாடுகளுடன் தெய்வச் சிலையார் தமது தொல்காப்பிய உரையில் (சொல், எச்சம், 4ஆம் சூத்திர உரை ) மேற்கோள் காட்டுகிறார். அது:

கன்னித் தென்கரைக் கடற்பழந் தீபம் கொல்லங் கூபகஞ் சிங்கள மென்னும் எல்லையின் புறத்தவும் கன்னடம் வடுகம் கலிங்கந் தெலிங்கம் கொங்கணம் துளுவம் குடகம் குன்றகம் என்பன குடபா லிருபுறச் சையத் துடனுறைபு புகூஉந் தமிழ்திரி நிலங்களும் முடிநிலை மூவர் இடுநில வாட்சியின் அரசுமேம் பட்ட குறுநிலக் குடுமிகள் பதின்மரு முடனிருப் பிருவரும் படைத்த பன்னிரு திசையில் சொன்னய முடையவும்' என்பது அகத்தியச் சூத்திரம்."

இவ்வாறு இவர்கள் மேற்கோள் காட்டுகிற அகத்தியச் சூத்திரத்தில் கொங்கணம், துளுவம், குடகம் என்னும் குண்டகம் தமிழ் திரிந்த நிலங்கள் என்று கூறப்படுகின்றன. இந்த நாடுகள், கடைச்சங்க காலத்தில், அதாவது, கி.பி. 300க்கு முன்பு தமிழ் நாடுகளாகவும், தமிழ்மொழி வழங்கிய இடங்களாகவும் இருந்தன என்பதைச் சரித்திர ஆராய்ச்சி வல்லார் அறிவர். இந்த தலங்களில் தமிழ் மொழி திரிந்து வேற்று மொழியானது பிற்காலத்தில் கி.பி. 300க்குப் பிற்பட்ட காலத்தில். எனவே, இந்நிலங்களைத் தமிழ் திரிந்த நிலங்கள் என்று மேற்படி அகத்தியச் சூத்திரம் கூறுகிறபடியால். இந்தச் சூத்திரத்தை எழுதிய அகத்தியர், கடைச்சங்க காலத்திற்குப் பிற்காலத்தில் இருந்த அகத்தியராதல் வேண்டும்: அல்லது, அகத்தியர் பெயரால் பிற்காலத்தில் இருந்த ஒருவர் புனைந்துரைத்த சூத்திரமாதல் வேண்டும்.

மேலும் மயிலைநாதர் மேற்கோள் காட்டுகிற மேற்படி அகத்தியச் சூத்திரத்தில், பல்லவம் என்னும் நாடு தமிழ் திரிந்த மொழி வழங்கும் நாடு என்று கூறப்படுகிறது. பல்லவம் என்பது பல்லவ நாடு' அதாவது, பல்லவ அரசர்கள் அரசாண்ட நாடு. அது தொண்டைநாடு என்றும், தொண்டை மண்டலம் என்றும், அருவா நாடு என்றும் வழங்கப்படும். இந்தச் சூத்திரம், பல்லவ நாட்டை (தொண்டை நாட்டை) த் தமிழ் திரிந்த நிலம் என்று கூறுவது வியப்பாக இருக்கிறது. சிங்களம், கொங்கணம், துளுவம், குடகம் முதலிய நாடுகளைப்போன்று பல்லவ நாடு (தொண்டை மண்டலம்) தமிழ் திரிந்து மொழி வேறுபட்ட நிலமா? அல்லவே! தமிழ் நாடாகிய தொண்டைமண்டலத்தையும் (கொங்கணம், துளுவம், குடகம் முதலியவை போன்று) தமிழ் திரிந்த நிலம் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? இவற்றையெல்லாம் ஆராயும் போது, இந்த "அகத்தியச் சூத்திரம் போலி அகத்தியச் சூத்திரம் என்று கருத வேண்டியிருக்கிறது. - பக் 205-208, மறைந்து போன தமிழ்நூல்கள்

இனி, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அகஸ்திய புராணம் குறித்து அம்பலப்படுத்துவது காணலாம்:

வடநாட்டுத் தென்னாட்டுப் போராட்டம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. புராண கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கொண்டு இருந்து வந்திருக்கிறது. இதிகாசங்களுக்கெல்லாம் முந்தியது புராணம், புராணங்களுக்கெல்லாம் முதன்மையானது கந்தபுராணம். கந்த புராணத்திலேயே இந்த வடநாடு தென்னாடு போராட்டம் துவக்கப்பட்டுவிட்டது. அதிலுள்ள சிறுகதையைக் கேளுங்கள்.

கற்பனையாக இருந்தாலும் அதிலுள்ளதைக் கவனித்துப் பாருங்கள். ஆரியக் கடவுளாகிய சிவனுக்கும் (ஆரியர் தலைவன்) பார்வதிக்கும் வடநாட்டில் திருமணம் நடக்கிறது. அப்போது தேவர்கள் (வடநாட்டவர். ஆரியர்கள்) தென்னாடைவிட வடநாடுதாழ்ந்துவிட்டதையும் சிவனிடம் வருத்தத்துடன் கூறுகிறார்கள். சிவன் தென்னாட்டைத் தாழ்த்தவேண்டி அகத்தியனை அனுப்புகிறார். அகத்தியன் தெற்கு நோக்கி வருகிறான். திராவிட நாட்டின் வடக்கெல்லை விந்தியமலை அவனைத் தடுக்கிறது. அகத்தியன் சினந்து அம்மலையை அழுத்திவிடுகிறான். (அங்குள்ள மக்களை வென்று விடுகிறான்) மேலும் தெற்கு நோக்கிச் செல்கிறான். வாதாபியும் வில்லவனும் தடுக்கிறார்கள். அவர்களையும் வென்று, கொண்டுபோய்த் தென்னாட்டில் இராவணனுடைய ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்து, தமிழை உண்டாக்கினான். அதாவது முதலில் மொழியில்தான் அகத்தியன் கை வைத்தான். மொழி ஒழிக்கும் வேலைதான் இவர்கள் முதல் வேலை. இதுதான் இவர்களின் நடைமுறைப் பழக்கம்.

மொழியாராய்ச்சி, 1948 வெளியான நூல்.

ஆக. அகஸ்தியர் என்னும் ரிஷி தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்க வில்லை. அப்படியே சங்க காலத்தில் இல்லை: ஏன் சிலப்பதிகாரம் வரை அகஸ்தியர் பெயர் காணப்படவில்லை. அதனால் அகஸ்தியர் தொல்காப்பியருக்கு முன்னர் தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர் இல்லை. அவர் சங்கம் அமைக்கவில்லை. துவாரகையில் இருந்து யதுகுலத்தவர்களை அழைத்துவந்து இங்கு பாண்டியர் வம்சத்தை உருவாக்கினார் என்பது பொய். அவர் முதற் சங்கம், இடைச் சங்கத்துக்கு வழிகாட்டவில்லை.

அகஸ்திய புராணிகம் என்பது கட்டுக்கதை. அறிவியலுக்குப் புறம்பானது. தமிழ்நிலத்தையும் பண்பாட்டையும் ஆக்கிரமிப்பதற்காக புனையப்பட்ட கற்பனை பாவை. அதுவும் பொ. ஆ 700 க்குப் பின் தொடங்கு 1400 இல் உச்சமடைந்த புனிதப்புளுகு.

ஒருவேளை அகஸ்தியர் என ஒருவர் இருந்ததாக ஒப்புக்கொண்டாலும் அவர் சமஸ்கிருத இலக்கண - இலக்கியம் பயின்றவராக இருக்கலாம். அவர் ஏதோ (!?) ஒரு காரியத்துக்காக தமிழ்நாடு வந்து தமிழ் பயின்றிருக்கலாம். அதுவும் பொ. ஆ. 7 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் இங்கு வந்திருக்கலாம். அப்படி வந்தாலும் அந்த பார்ப்பன அகஸ்தியரால் தமிழ் மண்ணில் எதுவும் சாதிக்க முடிந்திருக்கவில்லை என்பதை எந்த இலக்கிய சான்றுகளும் இன்மையால் புலனாகிறது. இவற்றை பின்னர் உரையாசிரியர்கள் கட்டுக்கதைகள் உருவாக்கி புராணிகப் படுத்தியிருக்கலாம்.

ஆனால், உரையாசிரியர்கள் குறிப்பிடுகிறபடி, பிற்கால இலக்கியங்களில் காணப்படுகிறபடி அகஸ்தியர் என்று ஒருவர் இருந்தாரா? அவர் எப்போது வாழ்ந்தார? என்ற கேள்விகளுக்கு இக்கட்டுரையின் தொடக்கத்தில் கையாளப்பட்ட மேற்கோள்தான் பதில்:

“அகஸ்தியர் தென்பகுதிக்குச் சென்றது வெறும் தொன்மப் புனைவா அல்லது பெருங்கற்காலப் பெரும் துறவிகளோடு உண்மையிலேயே தொடர்பு கொண்டதா என்பதைத் தீவிரமான, முறைப்படுத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலமே தெளிவுபடுத்தமுடியும்.” (வரலாறு, பண்பாடு, அறிவியல் : டி டி. கோசம்பி வாழ்வும் ஆய்வுகளும், பக்கம்164)

**பயன்பட்ட நூல் பட்டியல்:**


Agastya in Tamil Land, K. N. Sivaraja Pillai, University of Madras.

அகத்தியர் ஆராய்ச்சி, கா. நமச்சிவாய முதலியார், குடியரசு பிரசுராலயம். ஈரோடு, 1931

மறைந்து போன தமிழ் நூல்கள், மயிலை சீனி வேங்கடசாமி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 2022

மொழியாராய்ச்சி, தந்தை பெரியார், 1948

வரலாறு – பண்பாடு – அறிவியல்: டி. டி. கோசம்பி வாழ்க்கையும் ஆய்வுகளும், ஆறாம்திணை, இரண்டாம் பதிப்பு, 2023

https://www.tamilvu.org/en/library

Wikipedea.com

Deepseek AI


*கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ஜி. ஜான் சாமுவேல்

# வள்ளுவரைத் தேடி ஒரு பயணம்



(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருவள்ளுவர் பகவன் என்ற பிராமணனுக்கும் ஆதி என்ற புலைச்சிக்கும் பிறந்தவர் என்ற புதுக்கதை பிறந்தது. தந்தை பிராமணர் என்று வள்ளுவரைப் பிராமணராக்கும் முயற்சி வந்தது. வள்ளுவர் மட்டுமல்ல அவ்வை, கபிலர் போன்றோரும் இவ்வாறு வள்ளுவருக்கு உடன் பிறப்பாக்கப்பட்டனர். வள்ளுவத்தை எம்மோத்து (எமது வேதம்) என்று ஏற்றுக் கொள்ளும் மரபு பிறந்தது. இதைத் தொடர்ந்து பின்னர் வந்த பரிமேலழகர் எனும் வைணவ உரையாசிரியர் தமது திறமைமிக்க உரை எழுதும் ஆற்றலாலும், புலமையாலும் திருக்குறளுக்கு வைதீகச் சாயத்தை அதிகமாகப் பூசி மூலநூலை வளைத்தும் ஒடித்தும் உரை எழுதவே, இல்லாத புது விளக்கங்கள் அனைத்தும் திருக்குறளில் புகுந்து அதன் மூலப் பொருண்மையைச் சிதைத்தன. இப்போது மூல நூலைப் பயிலாமல் பரிமேலழகர் உரை வாயிலாகத் திருக்குறளைப் பயின்று தவறுபட மொழி பெயர்ப்போரின் எண்ணிக்கையும் ஆய்வு செய்வோரின் பெருக்கமும் மிகுந்துள்ளன. தனக்குத் தொடர்பில்லாத வைதீகச் சுமையினைத் தொடர்ந்து சுமந்து கொண்டு திருக்குறள் தற்போது தள்ளாடுகின்றது.

திருக்குறளை எழுதியவர் யார் என்று தெளிவாகத் தெரியாத போதிலும் திருவள்ளுவர்தான் திருக்குறளை எழுதினார் என்ற எண்ணம் ஆழமாகவே காலூன்றிவிட்டது. காலங்காலமாக ஏற்கப்பட்டுத் தொடர்ந்து வரும் இம்மரபை மாற்றவேண்டும் என்பது நமது நோக்கமல்ல. மெய்ப்பொருள் காண்பதுவே நேரிய செயல். காலங்காலமாகத் தொடர்ந்து நிலைபெற்றுவிட்ட இந்தக் கருத்தை எதிர்ப்பவர் நச்சினார்க்கினியர் கூறிய "குன்றுமுட்டிய குரீஇபோலவும் குறிச்சிபுக்க மான்போலவும் இடர்ப்படும் என்க". எவ்வாறாயினும் இல்லாத திருவள்ளுவரை விட நம் கண்முன்னே உயிரோட்டமாகக் காட்சி தரும் வாழும் நூலான திருக்குறளே நமக்கு முக்கியம்.

திருக்குறளைப் புரிந்து கொள்ள எந்த வகையிலும் அதை எழுதிய ஆசிரியரின் வாழ்க்கை வரலாறு அதிகமாக நமக்குத் தேவைப் படுவதில்லை. இதுவே ஒரு செந்நெறி இலக்கியம் குறித்த தேடலுக்கும் தற்கால இலக்கியத் தேடுதலுக்கும் இடையே உள்ள வேறுபாடாகும். திருக்குறளைப் போன்ற ஒரு செவ்வியல் இலக்கியத்தைப் புரிந்து கொள்ள அதன் ஆசிரியர் எங்கு பிறந்தார், யாருக்குப் பிறந்தார் என்ற தகவல்கள் தேவையில்லை. திருக்குறளைப் புரிந்து கொள்ள திருக்குறளே போதுமானது என்பேன். அதை ஆழமாக ஆராய வேண்டுமென்றால் அது தோன்றிய சமுதாய அரசியல் பின்னணிகள் ஓரளவு தேவைப்படும். செந்நெறி இலக்கியங்களின் படைப்பாளர்கள் காலதேச வர்த்தமானங்களைத் தாண்டி நின்று இலக்கியப் படைப்புக்களைத் தந்துள்ளனர். எனவே அவர்தம் படைப்புக்கள் தற்சாராப் படைப்புக்களாக அமைகின்றன. மானிடப் பொதுமைப் பண்புகளைப் பிரதிநிதிப்படுத்தி தம் வரலாற்றை அவர்கள் அதில் பதியவிடாது இலக்கியங்களைப் படைக்கின்றனர்.

திருக்குறளில் அறம் உரைக்கும் ஒரு சான்றோனின் குரலையும், ஓர் ஒழுக்க நெறியாளரின் குரலையும், நல்லாசிரியனின் குரலையும், நல்ல அமைச்சனின் குரலையும், பண்பட்ட தந்தையின் குரலினையும், காமத்துப் பாலில் ஒரு காதலனுடைய குரலினையும், காதலியின் குரலையும் நாம் மாறி மாறிக் கேட்கின்றோம். நூலைப் படைத்தவன் நூலைப் படைத்து விட்டு, பின்னர் நூலிற்கு வெளியில் நின்று தன் படைப்பைப் பார்க்கிறான். தன் சொந்த உணர்வுகளையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுணர்வுகளாக (Art Emotion) மடைமாற்றம் செய்கின்றான். தற்காலக் கவிதைகள் பெரும்பாலும் இப்படி அமைவதில்லை. அவற்றில் பெரும்பாலும் கவிஞன் நேராகத் தன்னுணர்வை வெளிப்படுத்துவதால் உணர்வை வெளிப்படுத்தும் கவிஞனின் வாழ்க்கை வரலாறு அல்லது ஆளுமை அவனது படைப்பை முழுமையாகப் புரிந்துகொள்ள நமக்குத் தேவைப்படுகின்றது. பாரதியாரின் பாடல்களைப் புரிந்து கொள்ள பாரதியின் வாழ்க்கை வரலாறு நமக்குத் தேவை. சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகளின் வாழ்க்கை வரலாறு நமக்குத் தெரியாமலே நாம் படித்துச் சுவைக்க முடியும். சங்கக் காதல் பாடல்களைப் புரிந்து கொள்ள அக இலக்கிய மரபுகள் நமக்குத் தெரிந்தால் போதுமே தவிர பாடியவர்களின் வாழ்க்கை வரலாறு நமக்குத் தெரியத் தேவையில்லை.

திருக்குறளை எழுதியவராகக் கருதப்படும் திருவள்ளுவர் தொடர்பாக சென்னை, மதுரை, தென்குமரி ஆகிய மூன்று இடங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை என்று நண்பர் பேராசிரியர் ஆறுமுகம் பரசுராமனிடம் நான் எடுத்துக் கூறினேன். இடைக்காலச் செவிவழி மரபுகள் திருவள்ளுவர் மயிலாப்பூரில் தன் மனைவி வாசுகியுடன் வாழ்ந்தார் என்றும் நெசவுத் தொழிலை அவர் செய்து வந்தார் எனவும், அவர் மனைவி மாண்டபோது அடிசிற்கினியாளே எனத் தொடங்கும் கையறுநிலைப் பாடலைப் பாடியதாகவும் அவர் இறந்தபோது நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் திருவள்ளுவர் திருக்கோயில் கட்டப்பட்டதாகவும் தெரிவிக்கின்றன. திருவள்ளுவர் திருக்கோயிலைப் பார்க்க வேண்டும் என்று பல நாட்கள் நான் எண்ணியதுண்டு. கபாலீசுவரர் கோயிலின் பக்கத்திலுள்ள இந்தக் கோயிலைப் பார்க்க ஒரு நாள் நானும் நண்பர் பேராசிரியர் ஆறுமுகம் பரசுராமன் அவர்களும் சென்றோம்.

திருவள்ளுவர் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் இக்கோயில் கட்டப்பட்டதாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. திருவள்ளுவர் மைலாப்பூரில் வாழ்ந்தார் என்பதையும் அவர் நெசவுத் தொழில் செய்து வந்தார் என்பதையும் ஏராளமான பிறநாட்டு அருட்தொண்டர்கள் நம்பி வந்தனர். இவர்கள் இதனால் திருக்குறளை *Weaver's Wisdom* என்று அழைத்தனர். திருவள்ளுவர் மைலாப்பூரில் வாழ்ந்த காலத்தில் தமிழகத்திற்கு வருகை தந்த தூய தோமா சின்னமலையில் மாண்டு பின்னர் சந்தோமில் தூய நல்லடக்கம் செய்யப்பட்டார். தூய தோமாவும், திருவள்ளுவரும் நண்பர்கள் என்பதையும் திருவள்ளுவர் அறம் குறித்து வெளியிட்ட கருத்துகள், குறிப்பாக, உலகு தழுவிய அன்பெனும் பாடு பொருள் (cosmic love) ஆகியன கிறித்தவப் போதனைகளின் எதிரொலியே என்பதுவும் பலரின் நம்பிகை. இதனை ஜி.யு. போப் மிக ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார். கிறிஸ்து பெருமானின் மலைப் பொழிவு திருக்குறளில் எதிரொலிப்பதாக அவர் விரிவாக எழுதிச் சென்றுள்ளார்.

இந்திய தத்துவச் சிந்தனைகளையும் அறவியல் கோட்பாடுகளையும் பரந்த நிலையில் கீழ்க்கண்ட மூன்று நிலைகளில் விளக்கலாம்.

1. கடவுள் நம்பிக்கை மலிந்த, சடங்காச்சாரங்கள் நிறைந்த, பிறப்பால் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாத வைதீகம் (Orthodox Hinduism)

2. கடவுள் நம்பிக்கையை முற்றிலும் புறக்கணித்த, உலகியல் மட்டுமே சார்ந்த பொருள் முதல்வாதம் (Materialism)

3. மேற்கூறிய இரண்டிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட நடுப்பாதை (Middle path); கடவுளைப்பற்றி அதிகக் கவலைப்படாத, ஒழுக்க நெறிக்கு முதன்மை கொடுத்த, ஜீவகாருணிய ஒழுக்கத்தைக் கடைபிடித்த, சமுதாய ஏற்ற தாழ்வைக் களைந்தெறிந்த ஓர் ஒழுக்கநெறி; சிறந்த கருணை மலிந்த அறவியல் கோட்பாடு இது. இதில் பௌத்தம், சமணம், ஆசீவகம் ஆகிய மூன்று சமயங்களும் அடங்கும்.

மேற்கூறிய மூன்று பிரிவில் திருக்குறள் இறுதிப் பிரிவின் சாயலை இறுக்கமாகத் தழுவிய ஒரு வாழ்வியல் ஒழுக்கக் கோட்பாடு என்பதை நாம் மறந்துவிட முடியாது. இப்பிரிவினர் வேத மறுப்புக் கோட்பாட்டில் உறுதியாக இருந்தனர். மனித ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் தந்தனர். ஊழை நம்பினர்; பிறப்பால் அனைவரும் சமம் என்றனர். கடவுளை மறுக்கவில்லை, எனினும் கடவுளுக்கு அதிக முக்கியத்துவம் தரவில்லை. கொல்லாமை, கள்ளுண்ணாமை ஆகியவற்றிற்குச் சிறப்பிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தனர். மனிதன் தன் ஒழுக்கத்தால் கடவுள் நிலைக்கு உயர்த்தப்படுவதை எடுத்தியம்பினர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்

தெய்வத்துள் வைக்கப்படும்

என நம்பினர். இது முதற்பிரிவினரின் அவதாரக் கோட்பாட்டிற்கு முற்றிலும் மாறுபட்டது.

பௌத்தம், சமணம், ஆசீவகம் போன்ற சமயங்கள் இப்பிரிவைச் சார்ந்தன. இப்பிரிவை *Heterodoxies* என்பர். இச்சமயங்கள் பெரும்பாலும் வர்ணாசிரமமுறைப்படி அமைந்த நான்கு வகை வர்ணப்பிரிவில் சத்திரியர் அல்லது அரசகுலச் சார்பினரால் தோற்றுவிக்கப்பட்டவை. நல்ல மன்னர்களைத் தெய்வ நிலையில் வைத்து இவர்கள் போற்றினர்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்"

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்

அடிதழீஇ நிற்கும் உலகு"

என்று திருக்குறள் சுட்டுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவர்கள் போரையும், மயக்கும் கள்ளையும், ஒழுக்கச் சீர்கேட்டையும் வெறுத்தனர். இச்சமயங்கள் பெரும்பாலும் வணிக வர்க்கத்தின் ஆதரவில் வளர்ந்தன.

மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் திருக்கோயிலினுள் நுழைந்த போது பல அதிர்ச்சிகள் எனக்குக் காத்திருந்தன. இக்கோயில் முற்றிலும் ஒரு சிவன் கோயிலைப் போன்றே இருந்தது. மூலவராகத் திருவள்ளுவர் சிலை வைக்கப்பட்டிருந்ததே தவிர எந்தக் குறள் நெறியையும் இங்குக் காணமுடியவில்லை. பூணூல் அணிந்த சைவசமயப் பூசாரி ஒருவர் பூசை செய்து, தீபாராதனை செய்து பிரசாதம் கொடுத்தார். நண்பர் பேராசிரியர் ஆறுமுகம் பரசுராமன் அவர்கள் மிக்க மரியாதையுடன் பிரசாதத்தை வாங்கி திருநீற்றை நெற்றியில் அணிந்து கொண்டார். எனக்கு இந்தப் பின்னணி சற்று நெருடலாகவே இருந்தது. 1972-இல் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் இருந்த அரசு இக்கோயிலைப் புனரமைப்பு செய்ய நிதி வழங்கிய கல்வெட்டு கோயில் நுழைவாயின் பக்கம் பொருத்தி வைக்கப்பட்டிருந்தது. மீண்டும் இதைப் புனரமைப்பு செய்ய வருவோரிடம் நன்கொடை கேட்டு விண்ணப்பப் பலகைப் பொருத்தப் பட்டிருந்தது. எப்படியெல்லாம் இந்தத் திருக்குறள் மரபு சிதைக்கப்பட்டிருக்கிறது என்பது வியப்பாகவும் சற்று மனத்திற்கு நெருடலாகவும் இருந்தது.

சமண பௌத்த கோயில்களெல்லாம் சைவ, வைணவக் கோயில்களாக மாற்றப்பட்டிருப்பது போன்று இங்கும் ஏதோ ஒரு அசம்பாவிதம் நடந்திருப்பதாக எண்ணத் தோன்றியது. மைலாப்பூரில் கி.பி 16ஆம் நூற்றாண்டு வாக்கில் வள்ளுவ தேவ நாயனார் என்ற பெயரில் ஒரு சமணப் பெரியவர் வாழ்ந்ததாகவும், அவர் நெசவுச் தொழிலை மேற்கொண்டதாகவும், சில நல்ல தமிழ்ப் பாடல்களைப் பாடியதாகவும், அவருக்கு வாசுகி என்ற மனைவி இருந்ததாகவும், அவர் மனைவி இறந்தபோது "அடிசிற்கு இனியாளே....." என்று தொடங்கும் அருமையான கவிதையை அவர் பாடியதாகவும் இப்பெரியவர் இறந்தபோது அவரை நல்லடக்கம் செய்த இடத்தில் கட்டிய கோயிலே இப்போது திருவள்ளுவர் திருக்கோயில் என்று மயிலையில் காட்சி தருவதாகவும் அறிந்தேன். வள்ளுவ தேவநாயனார் திருவள்ளுவராகவும், வாசுகி திருவள்ளுவரின் மனைவியாகவும் மாற்றப்பட்டு, காலப்போக்கில் சமணக் கோயில் சைவ வழிபாட்டு முறை நடக்கும் கோயிலாக மாற்றம் பெற்றிருப்பது வியப்பிற்குரியது. வள்ளுவ தேவநாயனார் தம் மனைவி வாசுகி இறந்தபோது பாடிய "அடிசிற்கினியாளே" எனத் தொடங்கும் பாடல் திருவள்ளுவர் தம் மனைவி வாசுகியின் மீது பாடிய பாடலாகவும் மாற்றப்பட்டு, நம்ப வைக்கப்பட்டுள்ளது. எப்படியெல்லாம் தமிழ்நாட்டில் கதைகள் வரலாறுகளாகின்றன - தொன்மங்கள் எப்படிப் படைக்கப் படுகின்றன (*Myth Making*) என்பது வியப்பாகவே இருந்தது.

திருவள்ளுவருக்கும் நெசவுத் தொழிலுக்கும் வாசுகிக்கும் தொடர்பு ஏற்படுத்திய இந்தக் கதைகளை ஜி.யு. போப் போன்ற மேல் நாட்டினர் வேறுவழியில்லாமல் நம்பிவிட்டனர். தமது திருக்குறள் மொழிபெயர்ப்பின் முன்னுரையில் இந்தக் கதையைக் குறிப்பிடும் ஜி.யு. போப் அவர்கள் "அடிசிற்கினியாளே" எனத் தொடங்கும் வள்ளுவ தேவ நாயனாரின் பாடலைக் கீழ்க்கண்டவாறு 19-ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டைய ஆங்கில நடையில் மிக அழகாக மொழி பெயர்த்துள்ளார்.

*Sweet as my daily food! O full of love' O wife,*

*Obedient ever to my word! Chafing my feet,*

*The last to sleep; the first to rise, O gentle one!*

*By night, henceforth, what slumber to mine eyes*

வள்ளுவ தேவ நாயனார் கோயிலைச் சமயவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து வள்ளுவ தேவ நாயனாரோடு தொடர்புடைய செய்திகளை அழித்து அவற்றைத் திருவள்ளுவரோடு ஒட்ட வைத்து வரலாற்று மோசடி செய்து அக்கோயிலில் பூணூலணிந்த பூசாரிகள் அமர்ந்து பூசை செய்து அரசிடம் மானியம் பெற்று தற்போது நன்கொடைகள் வசூலித்துக் கொண்டிருப்பது தமிழர்தம் சமயச் சார்பற்றப் புனித நூலான திருக்குறளுக்கு இழைக்கப்பட்ட துரோகம் என்பது மிகைக்கூற்று அன்று. எனவே மயிலையிலுள்ள திருவள்ளுவர் திருக்கோயிலைத் திருக்குறளோடு தொடர்புபடுத்தத் தேவையில்லை. இக்கோவில் தொடர்பாக அறிஞர் ஸ்ரீ பால் போன்ற சமணசார்பு அறிஞர்கள் எழுதியுள்ள நூல்களும் கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கன. அவை குறித்து நான் கேள்விப்பட்டுள்ளேன்; அவற்றை நான் விரிவாகப் படிக்கவுமில்லை.

திருக்குறளுக்கும் திருவள்ளுவருக்கும் மிகப் பெரிய நினைவுச் சின்னமாக அமைவது முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் சென்னையில் மிகச் சிறப்பாகக் கட்டியெழுப்பப்பட்ட வள்ளுவர் கோட்டமாகும். வள்ளுவர் கோட்டமாயினும் அது திருக்குறள் கோட்டமே. இந்நிலையில் ஓர் இலக்கியப் படைப்பிற்கென்று உலகில் கட்டப்பட்ட உயர்தனிச் சின்னமாக இது திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை. கோயில் என்று பெயரிடாது கோட்டம் என்று பெயர் தந்திருப்பது பாராட்டுதலுக்குரியது. பௌத்தர்களும், சமணர்களும் தமிழ்நாட்டில் கோயிலைச் சுட்ட கோட்டம் என்ற பெயரையே பெரிதும் பயன்படுத்தினர். கண்ணகிக் கோட்டம், சக்ரவாளக் கோட்டம் என்ற வழக்குகளைத் தமிழிலக்கியங்களில் நாம் காணலாம். சிலப்பதிகாரக் காலத்தில் பிற கடவுளர்களின் கோயில்களையும் கோட்டம் என்ற சொல்லால் குறித்தனர். இந்நிலையில் வேற்கோட்டம், வச்சிரக் கோட்டம், உச்சிக்கிழான் கோட்டம், நிலாக்கோட்டம், வெள்யானைத் தருக்கோட்டம் போன்ற வழக்குகள் பெருவழக்கில் வந்தன.

மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட தமிழகத்தின் அழகான இந்த நினைவுச் சின்னமான வள்ளுவர் கோட்டம் பேணுதலின்றி சிதைந்து சீரழிந்து கிடக்கின்றது. வணிக நோக்கில் பயன்படுத்தப்படும் இந்த நினைவுச் சின்னத்தின் சுவர்கள் விரிசலுடன் காணப்படுவது வேதனைக்குரியது. நானும் பேராசிரியர் ஆறுமுகம் பரசுராமன் அவர்களும் வருவதைத் தெரிவித்த உடன் வள்ளுவர் கோட்டத்திலுள்ளோர் எண்ணெய் கொண்டுவரச் செய்து அதை திருவள்ளுவர் சிலை முழுவதும் பூசினர். சிலையில் படிந்திருக்கும் தூசு, அழுக்கு ஆகியன தெரியாமலிருக்க இவ்வாறு செய்வதாகக் கூறினர். படியும் தூசியினையும் அழுக்கையும் சுத்தப்படுத்தாமல் மீண்டும் மீண்டும் எண்ணெய் பூசுவதால் திருவள்ளுவர் சிலை பொலிவிழந்து காட்சி தருகின்றது. இந்த நினைவுச் சின்னத்தை வெகு தொலைநோக்குடன் அமைத்த கலைஞருக்கு நன்றி செலுத்திவிட்டுச் சிதைந்து கிடக்கும் வள்ளுவர் கோட்டத்தின் தற்கால நிலைகண்டு மனம் வேதனையால் வருந்த அங்கிருந்து புறப்பட்டோம்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த

நிலைகெட்ட மாந்தரை நினைத்துவிட்டால்"

என்ற பாரதியின் வரிகள் என் நினைவிற்கு வந்தன.

இக்குறைபாடு தற்போது நிறைவு செய்யப்பட்டு, வள்ளுவர் கோட்டம் மீண்டும் பொலிவுபெற்று காட்சி தருகின்றது.

மயிலாப்பூருக்கு அடுத்ததாக திருக்குறளோடு தொடர்புடைய ஊராக மதுரையைத் தான் சொல்ல வேண்டும். மதுரையைச் சார்ந்த பல அறிஞர்கள் திருவள்ளுவர் மதுரையில் பிறந்தவர் என்றும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் திருக்குறள் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்றும் வாதிட்டனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்த சங்கப்பலகை எந்த நூலுக்கும் இடந்தராது திருக்குறளுக்கு மட்டுமே இடம் தந்தது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செய்தி உள்ளது. செவிக்கினிய இந்தச் செய்திகளுக்கு அப்பால் கண்ணால் காணத் தக்கனவாக மதுரையில் திருக்குறள் தொடர்பான எந்தத் தடயங்களும் இல்லை. எனவே நாம் தென்குமரிக்கே செல்லலாம் என்றேன்.

திருக்குறள் தோன்றிய பூமியைத் தேடி நாங்கள் தென்குமரிக்குச் செல்ல முடிவு செய்தோம். மாலையில் சென்னையிலிருந்து விமானம் மூலம் திருவனந்தபுரம் சென்று அங்கிருந்து காரில் நாகர்கோவிலுக்குச் செல்வதாக முடிவு செய்தோம். எங்கள் விமானம் இரவில் திருவனந்தபுரத்தை அடைந்தது. அங்கு என் நெருங்கிய நண்பரும் என்னுடன் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பணிபுரிந்தவருமான டாக்டர் சந்திரபாபு அவர்கள் எங்களுக்காக திருவனந்தபுரம் விமான நிலையத்தில் காத்திருந்தார். இரு மணி நேரப் பயணத்திற்குப் பின் நாகர்கோவிலைச் சென்றடைந்தோம். இரவில் ஓய்வெடுத்துவிட்டுக் காலையில் கன்னியாகுமரி நோக்கிப் புறப்பட்டோம். டாக்டர் சந்திரபாபு, டாக்டர் பத்மநாபன் மற்றும் சில தமிழார்வலர்கள் எங்களுடன் இணைந்து கொண்டனர்.

கன்னியாகுமரியில் முக்கடலும் முத்தமிடும் இடத்தில் வானளாவ உயர்ந்து கம்பீரமாக நிற்கும் திருவள்ளுவர் சிலையை முதன்முதலாகக் கண்ட பேராசிரியர் ஆறுமுகம் பரசுராமன் மிக்க வியப்பில் ஆழ்ந்துபோனார். தண்ணீர் குறைவாக இருந்ததால் திருவள்ளுவர் சிலைக்கு நேரடியாகப் படகுப் போக்குவரத்து அன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எனவே விவேகானந்தர் பாறைக்குச் சென்று அங்கிருந்து வள்ளுவரின் நின்ற கோலத்தைத் தரிசித்தோம். கவிஞர் ஒருவருக்கு இவ்வளவு பெரிய மிகப் பிரமாண்டமான சிலை உலகின் எந்தப்பகுதியிலும் நிறுவப்பட்டதாகத் தெரியவில்லை. இதை நிறுவிய தொலைநோக்கும் தமிழ் நெஞ்சமும் படைத்த கலைஞருக்கு மானசீகமாக நன்றி செலுத்தினோம். திருக்குறள் ஆய்வில் பெருமளவிற்கு ஆர்வம் காட்டாத என்னை இச்சிலை திறப்பு விழாவின்போது உரையாற்ற அழைத்து அதன்மூலம் குறளாய்வை உலகளாவிய நிலைக்கு நான் எடுத்துச் செல்ல வாய்ப்பளித்த மாண்புமிகு கலைஞர், மாண்புமிகு பேராசிரியர், மாண்புமிகு தமிழ்க்குடிமகன் ஆகியோருக்கு மனத்தளவில் நன்றி செலுத்தினேன்.

இலண்டன் மாநகரிலுள்ள நாடகமேதை ஷேக்ஸ்பியரின் *Globe Theatre*-ஐ நான் பார்வையிட்டுள்ளேன். அங்கு ஷேக்ஸ்பியருக்குச் சிறிய சிலைதான் அமைக்கப் பட்டிருந்தது. ஆனால் அந்த நினைவகத்தில் இந்த நாடகமேதை குறித்த தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்ட விதம் என்னை மெய்சிலிர்க்கச் செய்தது. அதைப்போன்று தமிழக அரசும் இந்த சிலைக்குப் பக்கத்தில் திருக்குறள் குறித்த அனைத்து விபரங்களையும் திரட்டி வைத்து இங்கு வருகை தரும் அனைவருக்கும் பயன்படுமாறு ஒரு பெரிய காட்சிக்கூடம் அமைத்திருக்கலாம். அதைச் செய்ய இன்னொரு கலைஞர் பிறந்து வருவது வரை காத்திருக்க வேண்டும் போலும். நமது அரசுகளின் தாய்மொழி ஆர்வம் எவ்வளவு போலியானது என்பதை எண்ண எண்ண நெஞ்சம் ரணமாகியது.

முக்கடலும் சங்கமித்த கன்னியாகுமரியிலிருந்து புறப்பட்டு முட்டம் என்ற அழகிய கடலும் கடல் சார்ந்த நிலமும் கொண்ட நெய்தல் ஊருக்குச் சென்றோம். அதன் பின்னர் திருநயினார்க்குறிச்சி என்ற ஊரைத் திருவள்ளுவர் பிறந்த இடமாகத் தாம் கருதுவதாகக் கூறி எங்களுக்கு முனைவர் பத்மநாபன் அந்த ஊரைக் காட்டினார். திருக்குறள் எழுதப்பட்ட இடம் என்றோ அதன் ஆசிரியர் திருவள்ளுவர் பிறந்த இடம் என்றோ கூறுவதற்குரிய எந்தத் தடயமும் அங்கு இருப்பதாகத் தோன்றவில்லை. பின்னர் வேணாட்டு மன்னர்களில் தலைசிறந்த வீரராகவும் டச்சுப் படையைக் குளச்சல் துறைமுகத்தில் முறியடித்தவருமான மார்த்தாண்டவர்மா வாழ்ந்த பத்மநாபபுரம் அரண்மனையைப் பார்த்துவிட்டு திருவள்ளுவர் பெயரில் அமைந்த வள்ளுவன் பாறை என்ற குன்றுப் பகுதியைப் பார்வையிட்டோம்.

நான் பிறந்த குமரி மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளையும் பல ஆண்டுகளுக்கு முன் பலமுறை பார்த்தவன் என்றாலும் நீண்ட இடைவெளிக்குப் பின் குமரியில் மேற்கொண்ட வள்ளுவப் பயணம் மிகவும் மகிழ்ச்சி தந்தது.

●

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.எட்வின்

# 65/66

"தொன்மைக்கும் கீழடி உண்மைக்கும் ஒன்றிய பாஜக அரசு எப்போதும் எதிராகவே இருக்கிறது" என்று மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சு.வெங்கடேசன் குற்றம் சாட்டுகிறார்.

"பாஜக அரசுதான் கீழடி ஆய்விற்கு நிதியை ஒதுக்கியது. நிதி அமைச்சர் சீதாராமன் கீழடிக்கு வந்து சென்றார். இப்படி இருக்க வெங்கடேசன் ஒன்றிய அரசை குற்றம் சுமத்துவது நியாயமா?" என்று கேட்கிறார் தமிழிசை. ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதல்ல. அவர்கள் முயற்சிக்கும் 'பாரத' கட்டுமானத்தை கீழடி தொன்மை தகர்க்கும் என்பதை உணர்ந்ததும் அந்த நிதியையும் நிறுத்தி ஆய்வை முடக்கியதும் பாஜக அரசுதான். இத்தனை நெருக்கடிகளையும் கடந்து ஆய்வினை நடத்தி முடிக்கிறார் அமர்நாத் ராமகிருஷ்ணன். 982 பக்கங்கள் அடங்கிய தனது ஆய்வறிக்கையை ஒன்றிய அரசிடம் சமர்ப்பிக்கவும் செய்கிறார். அந்த கனமான ஆய்வறிக்கை வேத கலாச்சாரத்திற்கும் முந்தையது திராவிட கலாச்சாரம் என்பதை எடுத்துரைக்கிறது.

கிறிஸ்து பிறப்பதற்கு 800 ஆண்டுகளுக்கு முன்னர் அப்பகுதியில் ஒரு நகர நாகரிகம் இருந்திருப்பதை அங்கு கிடைத்த சான்றுகள் உறுதி செய்கின்றன. அங்கு கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் அங்கு வாழ்ந்த மக்கள், இயற்கையை வழிபட்டிருக்கிறார்கள். இறந்தவர்களை மரியாதையோடும் கவனத்தோடும் அடக்கம் செய்திருக்கிறார்கள் மூதாதையர்களை வழிபட்டிருக்கிறார்கள். தாய் தெய்வ வழிபாடு இருந்திருக்கிறது. பெருந்தெய்வ வழிபாடு இல்லவே இல்லை என்ற விவரங்கள் அமர்நாத் அவர்களின் ஆய்வறிக்கையில் இடம்பெறுகின்றன. இத்தகைய ஆதாரங்கள் கிடைக்க ஆரம்பித்த போதிருந்தே சங்கிகள் கதறத் தொடங்குகிறார்கள்.

வேத வழிப்பாட்டிற்கான சான்றுகள் அவை என்று முதலில் பொய்யாக கட்டமைக்க முயற்சி செய்கிறார்கள். அவை எதுவும் எடுபடவில்லை. பாஜகவும் சங்கிகளும் துடித்துப் போகிறார்கள். சீப்பை மறைத்து திருமணத்தை நிறுத்திவிடலாம் என்று கருதுகிறார்கள். அறிக்கையை கிடப்பில் போடுகிறார்கள். தமிழ்நாட்டின் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கொந்தளிக்கிறார்கள். திமுக அரசு கனமான அழுத்தத்தைக் கொடுக்கிறது. இனி அறிக்கையை முடக்கி வைக்க முடியாது என்பதை ஒன்றிய அரசு உணர்கிறது. இரண்டே வாய்ப்புகள்தான் தமக்கு உள்ளன என்பதை அவர்கள் உணர்கிறார்கள்.

ஒன்று, இந்த ஆய்வறிக்கையை இப்போது இருக்கிற வடிவில் அப்படியே ஏற்க வேண்டும். அல்லது இந்த ஆய்வறிக்கையை நிராகரிக்க வேண்டும். அறிக்கையை நிராகரித்தால் தமிழகத்தில் கொந்தளிப்பு ஏற்படும் என்பதும் பாஜகவிற்குத் தெரியும். அதுமட்டுமல்ல மாநில அரசும் இதை விடாது. நிச்சயமாக முதல்வர் ஸ்டாலின் நீதிமன்றத்தை நாடுவார். இந்த ஆய்வினை எவ்வளவு முயன்றாலும் பொய்யென நிறுவுவது கடினம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். 982 பக்களில் உள்ள அத்தனையும் மெய்ப்பிக்கப்பட்ட தரவுகள்.

போகிற போக்கில் கீழடியில் காலை வைத்துவிடவில்லை அமர்நாத் குழு. வைகை நதிப் பகுதியில் 293 இடங்களில் சுற்றித் திரிகிறார்கள். தரையில் கிடைக்கிற தடயங்களையெல்லாம் சேகரிக்கிறார்கள். கடுமையாக ஆய்வு நடத்துகிறார்கள். இப்படியாகத்தான் கீழடியை அடைகிறார்கள். அந்த 110 ஏக்கர் தென்னந்தோப்பு அவர்களை அங்கே நங்கூரமிட வைக்கிறது. 1976 வாக்கில் கீழடி பகுதியில் பழங்காலத்து ஓடுகள் கிடைக்கின்றன. மாணவர்கள் சிலர் அவற்றை சேகரித்து தங்களது ஆசிரியரான பாலசுப்பிரமணியன் அவர்களிடம் கொடுக்கிறார்கள். அவரும் அவற்றை அரசுக்கு அனுப்புகிறார். இந்தத் தகவல்களும் அமர்நாத் கீழடியைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு காரணம்.

- ஏழு லட்சம் பானை ஓடுகள் சேகரிக்கப்படுகின்றன
- அவற்றில் 1,03,000 ஓடுகள் ஆய்வு அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன
- அவற்றை சல்லடையிட்டு 1,842 ஓடுகள் நுணுகி ஆய்விற்குள்ளாகின்றன
- கிடைத்த குதிரையின் எலும்புக்கூடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்விற்குள்ளாகிறது

இவற்றிற்கு எதிராய்வு செய்வது இயலவே இயலாது என்பது சங்கிகளுக்கு புரிகிறது. முழுக்க அறிவியல்பூர்வமான ஆய்வு இது என்பதை புரிந்துகொள்கிறார்கள். ஆய்வின் முடிவினை ஏற்றால் அவர்களது இந்துத்துவாவின் அடிப்படை ஆட்டம் கண்டுவிடும். ஹரப்பாவிலும் பானை ஓடுகள் கிடைத்தன. அவற்றில் இருந்தவை குறிகள். கீழடியில் கிடைத்த பானை ஓடுகளில் இருந்தவை தமிழ் பிராமி எழுத்துகள். நுணுகி ஆய்ந்த 1,842 ஓடுகளில் கிட்டத்தட்ட 108 ஓடுகளில் தமிழ் பிராமி எழுத்துகள் இருப்பதாக அமர்நாத் கூறுகிறார். ஹரப்பா ஓடுகளில் காணும் குறிகள் ஒலிக்குறிகள் அல்ல என்றும் மாறாக இங்கு உள்ளவை ஒலிக்குறிகள் என்கிறார். இங்குக் கிடைத்த குதிரை எலும்பினை ஆராய்ந்ததில் குதிரைகள் அரேபியாவில் இருந்து கப்பலில் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வருகிறார் அமர்நாத். இது பட்டினப்பாலையில் காணப்படும் கூற்றுக்கான சான்றெச்சம் என்கிறார். இந்த ஆய்வினை ஏற்பதில் சங்கிகளுக்கு சில சிக்கல்கள் இருப்பதாக உணர்கிறார்கள். ஆய்வினை ஏற்றால் குறைந்தபட்சம்,

- திராவிட நாகரிகத்திற்கு மிகப் பிந்தைய நாகரிகம் வேத நாகரிகம்
- திராவிடர்கள் இயற்கையையும் மூதாதையர்களையும் வழிபட்டவர்கள்
- தமிழ் மொழியின் மூப்பு

போன்றவற்றை ஏற்க வேண்டும்.

ஆக, ஏற்கவும் இயலாமல் நிராகரிக்கவும் வாய்ப்பில்லாமல் தவிக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் காலம் தாழ்த்துவதன் மூலம் இதை நீர்த்துப்போகச் செய்யலாம் என்று முடிவெடுக்கிறார்கள். அதன் விளைவாக இந்த ஆய்வறிக்கையில் போதாமைகள் இருப்பதாகவும் திருத்தங்கள் அவசியம் என்றும் கூறி திருப்பி அனுப்பி இருக்கிறார்கள்.

30.01.2023 அன்று தமக்கு வந்த ஆய்வறிக்கையை இப்போது திருத்தங்கள் கேட்டு திருப்பி அனுப்பி இருக்கிறது இந்திய தொல்லியல் துறை. முதல் கால கட்டம் எட்டாம் நூற்றாண்டில் இருந்து மூன்றாம் நூற்றாண்டு வரை என்பதை கி.மு காலம் என்று மாற்ற வேண்டும் என்பதும் கோரப்பட்டுள்ள திருத்தங்களுள் ஒன்று. இந்துத்துவா மற்றும் சமஸ்கிருதத்தை கேள்வி கேட்கும் எதையும் ஒருபோதும் இவர்கள் அனுமதிக்கப் போவதில்லை. பாஜக என்று இல்லை, காங்கிரசும் திராவிடத் தொன்மையையும் தமிழின் மூப்பு குறித்த ஆய்வுகளையும் கடந்த காலத்தில் நிராகரிக்கவே செய்திருக்கிறது.

"நாகை மாவட்டம் பூம்புகார் அருகே சுமார் பதினோராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கடலில் மூழ்கிய ஒரு மிகப்பெரிய நகரம்தான் உலகின் முதன் முதலில் தோன்றிய நகர நாகரிகமாக இருக்கக்கூடும் என்று இங்கிலாந்தின் ஆழ்கடல் ஆராய்ச்சியாளர் கிரஹாம் ஆன் கூக் கண்டறிந்துள்ளார்" என்று சங்கிகளின் தினமலரே 18.12.2002 அன்று வெளியிட்டுள்ளது. இந்தச் செய்தியை தனது "பண்டைய தமிழரும் பரதவரின் வாழ்வும்" என்ற நூலில் வைத்திருக்கிறார் கவிஞர் மீனவன்.

1990 முதல் 1993 வரை இந்திய ஆழ்கடல் ஆராய்ச்சி நிறுவனம் பூம்புகார் பகுதியில் ஆய்வு செய்கிறது. ஆரம்பகட்ட முடிவுகளையே தாங்க முடியாத அன்றைய காங்கிரஸ் அரசு நிதி இல்லை என்ற காரணத்தை சொல்லி ஆய்வினை நிறுத்துகிறது.

அதன்பிறகு ஆன்கூக் இங்கிலாந்தின் 'சேனல் - 4' மற்றும் அமெரிக்காவின் 'லானிங் சேனல்' ஆகியவற்றின் நிதி உதவியோடு அதே பகுதியை ஆய்வு செய்கிறார். 11,000 ஆண்டுகளுக்கு முந்தைய நகர நாகரிகம் அங்கு இருந்தது என்ற முடிவிற்கு வந்திருக்கிறார். அதை சரியா என்றுகூட ஆராய்வதற்கு முயற்சிக்கவில்லை அன்றைய காங்கிரஸ் அரசு.

பாஜகவோ, இன்றைய ராகுலுக்கு முந்தைய காங்கிரசோ தமிழ் மண்ணின் தொன்மையை ஒருபோதும் ஏற்பதில்லை. இப்போதுகூட அமர்நாத்தை நொய்டாவிற்கு இடமாற்றம் செய்துள்ளார்கள். ஒன்று சொல்வோம்,

கீழடி தொன்மை தமிழ் மண்ணின் தொன்மை. தமிழ் மண்ணின் தொன்மை இந்தியாவின் தொன்மை என்பதை உணர மறுப்பது "இந்திய சிந்தனை"க்கு எதிரானது.

●

---

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம் | கி.இரா.சங்கரன்



# பொங்கல் கரும்பும் பொங்கிய கண்ணீரும் காலனிய காலத்தின் கரும்புத்தோட்டங்களில் அடிமைப்பாடுகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

*14. கரும்பும், சுவைக்காத அடிமையும்:* உலகம் முழுக்க, கரும்பாலைகளில் அடிமைகளின் உழைப்பு பெரும்பங்கு வகித்தது. கரும்பினைப் போன்று இவர்களின் உழைப்பும் பிழியப்பட்டது. ஆனால், கரும்பு பிழியப்படும்போது இனிப்பானசாறு கிடைத்தது; அடிமைகளின் உழைப்பு பிழியப்படும்போது கரிப்பான உப்பு வெளியானது. இப்படி, கரிப்புதான் இனிப்பினை கொடுத்தது. இடைக்காலத்தில் ஐரோப்பாவின் வடமேற்கு நாடுகளில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டபோதும் ஸ்பெயினும் போர்ச்சுக்கலும் அதனை தடைசெய்யவில்லை. ஸ்பானியர்கள், அமெரிக்காவின் பூர்வகுடிமக்களை அடிமையாக்கும்போது சுமார்20 மில்லியன் நபர்களை (அதாவது இரண்டுகோடி) கொன்றனர். தொடர்ந்து ஸ்பெயினும் போர்ச்சுக்கலும் அடிமை முறையினை ஒழித்தபோது டச்சு அதனை பின்பற்றவில்லை.

*15.* கி.பி.1640-களில் அட்லாண்டிக் வட்டம் உலகத்தின் அடிமைவணிகத்தில் 20% நிகழ்த்தியது. அப்போது, பிரேசில், பார்படோஸ் பகுதியில் இண்டிகோ, புகையிலை விளைச்சலின் குறைவினால் கரும்புப்பயிர் தெரிவு செய்யப்பட்டது. இதற்குக் கூடுதலான அடிமைகள் தேவைப்பட்டனர். ஹிஸ்பானியோலா பகுதியிலிருந்த கரும்புத் தோட்டங்களின் அடிமைத் தொழிலாளிகள் போராட்டம் செய்தனர், கரும்பாலைகளை தீயிட்டனர். கால்நடைகளை கைப்பற்றினர். முதலாளிகளிடமிருந்து தப்பித்தனர். தப்பித்தவர்கள் பழுப்புநிறத்தவர் (Maroon) என்று அழைக்கப்பட்டனர். பிரஞ்சு, பிரிடிஷ் கடற்கொள்ளையர்கள் இத்தீவினைத் தாக்கி கரும்புத் தோட்டங்களை அழித்தனர். இதற்கிடையில், சர்க்கரை வணிகர்கள் ஸ்பானியர்களின் முற்றுரிமை சர்க்கரை வணிகத்தினை விடுத்து பிரிடிஷ்-கடத்தல்காரர்களிடம் விற்றனர். இதனால், அட்லாண்டிக் பகுதியில் பெருமளவில் சர்க்கரை உற்பத்தியானது. ஆப்பிரிக்காவின் மேற்கு கரையிலுள்ள Sao-Tome என்ற இடத்தில் அடிமைகளின் உழைப்பில் சர்க்கரை தயாரிக்கப்பட்டது. அது அடிமைமுறை சர்க்கரை உற்பத்திஎனப்பட்டது.

*16. அடிமைமுறை, போர், கரும்புத்தொழில்:* அடிமைமுறை, போர், கரும்புத்தொழில் மூன்றும் ஒன்றுடன் ஒன்று பிணைந்தன. பிரஞ்ச், டச்சு, பிரிடிஷ் மூவரின் ஹாப்ஸ்பர்க் குடும்பத்திற்கு எதிரானபோரில் சர்க்கரை உற்பத்திக்கு புதியவழி கிட்டியது. கரிபியன் தீவுகளில் அடிமையாக்கப்பட்ட ஆப்பிரிக்கர்களின் உழைப்பில் இத்தொழில் நடந்தேறியது. இத்தீவுகள் 1660-களில் பிரேசிலுக்கு அடுத்து சர்க்கரைஉற்பத்தியில் பெருந்தளமாக அமைந்தது. மேற்சொல்லப்பட்ட போரினால் ஐபீரியர்களால் அமெரிக்காவில் அடிமைமுறை அதிகமானது. இது, பிரிட்டிஷ், டச்சு, பிரஞ்ச் காலனிகளுக்கும் பரவியது. ஐபீரியர்களுக்கு அடிமைமுறை ஒருபுதிய சமூகநிறுவனமாகும். அமெரிக்க-கத்தோலிக்க தேவாலயங்கள் அடிமை முறையினைப் போற்றி அவர்களை கிறித்தவராக ஞானஸ்நானம் செய்வித்தது. தோட்ட முதலாளிகள் அடிமைகளை கிறித்தவராக பெயர் மாற்றியபோது அடிமைகள் ஆப்பிரிக்கப் பெயர்களையே சூட்டவேண்டுமென்று வேண்டினர். ஆப்பிரிக்க அடிமைகளின் இறுதியான இடம் கரும்புத் தோட்டமாகவே அமைந்தது. கிட்டத்தட்ட 12.5 மில்லியன் பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்பிரிக்காவிலிருந்து கடத்திவரப்பட்டனர். ஐரோப்பியர்களுக்கான சர்க்கரையின்தேவை கூடியதால் அடிமைகளின்வரவும் அதிகரித்தது. டச்சுக்கள், ஆப்பிரிக்காவின் கிழக்கு கடற்கரையோரமாகச் சென்று மக்களை பிடித்து வந்தனர். அட்லாண்டிக்கின் வடபகுதியிலுள்ள பார்படோஸ் தீவுகளில் கரும்பு உற்பத்திக்காக காடுகள் அழிக்கப்பட்டதால் தொழிற்சாலை கட்டுமானத்திற்கு மக்கள் கிடைக்கவில்லை. நியூ-இங்கிலாந்து பகுதியிலிருந்து எரிபொருள் (coal) கொண்டுவந்தன்ர். இத்தீவு சர்க்கரை தீவு எனப்பட்டது.

17. கி.பி.1651-இல் கடற்பயணத்திற்கான சட்டம் (Navigation act) வழமைக்கு வந்தது. இது ஆங்கிலோ - டச்சுப்போருக்கு இட்டுச்சென்றது. இதனால், நெதர்லாந்தின் தலைநகரத்தில் சர்க்கரை வணிகம் குறைந்தது. இந்நகரம் கடல்வணிகத்தினை சார்ந்து இல்லை. ஆனால், வாய்ப்புகிட்டும்போது (shebradic network) வணிகம் செய்தது. 1660-இல் 100 கப்பல்களில் சர்க்கரை ஆம்ஸ்டர்டாமிற்குச் சென்றது. 3500 டன்கள் பிரேசிலிலிருந்து VOC கப்பல்கள் (அதாவது டச்சு கிழக்கிந்திய கப்பல்கள்) மூலம் இலண்டனுக்கு வந்தது.1660-களில் அடிமை வணிகம் இருமடங்கானது. இத்தொழிலில் இருவிதமான சிக்கல்கள் எழுந்தன. கரும்புத் தோட்டங்களில் கண்காணிகளும், உரிமையாளர்களும் அடிமைகளைக் கொடூரமாக நடத்தினர். முதலாளிகள் வெள்ளையர் என்றும் அடிமைகள் கருப்பர்கள் என்றும் அடையாளப்படுத்தப்பட்டனர். போதுமான ஆப்பிரிக்க அடிமைகளை டச்சு வழங்கியது. 1665-இல் பிரஞ்சியரால் ஜமாய்க்கா கைப்பற்றப்பட்டவுடன் அத்தீவு பிரிட்டனுக்கான சர்க்கரை உற்பத்தி செய்யும் தீவாக மாற்றப்பட்டது. இத்தீவு சர்க்கரைத்தீவு எனப்பட்டது.

18. அடிமைகளின் நிலை/வேலை: கடத்திக் கொண்டுவரப்பட்ட அடிமைகள் கரும்புத் தோட்டங்களில் ஒரு புதுவாழ்வினைப் பெற்றனர் (modern-life).

அதன்கூறுகள்

அவர்களின் இரத்த உறவு அழிக்கப்பட்டது

புதியவகை உணவு, உடை

நுணுக்கமான வேலைப்பிரிவு

பெண்களின்நிலை மிகக்கொடூரமானது. அவர்கள் கடுமையான வேலைகளை செய்தனர் (arduous field-work).

கரும்புச்சாறு சேமித்துவைக்கப்படும் கொப்பரைகளை, பீப்பாய்களை பழுதுபார்ப்பவர், கொத்தனார் வேலை, தச்சுவேலை, சர்க்கரை காய்ச்சப்படும் அண்டாக்கள் போன்றவற்றை பாதுகாக்கும் வேலைகளை இருபாலரும் செய்தனர். கரும்புத்தோட்டங்களில் திட்டமிட்டு வேலை செய்யப்பட்டது. அதனை தோட்ட வேலைக்கான காலநிரல் (plantation calendar) என்றனர்.

கரும்பினை வெட்டுதல்.

கரும்பினை தோட்டத்திலிருந்து ஆலைகளுக்குக் கொண்டுவருதல்.

சாறுபிழிதல்.

சாறினைக்காய்ச்சுதல்.

போன்றவை ஆலைகளில் முக்கியமானவை.

19. கி.பி.1750-1800 காலகட்டத்தில் கரிபியன், பிரேசில் கரும்புத்தோட்டங்களில் 600,000 அடிமைகள் இவ்வேலைகளை செய்தனர். இதனால், 30% முதல் 40% வரையிலான நிலம் மேற்கிந்தியத் தீவுகளில் கரும்புத்தோட்டமானது. எஞ்சியபகுதி மேய்ச்சல் நிலமானது. இதனால், உணவுபயிரிடுதல் பெருமளவு பாதிக்கப்பட்டது. அடிமைக் கூலிகள், ஆலைகளுக்கான கட்டிடங்களை கட்டவும், பாசன வசதிகளையும், வடிகால்களை கட்டமைக்கும் வேலைகளையும் செய்தனர். அவர்களுக்குப் போதுமான உணவு வழங்கப்படவில்லை. சத்தற்ற உணவினால் பலநோய்களுக்கு ஆளாயினர். பெரிபெரி என்ற நோய் பெரிதும் பற்றியது. போதா உணவினை ஈடுகட்டுவதற்கு ஜவ்வரிசி, வாழைப்பழம் போன்றவற்றை வேகவைத்து உண்டனர். அடிமை ஆப்பிரிக்கர்கள்தான் சர்க்கரைவள்ளிக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, சோளம், அரிசி, பட்டாணி, காக்காச்சோளம் போன்றவற்றை அமெரிக்காவில் அறிமுகப்படுத்தினர். இவற்றின் விதைகளை தம் கூந்தல்களில் மறைத்து எடுத்துவந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை தம் குடிசைகளை சுற்றி பயிரிட்டனர். சிலநேரங்களில் கைவிடப்பட்ட அடிமை கப்பல்களிலிருந்து விதைகளை எடுத்துவந்தனர். காய்கறிகளை பயிரிடும் அறிவு அவர்களுக்கு வைட்டமின்களை கொடுத்தது. ஆனால், ஆண்டைகளின் கொடுமையால் பலர் தற்கொலை செய்தனர்.

20. பசியும், கண்காணிகளின் கொடுமையும் இதற்கு காரணமானது. போதாத உணவினாலும், ஓய்வற்ற உழைப்பினாலும் அடிமைக்கூலிகள் ஆகஸ்ட்மாதத்தில் அதிகமாக இறந்தனர். எனவே, இம்மாதம் பசிமாதம் (*hunger month*) எனப்பட்டது. போதாத உணவினால், பல்லி, பாம்பு, எலி போன்றவற்றை உண்ணவேண்டியிருந்தது. எலிகளைப் பிடிப்பதற்கு தோட்டங்களில் எலிப்பொறிகளை வைத்தனர். இதனால், கரும்புவெட்டுபவரும் பாதிக்கப்பட்டனர். ஐரோப்பாவில் சர்க்கரையின் தேவை அதிகமானதால் கரும்பு மட்டுமே பயிரிடப்பட்டது. இதனால், உணவுப் பயிரிடல் குறைந்தது. உணவுப்பற்றாக்குறை உண்டானது. அடிமைகூலிகள் பெரிதும் பட்டினியாலும் சத்தற்ற உணவினாலும் பாதிக்கப்பட்டனர்1685-இல் பிரஞ்சு அரசர் பதினான்காம் லூயி அடிமைகள் நடத்தப்படவேண்டிய முறைபற்றி ஒரு சட்டவரையினை உருவாக்கினார். அது, அடிமைகளை நடத்தும் ஒழுங்குமுறை (*code of noir*)எனப்பட்டது. இது, 1789 வரை நடைமுறையில் இருந்தது.

21. அடிமைப் பெண்களும் புரட்சியும்: ஆப்பிரிக்க அடிமைப்பெண்கள் தம் தம் உடலின்மேல் ஆளுமை கொண்டிருந்தனர் (*autonomy over their bodies*) என்று சொல்லமுடியாது. கண்காணிகளால் வல்லுறவுக்கு ஆளாகி கருவுற்றபெண்கள் கருக்கலைப்பிற்கு (*abortions*) உரிமை பெற்றிருந்தனர். சிலநேரங்களில் கண்காணிகளை நஞ்சிட்டுக் கொன்றனர். ஆனாலும், வெவ்வேறு மொழி, இனம் என்ற பின்னணியில் வந்த அடிமைகள் ஒருங்கிணைவதில் சிக்கல் இருந்தது.

22. கி.பி.1791-இல்பிரேசிலும் 1832-இல்கயானாவிலும் அடிமைகள் புரட்சிசெய்தனர். இதுவே, அடிமைமுறை ஒழிப்பிற்கு வழிவிட்டது. அடிமைகள் இசைக்கருவிகள் (*drums*)மூலம் ஒலியெழுப்பி சைகைகள்மூலம் திரண்டு தோட்ட முதலாளிகளை தாக்குவார்கள் என்று எண்ணி இசைக்கருவிகளை இசைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. தோட்டத்து அடிமைகள் எல்லா இடங்களிலும் கொடூரமாக நடத்தப்பட்டனர். இதில், புதிதாகவந்த கண்காணிகள் பெரிதும் கொடுமைப்படுத்தினர். ஐரோப்பிய கண்காணிகள் இன்னும் கொடூரமாக இருந்தனர். கரும்பு அறுவடையின்போது 18மணி நேரத்திற்கும் கூடுதலாக உழைக்க வேண்டியிருந்தது. 1786-இல் பார்படோசில் அடிமைப்பெண்கள் கூடுதலாக குழந்தைகள் பெற்றுக்கொள்வதற்கு ஊக்கப்படுத்தப்பட்டனர். இதனால், புகையிலை, பருத்தித் தோட்டங்களைவிட கரும்புத் தோட்டங்களில் இறப்புவிகிதம் கூடியது. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இவ்விறப்பு 4-6% கூடியது. சத்தற்ற உணவும் ஓயாதா உழைப்பும் குழந்தை இறப்பிற்கு காரணமாயின. கால்சியம், மெக்னீசியம் குறைவினால் பிறந்த குழந்தைகள் டெட்டெனி நோயினால இறந்தனர். சத்துக்குறைவினால் வாய்சுருங்கி (*spasm*) பிறந்த குழந்தைகளால் பாலருந்த முடியாமல் போனது. கால்நடைகொட்டடிகளில் அருகே மிகநெருக்கமாக அதிகநாள்கள் வசிப்பதால்முடக்குநோய் தாக்குவதற்கு வாய்ப்பு இருந்தது. அடிமைகூலிகள் கால்நடைகளின் கழிவுகளை கூடைகளில் சுமப்பதும் இதற்கு காரணமாகும். எலிகளும் பாம்புகளும் கரும்புவெட்டுபவர்களை தாக்கின. சரியற்றஆடை, முறையற்ற வீட்டமைப்பு, காலணியற்ற கால்கள், சாறுபிழியும் யந்திரத்தினால் உண்டான ஆறாப்புண்கள் போன்றவற்றால் இறப்பு நேர்ந்தது. யந்திரங்களில் ஆடைகள் சிக்கி இறந்தனர். ஐரோப்பாவில் எப்போதெல்லாம் போர் மூழ்கிறதோ அப்போதெல்லாம் காலனிய, கரிபியன் தீவுகளில் அடிமைகள் பாதிக்கப்பட்டனர். 1694-இல் பிரஞ்சின் ஜமாய்க்கா போரின்போது 50 சர்க்கரையாலைகள் அழிக்கப்பட்டு 2000 அடிமைகள் கொல்லப்பட்டனர். 1780-இல் புயலினால் கரிபியன் தீவுகளில் ஆயிரக்கணக்கான அடிமைகள் மாண்டனர். 1688 -1813 காலகட்டத்தில் தொடர்ந்து நிகழ்ந்த போரினால் கரிபியன் தீவுகள் காலனிய முதலாளித்துவ (*colonial capitalism*) செயல்களை முடிவுசெய்யும் தளமாக இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23: கரும்புத் தோட்டத்து முதலாளிகள் : மேற்சொல்லப்பட்ட காலகட்டத்தில் பார்படோஸ் பகுதியின் முக்கிய தோட்ட முதலாளிகள் நியூஇங்கிலாந்து, தென்கரோலினா பகுதிகளுக்குச் சென்று முதலீடு செய்தனர். மேற்கத்தியத் தீவுகளின் பெருந்தொகையிலான மக்கள் வெள்ளையர் ஆவர். அவர்கள் அடிமை முறையினை பொதுவாக்கினர். இவர்களின் பண்பாடும் பொருளியலும் பிரிட்டிஷாரை சார்ந்தே இருந்தன. காலனியகாலத்தில், காலனிகளில் இருந்த பிரஞ்ச், டச்சு, பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகள் உயர்கல்வியினை பெறவில்லை. ஆனால், 17-ஆம் நூற்றாண்டிலிருந்து தோட்ட முதலாளிகளின் மகன்கள் ஆக்ஸ்போர்ட், காம்ப்ரிட்ஜ், ஹாவர்ட், மாசசுசெட்ஸ் போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கத் தொடங்கினர். இதனால், நிர்வாகத்தில் இவர்கள் உயர்ந்தனர். அட்லாண்டிக் அடிமை வணிகத்தால் பிரிட்டிஷாரின் பொருளாதாரம் வலுவானது. 1794-இல் பிரிட்டிஷாரின் சர்க்கரை உற்பத்தி 3% உயர்ந்தது.

24. பொருளியல் மாற்றங்கள்: 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தேநீர், காப்பி, இனிப்புவகைத் தீனிகள் போன்றவை புதிதாக வடமேற்கு ஐரோப்பாவிலும், நியூஇங்கிலாத்திலும், ஒட்டோமான் பேரரசின் நகரங்களிலும் அன்றாட வாழ்வின் வழக்கத்திற்கு வந்ததால் அட்லாண்டிக்பகுதியில் சர்க்கரை உற்பத்தி கூடியது. மத்தியதரைக்கடல் நாடுகளுக்கான பொருளுற்பத்தியினை பிரிட்டன், வட-அமெரிக்கா, கிழக்கிந்தியதீவுகள் மூன்றும் ஒருங்கிணைந்து ஒரு முக்கோண பொருளியலை (triangular economy) உருவாக்கின. பிரிட்டன், ஆலை தொடர்பான பொருள்களை தயாரித்தது. வட-அமெரிக்கா மரங்கள், உணவுபோன்ற அடிப்படைத் தேவைகளை வழங்கியது, கிழக்கிந்திய தீவினர் களவேலைகளை செய்தனர்.

25. சுத்திகரிப்பிற்கு தக்கபடி சர்க்கரையின் தரம் மதிப்பிடப்பட்டது. தரத்திற்குத்தக்கபடி சர்க்கரை பொட்டலங்கள் வெவ்வேறு வண்ணங்களில் கட்டப்பட்டன. இந்தியாவின் வங்காளத்தில் கிழக்கிந்திய கம்பெனியார் சர்க்கரை உற்பத்திக்கு சீனவகைக் கரும்பினை பயன்படுத்தினர். 1820வரை இந்தியாவில் மரபுரீதியான சர்க்கரை உற்பத்தியினை ஐரோப்பிய தொழில்நுட்பம் வெல்லவில்லை. 18-ஆம் நூற்றாண்டின் கடைக்கூற்றில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட சர்க்கரை ஐரோப்பாவின் வளரும்(rising urbans) நகரங்களுக்குச்சென்றது. ரஷ்யாவின் உள்நிலப்பகுதிக்கும் சென்றது. மத்திய-ஆசியாவிற்கும் சென்றது. சர்க்கரை பிலடெல்பியா பேக்கரிகளிலும், பாக்தாத்தின் இனிப்புக்கடைகளிலும் (sherbet house) வியன்னாவின் காபிகடைகளிலும் கிடைத்தன. இது, பிரேசிலின் சர்க்கரை உற்பத்தியினை மட்டுப்படுத்தியது. 18-ஆம்நூற்றாண்டில் தொழில்துறையில் நீராவி யந்திரங்கள் பயன்பாட்டிற்கு வந்தன. இது, சர்க்கரையின் உற்பத்தியினைக் கூட்டியது. அந்நூற்றாண்டில் வேதியியல், இயற்பியல், தாவரவியல் துறைகளில் ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டதால் வெப்பமண்டல நாடுகளின் வேளாண்வணிகத்தில் மாற்றம் உண்டானது. இது சர்க்கரை உற்பத்தியினை மாற்றியது. இதற்கென்றே தென்கிழக்காசியாவின் பதவியாவில் தாவரவியல் பூங்கா நிறுவப்பட்டது. முதன்முதலில் 1767-இல் ஜமாய்க்காவில் நீராவிசக்தி தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது,19-ஆம் நூற்றாண்டில் உலகம்முழுக்க பரவியது.

26. ஆசியாவில் பொதுப்பயிர்கள் விளைவிக்கப்பட்ட மாதங்களுக்கு அடுத்தடுத்த மாதங்களில் அதாவது சோம்பிய மாதங்களில் (slack month) கரும்பு விளைவிக்கப்பட்டது. இந்தியாவில் சர்க்கரைஉற்பத்தி 1850வரை மந்தமாக (stagnated) இருந்தது. ஆனால், உலகஅளவில் உற்பத்தியில் முதலிடம் பெற்றது. 1870 இல் வங்காளத்தில் ஆண்டுக்கு 8000 டன் gur சர்க்கரை உற்பத்தியாயிற்று. அடுத்தடுத்த காலகட்டத்தில் ஆப்பிரிக்க அடிமைகளின் இறக்குமதியினால், கியூபா உலகின் சர்க்கரை உற்பத்தியில் முதலிடம் பெற்றது. அங்கு, அடிமைமுறைக்கு எதிர்ப்பு இருந்தபோதும் அவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

27. அடிமைகளின்நிலை: ஜாவாவின் காலனிய அரசில் 60%கும் மேற்பட்ட விவசாயிகள் குறைவான கூலியில் கரும்பு, காபி, இண்டிகோ போன்றவற்றை பயிரிட்டனர். இருந்தபோதும் ஜாவா, கியூபா என்ற இருதீவுகளும் சர்க்கரை உற்பத்தியில் பெரும்பங்குவகித்தன. பிரிட்டனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைமுறை ஒழிப்பிற்குப் பிறகு, பிரிட்டன், டச்சு, பிரஞ்சு காலனிகளில் அடிமைகள் சிரமமின்றி நடத்தப்படுவதாக எண்ணப்பட்டது. அது, பதமான என்ற சொல்லால் சுட்டப்பட்டது. அதாவது, கொள்முதல்செய்யப்பட்ட அடிமைகளை சற்று மென்மையாக நடத்தவேண்டுமென்று கருதப்பட்டது. அடிமைகள், மனிதர்களாகக் கருதப்பட வேண்டுமென்ற கருத்து நிலவியது. ஆனால், அவர்களிடம் வயது வேறுபாடு பார்க்கப்பட்டது. மூத்தவர்களிடமிருந்து சிறார்கள் *(pre-pubescent children)* தனித்து அறியப்பட்டனர். அடிமைகள் நீதிமன்றத்தில் சான்றளிக்கவும் சொத்துடைமையாளர்களாக இருப்பதற்கும் அனுமதிக்கப்பட்டனர். தோட்டங்களில் அவர்களின் கடவுள் வழிபாட்டிற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

28. சுதந்திரமான கருப்பினத்தவர்கள் வீடுகளில் வசிக்கும் அடிமைகள் *(house slaves)* தேவாலயங்களின் ஒப்புதலுடன் ஐரோப்பிய இசை, உடை, கிறித்தவப்பெயர்கள் போன்றவற்றைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். மேற்கத்திய தீவுகளின் தேவாலயங்களில் ஆப்பிரிக்கக் குரலிசை ஐரோப்பியர் வருகையின்போது இசைக்கப்பட்டது. இதற்கு பெருத்தவரவேற்பு இருந்தது. தோட்டத்து வேலையாட்கள் அறுவடை காலத்தினை விழாக்களின் தருணமாக மாற்றினர். மேற்கத்திய தீவுகளில் 1819-இல் அறுவடைக்காலம் விருந்துகாலமாக மாற்றப்பட்டது. லூசியானாவில் தோட்டத் தொழிலாளர்கள் ஜூலை, 4-லினை அறுவடைநாளாக ஆடிப்பாடி கொண்டாடினர். அக்கொண்டாட்டத்திற்கு அடிமைகள் அனுமதிக்கப்பட்டனர். சரியனம் *(Surianame)* என்ற இடத்தில் அடிமைகள் ஆண்டில் நான்குமுறை நல்ல ஆடைகளைஉடுத்தி விருந்துண்பதற்கு அனுமதி பெற்றனர். பிரஞ்சு காலனிகளில் ஞாயிற்றுக்கிழமைகளில் சிறந்த ஆடைகளை அணிந்துகொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். நல்லதுணிகளில் தைக்கப்பட்ட ஆடைகளை உடுத்திக்கொள்வதற்கும் குடைபிடித்துக்கொள்ளவும் அனுமதி பெற்றனர். குழந்தைகளின் ஆடை வித்தியாசமானது. சாக்குப்பையின் இருமுனைகள் துளையிடப்பட்டன.



கவிதை | வெ.தமிழ்க்கனல்

## அம்பேத்கரின் தேநீர்க் குவளை

நீலக் கோட்டும்
தடித்த புத்தக சகிதமாக
நேற்றையக் கனவில் வந்தார்
அம்பேத்கர்
நீர்த்தேக்கத் தொட்டியின் மலம் குறித்தும்
மணிப்பூர்க் கலவரம் பற்றியும்
கூடவே நாங்குநேரி
மாணவர் குறித்தான தாக்குதல்
பற்றியும் நெடு நேரம் வரை
பேசிக்கொண்டிருந்தோம்
இடையே வறண்ட
தொண்டை நனைக்க
இருவரும் சேர்ந்து தேநீர் ஆடர் செய்தோம்
சிறிது நேரத்தில்
இரண்டு பீங்கான் கோப்பைகள் நிறைய
சூடான தேநீர் வந்தன
அதில் ஒன்றை எடுத்துக்கொண்டவர்
சற்றே உயர்த்திப் பிடித்தபடி கேட்டார்
இப்போது தேய்காய்ச் சிரட்டைகளெல்லாம்
ஒழிக்கப்பட்டுவிட்டதாயென
அவரது கேள்விக்கு
மௌனத்தைப் பதிலாகக் கொடுத்தபடி
எங்களுக்குச் சற்றுத் தொலைவில் நிற்கும்
அச்சிலை நோக்கிக் கை நீட்டினேன்
அவ்விரவிலும் எதையோ நோக்கி
வெறித்துக்கொண்டிருந்தது
கூண்டு தகர்த்து
தலை துண்டிக்கப்பட்ட அந்த
அம்பேத்கரது சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்வழியே குழந்தைகளின் கைகள் இருபுறமும் நுழைக்கப்பட்டன. இவ்விரு துளைகளுக்கும் இடையில் ஒரு துளையிடப்பட்டு குழந்தையின் தலை நுழைக்கப்பட்டது. இளையோர் *(adults)* கணத்த *shoes* அணிந்தனர். அவர்களிடம் மெல்ல மெல்ல படிப்பறிவு பரவியது. 1791-இல் செயிண்ட் டொமினிக்கில் உள்ள அடிமைகள் கிளர்ச்சி செய்தனர். அங்கிருந்து, கரீபியன் தீவுகளுக்கும் சரியனம் தீவிற்கும் பரவியது: 1816-இல் பார்படோஸில் எழுந்தகலகம் 100க்கும் மேற்பட்ட அடிமைகள் கொல்லப்பட்டு முடிவிற்கு வந்தது. 1825-இல் அடிமைமுறைக்கு எதிரான அறிக்கை மெக்காலேவினால் இயற்றப்பட்டது. இதில், பிரிட்டிஷ் பேரரசில் அடிமைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் ஆவணப்படுத்தப்பட்டன. அரசு ஊழியர்கள் அடிமைகளை நாகரிகமாக நடத்துகிறார்கள் என்றபுனைவு தகர்க்கப்பட்டது. மொரீசியஸ்தீவில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பதிவுசெய்யப்பட்டன. அவர்கள் கொடுமைப்படுத்தப்படவில்லை என்பதற்கு தேநீர் கோப்பைகளில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அடிமைகளால் செய்யப்பட்ட சர்க்கரையல்ல என்ற தொடர் பொறிக்கப்பட்டது. 1834-இல் பிரிடிஷ் பேரரசில் அடிமைமுறை சட்டப்படி ஒழிக்கப்பட்டபோது அவர்களுக்குச் சொந்தமான மேற்கிந்திய தீவுகளில் 667,925 அடிமைகள் இருந்தனர். ஆனால், அவர்கள் விடுதலையடைவில்லை. விடுதலையடைந்த அடிமைகள் கனிதரும் மரங்களை வளர்த்து பணம் சம்பாதித்தனர்.

29. இந்தியத்துணைகண்டத்தில் சோழமண்டலத்தின் கடற்கரையோரத்து ஊர்களில் இருந்தும் உள்நிலவட்டத்து ஊர்களில் இருந்தும் காலனிய காலத்தில் தென்கிழக்கு ஆசியநாடுகளுக்கும், மொரீசியஸ் முதல் ஃபிஜிதீவு வரைக்கும் தமிழர்கள் அடிமைகளாக கப்பலேற்றப்பட்டனர். இவர்கள் முகவர்கள் மூலமாக கொண்டுசெல்லப்பட்டனர். அதற்கென்று நபர்கள் இயங்கினர். வெவ்வேறு சமையங்களை சேர்ந்தவர்கள் அந்தந்த சமையத்தின் முகவர்களால் காலனியமுதாலாளிகளுக்கு விற்கப்பட்டனர். இதில் கரையார், ரெட்டி, வண்ணான், வெள்ளாளன், செட்டி, படையாச்சி, பள்ளி, பறையர் என்று பல இனக்குழுவினை சார்ந்தவரும் இருந்தனர் என்று அண்மையில் ஆயப்பட்டுள்ளது. ஃபிஜி தீவின் கரும்புத்தோட்டத்தில் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்ப் பெண்கள்பட்ட கொடுமைகள் பற்றி சுப்ரமண்ய பாரதி இசைப்பாடல் ஒன்றினை இயற்றியுள்ளார். உலகில் தற்போது அடிமைமுறை வெவ்வேறு வகைகளில் நடைமுறையில் உள்ளது. தொழில்நுட்பம் வளர வளர அடிமைமுறையும் புதிது புதிதாக உருவெடுக்கிறது. கடலினைத்தாண்டி கரும்புத் தோட்டத்திற்குச் சென்றாலும், கம்பியூட்டர்வேலைக்குச் சென்றாலும் அடிமைமுறை ஒழியவில்லை. கரிக்கின்ற வியர்வையே மிஞ்சுகிறது. அடிமைகள் இறுதிவரைக்கும் கரிக்கும் வியர்வையினால் இனிக்கும் கரும்பினை வளர்த்து சர்க்கரையினை கொடுத்தனர்.

**பயன்பட்ட நூல்கள்**


Bosma Ulbe, 2023.The World of Sugar: How the Sweet Stuff Transformed our Politics, Health,, and Environment over 2,000 Years, (First printed in India)The Blinken press of Harvard University Press.

Burrow, T and Emeneau, M.B.1998. A Dravidian Etymological Dictionary (First Indian Edition), Munshiram Manoharlal Publishers Private Ltd, New Delhi.

Jeyaseela Stephen,S.2024.The Voyage and Migration of Tamil Indenture Labour from Madras to Mauritius, Guyana, Trinidad, Jamaica, St.Lucia, St.Vincent Islands and Natal in South Africa, 1837–1896.Padimam.

Subramanian, N, 1990. Pre-Pallavan Tamil Index (Index of Historical Material in Pre-Pallavan Tamil Literature, University of Madras, Madras.

Zvelebi, V.Kamil, 1975.Tamil Literature, Leiden.

South Indian Inscriptions Vols.VIII, IX, XIX

மாதையன்,பெ.2007. சங்க இலக்கியச் சொல்லடைவு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சுப்பிரமணியன், பா.ரா. & சண்முகம், ப.2023. கல்வெட்டுச்சொற்களின் பொருட்புல அடைவு, செம்மொழி மத்திய நிறுவனம், சென்னை.


#28, நவம்பர்2024 அன்று கடல்சார் வரலாறு & கடல்சார் தொல்லியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அண்மைக்கால வரலாற்று தொல்லியல் கண்டுபிடிப்புகள் என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கில்,Bosma Ulbe, என்பவர் "The World of Sugar: How the Sweet Stuff Transformed our Politics, Health,, and Environment over 2,000 Years", (First printed in India, 2023)The Blinken press of Harvard University Press என்ற தலைப்பில் எழுதிய நூலினை அறிமுகப்படுத்திய பேச்சின் எழுத்து வடிவம்.


கட்டுரையாளர்: பேராசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முடியில்லா பிரச்சனைகளுக்கு தீர்வு

THE ZUSAANLI GROUPS
TZG
Since 1992

# NAYAGARA
## HAIR GRIP OIL

# மூச்சு குழாயின் சுவாசம் இலேசாகும்!
# ஆயுர்வேதம் தந்த அற்புதம்

மூலிகை ஆராய்ச்சியில் 33 வருடங்களாக ஈடுபட்டுள்ள மூலிகை ஆராய்ச்சியாளர் மற்றும் 15 வருடங்களாக ஆயுர்வேதத் துறையில் உள்ள ஆயுர்வேத மருத்துவர் ஆகியோரின் அற்புதமான தயாரிப்பு **ஸ்வாச.ஃப்ரீ.**

**நாட்பட்ட ஆஸ்துமா, சளி, இருமல், தும்மல் உள்ளிட்ட நுரையீரல் சம்மந்தப்பட்ட அனைத்திற்கும் மிகச்சிறந்தது.**

கொரியர் / தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



கிடைக்குமிடம் :

## வெற்றி விநாயகர் மெடிக்கல்ஸ்

தி சுசான்லி அக்குபஞ்சர் & ஆயுர்வேதிக் கிளினிக் வளாகம்,
11-A, பாரதிதாசன் தெரு, பிள்ளையார் கோயில் எதிரில்,
மஞ்சக்குப்பம், கடலூர்–1.

**செல் : 93676 22248, போன் : 04142-355418**

**மேலும் விபரங்களுக்கு : 96003 09546, 93676 22256**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அவள் பிரிவு

வரலாற்று நூல்கள் எழுதுவதில் பல வகைகள் உண்டு. மனிதர்கள் குடும்பம் சமூகம் என இரண்டிலும் இயங்குபவர்கள். அவர்களைப் பற்றி எழுதும்போது தம் குடும்ப வாழ்க்கையைப் பற்றி மட்டுமேயும், தம் புறசமூக வாழ்க்கையைப் பற்றி மட்டுமேயும் எழுதுவதுண்டு. மனிதர் சமூக விலங்கு என்ற வகையில் வாழ்க்கை வரலாற்றில் அவர்களுடைய அக(குடும்ப) வாழ்க்கையையும், புற(சமூக, அரசியல்) வாழ்க்கையயும் கலந்து எழுதினால்தான் அவர்கள் வாழ்ந்த காலம், அக்காலத்தில் சமூகத்தில் நிலவிய முரண்பாடுகள், அவற்றால் குடும்பத்தில் எழுந்த சிக்கல்கள், அச்சிக்கல்களைத் தீர்க்க நடந்த போராட்டங்கள், அந்தப் புற வாழ்க்கையில் குடும்பம் என்னும் அக வாழ்க்கையில் உண்டான முரண்பாடுகள் ஆகிய அனைத்தையும் அவ்வாழ்க்கை வரலாற்று நூல் தொட்டுச்செல்லவேண்டும். அப்போதுதான் அது முழுமைபெறும்.

வாழ்க்கை வரலாறுகளும் தன்வரலாறுகளும் தமிழில் நிறைய வெளிவந்தபோதும் வாழ்க்கையில் செம்பாதியாகத் திகழும் தன் மனைவியரைப்பற்றிக் கணவர்கள் எழுதிய நூல்கள் மிகக் குறைவாகவே உள்ளன. நானறிந்தவரையில் 1915 இல் வ.உ.சி. எழுதிய 'வள்ளியம்மை சரித்திரம்', 1957 இல் வெளிவந்தது. சாமிநாத சர்மா தன் மனைவி மங்களத்தைப்பற்றி எழுதிய 'அவள் பிரிவு',ஆய்வாளர் பெ.சு.மணி தன் மனைவி சரசுவதியைப்பற்றி எழுதிய நூல், அண்மையில் கவிஞர் அரச முருகுபாண்டியன் தன் மனைவி பேராசிரியர் முனைவர் சித்ராவைப்பற்றி எழுதிய 'அறச்செல்வி சித்ரா 'ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பாரதியார் செல்லம்மாவைப்பற்றி எழுதியதும்,தந்தை பெரியார் தம் மனைவி நாகம்மையாரைப் பற்றி எழுதியதும் சிறிய கட்டுரைகள்.

'அவள் பிரிவு' நூல் எழுத்தாளர் வெ.சாமிநாத சர்மாவின் மனைவி மங்களம் இறந்தபின் ஆற்றாமையால் தம் நூல்களைப் பதிப்பித்தவரும் நண்பருமான அரு. சொக்கலிங்கத்துக்கு அவர் எழுதிய மடல்களையும், அரு.சொ. மங்களம் பற்றி எழுதிய கட்டுரையையும் கொண்டது. அதில் வெ.சா. இணையர் நடத்திய அப்பழுக்கற்ற இல்லறம் பற்றி உருக்கமுடன் எழுதப்பட்டுள்ளது. மேலும் அப்போது நடந்த உலகப்போர், இந்திய விடுதலைப்போர், பிழைப்புத் தேடித் தமிழர்கள் பர்மாவுக்குப் போனமை,அங்கே பல தொழில்களைச் செய்ததுடன் காந்தியின் தாக்கத்தால் இந்தியப் பொருள்களுடன் கதரையும் நல்ல நூல்களையும் விற்றமை போன்ற செய்திகளையும் தருகிறார்.அந்தக் கடையின் தொடர்பால் ஏற்பட்ட பழக்கமே வெ.சா.வின் நூல்களை வெளியிடுவதற்கென்றே அரு.சொ. 'பிரபஞ்ச ஜோதி பிரசுராலயத்தைத்' தொடங்கி நடத்தக் காரணமாயிற்று. சமூக மாற்றத்திற்கான இயக்கங்கள் வீச்சாக நடக்கும்போதே மெய்யியல் விவாதங்களும், அவற்றை எழுதிப் பதிப்பதும் நடக்கும். 1936இல் வெ.சா. எழுதிய 'முசோலினி வாழ்க்கை வரலாறு' 23-01-1936 இல் வெளிவந்தது. மொத்தம் எழுபது நூல்களுக்கு மேல் எழுதினார். தமிழறிந்தவர்களுக்கு உலக நாடுகளையும், வரலாற்றையும், தலைவர்களையும், மெய்யியல்களையும், எளிமையாக அந்நூல்கள் அறிமுகப்படுத்தின. அவை இன்றளவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் படிக்கிறாற்போல எளிய நடையில் உள்ளன.

வெ.சா.இந்நூலில் மங்களத்தின் பிறப்பு,வளர்ப்பு, கல்வி, உறவினரிடையேயும், ஆசிரியர்களிடையேயும் பெற்றிருந்த நற்பெயர்,சமூக அக்கறை ஆகியவற்றை எழுதுகிறார்.திருமணமாகிப் புகுந்த வீட்டுக்கு வந்த பிறகு "காதல் ஒருவனைக் கை பிடித்து அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து" இல்லறத்தை நல்லறமாக நடத்தினார்.

பார்ப்பனர் கடல்கடந்து செல்ல அவர்களது சாத்திரங்கள் அனுமதிப்பதில்லை.அதிலும் "முந்நீர் வழக்கம் மகவோடில்லை" என்று சொல்லித் தம்மையே உயர்த்திக் கொண்ட சாதியினர் பெண்களைக் கடல்கடந்து செல்லவிடுவதில்லை. ஒடுக்கப்பட்ட ஏழைப் பெண்கள் கூலிவேலை செய்யக் கப்பல்களில் ஏற்றி அனுப்பப்படவும், பிற நாடுகளின்மேல் படையெடுத்துப் போரிட்டு பிடிபட்ட பெண்களைக் கொண்டி மகளிராகக் கவர்ந்துவந்து தமக்கு அடிமைத் தொண்டு செய்வதற்காகவும் இது தடையாக அமையவில்லை. இந்நிலையில் வெ.சா.வும் மங்களமும் கடல்கடந்து பர்மாவுக்குப் போனமை முற்போக்கானச் செயலாகும்.

பார்ப்பனர்கள் எப்போதுமே அதிகாரத்துடன் நெருங்கி மாற்றங்களை விரும்பாத பழைமைப் பற்றாளர்களாக இருப்பார்கள் என்பது முன்பு உண்மையாக இருந்தாலும், காந்தியின் நுழைவுக்குப் பிறகு நிறைய மாற்றங்கள் உண்டாயின. 'அரிசன சேவா சங்கங்களில் பொறுப்பேற்றுச் சமூக சீர்திருத்தங்களில் ஈடுபட்டமை, தம் பொருட் செலவில் எல்லாருக்குமான பள்ளிகளைத் தொடங்கி நடத்தல் போன்ற நற்செயல்களில் ஏராளமானோர் ஈடுபட்டனர்.மங்களம் படித்த பள்ளியைத் தொடங்கி நடத்தியது ஒரு முற்போக்கான பார்ப்பனக் குடும்பம்.அதன் தலைமையாசிரியர் ஒரு வெள்ளாளக் கைம்பெண். பிற்காலத்தில் வெ.சா.வும் மங்களமும் நாடு திரும்பிய பிறகு அப்பள்ளியை மங்களமே ஏற்று நடத்துமாறு நிர்வாகம் கேட்டுக்கொள்ளும் அளவுக்கு அவர் சிறந்த மாணவியாகவும் நிறைந்த இல்லத்தரசியாகவும் திகழ்ந்தார்.நிர்வாகமும் ஒரு பெண்ணின் தலைமையை ஏற்க அணியமாக இருந்தது.



**விஞ்ஞானி நெல்லை சு.முத்து மறைவுக்கு அஞ்சலி**

முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானியும் எழுத்தாளருமான நெல்லை சு.முத்து கடந்த 16.06.2025 அன்று மறைந்துவிட்டார். காக்கை இதழில் தொடர்ந்து எழுதி வந்தவர். கவிதை, வரலாறு, அறிவியல், சிறார் இலக்கியம் சார்ந்து 70க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். பல்வேறு விருதுகளைப் பெற்றவர் நெல்லை சு.முத்துவின் மறைவுக்கு 'காக்கை' இதழ் தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

- ஆசிரியர்

பர்மாவில் இருக்கும்போது வெ.சா.வைச் சந்திக்க வாசகர்களும் நண்பர்களும் வந்து அவரது வேலைகளுக்கு இடையூறாக இருந்தால் அவ்வேலையைத் தானே செய்து முடிப்பது மங்களம் அம்மாவின் வழக்கம்.அவர்களுக்குக் குழந்தை இல்லை. ஆனால் அதைப்பற்றி அவர் கவலைப்பட்டதில்லை. ஒவ்வொரு நூல் வெளிவரும்போதும் ஒரு குழந்தையைப் பெற்ற மகிழ்ச்சியில் திளைப்பாராம்."உங்கள் நூல்களே நம் குழந்தைகள்."என்று உவகையோடு சொல்லி மகிழ்வாராம்.

இப்படித் தன் மேல் உயிரையே வைத்திருந்த அம்மாவின்மேல் வெ.சா. சினந்திருக்கிறார். ஆனால் எவ்வளவு துன்பத்துக்கு உள்ளாக்கப்பட்டாலும் கணவர்மீதோ,மற்றவர்கள் மீதோ அவர் சினங்கொண்டதில்லை.

இரண்டாம் உலகப் போரை ஒட்டி பர்மாவிலிருந்து இந்தியர்கள் வெளியேறினர். இரங்கூனில் தங்கியிருந்த ஒரு சிலவற்றில் வெ.சா.குடும்பமும் ஒன்று. குடும்பமில்லாத ஏழெட்டுப்பேர் சிலகாலம் அவர்கள் வீட்டில் தங்கியிருந்தபோது முகம் சுளிக்காமல் அவர்களை அம்மா பேணினார்.இறுதியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் நிலைமை மீறிவிட்டது இரங்கூனில் இருந்து இந்தியாவுக்கு நடந்தே வந்தவர்களோடு வெ.சா.வும் மங்களமும் நடந்தனர். அம்மாவின் உடல்நலம் அந்நேரம் சீர்கெட்டிருந்தது. காட்டுக்குள் நடந்ததால் மேலும் சீர்கெட்டது. எனவே மற்றவர்களோடு ஒத்து நடக்கமுடியாமல் பின்தங்கினார்.

இதனால் ஆத்திரங்கொண்ட வெ.சா. தன் மனைவியை ஏசிவிட்டு முன்னே சென்று விடுகிறார். கொஞ்ச நேரம் கழித்து மற்றவர்கள் போய் அழைத்துவருகின்றனர். இதற்காகக்கூட முகம் சுளிக்காத உயர்ந்த உள்ளம் அவருடையது. வடகிழக்கு மாகாணங்களின் வழியாகக் கொல்கத்தாவை அடைந்து பின் சென்னையை அடைகிறார்கள். ஏற்கெனவே நலிவுற்ற உடம்பு மேலும் சீர்கெட்டு, புற்றுநோய் வந்துவிட்டது. சோதனையில் புற்றுநோய் என்றறிந்த அவரிடம் சொன்ன போதும் அவர் அதை அமைதியாக ஏற்றுக்கொண்டார். கணவரின் "குரல் நடுங்கியது. அதைக் கேட்ட அவள் சுந்தரமூர்த்தி நாயனார், "வாழ்வாவது மாயம்.

மண்ணாவது திண்ணம்" என்ற தேவாரப் பதிகத்தைப் பாடினாராம்! என்னே அவர் மனஉறுதி!

நூல் நெடுகிலும் வெ.சா.உதிர்க்கும் கருத்துகள் அவரது சமூகப் பார்வையையும், மானுட மேம்பாட்டுக்கான அவரது அக்கறையையும் காட்டுகின்றன.

"மனிதன் ஒரு சமூகப் பிராணி. நான்குபேர் மத்தியில் வாழ்ந்துகொண்டிருப்பதுதான் அவனது இயற்கை. அதில்தான் இன்பம் நுகர்கிறான். அப்பொழுதுதான் அவன் வளர்ச்சி அடைகிறான். தானும் வளர்ந்து மற்றவர்களும் வாழும்படி செய்கிறான்."--பக்.15

"பிறரை நேசிக்காதவன் பிறரால் நேசிக்கப்பட மாட்டான். அப்படிப்பட்டவன்தான் தனிமையில் தஞ்சம் புகுவான்."--பக்.16

"வெற்றி தோல்விகளைப்பற்றி நான் கவலைகொள்ளவேயில்லை.

அவை நம் வசத்திலேயில்லையல்லவா! போராடுவதிலேயே எனக்கு உற்சாகம் இருந்துவந்தது. எனது

உற்சாகத்துக்கு ஊற்றுக்கண்ணாயிருந்து வந்தாள் என் இல்லக் கிழத்தி."

'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்.' இப்படி நற்பண்புகள் அனைத்தையும் கொண்ட பெண்மணி அவர்.

ஓர் எச்சரிக்கை!

இந்த நூலைப் படித்துவிட்டுத் தமக்கு வாய்த்த மனைவியை மங்களத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து மனம் உடைந்துவிட வேண்டாம். கோடியில் ஒருவருக்கு அப்படி அமையலாம். ஒரு திரைப்படத்தில் மனைவிக்கு அடங்கி அஞ்சும் கணவனாக சுருளிராசனும் அடங்காப் பிடாரி மனைவியாக மனோரமாவும் நடித்திருப்பார்கள். மனைவியின் அநியாய ஆட்டங்களுக்கு அடங்கி ஒடுங்கி நடக்கும் கணவன், மனைவி அருகில் இல்லாதபோது கண்களை மூடித் தனக்கு மனைவி அடங்கிப் பணிந்து நடப்பதாகக் கனவுகாண்பார். நாமும் அப்படிக் கொஞ்ச நேரம் கனவில் மகிழ்ச்சி அடையலாமே!

சிறிய அளவில் குடும்பங்களில் கணவன், மனைவி, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை இடையேயும் மைத்துனர், நாத்தனார்களிடையேயும், பேரளவில் சாதி சமூகங்களுக்கிடையேயும் நிலவிய அன்பையும் நல்லுறவையும் இப்போது இழந்துவிட்டோம். ஆதாயம் திரட்ட எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற முதலாளியிய, கூட்டாண்மை நிறுவனக் கொள்கை மேலோங்கியுள்ள இக்காலத்தில் மக்களிடையே அன்பைப் பரப்பவும் சமூக முன்னேற்றத்தைக் பற்றிச் சிந்திக்கவைக்கவும் 'அவள் பிரிவு' என்ற இந்த நூலையும் வெ.சாமிநாத சர்மா எழுதிய பிற நூல்களையும் வாசகர்கள் தேடிப் படிக்க வேண்டுமென்று விழைகிறேன்.

**வெளியீடு:** சந்தியா பதிப்பகம்
**தொலைபேசி:** 044--24896979
**விலை:** ரூ 100

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரம் சுகுமாரன்: மதயானைக் கலைஞன்



மரணிக்கப்போவது எங்கள் உடல்கள்; நாங்களல்ல
– பாலுமகேந்திரா

இசையமைப்பாளர் இளையராஜா, இயக்குநர் மணிரத்னம் ஆகியோரது பிறந்தநாள்கள் சமூக வலைத்தளங்களை ஆக்கிரமித்திருந்த 2025 ஜூன் 2 அன்று காலையில், எதிர்பாராத அதிர்ச்சியாக இயக்குநர் விக்ரம் சுகுமாரனின் மரணச் செய்தி திடுமென வந்து விழுந்தது. மேதாவிலாசத்துக்கும் அற்பாயுளுக்கும் அப்படி என்னதான் நமக்கு எட்டாதபடி ரகசிய உறவோ? எனத் தனது ஜே.ஜே:சில குறிப்புகள் நாவலில் எழுத்தாளர் சுந்தர ராமசாமி கேள்வி எழுப்பியிருப்பார். பல அகால மரணம் அந்தக் கேள்வியை நினைவூட்டும். ஆனாலும், சிலரது மரணம் நெற்றிப்பொட்டில் அடித்தாற்போல் சில நொடிகள் சித்தத்தைக் கலங்கவைத்துவிடும். அப்படிச் சட்டென மனத்தில் கல்லெறிந்த மரணம் இயக்குநர் விக்ரம் சுகுமாரனுடையது.

அவருடன் ஏற்பட்ட சிறு அறிமுகம் நட்பென்று சொல்லத்தக்க நிலையை அடைந்ததற்கு அவரே காரணம். பேசிக்கொள்வதோ சந்தித்துக்கொள்வதோ இல்லையென்றபோதும், சமூக ஊடகம் வழியே எப்போதாவது தொடர்புகொள்வார். அகழ் இணையதளத்துக்காக நண்பர் ஷங்கர்ராம சுப்ரமணியன் எழுதியிருந்த சல்மான் ருஷ்டியின் 'கத்தி'தொடர்பான கட்டுரையைப் பகிர்ந்திருந்த நாளில் அதைப் பார்த்துவிட்டு 'கத்தி' தொடர்பாக விசாரித்தார். திரைப்படம், இலக்கியம் குறித்து பகிரும்போது, அவருக்குப் பிடித்த பதிவெனில்தமது எண்ணத்தைப் பகிர்ந்துகொள்வார். சில மாதங்களுக்கு முன்னர் அண்ணா நூற்றாண்டு நூலகத்துக்கு நண்பர் செல்வ புவியரசனுடன் சென்றிருந்த வேளையில் அவரைத் தற்செயலாகச் சந்தித்தபோது, இனிமேல் அவரை நேரில் பார்க்கும் வாய்ப்பு அமையப்போவதில்லை என்பதற்கான எந்தத் தடயத்தையும் மனம் உணரவே இல்லை.

விக்ரம் சுகுமாரனுக்கு இயற்கை சற்றுக் கருணை காட்டியிருக்கலாம். அவர் தனது துறையில் சாதிக்க வேண்டியவை ஏராளமாக உள்ளன; அதற்கான படைப்பாற்றல் அவருக்கு இருந்தது. ஆனால், துளிக்கூட இரக்கமின்றி இயற்கை நடந்துகொண்டது திரைத்துறைக்கு இழப்புதான். தமிழ்நாட்டில் ஒருவரது சராசரி ஆயுள் தற்போதைய நிலவரப்படி 75 வயது என்னும் சூழலில் அவர் இன்னும் ஐம்பது வயதைக்கூடத் தொட்டிருக்கவில்லை. ஏப்ரல் 11 அன்று பிறந்த அவரது பிறப்பு குறித்த தகவல் விக்கிபீடியாவில் கூட ஒழுங்காக இல்லை. தமிழ்த் திரைப்பட வரலாற்றில் மதயானைக் கூட்டம் என்னும் திரைப்படத்தின் மூலம் புகழ் பெற்றிருந்த இயக்குநருக்கு இதுதான் நிலையா? தமிழ்நாட்டைப் பொருத்தவரை, அரைகுறை நடிகர்கள்கூட மாநிலத்தை ஆள ஆசைப்படும் அளவுக்குத் திரைப்படத் துறையானது அரசியல்ரீதியான செல்வாக்கைப் பெற்றுத்தரும் களமாகவே புரிந்துகொள்ளப் பட்டுள்ள சூழலிலும், நன்கு அறியப்பட்ட இயக்குநரைப் பற்றிய அடிப்படைத் தகவல்கள்கூடப் பொதுவெளியில் கிடைக்காத நிலைமையானது ஆவணப்படுத்துதலில் நாம் பெரிய அக்கறை காட்டாததையே சுட்டிக் காட்டுகிறது.

மதயானைக் கூட்டம் திரைப்படத்தின் முதன்மைக் கதாபாத்திரமான ஜெயக்கொடித் தேவர் அப்படத்தில் தன் மகளுக்கு நடத்திவைத்த சிறப்பான திருமணத்தை,அவர் விரும்பிய அளவுக்கு வெகுசிறப்பாகச் செய்துவைக்க இயலவில்லையே எனும் மனத்தாங்கலில் மாரடைப்பால் உயிர்விட்டிருப்பார். திரைப்படக் கலைமீது பேரார்வம் கொண்டிருந்த விக்ரம் சுகுமாரனும் மதுரையில் தயாரிப்பாளர் ஒருவரிடம் கதை சொல்லிவிட்டுச் சென்னைக்குப் பேருந்தில் திரும்பிய வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரடைப்பால் உயிரை விட்டிருந்தார். இன்னும் தம் திறனை முழுமையாக வெளிப்படுத்தும் படைப்பொன்றை உருவாக்கும் வாய்ப்புக் கிட்டவில்லையே என்னும் மனத்தாங்கல் அவருக்கும் இருந்திருக்கக்கூடும்.

இயக்குநர் ருத்ரய்யா, S. கணேச ராஜ் போன்றோர் வரிசையில் இரண்டு படங்களை இயக்கி அதில் ஒன்றால் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் அழியா இடம்பிடித்துவிட்ட சிறு திருப்தியில் சென்றுவிட்டாரோ என்னவோ? அவள் அப்படித்தான் மூலம் ருத்ரய்யாவும் சின்னத்தாயி வழியே S. கணேச ராஜும் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் நிலைத்துவிட்டவர்கள். ருத்ரய்யா இரண்டாவதாக இயக்கிய கிராமத்து அத்தியாயம், S. கணேசராஜின் மாமியார் வீடு இரண்டும் ரசிகர்கள் மனத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாதவை. இவர்கள் இருவருக்கும் இல்லாத சிறப்பு விக்ரம் சுகுமாரனுக்கு உண்டு. இவர்கள் தமது முதல் படங்களுக்கு இளையராஜாவின் இசையைப் பக்கபலமாகக் கொண்டிருந்தார்கள். ஆனால், விக்ரம் சுகுமாரனோ எந்தப் பெரிய தொழில்நுட்பக் கலைஞரையும் சாராது தனது கலைத் திறனை மட்டும் நம்பிக் களமிறங்கி அதில் வெற்றியை நோக்கி நகர்ந்தவர். அந்தப் படத்தில் வேல ராமமூர்த்தி உள்ளிட்ட பலருக்குத் திரை வெளிச்சம் கிடைக்க உதவியவர்.

தமிழ் சினிமாவில் பாரதிராஜா பரம்பரை என்று சொல்லக்கூடிய அளவில் பலர் அவரிடம் பணியாற்றிவிட்டுத் தனியே இயக்குநராகி இருக்கிறார்கள். மணிவண்ணன், கே.பாக்யராஜ் உள்ளிட்ட பலரைக் குறிப்பிட முடியும். அதே போல் பாலுமகேந்திராவிடம் பணியாற்றிவிட்டு, பாலா, சீனு ராமசாமி, வெற்றிமாறன் வரிசையில் இயக்குநரானவர் விக்ரம் சுகுமாரன். தனது ஜூலி கணபதி படத்தை, 'தமிழ் சினிமாவை அதன் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல இருக்கும் என் இளைய தலைமுறைக்கு' என்று கூறி சமர்ப்பித்திருந்த பாலுமகேந்திராவின் கதைநேரம் உள்ளிட்ட சில படைப்புகளில் அவர் பணியாற்றியுள்ளார். பின்னர் வெற்றி மாறனுடனும் பணியாற்றி, அவரது பொல்லாதவன், ஆடுகளம் போன்ற படங்களின் உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்கப் பங்களித்தபின் இயக்குநரானார் அவர். போர்ச்சூழலால் வதைபட்ட இலங்கையிலிருந்து பாலுமகேந்திரா திரைப்படத்துறைக்கு வந்திருந்தார் என்றால், விக்ரம் சுகுமாரனோ வறட்சி வாட்டியெடுக்கும் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து அத்துறைக்கு வந்தவர்.

"என்னுடைய சினிமாவிலே ஏதோ ஒரு தனித்தன்மை இருக்கிறது என யாராவது சொன்னால் அது எனக்கும் இலக்கியத்துக்குமான பரிச்சயம்" என்கிறார் பாலு மகேந்திரா ஒரு நேர்காணலில். அப்படிப்பட்ட இயக்குநரிடம் பாடம் பயின்ற விக்ரம் சுகுமாரன் உலக இலக்கியம், உலகத் திரைப்படம் என்றெல்லாம் கதைபேசாமல் உள்ளூர்ப் படங்களான கிழக்குச் சீமையிலே, தேவர் மகன் போன்ற படங்களைப் பார்த்தே திரைத்துறைக்கு வந்ததாகக் கூறியுள்ளார். இயக்குநர் மிஷ்கின் போன்ற பெரிய இயக்குநர்கள் மேடையில் ஏறி உலகப் படம், உலக இலக்கியம் குறித்தெல்லாம் பேசுவதைக் கேட்கும்போது, பெரிய வியப்பு ஏற்படும். அவர்களது படங்களைப் பார்க்கும் வேளையிலோ வியப்புப் பன்மடங்கு பெருகும், உலக இலக்கியம்; சினிமா போன்ற எந்த ஒன்றின் சிறு தடயமும் வெளிப்பட்டுவிடாத வகையில் உள்ளூர் தரத்தில் உலகப் படத்தை அநாயாசமாக உருவாக்கிவிடுகிறார்களே என. ஆனால், விக்ரம் சுகுமாரன் எந்தப் பேராரவாரமுமின்றி, தமிழ்ச் சமூகத்தின் ஒரு பிரிவினரின் பண்பாட்டுக் கூறுகளைத் திரைக்கதையாக்கி, அதை ஒரு கலை ஆவணமாக, விமர்சனரீதியான படைப்பாக மதயானைக் கூட்டம் என்னும் பெயரில் தமிழ்ச் சமூகத்தின் பார்வைக்கு வைத்தவர். சாதிப் பெருமிதம் பொங்கிவழிந்தகிழக்குச் சீமையிலே, தேவர் மகன் போன்ற படங்கள் வசூலை வாரிக்குவித்த தமிழ்நாட்டில் சாதியை விமர்சித்த படம் பெரிய அளவிலான வெற்றியைப் பெறவில்லை.

விக்ரம் சுகுமாரன் தனது மதயானைக் கூட்டம் படத்துக்கு ஒரு நேர்மறையான விமர்சனம்கூட வரவில்லை என்று ஆதங்கப்பட்டிருக்கிறார். ஆனால், சுப. குணராஜன் காட்சிப்பிழை இதழில் எழுதிய சாதீய சினிமாவும் கலாசார் சினிமாவும் என்னும் கட்டுரை அப்படத்தை நேர்மறையான கண்ணோட்டத்துடன் அணுகி, அதன் பண்பாட்டுக் கூறுகளையும், படமாக்க உத்திகளையும் செய்நேர்த்தியையும் தெளிவாகச் சுட்டிக்காட்டியது. அதே தலைப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உருவாக்கப்பட்ட நூலிலும் இந்தக் கட்டுரை இடம்பெற்றுள்ளது. ஆவணத்தின் துல்லியமும் புனைவின் நேர்த்தியும் சரியான விகிதத்தில் கலந்திருந்த அத்திரைப்படத்தைச் சரியாக அடையாளம் கண்டுகொண்ட விமர்சனம் அது.

சில ஆண்டுகளுக்கு முன்பு இயக்குநர் விக்ரம் சுகுமாரனை நேர்காணல் ஒன்றுக்காக நுங்கம்பாக்கத்தில் இராவண கோட்டம் திரைப்பட அலுவலகத்தில் சந்தித்த வேளையில், அவர் திரைப்படத் துறைக்கு வந்த கதையை மிகவும் எளிமையான மொழியில், வெள்ளந்தியான தொனியில் விரிவாகப் பேசினார். மிகவும் சரியான விதத்தில் உருவாக்கப்பட்டும் மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட திரைப்படமான மதயானைக் கூட்டம் வெளியான வேளையில் அது சரிவரக் கவனிக்கப்படவில்லை என்ற ஆதங்கம் அவருக்கு இருந்தது. தமிழ்த் திரைப்படத்தில் வழக்கமாக வெளிப்படும் மிகைப்படுத்தல் எதுவுமின்றி மிகவும் நுட்பமான முறையில், திரைக்கதை அமைத்து அவர் படமாக்கிய அந்தப் படம் வெளியான தருணத்தில் பெரிதும் கவனிக்கப்பட்டிருந்தால் விக்ரம் சுகுமாரன் என்னும் இயக்குநர் மேலும் பல தரமான படங்களைத் தந்திருக்கக்கூடும்.

நுண்ணுணர்விழைகளால் நெய்யப்பட்ட ஒரு திரைப்படத்தைக் கண்ணுக்குத் தெரியாமல் கழுத்தைநெரித்தசமூகத்தைஎதிர்கொண்டதாலோ என்னவோ விக்ரம் சுகுமாரன் அடுத்து உருவாக்கிய இராவண கோட்டம் அந்த அளவுக்கு நுட்பமாக அமையாமல் வழக்கமான தமிழ்ப் படப் பாதையில் பயணித்துவிட்டது. அந்தப் படத்தைப் பற்றி முதன்முறையாக எழுதிய காரணத்தால் அந்தப் படத்தின் முன்னேற்றம் குறித்த ஒவ்வொரு தகவலையும் என்னிடம் பகிர்ந்துகொண்டார். பத்திரிகைப் பணியிலிருந்து விலகிவந்துவிட்ட சூழலிலும், என்னால் எந்தப் பயனும் அவருக்குக் கிடைக்காது என்று முழுமையாகத் தெரிந்த நிலையிலும் அவரிடம் வெளிப்பட்ட மனிதத்தன்மையை மறக்க முடியவில்லை. படம் பார்த்துவிட்டுப் பேசுவதாகச் சொன்னேன். சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியவில்லை. படம் பார்த்தீர்களா, எப்படியிருந்தது என அவரும் ஒருபோதும் கேட்கவில்லை. அந்தப் பண்புதான் நெஞ்சத்தில் அவருக்கு நீங்கா இடம்கொடுத்திருக்கிறது.

ஒரு கலைஞன் சுதந்திரமான மனநிலையில் சிந்தித்துக் கதை திரைக்கதையை எழுதி, உயிரோட்டமான வசனங்களைப் படைத்துப் படமாக்கினால் உருவாகும் படத்துக்கும், அதே கலைஞன் சமூகத்தின் அழுத்தத்துக்கு உட்பட்டு உருவாக்கும் படத்துக்குமான வேறுபாட்டை எளிதில் உணர வேறெதுவும் செய்ய வேண்டாம். அடுத்தடுத்து, மதயானைக் கூட்டத்தையும், இராவண கோட்டத்தையும் பார்த்தால் போதும். ஒரு படைப்பாளிக்கு ஏற்படும் நெருக்கடியை உணர்ந்துகொள்ளலாம். இவ்வளவுக்கும் விக்ரம் சுகுமாரனின் இரண்டாம் படம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட படம். தமிழ்த் திரைப்பட உலகில் திரைக்கதை மன்னன் எனக் கொண்டாடப்பட்ட கே.பாக்யராஜ் தன் மகன் சாந்தனுக்கு நல்ல படம் ஒன்றை உருவாக்கித்தரும் பொறுப்பை விக்ரம் சுகுமாரனிடம் வழங்கியிருந்தார் என்றால் அவரது திரைக்கதை மீது எந்த அளவுக்கு பாக்யராஜ் நம்பிக்கை வைத்திருந்திருப்பார்? அந்தப் படமும் தமிழ்நாட்டின் முக்கிய அரசியல் பிரச்சினை ஒன்றை, யாரும் கைவைக்கத் துணிந்திராத ஒன்றைத் தொட்டுப் பேசியிருந்தது. ஆனால், முதல் படத்தின்ரத்தமும் சதையுமான உயிர்ப்பு இரண்டாம் படத்தில் இல்லாதிருந்தது. அவர் இறுதியாக இயக்கிய தேரும் போரும் படம் நிறைவுபெறுவதற்கு முன்னரே அவரது முடிவு நேர்ந்துவிட்டது பெரும் சோகம். சில நல்ல படங்கள் கவனிக்கப்படாமல் போவதும், நல்ல படைப்பாளிகள் சிலருக்குத் தகுந்த வாய்ப்புகள் அமையாமல் போவதும் தமிழ்த் திரைப்படத் துறையின் இயல்புதானோ?

●

---

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | பி.பி. சைதாலி, மு.சாகுல் ஹமீது

# மதச்சார்பற்ற வரலாற்றுக்கதையாடல்களும், வகுப்புவாத சவால்களும்: களத்திலிருந்து எழும் பிரதிபலிப்புகள்

### கருத்துரை

தேசிய ஒருமைப்பாட்டுச் செயல்பாட்டில் வரலாறு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒருங்கிணைப்புக் கருவியாகப் பயன்படுகிறது. விடுதலைக்குப் பிந்தைய இந்தியாவில் வளர்ந்துவந்த பிளவுவாதப் போக்குகளின் சூழலில், காலனித்துவ மற்றும் வகுப்புவாத முன்முடிவுகளை (*Sterotypes*) வெளிப்படுத்தவும், மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயகப் பொதுக்களத்தை உருவாக்கவும், மதச்சார்பற்ற மற்றும் அறிவியல்பூர்வமான ஆய்வுகளின் அடிப்படையில் வரலாறுகள் எழுதப்பட்டன. ஆனால், காலப்போக்கில் இம்மதச்சார்பற்ற வரலாறுகள் உள்ளீடற்றவையாகவும், புனிதப்படுத்தப்பட்டவையாகவும் (*Canonised*) மாறிப் புதிய அணுகுமுறைகளை வரலாற்று எழுத்தியலிலும், கற்றல் கற்பித்தலிலும் உள்வாங்காததால், விவாதத்துக்குரிய (*Polemical*) வெகுஜன வரலாறுகளின் (*Public History*) மீது திறம்பட வாதிக்கவும், எதிர்க்கவும் தவறிவிட்டன. மாணவர்களைப் பொருத்த அளவில் கடந்த காலத்தில் நடந்த நிகழ்வுகளை விவரிக்க ஒரே நேர்கோட்டில் சொல்லப்படும் இவ்விசித்திரக்கதைகள் நிகழ்காலத்தின் சிக்கல்களையும், எதார்த்தங்களையும் புரிந்துகொள்வதற்கும் பதில் அளிப்பதற்கும் ஒரு தடையாக உள்ளது. எனினும், இச்சவால்களை எதிர்கொள்ள மதச்சார்பற்ற வரலாறுகளை மறுசீரமைப்பதற்கான முயற்சிகள் இன்னும் உள்ளூர் அளவில் ஊடுருவவில்லை. வகுப்புவாதக் கதையாடல்களுக்கு ஒரு பொது ஏற்பு சன்னம் சன்னமாக, வளர்ந்துவரும் தற்போதைய காலத்தில், தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்குப் புதுமையான அணுகுமுறையில் மதச்சார்பற்ற வரலாறுகளை மறுகதையாடல் செய்வதோடு அதை உள்ளூர் அளவில் கொண்டுசெல்ல வேண்டிய தேவை உள்ளது. இக்கட்டுரையானது தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டமைப்பதற்கு வரலாறு எவ்வாறு பயன்படுகிறது என்பதோடு அதன் வரம்புகளை ஆராய்ச்சியாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் எங்களது கள அனுபவத்திலிருந்து பதிவுசெய்ய முயல்கிறது. இத்துடன் உள்ளூர் மட்டத்தில் வரலாற்றுக் கல்வியைப் புத்துயிர் பெறச் செய்ய நடவடிக்கை எடுக்கக்கூடிய பரிந்துரைகளுடன் இக்கட்டுரை முடிவடைகிறது.

தீபேஷ் சக்கரவர்த்தி (*Dipesh Chakrabarthy*) சுட்டிக்காட்டுவதைப் போல வரலாறு எவ்வழியில் கல்வி புலன்சார்தளத்தில் (*Cloistered*) கற்றும், கற்றுக்கொடுக்கப்பட்டும் வருகிறது என்பதோடு, கல்வி புலன்சாரா அறிஞர்களால் வெகுஜனதளத்தில் வரலாறு பற்றிய பன்முகப் பிரதிநிதித்துவம் குறித்தும் இக்கட்டுரை பிரதிபலிக்கிறது. கல்வி புலன்சார் வரலாற்று அறிஞர்கள் வரலாற்றுரீதியாகவே கடந்த காலத்தைப் பற்றிய வெகுஜனதளத்தில் நிலவும் மாற்றுக் கதையாடல்களை அர்த்தமற்றவை என்றும், சரியான நோக்கமும், நடுநிலைத்தன்மையும் அற்றவை என்றும் நிராகரித்தனர். இருப்பினும், 1980களில் எழுந்த வெகுஜனவரலாறுகளின் எழுச்சி தொழில்முறை வரலாற்றாசிரியர்கள் மக்களிடையே குறிப்பாக வகுப்புவாத மற்றும் அரசியல் வெகுஜனத் திரட்டல்களில் அவர்களின் முறையீட்டை அங்கீகரிக்கத் தூண்டியதோடு, அவர்களுடன் செயலாற்றும் முயற்சிகளும் தொடங்கப்பட்டன. இந்த முயற்சிகள் சிறிதளவே வெற்றிபெற்றாலும், தாய்மொழிகளில் வரலாற்றை எழுதுவதற்கும் உள்ளூர் வரலாறுகளைப் பற்றிப் படைப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதற்கும் வாய்வழி வரலாற்றுத் தகவல்களைச் சேகரிப்பதற்கும் வழிவகுத்தது. சமகாலத்தில் வாட்ஸ்ஆப் மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற வலைத்தளங்கள் மூலம் சர்ச்சைக்குரிய வரலாற்றுக் கதையாடல்களின் புழக்கத்தால் வகைப்படுத்தப்படும் இவை நமது மதச்சார்பற்ற, அறிவியல்பூர்வ வரலாற்று எல்லைகளை விமர்சனரீதியாக ஆராய முற்படுகிறது. இவ்வகை வரலாறுகள் அவற்றின் மேட்டிமைத் தன்மை இயல்புக்காகவே விமர்சிக்கப்படுகின்றன. மதச்சார்பற்ற வரலாறுகள் அரசாங்கத்தின் செல்வாக்கு உட்பட, பலதளங்களில் சவால்களை எதிர்கொண்டிருக்கும் இச்சூழலில் அதனை விமர்சிப்பது நமது நோக்கமன்று என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். மாறாக, தற்போதைய சூழலில் வரலாற்றை மேலும் பொருத்தப்பாடு உடையதாக மாற்ற வேண்டிய அவசியத்தை நோக்கமாகக் கொண்டது இக்கட்டுரை. மேலும் எப்போதெல்லாம் இந்தியாவில் வலதுசாரிகள் ஆட்சி அதிகாரத்துக்கு வருகிறார்களோ, அப்போதெல்லாம் மதசார்பற்ற வரலாற்றுப் பாடங்களை மீண்டும் எழுதும் முயற்சி நடைகிறது. இம்முயற்சிகள் பல்வேறு சர்ச்சைகளையும், விவாதங்களையும் உருவாக்கின்றன. எனினும், இவ்வலதுசாரிகள் வரலாற்றை மீண்டும் எழுதும் முயற்சியின் தாக்கம் குறித்து இங்கு விவாதிக்கப்படவில்லை. மாறாக, இக்கட்டுரையானது மதசார்பற்ற வரலாற்றின் வரம்புகளைக் குறித்தும் மதசார்பற்ற வரலாற்றை மறுவடிவமைப்பு செய்ய வேண்டிய அவசியம் குறித்து இவ்வாசிரியர்களின் கருத்துகளை இக்கட்டுரை பிரதிபலிக்கிறது. இதன் இறுதி இலக்கு என்பது சமூக அறிவியல் மாணவர்களிடையே தங்கள் புலன்சார்ந்த கற்றல் கற்பித்தலில், சமகாலப் பொருத்தப்பாடு பற்றியும், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் ஆக்கப்பூர்வமான எண்ணங்களைத் தூண்டுவதும், விமர்சனரீதியான பதில்களை ஊக்குவிப்பதுமாகும். இக்கட்டுரை மேலும் சில நோக்கங்களை உள்ளடக்கியுள்ளது.

1) தேசிய ஒருமைப்பாட்டிலும் அதன் உருச்சிதைவிலும் வரலாற்றின் பங்கை ஆய்வுசெய்தல்.

2) மதச்சார்பற்ற மற்றும் அறிவியல்பூர்வமான வரலாறுகள் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் எவ்வாறு வேலைசெய்கிறது என்பதைப் பற்றி ஆராய்தல்.

3) வரலாற்றை ஒரு துறையாக அதன் வரம்புகளை அடையாளம் காணுதல், வரலாற்றின் தேசிய பயன்பாடு காரணமாக மாணவர்களிடையே ஏற்படும் தாக்கங்களைப் புரிந்துகொள்தல்.

4) வரலாற்றுக் கதையாடல்களில் தீவிரமாக மக்கள் பங்குபெறும் இக்காலகட்டத்தில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் கண்டறிதல்.

5) இச்சவால்களை எதிர்கொள்ள முதன்மை வழி முறையாக தரமான கல்வியை வழங்குவதன் முக்கியத்துவத்தை அறிதல்.

இக்கட்டுரை மூன்று முக்கியப் பகுதிகளைக் கொண்டதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது, முதல் பகுதி, தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் வரலாற்றின் பங்கு பற்றியும், தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கு நவீன இந்தியாவை உருவாக்கிய நம் தலைவர்கள் வரலாற்றை எவ்வாறு ஒரு கருவியாகப் பயன்படுத்தினார்கள் என்றும் அதனால் வரலாற்றுக் கதையாடல்களில் ஏற்பட்ட உருச்சிதைவும், வரலாற்றைப் படிப்பதில் ஏற்பட்ட தணிக்கைகளைப் பற்றியும் வாதிடுகிறது.

இரண்டாம் பகுதி, நமது பள்ளி மற்றும் கல்லூரிகளில், உள்ள பாடத்திட்டம் நம்முடைய வரலாற்றுக் கற்பனைகளுக்கு எல்லை அமைப்பதோடு அது கற்றல் கற்பித்தலில், புதிய முயற்சிகளை மட்டுப்படுத்திள்ளது என்பதோடு, இக்கதையாடலுக்கு ஆதாரமாக அறிஞர்களான நீலாதிரிபட்டாச்சார்யா (*Neeladri Bhattacharya*) மற்றும் சில்வியாகுயிச்சர் (*Sylvie Guichard*) கருத்துகள் முன்வைக்கப்படும்.

மூன்றாம் பகுதி, ஒரு ஆராய்ச்சியாளரகவும், ஆசிரியர்களாகவும் எங்களுக்குக் கிடைத்த அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதோடு வரலாற்றுக் கல்விப் புலத்தில் மேட்டிமை (*Elite*) கல்வியாளர்களிடையே உள்ள தவறான கருத்துகள் மற்றும் எதார்த்தங்களில் இருந்துவரும் சவால்களைப் பதிவுசெய்கிறது. இப்பகுதி உங்களுடைய எண்ணங்களையும் கருத்துப் பரிமாற்றங்களையும் கோருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக முடிவுரையோடு இக்கட்டுரை சுட்டும் பிரச்சினைகளுக்குச் சில தீர்வுகளை அளிக்க முயல்கிறது.

### தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் வரலாற்றின் இருவினைப் போக்கு

தேசியக் கட்டமைப்பில் கடந்த காலத்தைக் கண்டறிதல் என்பது ஒரு முக்கியப் பங்காற்றுகிறது. எர்னோஸ்ட் ரீனன் (Ernest Renan) அவர்களின் கருத்துப்படி, 'ஒரு தேசத்தின் ஆன்மாவும், அதன் உணர்வுப்பூர்வமான கோட்பாடும், அதன் செழுமைமிக்க தொன்மை நினைவுகளிலும், மக்கள் அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும் என்ற தேட்டத்திலும், மக்கள் கூட்டாக உருவாக்கிய மரபிலும் பொதிந்துள்ளன. தனது உண்மையான மற்றும் கற்பனை கலந்த வரலாற்றைக் கொண்டு மக்கள் மத்தியில் ஒன்றாக வாழ்வதற்கான எண்ணத்தை உருவாக்குவதன் மூலமாகவே ஒரு தேசம் உருவாவதும், அது தன்னைத்தானே தக்கவைத்துக்கொள்வதும் சாத்தியமாகிறது.' ரீனன் மேலும் கூறுகையில், தேசம் நிரந்தரமான ஒன்றன்று, அது மக்கள் தங்களின் ஆட்சியாளர்களின் மீதான விசுவாசத்தை அன்றாடம் பறை சாற்றுவதேயாகும் (Daily Plebscite).[1] பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் ஒருமித்த உணர்வை (Formative Consensus) மக்களிடையே உருவாக்குவது அவ்வளவு எளிதன்று; எனினும், கடந்தகால நினைவுகளின் மூலமாகவும், விடுதலைப் போராட்டத்தினாலும், அரசியலமைப்பைக் கொண்டும் இந்த தேசம் ஒரு கட்டமைக்கப்பட்ட நிறுவனமாக உருவாகியுள்ளது.

நமது அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் மற்றும் சுதந்திர இந்தியாவின் முதல் தலைவர்கள் வகுப்புவாதம், சாதியம், பிராந்தியவாதம், மொழிப்பிரிவினைவாதம், இன்னும் பல்வேறு அடிப்படைவாதம் ஆகியவை இந்திய ஒருமைப்பாட்டுக்குப் பெரும் சவாலாக இருக்கும் என்பதை அறிந்தே இருந்தார்கள். 1955ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு பெங்களூருவில் உரையாற்றும்போது தனது ஆதங்கத்தைக் கீழ்க்காணுமாறு வெளிப்படுத்துகிறார்: "நமது தேசம் அரசியல் அடிப்படையில் ஓரளவுக்கு ஒருமைப்பட்டிருந்தாலும் மக்களிடையே உணர்வுரீதியான ஒருங்கிணைப்பு (Emotional Integration) இன்னும் முழுமையாக நிகழவில்லை என்றும் அதை நிகழ்த்தும்போதே இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட அற்புத தேசமாகத் திகழ முடியும் என்று கூறினார்."[2]

தேசிய ஒருமைப்பாட்டைப் பொருத்த அளவில் நமது அரசியலமைப்பிலேயே அதற்குரிய பல்வேறு கூறுகள் இருக்கவே செய்கிறது. எனினும், நமது தேசிய ஒற்றுமையை வலுப்படுத்த பல்வேறு அரசு நிறுவனங்களும் அதன் செயல்பாடுகளும், குறிப்பாகத் தேசிய விழாக்களும், தேசிய சின்னங்களும் மற்றும் போக்குவரத்து, தகவல் தொடர்பு சாதனங்களும் சிறந்த கருவிகளாகச் செயல்படுகின்றன. கல்வி முதல் பல்வேறு பொழுதுபோக்கு சாதனங்கள் வரை நாம் அனைவரும் ஒரே தேசத்தவர்கள் என்று உணர்வை உருவாக்க ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகிறது. இச்சூழலில் 1961இல் தேசிய ஒருங்கிணைப்பு ஆணையம் (National Integration Council) தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கான வழிவகைகளையும் பரிந்துரைகளையும் வழங்குவதற்காக அமைக்கப்பட்டது.[3] இதற்கிடையில், 1960 நவம்பரில் கல்வி அமைச்சர்கள் இடையே நடந்த ஒரு கருத்தரங்கில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதிலும், அதற்கு எதிராக உள்ள பிரிவினைவாத அச்சுறுத்தும் கருத்தாக்கங்களுக்கு எதிராகச் செயல்படுவதில் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் விவாதிக்கப்பட்டன.

-தொடரும்

கட்டுரையாளர்: பேராசிரியர்கள்

1 Renan, Ernest, 'What is a Nation?', in the text of a conference delivered at the Sorbonne on March 11th, 1882, in Ernest Renan, Qu'est-ce qu'une nation? (Paris: Presses-Pocket, 1992) (translated by Ethan Rundell), p.10.

2 Report of the Committee on Emotional Integration (Delhi: Ministry of Education, Government of India, 1962), p.iv.

3 Background note on National Integration Council' [https://www.mha.gov. in/sites/ default/files/ NICBackG- 1 71013.pdf, accessed 1 January 2022].

**Owned and Published and Printed by V.Muthiah and Published from 22/32 M.J.B Street,Triplicane, Chennai-600005 and Printed at Sekar Offset Printers, 50/168, Big Street, Chepauk, Chennai-600005. Editor: V.Muthiah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Conversation Series
Volume 3

PreBook: INR 799/-
Free Shipping

MRP: INR 999/-

ISBN: 9788195720316

Number of Pages: 390




# PERIYAR

## Caste, Nation & Socialism

S. V. Rajadurai

Scan QR to order now

தொடர்புக்கு:
விவேக் சத்பால்
9004308889

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Posted at Egmore RMS Patrika Channel
Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 /43921
Postal Registration No. TN/CH(C)/617/2024-2026
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month between 29th-4th of every month






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org